In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்



வானதி பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறையொன்றுமில்லை

(முதல் பாகம்)

முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற் பதிப்பு : டிசம்பர், 1997
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1998
மூன்றாம் பதிப்பு : ஜூலை, 1998
நான்காம் பதிப்பு : செப்டம்பர், 1998
ஐந்தாம் பதிப்பு : ஜூன், 1999
ஆறாம் பதிப்பு : டிசம்பர், 1999
ஏழாம் பதிப்பு : ஜூலை, 2000
எட்டாம் பதிப்பு : ஏப்ரல், 2001
ஒன்பதாம் பதிப்பு : ஜூலை, 2001

உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 70.00

ஒவியம் : பத்மவாசன்

- TITLE : KURAIONDRUMILLAI (Part-I)
- AUTHOR : MUKKUR LAKSHMINARASHIMACHARYAR
- SUBJECT : RELIGIOUS
- LANGUAGE : TAMIL
- EDITION : NINTH EDITION JULY, 2001
- NO. OF PAGES : iv + 362 = 366
- PUBLISHED BY : VANATHI PATHIPPAKAM 13, DEENADAYALU STREET, THYAGARAYA NAGAR, CHENNAI - 17.
- PRICE : Rs.70.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai - 600 017.
Printed at : NOVENA OFFSET PRINTING CO., ☎ 8548891, 8588471

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

"ஆஸ்திக ஸமாஜம்" என்றாலே ஈரரசு படாதபடி சென்னையில் வீனஸ் காலனியில் உள்ள "ஆஸ்திக ஸமாஜ"த்தையே குறிக்கும். கலை பல வளர்க்கும் மாபெரும் ஸ்தாபநம் அது. அதில் வருடா வருடம் உபந்யஸிக்கக் கொடுத்து வைத்தவர்களில் அடியேனும் ஒருவன். சென்ற வருடம் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் முதல் திரு நாமமான "விச்வம்" என்ற சொல்லின் பெருமையை விவரித்துக் கொண்டிருக்கும் போது கல்கி வார இதழின் பதிப்பாசிரியர் உயர்திரு கி. ராஜேந்திரன் அவர்கள் நாள் தோறும் வந்து கேட்டு ஆனந்தித்தருளினார். உபந்யாஸம் முழுவதும் ஒலிநாடாவில் ஏற்றப்பட்டது. கலியின் வலிமையைப் போக்கும் கல்கியில் உபந்யாஸத்தின் தொகுப்பு ஒலிநாடாவில் பதிவானதைக் கேட்டு மூதறிஞர் ராஜாஜி அவர்களின் அருள்வாக்கின்படி "குறையொன்று மில்லை" என்கிற தலைப்பில் 47 வாரங்கள் தொடர்ந்து வந்தது. இதைத் தனிப் புத்தகமாக வெளியிடவேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் உயர்திரு கி. ராஜேந்திரன் அவர்களும், "வானதி பதிப்பகத்தின்" உரிமையாளர் உயர்திரு திருநாவுக்கரசு அவர்களும் கலந்தாலோசித்து அதைத் தற்போது செயல்படுத்தியிருக்கின்றனர்.

"வானதி பதிப்பகத்தின்" பெருமையை உயர்திரு வாரியார் அவர்கள் குறிப்பிடும் போது "மன்னதியில் கலக்கம் உண்டு; ஆனால் வானதியில் கலக்கம் இல்லை" என்றார். தீந்தமிழின் இன்சுவையை இப்பதிப்பகத்தின் மூலமாய் வெளியாகும் நூல்களில் நாம் கண்டு களிக்கலாம். ஆன்மிகத் துறையில் அநேக நூல்களைப் பதிப்பித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றைக் கண்ணே போலப் போற்றி வெளியிடும் பாங்கினை ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனாலேயும் விவரிக்க இயலாது. "முயற்சித் திருவினையாக்கும்" என்பதற்கு உயர்திரு திருநாவுக்கரசு அவர்களே முதல் உதாரணம் ஆகின்றார் என்று கூறின் மிகையாகாது.

"சுற்றி வரும் இவ்வுலகில் மாற்றம் இன்றி
வெற்றிப்படிகள் அமைத்தான் திருநாவுக்கரசு!
பற்றிநிற்கும் வானதி பதிப்பகம் பெற்றதுபேறு
கற்றினம் போல் வளருமே! குறையொன்றுமில்லையே!!"

என வாழ்த்திப் பல்லாண்டு பாடுகின்றேன்.

மேலும் கல்கியில் தற்போது தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கும் "விஷ்ணு"வின் பொருளும் "குறை யொன்றுமில்லை" இரண்டாவது பாகமாக வெளிவரும். அடியேனால் எழுதப்பட்ட "ஆளரியின் அருள்", "மட்டபல்லியில் மலர்ந்த மறைபொருள்", "அருள் தரும் அஹோபிலம்", "ஆழ்வார்களும் ஆளரியும்", "கண்ணன் கழலினைகள்", "கோதையின் பாதை", "கம்பனின் கம்பன்" போன்ற நூல்களும் உயர்ந்த வானதியில் பெருக்கெடுத்து ஓடிவரும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்திரு திருநாவுக்கரசு அவர்களும் அவரே போன்ற அவரது குடும்பத்தார்களும் அடியேன் வேள்வியினால் போற்றும் மட்டபல்லி மாலோலனின் பேரருளால் நீங்காத செல்வம் நிறைந்து வாழ அவனடி போற்றுகின்றேன்.

"குறையொன்றுமில்லை படிப்பவர்க்குக் குறை யொன்றுமில்லையே."

—முக்கூர் லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறையொன்றுமில்லை

1

யமுனை நதி புண்ணியத்தைத் தேடிக் கொண்டது. கோதாவரியோ களங்கத்தைத் தேடிக் கொண்டது! எப்படி என்கிறீர்களா? 'தூய பெருநீர் யமுனைத் துறைவனை...' என்று பாடிய ஆண்டாள், கண்ணனுடைய அவதார காலத்தில் உபகாரம் பண்ணின யமுனை நதிக்கு நற்சான்றிதழ் தருகிறார். என்ன உபகாரம்...?

வசுதேவர் கண்ணனைத் தூக்கிக் கொண்டு நந்த கோகுலத்துக்குப் போகையில், அவர் கேட்காமலே இடுப்பளவுக்கு வடிந்து வழி விட்டது அந்த யமுனா நதி. புண்ணியத்தை, தூய்மையைத் தேடிக் கொண்டது.

ஆனால் கோதாவரி நதியோ களங்கத்தைத் தேடிக் கொண்டது. எப்படி...? ஸ்ரீ ராமாவதாரத்தின் போது ராவணன் சீதாபிராட்டியை அபகரித்துப் போகிறான். அப்போது பிராட்டி கதறி அழுகிறார்: "ஹே, கோதாவரி! நீயும் பெண், நானும் பெண்...எனக்கு நேரும் துன்பத்தை இப்படி நீ பார்த்துக்கொண்டிருக்கியே...? என் பர்த்தா வந்து என்னைத் தேடுவார். அப்போதாவது சொல்லு. ராவணன் என்னை அபகரித்துப் போனான் என்று தவறாமல் சொல்லு..."

ராமன் வந்து தேடியபோது, "சீதையைக் கண்டீர்களா?" என்று மரம் மட்டையையெல்லாம் கேட்ட போது, கோதாவரி பதிலே சொல்லவில்லையாம்... ஒரு அலை கூட அடிக்கலை! ராவணனிடம் இருந்த பயத்தினால் பேசாமல் இருந்து விட்டாள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மை தெரிந்தவர்கள், உரிய சமயங்களிலே அதைச் சொல்ல வேண்டும் - வெளிப்படுத்த வேண்டும். அப்படியில்லாமல் 'நமக்கு அதில் நேரடி சம்பந்த மில்லை'ன்னு வாய் பொத்தி இருந்துட்டா களங்கம் வந்துடும். அப்பேர்ப்பட்ட களங்கம்தான் கோதாவரிக்கு ஏற்பட்டது.

திரேதா யுகத்திலே கோதாவரிக்கு ஏற்பட்ட இந்தக் களங்கம் கலியுகத்திலே தீர்ந்து போயிற்று... எப்போது தீர்ந்தது என்று கேட்டால், ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஆண்டாள் பிறந்தப்போ, பெரியாழ்வார் அந்தக் குழந்தைக்கு 'கோதா' (கோதை) என்று பெயர் வைத்தாரே... அப்போது தீர்ந்தது கோதாவரியின் களங்கம்!

இந்தக் கதையைச் சொல்லி அடியேன் ஆரம்பிக்கற துக்கு ஒரு காரணம் இருக்கு... 'நாம சாம்யம் - 'பெயர் ஒற்றுமை' என்கிறதன் பெருமை நேயர்களுக்குப் புரிய வேண்டுமில்லையா...? அதனால் சொன்னேன்.

நம் குழந்தைகளுக்கும் தெய்வீகத் திருப்பெயர்களைச் சூட்டுவது இந்த 'நாம சாம்யம்' கருதித்தான். பெயர் சூட்டப்படுபவர்களுக்கும் ராமா, கிருஷ்ணா என்று அந்தப் பெயர்களைச் சொல்லி அழைப்பவர்களுக்கும் ஒருசேர நன்மைகள் உண்டாகும் என்றுதான்.

'பாதேயம் புண்டரீகாட்ச நாம சங்கீர்த்தனாம்ருதம்' என்கிறது கருடபுராணம். 'பகவானின் கல்யாண் குணங்களைச் சொல்லும் திருநாமங்கள் ஒரு 'மூட்டை' என்று இதற்கு அர்த்தம்!

'மூட்டை என்றால் சுமையல்லவா...?' என்று யோசிக்கக்கூடாது! பூர்வகாலத்தில் ஊர் விட்டு ஊர் செல்பவர்கள் நடந்துதான் போவார்கள். கையில் ஒரு மூட்டையை எடுத்துப் போவார்கள். கட்டுச் சாத மூட்டை!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழியிலே குளக்கரையிருக்கும். மரத்தடியில், குளக்கரையில் மூட்டையைப் பிரித்து வைத்துச் சாப்பிடுவார்கள். களைப்பும் தீரும்; போய்ச் சேர வேண்டிய இடத்துக்கும் போய்ச் சேரலாம்.

வாழ்க்கை என்கிற பயணத்துக்கான கட்டுச்சாத மூட்டைதான் புண்டரீகாட்ச நாம சங்கீர்த்தனாம்ருதம். சிரமத்தை, களைப்பை, அலுப்பைப் போக்கும் மூட்டை பெரியாழ்வார் சொல்கிறார் பாருங்கள்:

'நினைந்திருந்தே சிரமம்
தீர்ந்தேன் நேமி நெடியவனே...'

பகவானை எண்ணிக்கொண்டே நாம சங்கீர்த்தனம் பண்ண வேண்டும். சங்கீர்த்தனம் என்றால் இடைவிடாது எப்பவும் சொல்லிக்கொண்டேயிருப்பது என்று பொருள்.



In Public domain; Digitization Muthulakshmi Research Academy

'இடைவிடாது சொல்கிற அளவுக்கு அப்படி என்ன பெருமையிருக்கிறது...? ஏன் சொல்ல வேண்டும்?' என்று தர்க்கம் பண்ணலாம். நமது ஹிந்து மதத்துக்குப் பரம ப்ரமாணம் வேதம் தான். பக்தி, ப்ரபத்தி, சரணாகதி, கர்ம யோகம், ஞானயோகம் - எல்லாம் வேதத்தில் உள்ளவை தான். பகவானே கூட அந்த வேதத்தைத்தான் மேற்கோள் காட்டிச் சொல்கிறார்.

ஏகாதசி தினம் ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதருக்கு ஈரவாடை சேவை. ஆபரணங்களையெல்லாம் களைந்து விட்டு வெறும் துளசி மாலை அணிவித்திருக்கிறார்கள். ஈரம் படிந்த வஸ்திரம் திருமேனியில் கிடக்கிறது. கற்பூர ஹாரத்தி நடக்கிறது. கொள்ளமாளா இன்ப வெள்ளமாய் - ஆச்சர்யமாய் தோற்றமளிக்கிறார் பகவான்.

அப்போது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் பெரிய சண்டையே வந்ததாம். 'நான் சுதந்திரன்' என்று வாதாடியதாம் ஜீவாத்மா. 'இல்லை நீ எனக்குக் கட்டுப்பட்டவன்' என்றான் பகவான். 'எதுனால அப்படிச் சொல்கிறாய்...?' என்று எதிர்த்துக் கேட்டதாம் ஜீவாத்மா.

இந்தச் சமயத்திலே பகவான், 'நான் சொல்றேன்... அதனால் நீ என் அடிமை' என்று பதில் சொல்லல்லை...

'வேத மூல ப்ரமாணாத்' என்று பதில் சொல்கிறார்! அதாவது, 'வேதத்தின் மூலமான ஓம்காரத்தை ஆராய்ந்தால் உன் எதிர்க் கேள்விக்குப் பதில் கிடைக்கும்' என்று சத்தியம் பண்ணுகிறார். ஈர ஆடையிலிருந்து ஜலம் சொட்டச் சொட்ட சத்தியம் பண்ணுகிறார்.

'நான்' என்ற சப்தமே ஒலிக்காமல், அந்தப் பெருமானே 'வேதத்தில் பதில் தேடு' என்று சொன்னதன் மூலம் வேதத்தின் உயர்வைப் புரிஞ்சுக்கணும். அவனையும் நம்மையும் சேர்த்து வைக்கிறது அந்த வேதம்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பேர்ப்பட்ட வேதத்திலே... திருநாம வைபவம் பற்றிச் சொல்லியிருக்கிறதா...? திவ்யமாய்ச் சொல்லியிருக் கிறது! நம்மைப் பார்த்து ரொம்ப ஆதரவாக அந்த வேதம் சொல்கிறது:

பகவான் கட்டிப் பொன் போலே...
அவன் திருநாமம் ஆபரணங்களைப் போலே...

கட்டிப் பொன் மிக உசத்தியானதுதான். ஆனால் அதைத் தலையில் வைச்சுக்க முடியுமா? கழுத்திலே போட்டுக்க முடியுமா? அல்லது முதுகிலே தாங்கிக் கொண்டு நிற்கத்தான் முடியுமா?

ஆனால் பகவானின் திருநாமங்களோ உடனே எடுத்தாளக்கூடிய ஆபரணங்கள். அணிந்தும் அணியச் செய்தும் மகிழலாம்; அழகு பார்க்கலாம்.

பிள்ளைலோகாச்சார்யார் தமிழில் மூன்று அழகான சூத்திரங்கள் மூலம் இந்த வேதப் பொருளை விளக்குகிறார்:

வாச்ய பிரபாவம் போலன்று வாசக பிரபாவம்'

வாச்யன் - பகவான்; வாசகம் - அவன் நாமம். பகவான் கைவிட்டாலும் விட்டுவிடுவான். ஆனால் அவன் நாமம் கைவிடாது.

'அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்'

'ஹே விஷ்ணு! இதை எற்றுக்கொள்' என்று சொல்லி ஹோமம் பண்ணுகிறோம். அவன் எங்கே வேண்டுமானா லும் இருக்கட்டுமே; அவன் பெயரைச் சொல்லி அளிப்பது அவனுக்குப் போய்ச் சேருகிறது.

'திரௌபதிக்கு ஆபத்திலே ஆடை
சுரந்தது கோவிந்த நாமமிறே'

வஸ்திர அபஹரணம் நடக்கும் போது திரௌபதி கூப்பிடுகிறாள்: 'ஹே கிருஷ்ணா... ரக்ஷமாம் சரணாகதாம்...'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று. ஆனால் பகவான் அவளை ரக்ஷிக்கவில்லை. இதை அந்த பகவானே சொல்கிறார்:

"ஒவ்வொரு அவதாரத்திலும் ஒரு குறை உண்டு. கிருஷ்ணாவதாரத்திலே திரௌபதியை உடனடியாக ரக்ஷிக்காதது என் குறை...' என்கிறார்.

'திரௌபதிக்கு ஆடை சுரந்ததே... உன்னாலன்றி வேறு யாரால் அது சாத்தியமானதாம்...?' என்று கேட்டால் பகவான் சொல்கிறார்:

'நானில்லை; என் கோவிந்த நாமம் அவளை ரக்ஷித்தது...'

அதனால்தான் ஆண்டாள் பாடினாள். 'இப்படியெல்லாம் குறைப்பட்டுக் கொள்கிறாயே, உன்னிடம் கூட குறை என்பது இருக்குமா?' என்று அர்த்தமாகும்படி திருப்பாவையில்-

'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்று அவனை அழைத்தாள்.

'கோவிந்தா' என்கிற நாமம் இருக்கும்போது உனக்குக் குறை இல்லை. உன்னை ஆச்ரயிக்கிறவர்களுக்கும் குறையில்லை...' என்றாள்.

பகவானின் நாமமே நம்மை ரக்ஷிக்கும். அவனை விட நம்மிடம் அதிகப் பரிவுடையது அவன் நாமம்.

'எல்லாம் சரிதான். இப்படி இடைவிடாது கோவிந்தா என்று சங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டிருந்தால் உலகக் கடமைகளைச் செய்ய வேண்டாமா...?' அவனுடைய பல நாமங்கள் சமஸ்கிருதத்தில் உள்ளனவே... வாயிலே நுழைய வேண்டாமா?' இப்படி நியாயமான சந்தேகங்கள் பல பேருக்கு வரத்தான் செய்யும்.

அவற்றுக்கான பதில்களை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

அதிக சம்ஸ்கிருத ஞானமில்லாத ஒருத்தர். ரொம்பவும் பக்தியோடு தினமும் 108 தடவை சொல்லி வந்தார்.

"பத்மநாபோ, மரப் பிரபு."

'பத்மநாபோ அமரப் பிரபு:' என்று பதம் பிரித்துச் சொல்றதுதான் சரி. அமரர்களின் (தேவர்களின்) பிரபுவே-அரசனே- என்று அதற்கு அர்த்தம்.

ஆனால் 'மரப் பிரபு:'ன்னு தப்பாகப் பதம் பிரித்தவர் மரங்களுக்கு அரசனே என்று அர்த்தம் பண்ணிக் கொண்டார்! அந்த அர்த்தத்துக்கு ஏற்ப, ஊர்க் கோடியிலிருந்த அரச மரத்தைச் சுற்றி வந்து 'பத்மநாபோ மரப் பிரபு:' 'பத்மநாபோ மரப் பிரபு'ன்னு தினமும் 108 பிரதட்சணம் பண்ணினார்.

அந்த வழியே போன ஒரு சம்ஸ்கிருத பண்டிதர் இதைப் பார்த்து நடுங்கிப் போயிட்டார்.

தவறாக உச்சரித்தவரை நிறுத்தினார். திருத்தினார். "நீர் ரொம்ப உசந்த காரியம்தான் பண்றீர். ஆனால் வாக்கு சரியில்லை. "பத்மனாபோ அமரப்பிரபு: அப்படின்னு சொல்லணும்..." என்று கூறி அர்த்தத்தையும் விளக்கினார்.

தவறாக உச்சரித்தவர் ரொம்பவும் வேதனைப்பட்டு, "அடாடா! தெரியாமல் சொல்லிவிட்டேனே... எனக்குப் பாவம் சம்பவிக்குமா?" என்று கவலையுடன் கேட்டார்.

Public domain. Digitization: Muthulakshmi Research Academy

"அதெல்லாம் சம்பவிக்காது. தெரியாமல் சொன்னதற்கு தோஷமில்லை; இனிமேல் அப்படிச் சொல்லாமல் சரியாகச் சொல்லு..." என்றார் திருத்தினவர்.

மறுநாளிலிருந்து திருத்தி உச்சரிக்க ஆரம்பித்தார் முதலாமவர். 'மரப் பிரபு' அல்ல என்பதால் மரத்தைப் பிர தட்சணம் பண்ணுவதையும் நிறுத்திவிட்டார். வாசல் திண்ணையில் உட்கார்ந்தபடியே 'பத்மநாபோ அமரப் பிரபு:' என்று சொல்லி வந்தார்.

அன்று இரவு, திருத்திய வித்வானின் சொப்பனத்தில் பகவான் வந்தார்.

"உம்மை யாரு சமஸ்கிருதம் படிக்கச் சொன்னா...? அப்படியே படிச்சதுதான் படிச்சீர்... அந்த பக்தரை யாரு திருத்தச் சொன்னா...? நீர் திருத்திய பிறகு அவர் மரத்தைப் பிரதட்சணம் செய்யறதை நிறுத்திட்டார்... அப்படியானால் நான் மரங்களுக்குப் பிரபு இல்லையா? உமக்கு விஷ்ணு புராணம் தெரியாதா...?"

ஜோதீம்ஷி விஷ்ணு:

புவனானி விஷ்ணு:

வனானி விஷ்ணு:

என்று பராசர மஹரிஷி சொன்னது தெரியாதா? (ஜோதீம்ஷி-ஒளி; புவனானி-உலகங்கள்; வனானி-காடுகள்) நீர் திருத்திச் சொன்னதால் 108 பிரதட்சணங்கள் செய்யறதை அவர் நிறுத்தினார். திரும்பவும் போய் அவரிடத்திலே சொல்லும்- 'மரப் பிரபு:' என்றே சொல்லச் சொல்லு..." என்று கோபித்துக் கொண்டார் பகவான்.

குழந்தை சரியாக உச்சரிக்காவிட்டாலும் மகிழ்ச்சி யோடு நாம் கேட்கவில்லையா...? அது போல்தான் எல்லையற்ற கருணையுடைய பகவானும் நம்மைக் குழந்தைகளாய்ப் பாவித்துக் கேட்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவருக்கு 'க்ரு' என்று சொல்ல வராது... 'க' வரும் இடத்தில் எல்லாம் 'த' என்று உச்சரிப்பார். அவருக்கு மந்திரம் சொல்லிக் கொடுக்க முயன்றார் ஒரு வித்வான்.

"ஸ்ரீ கிருஷ்ணாய நம:" என்பதற்கு பதில் "ஸ்ரீ திருஷ்ணாய நம:" என்று தவறாகவே உச்சரித்தார் மாணவர். 'உமக்கு என்னால் சொல்லித் தர முடியாது...' என்று சலித்துக் கொண்டார் வித்வான்.

அங்கே இன்னொரு வித்வான் வந்தார். "அவர் ஸ்ரீ த்ருஷ்ணயே என்றே சொல்லட்டும்... பாதகமில்லை..." என்றார் அந்த இரண்டாவது வித்வான்.

"ஏன்...?"

"ஸ்ரீ திருஷ்ணாய என்றால், ஸ்ரீயினிடத்திலே திருஷ்ணை உடையவன் என்று அர்த்தம்... (ஸ்ரீ-மகாலக்ஷ்மி; திருஷ்ணை-அன்பு.) அவர் சொல்வதும் பகவானையே குறிக்கும்..." என்றார்.

இந்தக் கதைகளைச் சொல்வதாலே, மந்திரங்களை, பகவான் நாமத்தைத் தப்பும் தவறுமாகச் சொல்லலாம் என்று அர்த்தம் இல்லை. அறியாமையாலும் இயலாமையா லும் அவ்வாறு தவறாகச் சொன்னாலும், மனத்திலே அவன் நினைவு ஆத்மார்த்தமா இருந்தால் அதை அவன் அப்படியே ஏற்பான் என்கிறதுக்காகச் சொன்னது.

அடியேன் திருப்பதி போயிருந்த சமயம்... சுவாமி புஷ் கரணியில் ஸ்நானம் பண்ணப் போனேன். அப்போது அங்கே தெனாலியிலிருந்து வந்த ஒரு குடும்பம், முடி கொடுத்து விட்டு ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தது.

அந்தக் குடும்பத் தலைவர் முங்கி எழுந்து, தலைக்கு மேல் கைகூப்பி "கோஹிந்தா! கோஹிந்தா...!" என்று பெருமானை அழைத்துக் கொண்டிருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கோஹிந்தா இல்லை; கோவிந்தான்னு சொல்லணும்..." என்று அவரைத் திருத்த அடியேன் எழுந்தேன். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் என்னை ஸ்தம்பித்துப் போகப் பண்ணின.

"ஏழுமலையானே! ஒவ்வொரு வருஷமும் இதே நாளில் உனக்கு வந்து முடிகொடுத்து விட்டு உன்னை சேவிச்சுட்டுப் போகிறேன். போன வருஷம் போலவே இந்த வருஷமும் நான் சந்தோஷமா இருக்க அனுக்கிரஹம் பண்ணு..." என்று உரக்க பிரார்த்தனை செய்தார் அந்த பக்தர்.

'அவரைத் திருத்தணும்' என்று எழுந்தவன் உடன் அப்படியே உட்கார்ந்து விட்டேன். போன வருஷமும் அந்த பக்தர் 'கோஹிந்தா கோஹிந்தா'ன்னு தானே பகவானைக் கூப்பிட்டிருப்பார். அதற்காக பகவான் அவருக்கு அனுக்கிரஹம் பண்ணாமல் விட்டு விடவில்லையே... 'கோஹிந்தா'ன்னு சொன்னதற்கே ஒரு வருஷம் ஆனந்தமாக அவர் இருந்திருக்கிறாரே! இந்த வருஷமும் போன வருஷத்தைப் போன்ற சந்தோஷத்தைத் தானே பக்தர் கேட்கிறார்...!

- இதை உணர்ந்ததும், அவரைத் திருத்தணும் என்கிற என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். எம்பெருமானுக்கு நம்மிடத்திலே என்ன வாத்ஸல்யம்! (கருணை) என்று சிலிர்ப்பு வந்தது.

பாண்டித்யம் இல்லாவிட்டாலும் பகவான் நாமத்தைச் சொல்லலாம். ஆனால் அதை இடைவிடாது சங்கீர்த்தனம் பண்ணணும்னு போன வாரம் சொன்னது எப்படி சாத்தியப்படும்...?

இதற்குத்தான் நாம சங்கீர்த்தனத்தை நமக்கு வாழ்க்கை முறையாகவே வைத்திருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமாளை எழுந்தருளப் பண்ணுகிறவர்களுக்குத் தோளிலே காய்த்துப் போயிருக்கும். அதுபோல நாம சங்கீர்த்தனத்தைப் பழக்கமாகப் பண்ணிக் கொள்ளணும். 'நாவிலேயே தழும்பு ஏற்பட்டுப்போகும் அளவுக்கு திரு நாமத்தை உச்சாடணம் பண்ணணும்; எத்தனை தடவைன்னு கேட்கக் கூடாது' என்கிறார், திருமங்கையாழ் வார்.

தழும்பு எப்படி உண்டாகும்? மீண்டும் மீண்டும் சொல்வதால். அதற்குத்தான் நியமம் ஏற்பட்டிருக்கிறது.

எழுந்திருக்கும் போது - துயிலெழும்போது; 'ஹரிர் ஹரி:, ஹரிர் ஹரி:' என்று ஏழு தடவை சொல்ல வேண்டும்.

உரக்க, பெரிசா சொல்லணுமா? மனசுக்குள்ளே சொன்னால் போதாதா? மனசுக்குள்ளே சொன்னால் பலன் நமக்கு மட்டும். பெரிசா சொன்னா அக்கம் பக்கத்திலே இருப்போரும் அதைக் கேட்டபடி எழுந்திருப் பார்கள். பரோபகரமாகவும் இருக்கும்.

வெளியிலே கிளம்பிப் போகும்போது 'கேசவா' என்று உச்சரிக்கணும்.

திருவனந்தபுரத்து அனந்த பத்மநாபசுவாமி குறித்து நம்மாழ்வார் பாடுகிறார்:

'கெடும் இடராயவெல்லாம் கேசவா என்ன...'

'கேசவா' என்று சொன்னால் இடர்களெல்லாம் கெடுமாம். அதனால்தான் ஒரு காரியமாகப் புறப்படும் போது 'கேசவா' என்று அழைப்பது.

ஆண்டாள் இந்த அனுஷ்டானத்தைக் கடைப்பிடித் திருக்கிறார்.

"கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்...'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்கிறது திருப்பாவை. 'கேசவா கேசவா' என்று பாடிக் கொண்டு புறப்பட்டுவிட்டோம். நீ அதைக் கேட்டும் கிடந்துறங்குகிறாயே...' என்று துயிலெழுப்புகிறார்.

அடுத்தது உணவு கொள்வதற்கு முன்னால் கோவிந்தா என்று சொல்லிவிட்டுச் சாப்பிட வேண்டும். கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்தவனை இப்படி அழைப்பதன் மூலம் நித்ய அன்னம் கிடைக்க உத்தரவாதம் செய்து கொள்கிறோம்.

சிரமம் இல்லை, கஷ்டமான நியமமில்லை. ஹரீ, கேசவா, கோவிந்தா, மாதவா என்று எளிய நாமங்களை நாம் தினமும் செய்கிற காரியங்களோடு சேர்த்து விட்டிருக்கறதாலே எந்தவிதக் கூடுதல் முயற்சியு மில்லாமலே நாம சங்கீர்த்தனம் நடைபெற்று விடுகிறது.

ஆனால் சொல்கிற அந்த நேரத்திலே மனசு அளவு கடந்த பக்தியிலே நிரம்பியிருக்கணும். 'சொல்லிப் பார்ப்போமே, பலனிருக்கிறதாவென்று..." அப்படின்னு பரீட்சார்த்தமாகச் சொல்லக்கூடாது.

காரணம், அவனது நாமங்கள் சர்வ உத்தமமானவை: 'சர்வோத்தமஸ்ய கிருபையா...' சர்வ உத்தமமான அவனுடைய நாமங்களை நம்மை உச்சரிக்க வைப்பதும் அவனுடைய கிருபைதான்... கருணைதான்!

முதலிலே இந்த நித்ய காரியங்களுடனான நாம உச்சாடனத்தைப் பழகிக் கொண்டு விட்டால் மனசு மேலும் மேலும் அந்த சத் அனுபவத்தைக் கேட்கும். அந்த மனசுக்கு தெய்வானுபவம் தரக்கூடியதாய் அமையப் பெற்றது விஷ்ணு சஹஸ்ரநாமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

சஹஸ்ரநாமம் எனறால் ஆயிரம் நாமங்கள் - திருப் பெயர்கள். பகவானுக்கு வெறும் ஆயிரம் பெயர்கள் தானா...?

ஆயிரம் நாமங்கள் என்று வெறும் எண்ணிக்கையிலே மட்டும் சொல்லவந்ததன்று. சஹஸ்ரம் என்பதற்கு 'பலபல' என்றும் பொருள் உண்டு.

'பலபலவே ஆபரணம்; பேரும் பலபலவே' என்று ஆழ்வார் சொல்கிறார்.

எல்லோரும் புரிந்துகொண்டு சொல்வதற்கு ஏற்ப அங்கங்கே உள்ள ரத்தினங்களைச் சேகரித்து, மாலை தொடுத்தது போலே தொடுக்கப்பட்டது விஷ்ணு சஹஸ்ர நாமம்.

'சஹஸ்ரநாமம்' என்று சொன்னாலே அது விஷ்ணு சஹஸ்ரநாமத்தைத்தான் குறிக்கும் என்கிற அளவுக்குப் பெருமையுடையது.

ஆதிசங்கர பகவத்பாதாள், காஷ்மீரில் யாத்திரை பண்ணிக் கொண்டிருந்த போது, தம் சிஷ்யரை அழைத்து, புஸ்தக பாண்டாகாரத்திலிருந்து லலிதா சஹஸ்ரநாமத்தை எடுத்து வரும்படி ஆக்ஞாபித்தார். அதற்கு பாஷ்யம் பண்ண வேண்டும் என்று அவருக்குத் திருவுள்ளம்.

அங்கேயிருந்து போனார் சிஷ்யர். அவர் எடுத்து வந்து கொடுத்ததைப் பார்த்தால்... அது விஷ்ணு சஹஸ்ர நாமம். "நான் இதைக் கேட்கலையே... நான் கேட்டது லலிதா சஹஸ்ரநாமம் அல்லவா... நீ விஷ்ணு சஹஸ்ர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாமத்தைக் கொண்டு வந்திருக்கியே..." என்று சிஷ்யரைத் திரும்பவும் அனுப்பினார். திரும்பவும் சிஷ்யர் எடுத்து வந்தது விஷ்ணு சஹஸ்ரநாமமாகவே இருந்தது! அப்போது ஆதிசங்கரர் சிஷ்யரைக் கேட்கிறார்.

"நான் சொல்வது என்ன? நீ செய்வது என்ன...?"

"சுவாமி! நான் என்ன செய்வேன். அங்கே போய் லலிதா சஹஸ்ரநாமத்தை எடுக்கணும்னு கையை வைச்சா, ஒரு சின்ன கன்யா பெண் வந்து நின்னுண்டு, அதை வைச்சிடு; இதை எடுத்துண்டுபோ'ன்னு சொல்கிறாள். நான் என்ன செய்வேன்..." என்றார் சிஷ்யர்.

அப்போது ஆதிசங்கரர் தம் திருவுள்ளத்திலே நினைக்கிறார்: 'அந்த அம்பிகையே இங்கு பாலையாய் வந்து, அந்த எம்பெருமான் நாராயணனுடைய திரு நாமத்துக்கு பாஷ்யம் பண்ணும்படியாய் நம்மை நியமிக்கிறாள்...'

அதன் பிறகு விஷ்ணு சஹஸ்ரநாம பாஷ்யம் பண்ணினார் பகவத்பாதர்.

இப்படி லலிதையே போற்றும்படியான, லலிதமான சஹஸ்ரநாமம், எல்லோரும் கொண்டாடும் படியான ஏற்றம் உடையது. எல்லா சஹஸ்ரநாமங்களுக்கும் ஆதியான சஹஸ்ரநாமம் இதுதான். ஆகையினாலே, சஹஸ்ரநாமம் என்று சொன்னாலே அது விஷ்ணு சஹஸ்ரநாமத்தைத்தான் குறிக்கும்.

ஆயிரம் திருநாமங்களுக்கு என்ன ஏற்றம்...? அந்த சஹஸ்ரநாமம் சொல்லப்பட்டது யாராலே...? ஞானிகளுள் அக்ரகண்யரான பீஷ்மரால்... பீஷ்மர் என்றாலே பயப்படத் தக்கவர் என்று அர்த்தம்.

அம்புப் படுக்கையில் இருக்கிறார் பீஷ்மர். அந்தக் காட்சியைப் பார்த்து, தர்மபுத்திரரை அழைத்துச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்கிறார் பகவான் கிருஷ்ணர். "அணையும் நெருப்பைப் போலே இருக்கிறார் பீஷ்மர். அவர் போனால், தர்மத்தைச் சொல்ல யார் இருக்கிறார்கள்...? போ! அவர் சொல்வதைப் போய்க் கேள் என்று தர்மபுத்திரரை அனுப்புகிறார்.

'ஏன் பீஷ்மர் போய்விட்டால் பகவானே இருக்கிறாரே - தர்மத்தைச் சொல்ல...?' என்று நமக்குக் கேட்கத் தோன்றும்.

பகவான் இருந்து பிரயோஜனமில்லை; அவரை விளங்கச் செய்யக்கூடிய மகான்கள் இருக்கணும்! இந்த உண்மைக்கு சாட்சியாகத்தான் பகவானே பீஷ்மர் அம்புப் படுக்கையிலே இருந்தபடி சொன்ன அந்த விஷ்ணு சஹஸ்ர நாமத்தைக் கேட்டார். பல பேர் கேட்டார்கள். அவர்களுடன் அந்த வாசுதேவனே கேட்டான். அவன் சொன்னது கீதை; கேட்பது சஹஸ்ரநாமம். இப்படி அவன் ஆனந்தமாய் கேட்டதே அதன் பெருமை, உயர்வு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பராசர பட்டர், விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் பண்ணியிருக்கிறார். பகவத் குண தர்ப்பணம் என்று அதற்குப் பெயர். 'பகவானுடைய திருக்கல்யாண குணங்களைக் காட்டக் கூடிய கண்ணாடி' என்று பொருள். விஷ்ணு சஹஸ்ரநாமம் என்னும் போது பகவானுடைய நாமாக்களைச் சொல்கிறோமா? அவன் குணங்களைச் சொல்கிறோமா என்று சந்தேகம் வேண்டாம்... அவன் குணங்களையே தெரிவிக்கும்படியான நாமாக்கள் அவை. அத்தனையும் சுகுணங்கள்!

சிறிய கண்ணாடியானது மிகப் பெரிய யானையின் உருவத்தைக்கூடக் காட்டவல்லது இல்லையா... அதைப் போலே சர்வ வியாபகனானவனை அந்த சின்ன திருநாமங்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்த பகவத் குண தர்ப்பணம் என்கிற பாஷ்யத்திலே, பராசர பட்டர், விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு உரிய ஏற்றங்களைச் சொல்கிறார். ஆறு வித உயர்வுகளைச் சொல்கிறார்.

மகாபாரத சாரம் :

ரஸாலு என்று ஆந்திர தேசத்திலே ஒருவகை மாம்பழம் வருவதுண்டு. வெயில் காலத்திலே வரும். அதைப் பிழிந்தால் மொத்தமும் ரஸமே கொட்டும்! அதைப் போலவே மகாபாரதம் ஒரு பெரிய ரஸாலு என்று வைத்துக் கொண்டால், அதைப் பிழிந்தால் வரக்கூடிய சாறு சஹஸ்ர நாமம்! மகாபாரதக் கதை முழுதும் அதில் இருக்கிறது.

மகாபாரதத்துக்கு அப்படி என்ன சிறப்பு...? 'சாப்பிட்டால் வடையே சாப்பிடணும்; கேட்டால் மகா பாரதக் கதையே கேட்கணும்!' என்கிற அர்த்தத்திலே ஒரு தெலுங்கு பழமொழி உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்மத்தைச் சொல்வது மகாபாரதம். 'மகா' பாரதம் என்று ஏன் அதற்குப் பெயர் உண்டாயிற்று...? பெரிதாக பளுவுடையதாக இருப்பதாலே அந்தப் பெயர்... அளவிலும் பளு; புத்திக்கும் பளு... சாமான்யனின் புத்திக்கு வடிவமாகச் சொல்லியிருக்கிறது. தர்ம, அர்த்த, காம மோக்ஷம் என்ற சதுர்வித புருஷார்த்தத்திலேயும் தெளிவான ஞானம் பிறக்க வழி, மகாபாரதம். வேத சாகரத்தை (சமுத்திரத்தை) வியாஸரின் புத்தியாகிற மத்தினாலே கடைந்து பெற்ற உயர்ந்த வெண்ணெய் போன்றது மகாபாரதம். இப்படி வேத ஸாரமான மகாபாரதத்தின் ஸாரம் விஷ்ணு சஹஸ்ர நாமம்!

மகரிஷிகளாலே நன்கு, பலமுறை கானம் பண்ணப்பட்டது:

ரிஷிகளுக்கும் நம்மைப் போன்ற நித்ய சம்ஸாரிகளுக்கும் வித்தியாசமில்லையா...? நம் பார்வை ஒரு வரையறைக் குட்பட்டது. மகரிஷிகளின் பார்வையோ உயர்ந்த ரீதியிலே வஸ்துவாகப் பார்க்காமல் அதன் உள்ளே இருக்கிற சக்தியைக் காணக்கூடியது.

உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன் - உடலுக்குள் உயிர் மறைந்துள்ளது போல் எல்லாவற்றிலும் கலந்திருக்கிறான் பரமாத்மா. இதுக்கு ஒரு கதை...

சுக பிரும்ம மகரிஷி ஒரு தடாகக் கரை வழியே வேகமாக நடந்து போனார். அவர் அவதூதர். திருமேனியில் வஸ்திரம் கூட இல்லை. தடாகத்தில் சில அப்ஸர ஸ்திரீகள் நீராடிக் கொண்டிருந்தனர். அத்தனை ஸ்திரீகளும் சுக பிரும்மரைப் பார்த்தனர்; அவரும் அவர்களைப் பார்க்கிறார் - அவர் மனசில் எந்த விகாரமும் ஏற்படவில்லை. அந்த ஸ்திரீகளும் மான சம்ரக்ஷணம் பண்ணிக் கொள்ளவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுகபிரும்மரைத் தொடர்ந்து வந்தார் அவர் தந்தையான வியாஸர். 'ஹே புத்ரா!' என்று அழைத்தபடி வந்தார். அவர் குரலைக் கேட்டதுமே மான ஸம்ரக்ஷணம் செய்து கொண்டார்களாம்.

வியாஸர் அந்த ஸ்திரீகளிடம் வந்தார்... "நான் வயோதிகன்; அவனோ சின்னப் பையன்... அப்படியும் என்னைக் கண்டதும் மான சம்ரக்ஷணம் பண்ணிக் கொண்டதேன்...? இது என்ன விபரீத ஆசாரம்?" என்று கேட்டார்.

"இந்தக் கேள்வியை உங்கள் பிள்ளை கேட்டாரா? எங்களைத் திரும்பிப் பார்த்தாரா? அவர் தன்மை எங்களுக்குத் தெரியும்; நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று நினைப்பவர்; சர்வ பதார்த்தங்களிலும் பகவானைப் பார்க்கிறார். நீர் இன்னும் கீழ்ப்படியில் இருக்கிறீர்... ஆகையினாலே உங்களைக் கண்டால் பயப்பட வேண்டியிருக்கிறது..." என்றார்களாம் அப்ஸர ஸ்த்ரீகள்.

(இதனால் வியாஸரைக் குறைத்துச் சொன்னதாக அர்த்தம் ஆகாது... ஒருத்தரைக் குறைச்சுச் சொல்றமாதிரி சொல்லி அடுத்தவரை உயர்த்திச் சொல்றது.)

இதை "நஹி நிந்தா ந்யாயம்" என்பார்கள்.

சுகபிரும்மரைப் போல் எதிலும் பகவானைப் பார்க்கும் ரிஷிகள், பகவான் நாமத்தைத் தனியே சொல்ல வேண்டியதில்லை... ஆனால் அப்படிப்பட்ட ரிஷிகளே விஷ்ணு சஹஸ்ரநாமத்தைக் கானம் பண்ணுகிறார்கள். அனைத்து ரிஷிகளும் அபிப்ராய பேதமின்றி பண்ணு கிறார்கள்.

பகவானாலே அடையாளம் காட்டப்பட்டது :

வியாஸரை வேத வியாஸர் என்று சொல்கிறோம். வேதத்தை விபஜிக்கிறவர் என்று பொருள். விபஜிக்கிறவர்...? பிரிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலியுகத்திலேதான் நால் வேதங்களை நான்கு பிரிவினர் தனித்தனியே சொல்கிறார்கள். கிருத யுகத்திலே அப்படியில்லை. எல்லா வேதங்களையும் பூர்ணமாகக் கற்றுணர்ந்திருப்பார்கள். ரிக் வேதம் சொல்லும் என்றால் சொல்வார்கள்; சாம கானம் பண்ணும் என்றால் பண்ணு வார்கள்... எல்லாவற்றையும் சேர்த்து தரித்தார்கள். இப்போது கலியுகமானதினாலே மந்த புத்தியும் மந்த பாக்யமும் உடையவர்களாயிருக்கிறோம்.

ஒவ்வொரு துவாபர யுகத்தின் முடிவிலேயும் அடுத்து வரப் போகிற கலியுகத்து மனிதர்களுக்கு உதவும்படியாகப் பரமாத்மாவே வியாஸாவதாரம் பண்ணுகிறார். வேத சாரத்தை விபஜித்துக் காட்டுகிறார். பிரித்து, நான்கு சிஷ்யர் களுக்கு விபஜித்துத் தருகிறார். இப்படி வசிஷ்டர் ஒரு முறை வியாஸாவதாரம் பண்ணியிருக்கிறார். பகவானே கருணை கொண்டு வேத வியாஸராய் அவதரித்து வழங்கியது மகா பாரதம். ஸாரம் பகவத் கீதை; அதன் ஸாரம் விஷ்ணு சஹஸ்ரநாமம். ரிஷிகள் கானம் பண்ணிய விஷ்ணு சஹஸ்ர நாமத்தை பகவானே அடையாளம் காட்டியிருக்கிறார்.

பீஷ்மரால் உயர்ந்ததாகக் கொண்டாடப்பட்டது :

ஆங்கிலத்திலே 'superlative degree' என்றொரு வார்த்தை சொல்வதுண்டு. அதற்கு மேலாக ஒன்றும் கிடையாது. ஒப்பு உயர்வு சொல்ல முடியாமல் பெருமை யுடையது என்று பீஷ்மரே ஏற்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தை எடுத்து ஆண்டிருக்கிறார். 'மகரிஷிகளால் கானம் பண்ணப் பட்ட பரம நாமம்' என்று போற்றி உகந்திருக்கிறார்.

நோய் தீர்க்க வல்லது :

வைத்ய சாஸ்திரமான சரக சம்ஹிதையிலே சொல்லியிருக்கிறது. விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லக் கேட்டால் வியாதிகள் போகும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy





முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் வேடிக்கையாய்ச் சொல்வார்: "எல்லாரும் உபநிஷத்படி நடக்கிறார்கள் - மாத்ரா பலத்தை நம்புகிறார்கள்'' என்று. உபநிஷத் சொல்லும் மாத்ரா பலம் - வேத கோஷங்களின் ஒலி மாத்திரைகளுக்கு உள்ள சக்தியை. நாம் நம்புவதோ மாத்திரை (tablet) பலத்தை! அந்த நரசிம்ஹனே பலம் என்று நம்பி சஹஸ்ரநாமத்தைப் பூரணமாய்ச் சொல்லி மூன்று தடவை தீர்த்தம் கொடுத்தால் தலைவலி போய் விடும். அந்திம காலத்தைத் தடுக்கக் கூடிய சக்தி கூட சஹஸ்ரநாமத்துக்கு இருக்கிறது.

நித்யம் பகவத் சந்நிதியில் விளக்கேற்றி சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ற வழக்கம் வைத்துக் கொண்டால் அந்தக் குடும்பத்திலே சண்டை, கலகம் கிடையாது, சர்வ சம்பத்தும் வந்து சேரும். அந்நியோன்யம் வளரும்; துர்தேவதைகள் பிரவேசிக்காது... நம் சித்தத்திலும் நுழையாது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீதைக்குத் துல்லியமாய் அர்த்தத்தை உடையதனாலே :

கீதைக்குச் சமானமா ஏதாவது உலகத்திலே உண்டா என்று கேட்டால் அது விஷ்ணு சஹஸ்ரநாமம்தான். இன்னும் கேட்டால், கீதையைவிட உயர்வானது. கீதையைச் சொன்னது பகவான். அந்த பகவத்சரணாரவிந்தத்திலே அசஞ்சலமான பக்தி உடைய ஞானி (பீஷ்மர்) சொன்ன வார்த்தை விஷ்ணு சஹஸ்ரநாமம். பகவானைக் காட்டிலும் ஞானி உயர்ந்தவரானதாலே அவர் வார்த்தைக்கு மதிப்பு அதிகம்.

துளிகூட மிச்சமின்றி அந்த ஆகாயம் முழுவதையும் காகிதமாக்கி, ஏழு சமுத்திர ஜலத்தையும் மையாக்கி எழுதினாலும் விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் பெருமையை விளக்க முடியாது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

எம்பெருமான் திருநாமங்கள் அவன் பெருமைகளைக் காட்டிலும் மேலானது என்று சொன்னேன்... வேதமே சொல்கிறது. 'யக்ஞமே பண்ண வேண்டாம். அவன் திருநாமத்தைச் சொன்னாலே போதும். யக்ஞம் பண்ணின பலன் கிடைக்கும்...

கலியுகத்திலே கடும் அனுஷ்டானங்களைக் கடைப் பிடித்து யக்ஞமெல்லாம் பண்ண முடியாதுன்னு வேதத்துக்கே தெரியும்!

கீதையின் கடைசிப் பேச்சாக வருவதை சரம ஸ்லோகம்னு சொல்றது. மகா மந்திரம் அது. அது என்ன சொல்கிறது தெரியுமா...? 'எல்லா தர்மங்களையும் நன்றாக விட்டு, என்னையே சரணமடைவாய்...' என்கிறது.

தர்மங்களை விடுவது என்பது நித்ய கடமைகளான சந்தியாவந்தனம்,மாத்யானிகம் போன்றவற்றை விட்டு விடுவதல்ல... நியமத்தோடு பண்ண முடியாத பெரிய யக்ஞங்களை விட்டு விடலாம் என்று அர்த்தம்.

இதற்கு இன்னொரு வியாக்யானமும் சொல்வதுண்டு... கலியுகத்திலே எல்லா தர்மங்களும் நம்மை விட்டு தூர, தள்ளி அகன்று போய்விடுகின்றன...! 'இவனாலே யக்ஞமெல்லாம் முறைப்படி பண்ண முடியாது' என்று அவற்றுக்குத் தெரியுமாம்! அதனால்தான் நம் மேலே பரிவு கொண்டு, வீணான விஷயங்களிலே நாம் காலத்தைக் கழித்துவிட அனுமதிக்காமல் மாற்றுவழி சொல்லியிருக் கிறது. யக்ஞம் பண்ணினால் என்ன திருப்தியை பகவான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைவானோ, அதே திருப்தியை அவன் திருநாமத்தைச் சொன்னால் அடைஞ்சுடுவான். எம்பெருமான் நாமங்களால் சமஸ்த யக்ஞ பலனும் நமக்குக் கிடைக்கும்.

பகவான் நாமா நமக்கு என்ன உபகாரம் பண்றது என்று கேட்டால் மூன்று விதமா உபகாரம் பண்றது.

திருஷ்ட பலம்

அதிருஷ்ட பலம்

திருஷ்டாதிருஷ்ட பலம்

என்று மூன்று வகையான பலத்தைக் கொடுக்கிறது.

நேராக, கண் கூடாக எல்லோரும் பார்க்கும்படியான நேர் பலன், நேராக வந்து காரியத்தை நடத்திக் காட்டும் பெருமை, திருநாமத்துக்கு உண்டு. இதைத்தான் திருஷ்ட பலம் என்கிறது.

திருஷ்ட பலத்துக்கு உதாரணமாக பாகவதத்திலே ஒரு சம்பவம் வருகிறது:

ஜாமி என்றால் நல்ல ஸ்த்ரீ என்று அர்த்தம். அஜாமி என்றால் அதற்கு நேர் எதிரானவர்! அத்தகைய ஸ்த்ரீயின் சேர்க்கையுடையவனாக இருந்தான் அஜாமிளன். காட்டிலே தர்பை கொண்டு வரப் போனவன், அங்கு பார்த்த ஸ்த்ரீயுடன் தங்கி பத்து குழந்தைகளைப் பெற்றான். எண்பத்தெட்டு வயது நிறைந்த காலத்தில், அஜாமிளன் படுத்த படுக்கையானான். அந்த ஸ்த்ரீ அவனைக் கைவிட்டு விட்டாள்; கவனிக்க யாருமில்லை.

அந்திம காலத்திலே மூன்று யம பட்டர்கள் வந்து அவன் பக்கத்திலே நிற்கிறார்கள். (வழக்கமாக இருவர்தான் வருவார்கள்... ஆனால் அவன் 'மகா பாபி' என்பதால் யமன் மூன்றாவதாக ஒரு ஆளை அனுப்பினானாம்!)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நடுநடுங்கி, கதிகலங்கிப் போனானாம் அஜாமிளன். என்ன செய்வதென்று புரியாமல், சற்று தூரத்திலே விளையாடிக் கொண்டிருந்த தனது பத்தாவது புதல்வனைக் கூப்பிட்டானாம்.

"நாராயணா...!" என்று அவன் தன் குழந்தையைத் தான் கூப்பிட்டான். கூப்பிட்டவுடனேயே, பீதாம்பரதாரியாக, சங்கு சக்கரத்தோடு போன்றே எம்பெருமான். நான்கு பேர் வைகுண்டத்திலிருந்து வந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யமதூதர்களை விரட்டினார்கள்!

அந்தக் கட்டத்திலே அஜாமிளன் எண்ணினான்: 'அடடா! இப்படிக் கடைசி காலத்திலே என் குழந்தையின் பெயரைச் சொன்னதற்கே பகவான் ஓடி வந்து காப்பாற்றினானே; ஆயுள் முழுவதும் அவன் பெயரைச் சொல்லியிருந்தால் எத்தனை கதிபலன் அடைஞ்சிருப்பேன்...'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்புறம் அஜாமிளன் கூட முக்தி அடைந்தான். அதனாலே, 'அவனைப் போல் நாமும் இருக்கலாமே' என்று எண்ணினோமேயானால் அது நம் கையில் இல்லை. நம் சரித்திரம் அஜாமிள சரித்திரமாகாது! அப்போதைக்கிப் போதே நாம் பகவான் நாமாவைச் சொல்லி வைக்கணும்...!

ஒருத்தர் ரொம்ப உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாயிருந்தார். போகிற வழிக்கு அவருக்குப் புண்ணியம் கிடைக்கட்டுமே என்று அவருடைய கடைசிப் பிள்ளையைக் காட்டி, "இவன் யாரு?" என்று கேட்டார்கள். (அவர் கடைசிப் பிள்ளைக்கு கோவிந்தன் என்று பெயர்.)

"இவனா...? இவன் என் கடைசிப் பிள்ளை" என்று சொல்லிவிட்டு உயிரை விட்டுவிட்டார் அவர்!

அஜாமிள சரித்திரத்தைச் சொன்னது திருஷ்ட பலம் பற்றித் தெரிஞ்சுக்கறதுக்காக. எல்லோரும் அறியும் வண்ணம் நேராக உணர்த்தும் பலனை அவன் நாமத்தின் மூலம் பெறுகிறோம்.

அடுத்து அதிருஷ்ட பலம். திரௌபதி சரணாகதி அடைந்த போது அவளுக்குப் புடைவை சுரந்தது அதிருஷ்ட பலத்துக்கு உதாரணம். அதாவது மறைந்து நின்று உதவக்கூடியது பகவான் திருநாமம்.

திருஷ்டா திருஷ்டா பலனுக்கு உதாரணம் கஜேந்திர மோக்ஷம்.

'ஆதிமூலமே' என்று கஜேந்திரன் அழைத்ததுமே பகவான் அதிவேகமாக வந்து ரக்ஷித்திருக்கிறான்.

"ரங்கநாதா! உன்னை நமஸ்கரிக்கவில்லை நான்... அன்னைக்கு கஜேந்திரன் அழைத்ததும் ஓடி வந்தாயே... அந்த வேகத்துக்கு நமஸ்காரம்..." என்கிறார் பராசரபட்டர்! அத்தனை வேகம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேகமாக வந்ததுடன், முதலையிடமிருந்து கஜேந்திரனை விடுவித்தான்; அந்த யானைக்கு மோட்சத்தையும் அளித்தான். உயிரைக் காப்பாற்றிய திருஷ்ட பலத்துடன் மோட்சத்தை அளித்த அதிருஷ்ட பலமும் சேர... திருஷ்டா திருஷ்ட பலம் வாய்க்கப் பெற்றது.

அவனை மனசார நினைத்து அன்னம் எடுத்து ஹோமம் பண்ணுங்கள்; அப்படியில்லையென்றால் மனசார அவன் நாமத்தைச் சொல்லுங்கள். எம்பெருமான் அனுக்கிரஹம் விசேஷமாகக் கிடைக்கும். இப்படி மூன்று வகையான பலங்களும் கிடைக்கும்.

'திருநாமத்தைச் சொன்னால் மோட்சம் கிடைச்சுடுமா?' என்றால், அது நேரே மோட்சம் வாங்கித் தராது. சொல்லச் சொல்ல பக்தி ஏற்படப் பண்ணும்; பக்தி உண்டாக உண்டாக, இந்த ஆத்மா அவனுடையதுன்னு நினைப்போம். அதை அவன் திருவடியிலே சமர்ப்பிப் போம்; அதன் விளைவாக மோட்சம் கிடைக்கும். இதுவே அவன் திருநாமம் நமக்குப் பண்ணக் கூடிய மிக உயர்ந்த உதவி.

அப்படிப்பட்ட திருநாமங்கள் அடங்கியதாலேதான் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ரொம்ப உயர்த்திச் சொன்னது.

வேதம் சொல்லி ஹோமம் வளர்க்கிறதுக்குப் பதிலாக இப்படி நாமங்களைச் சொன்னால் போதுமா என்று கேட்டால்... மூன்று வேதங்களின் சாரம் காயத்ரி என்கிற மகா மந்திரம். இந்த உத்தமமான மகாமந்திரத்தை விளக்கும் படியாக அமைந்திருக்கிறது விஷ்ணு சஹஸ்ரநாமம்.

காயத்ரி மகாமந்திரத்தை தினமும் சொன்னவர் களுக்கு அசாத்யமான ஆசீர்வாத பலம் உண்டு:

காகிநாடா பக்கத்திலே ஒரு சமஸ்தானத்து ராஜா. அவர் குழந்தைக்குப் புண்யாகவசனம். வேத வித்துக்களால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபை நிரம்பியிருக்கும் சமயம் குழந்தை தவழ்ந்து போய் அரண்மனையில் இருந்த தண்ணீர் தொட்டியில் விழுந்து மாண்டு போய்விட்டது! நடந்ததை மறைத்து விட்டாள் குழந்தையின் அம்மா. துக்கம் சம்பவித்த இடத்திலே சாப்பிடக் கூடாது. எல்லா வேத வித்துக்களும் பட்டினியாய்ப் போவார்களே என்ற எண்ணத்தில் குழந்தை இறந்ததைச் சொல்லாமல், மடியிலே அதை மறைத்து வைத்துக் கொண்டாள் ராணி.

புண்ணியாகவசனம் ஆகி, ஒவ்வொரு வேத விற்பன்னரும் கிட்டே வந்து குழந்தைக்கும் அட்சதை போட்டு ஆசீர்வாதம் பண்ணுகிறார்கள். (ஆந்திர தேசத்தில் அப்படித்தான் வழக்கம்.)

கொஞ்சம் நேரத்திலே குழந்தையின் கால் அசைகிறது...! ராணிக்கு ஒரே ஆச்சரியம். மாண்டு போன குழந்தை திரும்பவும் உயிர் பெற்றதே!

அந்த மாயம் எப்படி நிகழ்ந்தது என்றால், பெரியோர் களின் ஆசீர்வாத பலத்தாலே.

அவர்களுக்கு எப்படி பலம் வந்தது...? காயத்ரி மகா மந்திரத்தை தினமும் சொன்னதாலே... சாமானியர்கள் ஆசி சொன்னால் பலிக்குமா என்ன? அனவரதம் காயத்ரியை ஜபிப்பதனாலேதான் அந்த அதிகாரம் கிடைக்கும்; வாக்கு பலிக்கும்.

ஒருவருக்கு உபநயனம் செய்விக்கிற காலத்தில், பிரம்மோபதேசத்தின்போது அப்பா, மாமா அல்லது வேறு உயர்ந்த அதிகாரி காயத்ரி மந்திரத்தை உபதேசம் பண்ணணும். உபதேசம் பண்ணுகிறவர் நித்யம் ஆயிரம் முறை காயத்ரி ஜபிப்பவராய் இருக்க வேண்டும்! ஒருவரிடம் பத்தாயிரம் ரூபாய் இருந்தால் தானே இரண்டாயிரம் ரூபாயை அவராலே கடனாகத் தர முடியும். அதுமாதிரிதான் இது...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரிக்கு ஏன் சிறப்பு...?

காயத்ரியானவள் பிராத காலத்தில் சிவப்புப் பட்டுடுத்தி ரிக் வேதத்தை உச்சரிக்கிறாள்.

அவளே உச்சி காலத்தில் வெண்பட்டு உடுத்தி யஜுர் வேதம் கூறும் சாவித்ரியாகக் காட்சி தருகிறாள்.

சாயங்காலத்தில் கறுப்பு உடுத்தி, சாமவேதம் ஓதும் சரஸ்வதியாக இருக்கிறாள்.

இதில் ஒரு தர்ம சூட்சுமம் அடங்கியிருக்கிறது: ஒரு நாள் பொழுதில் மூன்று வேதமும் பூரணமாகச் சொல்லி விடுகிறாள் காயத்ரி. அவள் குழந்தைகளான நமக்குச் சிரமம் தராமல், அவள் சிரமப்படுகிறாள். நீங்கள் என்னைச் சொன்னால் போதும் என்கிறாள்! அவள் சிரமத்தை எடுத்துக் கொண்டு நம் சிரமத்தைப் போக்குகிறாளே... அவளைக் காட்டிலும் கருணை உள்ளவர்கள் யார் உண்டு?

விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு வருவோம். கருணை வடிவான காயத்ரியின் முதல் எட்டு அக்ஷரத்தை விளக்க வந்தது விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் முதல் சுலோகத்தின் முதல் பாதம்.

அடுத்த எட்டு காயத்ரி அக்ஷரங்கள் விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் இரண்டாவது சுலோகத்திலே விளக்கம் பெறுகின்றன.

மூன்றாவது எட்டை விளக்க வந்தது சஹஸ்ரநாமத் தின் மூன்றாவது சுலோகம்.

இந்த மூன்று சுலோகங்களுக்கு சர்வ மந்திரங்களுக்கும் சாரமான காயத்ரியை எடுத்துச் சொல்லுவதால் அவற்றுக்குச் சிறப்பு அதிகம்.

இந்த முதல் மூன்று சுலோகங்களுக்குள்ளே ஓர் அவதாரம் பேசப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பீஷ்மர் சொல்ல, கிருஷ்ணன் கேட்கிறான். ஆனால் எதிரே உள்ள கிருஷ்ணரை ஸ்தோத்திரம் பண்ணவில்லை பீஷ்மர்! நரசிம்ஹ அவதாரத்தை தியானம் பண்ணுகிறார்!

விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் ஆதியிலேயும் இடையிலே யும் கடைசியிலேயும் நரசிம்ஹ அவதாரம் பற்றிச் சொல்லப் படுகிறது.

இந்த சிறப்பையும் நினைவில் வைத்துக் கொள்வோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

நால் வேதங்களிலே அதர்வ வேதம் ஒரு பரிசோதனைக் கூடம் மாதிரி. மற்ற மூன்று (ரிக், யஜூர், சாம) வேதங்கள் சொல்வதைப் பரிசோதித்துப் பார்க்கிற கூடம்!

இன்றைக்கும் விஞ்ஞானமாக ஒப்புக் கொள்ளப்படற பல உண்மைகள் இந்த அதர்வ வேதத்திலே இருக்கிறது.

தீர்த்தம் என்பது இரண்டு வாயுக்களின் கூட்டுப் பொருள். ஹைட்ரஜன் இரண்டு பங்கும் ஆக்ஸிஜன் ஒரு பங்கும் அதில் உள்ளது என்கிறோம். H_2O, H_2O என்று மனப்பாடம் பண்ணுகிறோம்.

அதர்வ வேதம் இதையே 'பிராணம் ஏகம் அன்யத்வே' என்கிறது! அதாவது பிராண வாயு ஒரு பங்கும் இன்னொரு வாயு இரண்டு பங்கும் தண்ணீரில் இருக்கிறது...' என்கிறது!

அங்கிரஸ் மஹரிஷியை தியானம் பண்ணச் சொல்கிறது வேதம் - எல்லா தோஷங்களையும் நிவர்த்தி பண்ணுகிற அளவுக்கு அவர் ஹோமங்கள் பண்ணியிருக் கிறார் என்பதால். சயன யக்ஞம் என்று ஒரு ஹோமம் பண்ணினார் அவர். அதற்கு சந்திர லோகத்திலிருந்து மண் எடுத்து வந்து பூவுலக மண்ணுடன் கலந்து பிசைந்து ஹோம குண்டம் தயாரிக்கணும் என்று சாத்திரம். 'சந்த்ரமஸி கிருஷ்ணம்' என்று வேதம் சொல்கிறது. (சந்திர மண்டலத்து மண் கறுப்பாகயிருக்கிறது என்று இதற்குப் பொருள்.)

In Public domain, Digitization-Muthulakshmi Research Academy

கல்கத்தா, பிர்லா பிளானடோரியத்துக்கு அடியேன் போனபோது, சந்திர மண்டலத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மண்ணைக் காட்சிக்கு வைத்திருந்தார்கள். கறுப்பாக இருந்த அதைப் பார்த்ததும் 'சந்த்ரமஸி கிருஷ்ணம்' என்கிறதுதான் ஞாபகம் வந்தது.

வேதம் சொன்ன வாக்யம் பொய் இல்லை...! ஆனால் அன்றைக்கு அவர்கள் ராக்கெட்டில் பறந்து போய் சந்திரனிலிருந்து மண்ணைக் கொண்டு வரல்லை...! அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு, 'ஹே சந்திர மண்டலத்து மண்ணே... வா...'ன்னா வந்துடும்! மூடின கண்ணைத் திறந்து பார்த்தால் மண் அங்கே இருக்கும்!

இப்போது நாம் யந்த்ர (இயந்திர) சக்தியைத் தான் நம்ப வேண்டியதாயிருக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது மந்திர சக்தி.

மந்த்ரம் அபரிமிதம் (வரையறையற்றது).

யந்த்ரம் பரிமிதம் (வரையறைக்குட்பட்டது) என்கிறது அதர்வ வேதம். எதிர்காலத்தில் வரவிருந்த யந்திர சக்தி பற்றிக் கூட வேதத்தில் சொல்லியிருக்கிறது பாருங்கள்...!

இப்போது நான் பேசுவதை டேப் ரிகார்டரில் அப்படியே பதிவு பண்ண முடிகிறது. இதை நாம ஏதோ முன்னேற்றம்னு நினைக்கிறோம். ஆனால் அப்படியில்லை அது... பின்னுக்குத்தான் போயிருக்கிறோம்! இந்த மிஷின் செய்யறதை - டேப் ரிகார்டர் செய்யறதை செய்யக் கூடிய சக்தியுடையவர்களாய் நாம் இருந்தோம். ஒரு முறை கேட்டால் அப்படியே மனசுல பதிஞ்சு போயிடும்... இப்போது நாம் சக்தியை வேற விஷயங்களிலே ஏத்தி வைச்சிருக்கோம். அதனாலே அந்த ஆற்றல் இல்லை நமக்கு...

இவ்வளவையும் எதற்குச் சொல்கிறேன் என்றால், வேதம் சொல்வது ஏதோ மாய மந்திரமில்லை; ஆதார முள்ள விஞ்ஞானம் என்கிறதுக்காக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போன அத்தியாயத்தில், விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே நரசிம்ஹ அவதாரம் விசேஷமா சொல்லப் பட்டிருக் கிறதாகச் சொன்னேன். அந்த நரசிம்ஹ அவதாரம் பற்றி அதர்வ வேதம் விஞ்ஞான பூர்வமாக விளக்குகிறது.

பிரஹலாதனுக்கும் ஹிரண்ய கசிபுவுக்கும் நடந்த விவாதத்தை விவரித்துக் காட்டும் அதர்வ வேதம், நரசிம்ம அவதாரத்தை மின்சக்தி என்கிறது! பிரஹலாதன் அஸ்தி (உண்டு) என்று சொல்கிறான்; ஹிரண்ய கசிபு நேதி (இல்லை) என்கிறான்.

அஸ்தி என்கிற பாஸிடிவ் தத்துவமும் நேதி என்கிற நெகடிவ்வும் மோதிக் கொண்டதாலே ஒளியும் ஒலியும் ஏற்பட்டதாம். ஒளிமயமாய் நரசிம்மன் தோன்றினானாம். அவனுடைய அட்டகாசம் ஏழு உலகம் தாண்டிப் போய், பிரும்மா அமர்ந்திருந்த தாமரையை ஓர் அடி அடித்ததாம்! பிரும்மாவைக் கீழே தள்ளியதாம்!

பிரும்மாவை மட்டும் ஏன் தள்ள வேண்டும்..? 'இருக்கிறவனுக்கெல்லாம் வரத்தைக் கொடுத்துவிட்டு, நீ மட்டும் ஜப மாலையை உருட்டிக் கொண்டு மனைவியின் (சரஸ்வதி) வீணா கானத்தைக் கேட்டிண்டிருக்கியே...?' என்றுதான் பிரும்மாவை வீழ்த்தியதாம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜெர்மன் அறிஞர் மாக்ஸ் முல்லர் கூட நரசிம்ம அவதாரத்தை An Electrical Phenomenon என்றுதான் விவரிக்கிறார்.

நரசிம்மனின் தேஜஸ் எங்கே இருக்கு என்று கேட்டால், காயத்ரி மந்திரத்துக்குள்ளே இருக்கு!

ஒளியாய் இருக்கக் கூடியவன் நரசிம்மன் ஆனதாலே அந்த அவதாரத்தின் பெருமையும் சஹஸ்ரநாம தொடக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது.

பிரணவத்தோடு ஆரம்பித்து 'விச்வம்' என்று முதல் நாமாவை விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் சொல்கிறோம்.

விச்வம் என்கிற சப்தம் என்ன?... அது ஒரு நாமம். ஒரு பதம் மட்டுமில்லை...

வேதத்திலே வரும் பொருள் அது. பகவானே விச்வம் என்று சொல்வதாக ஆகிறது.

விச்வம் என்றால் பிரபஞ்சம். நாம் பார்க்கிற உலகம் பார்க்கப்படுவதால்தான் அதற்கு 'லோகம்' என்று பெயர்.

உபநிஷத் சொல்கிறது : காரணமாகிய பரப்ருஹ்மத்தை நாம் உணர வேண்டும்.

எதைக் கொண்டு பரப்ருஹ்மத்தைத் தெரிந்து கொள்வதாம்...?

சாஸ்திரத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

சாஸ்திரமாகிய உபநிஷத், 'காரணமாகிய பரப்ருஹ்மத்தைத் தெரிந்து கொள்ள, காரியமாகிய பிரபஞ்சத்தைப் பார்' என்கிறது.

எதனிடத்திலிருந்து பிரபஞ்ச வஸ்துக்கள் எல்லாம் உண்டாயிற்றோ, எதனால் அவை ரக்ஷிக்கப்படுகின்றனவோ, எதனிடத்தில் அவை லயமடைகின்றனவோ...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதுவே இதற்குக் காரணம் என்று ப்ரப்ருஹ்மத்தைக் குறித்துச் சொல்லப் படுகிறது.

காரணம், காரியம் இரண்டும் ஒன்றே! பரமாத்மா ஒருவன். ஒருவனே பலவாகி நிற்கிறான். பலவும் அவன்தான்; ஒன்றும் அவன்தான்!

விச்வம் என்பதற்கு இதுவே பொருள்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே ரொம்ப முக்கியமான பகுதி எது என்று சிலர் கேட்கலாம்.

இப்படிக் கேட்டால் கீதை பாராயணம் பண்ண முயன்ற ஒருவருடைய கதை ஞாபகம் வருகிறது.

பகவத் கீதை கற்றுக் கொள்ளப் போன சிஷ்யர், குரு விடம், 'எந்தப் பகுதி முக்கியம்?" என்று கேட்டாராம்.

"முதல்லேருந்து பதினேழு அத்தியாயங்களை விட்டு விடு; பதினெட்டை மட்டும் விடாதே. அது மோக்ஷ சன்னியாச யோகம். அதைத் தெரிஞ்சுண்டா போதும்" என்றார் குரு.

பதினெட்டைப் புரட்டிப் பார்த்தவர், "அதிலே ஏகமா சுலோகம் இருக்கே... எந்தெந்த சுலோகம் முக்கியமோ, அதை மட்டும் குறிச்சுக் குடுங்களேன்..." என்றார்.

"பதினெட்டிலே முன்னேயும் பின்னேயும் விட்டுவிடு... இரண்டு சுலோகம் மட்டுமே மனனம் பண்ணு" என்று எளிமைப்படுத்தினாராம் குரு.

சளைக்காத சீடர், "இரண்டிலே ஏதாவது ஒன்று மட்டும் சொல்லுங்களேன்..." என்று கேட்க.

'ஸர்வ தர்மான்...' என்று தொடங்குகிற சுலோகத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார் குரு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அதிலேயும் முக்கியமான சொற்களை மட்டும் சொல்லுங்களேன், எல்லாவற்றையும் மனனம் செய்வது கஷ்டம்" என்று சிஷ்யர் சலித்துக் கொள்ள,

கடைசியில், "நீ எதை விட்டாலும் விடு... 'மா சுச:' என்கிறதை மட்டும் விட்டுடாதே" என்றாராம் குரு.

'மா சுச:' - இதுதான் பகவத் கீதையின் சாரம். ஸ்ரீ பகவானுவாசா மா சுச: பகவான் சொன்னான் 'கவலைப்படாதே!'

நாம் எப்படியிருந்தால் கவலைப்படாமலிருக்கலாம் என்று பகவான் சொன்னான்...?

அவன் சொன்னபடி நடந்தால் கவலைப்படாமல் இருக்கலாம் என்றான்.

'எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் சொன்னான்...?' என மீண்டும் கேட்டால், அதற்கு கீதையின் முதல் அத்தியாயத்துக்குத்தான் திரும்பவும் போக வேண்டும்...!

ஸ்ரீ பகவானுவாசா மா சுச: என்பதை கீதையின் சாரமாகச் சொன்னது போல, விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் சாரமாக எதைச் சொல்லலாம்...?

நித்தியம் சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணுகிற ஒருவர், ஒரு திடீர் அவசரத்தின் போது, நேரமில்லாமல் போனால் சுலபமாகச் சொல்லி முடிக்க வழி இருக்கிறதா?

இதை அன்றைக்கே பார்வதி, பரமசிவனிடம் கேட்டு விட்டாள்.

"ஆயிரம் திருநாமங்களை இலகுவான உபாயத்திலே சொல்வதற்கு வழி உண்டா...?"

அதற்கு ஈச்வரன் அழகாக பதில் சொல்கிறார்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈச்வரோ வாசா

ஸ்ரீ ராம ராம ராமேதி
ரமே ராமே மனோரமே
சஹஸ்ரநாம தத்துல்யம்
ராம நாம வரானனே...

'வரானனே' - 'அழகான திருமுக மண்டலம் கொண்டவளே' என்று பார்வதியைக் கொண்டாடுகிறார் பரமசிவன்.

"ராமா, ராமா, ராமா! என்று மூன்று தடவை சொன்னால், சஹஸ்ரநாமத்துக்கு அது துல்யமானது" என்கிறார்.

அதற்காக நித்யமே நாம் 'ஸ்ரீ ராம ராம ராம' என்று சொல்லிடலாம்னு வைத்துக் கொள்ளக்கூடாது. நித்யம் சஹஸ்ரநாம பாராயணம் பண்ணணும். அது அபூர்வமாக முடியாமல் போகிற தினத்தில் 'மூன்று முறை ராம நாமா சொன்னால் போதும்' என்று ஈசுவரனே பேசுகிறார்.

மூன்று முறை சொல்வது ஆயிரம் நாமங்களுக்கு எப்படி ஈடாகும்...?

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தத்திலே எண்ணில் அடங்கியுள்ள தத்துவத்தை எடுத்துச் சொல்கிறார்.

வேத சமக மந்திரமும் எண்ணிக்கையைக் கொண்டாடுகிறது.

'ராம' என்ற சொல்லை எடுத்துக் கொண்டோமானால், 'ர' வர்க்கத்திலே 'ரா' என்பது இரண்டாவது எழுத்து. ம என்பது ஐந்தாவது எழுத்து (வடமொழியின் ப ப ப ப ம வரிசை). இரண்டை ஐந்தால் பெருக்கினால் கிடைப்பது பத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக 'ராம' என்ற ஒரு சொல்லுக்குரிய எண் 10. ராம, ராம, ராம என்று மும்முறைகள் சொன்னால், அதற்குரிய எண் 10×10×10 அதாவது ஆயிரம்!

ஆக, ராம, ராம, ராம என்று மும்முறை சொல்வது ஆயிரம் திருநாமங்களுக்கு துல்யமானதுதானே...!

ராமநாமத்தின் மகிமையை கம்பன் வாலி வதைப் படலத்திலே சொல்கிறான். ராமனின் அம்பில் அவன் நாமத்தை வாலி கண்டதை விவரிக்கிறான்:

மும்மைசால் உலகுக்கெல்லாம்
மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப் பெரும் பதத்தை, தானே
இம்மையே, எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை
கண்களில் தெரியக் கண்டான்

இதனினும் உயர்வு ஒரு நாமத்துக்கு என்ன இருக்க முடியும், சொல்லுங்கள்...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6

விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு நாமத்துலயும் நால் வேத மந்திரங்களும் அடங்கியிருக்கு. அதனாலே அதைப் பாராயணம் பண்ணினால் வேத பாராயணம் பண்ணின பலன் என்று சொன்னேன். அதிலும் ராம நாமத்துக்குத் தனியொரு சக்தி.

ராம நாமத்துக்கு எப்படி அதன் சக்தி வருகிறது..? காயத்ரி மந்திரத்தின் பொருளை ராமாவதாரத்தின் போது பகவான் நடித்துக் காட்டியதாலே!

அதனால்தான் வால்மீகி, ராமாயணத்தில் ஆயிரம் சுலோகத்துக்கு ஒரு தடவை காயத்ரியின் ஒரு அக்ஷரத்தை வைத்தார். மொத்தம் 24,000 சுலோகம் ராமாயணத்தைப் பாராயணம் பண்ணினா காயத்ரியைப் பாராயணம் பண்ணின பலன் கிடைக்கும்.

காயத்ரி மந்திரம் எல்லா மந்திரங்களுக்கும் தாய்.

ஒருமுறை தேவாசுர யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, தேவர்களுக்கே நித்திய ஜெயம் உண்டாகிக் கொண்டிருந்தது. முப்பத்து மூன்றாவது நாள் அந்த தேவதைகள் படுதோல்வி அடைந்தார்கள். 'இன்றைக்கு நாம் ஏன் தோற்றோம்?" என்று ஆராய்ச்சி பண்ணினார்கள். 'காயத்ரியை ஜபிக்காமல் சென்றதால்...' என்று பதில் கிடைத்தது. ஜயம் வந்தபோது மந்திரத்தை மறந்ததால் தோல்வியுண்டாயிற்று!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனுஷ சுபாவமே அதுதான். சரீரத்தைக் கொடுத்த பகவானை மறந்து, உடம்பு தளர்ந்து போகிறபோது மட்டுமே அவனை நினைக்கிறோம்.

அதனால்தான் குந்தி ஒரு வித்தியாசமான வரத்தைக் கண்ணனிடம் கேட்டாள். வாழ்க்கையிலே விபத்துக்களை உண்டு பண்ணச் சொல்லி வரம் கேட்டாள். 'ஏன் இப்படிக் கேட்கிறாய்?' என்றான் பரமாத்மா... 'அப்போதுதானே உன் நினைவு சதா மனத்திலே இருக்கும்..." என்றாளாம் குந்தி!

அதைப் போல தோல்வி வந்தபோதுதான் 'காயத்ரியை மறந்தோம்' என்று உணர்ந்தார்கள் தேவர்கள். கடைசியில் அவள் இருந்த இடத்தைத் தேடி அலைந்து போய்க் கண்டுபிடித்து ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவுடன் காயத்ரி தேவர்களின் பக்கம் திரும்பினாளாம். ஸ்தோத்திரத்தின் மகிமையைப் பாருங்கள்! விஷ்ணு சஹஸ்ரநாமம் கூட, 'ஸ்தோத்தரிக்கத் தகுந்தவன் பரமாத்மா: ஸ்தோத்திரப் ப்ரியன் அவன்...' என்கிறது!

அப்படியிருக்கிறது ஒரு பெருமையா என்று கேட்டால், அப்படியிருப்பதும் அவன் கருணை தான் என்று சொல்லணும். நமது ஸ்தோத்திரம் அவன் பிரபாவத்தை முழுதும் சொல்ல முடியுமா? ஏதோ கொஞ்சம் சொல்லலாம். அவனிடம் இருப்பதையும் இல்லாததையும் நம்மாலே முழுதும் சொல்லி ஸ்தோத்திரம் பண்ண முடியாது. நாம் ஸ்தோத்திரம் பண்ணும் போது பகவான் முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டால் என்ன செய்ய முடியும்? அப்படிச் செய்யாமல் ஸ்தோத்திரப் பிரியனாக் இருந்து நமக்கு அருள் செய்வதே அவன் கருணை.

பகவான் ஸ்தோத்திரப் ப்ரியனாக இருப்பதாலே தான் அவனிடமிருந்து தோன்றிய நாமும் ஸ்தோத்திரப்

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

ப்ரியர்களாக இருக்கிறோம். மண்ணின் குணம் அதைக் கொண்டு செய்யப்படும் பானைக்கு வருகிற மாதிரி. காரணத்தின் குணம், அதன் பயனான காரியத்துக்கும் வரும்!

ஆக, வேத மந்திரங்கள் எல்லாமே ஸ்தோத்திரம், துதி பாடுதல்தான். ஸ்தோத்திரம் செய்த தேவர்களின் பக்கம் காயத்ரி வந்தாள். அவர்களுக்கு வெற்றி உண்டாயிற்று. அப்படிப்பட்ட காயத்ரி, தேவர்களுக்கே அனுக்கிரஹம் செய்தாள் என்றால் அந்த அருள் மேலும் தேவையான நமக்கு எத்தனை செய்வாள்!

அந்த காயத்ரியை தேவர்கள் எப்படித் துதித்தார்கள் என்றால், 'விச்வமஸி, விச்வாயு' என்று ஆரம்பித்துத் துதித்தார்கள்! அதுவே விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் முதல் நாமமாக இருக்கிறது!

விச்வம் என்பதன் விரிவான பொருள் என்ன?

ஸ்ரீபதியான பகவானுடைய மூச்சுக்காற்றாக விளங்கக் கூடியது வேதம். அதன் மந்த்ரார்த்தத்தைக் கேட்டோமானால் விசேஷமான பலன் கிடைக்கும்.

திருவேங்கட மலையைப் பற்றி சுவாமி தேசிகன் சொல்கிறார்:

வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே வேதமே பர்வத (மலை) ரூபத்திலே அமைந்திருக்கிறது.

'வேம்' என்றால் 'மகா பாவம்' என்று பொருள். 'கடயதி' – என்றால் 'பொசுக்குதல்'. நமது மகா பாவங்களை நெருப்பிலே பொசுக்கி விடக்கூடிய ஆற்றல் திருவேங்கட மலைக்கு இருக்கிறது. வேதங்களிலே ஏழு காண்டம் உண்டு; திருவேங்கடத்தில் ஏழு மலை! அந்த வேதங்களால் தாங்கப்பட்டு நிற்கிறான் திருவேங்கடமுடையான்.

'மலை வடிவிலே வேதம் இருக்கு...' என்று சொன்னால் புரியவில்லையே என்று கேட்கலாம்.

வேதத்தைப் பாராயணம் பண்ணினால் முழுமையாகப் புரிகிறதா? புரியாவிட்டாலும் உயர்த்தியான பாவம் ஏற்படுகிறதோயில்லையோ, நம்முடைய அந்த பாவத்தை உணர்ந்து பரமாத்மா, மேலும் மேலும் புரியும்படியாகப் பண்ணுகிறான்.

வேத வடிவிலே மலை இருக்கிற மாதிரி, சப்த வடிவிலே பரமாத்மா இருக்கிறான். அதனால்தான் வேதாந்த விசாரத்திலே கருத்து வேறுபாடு கொண்ட த்ரிமதாசார்யர்கள் கூட (சங்கரர், ராமானுஜர், மாத்வாச்சார்யர்) 'வேதம் நித்யமாய்' இருக்கக்கூடியது. என்று ஒப்புக் கொண்டார்கள்.

பிரளய காலத்தில் கூட வேதம் அழிவதில்லை. அதைத் தாங்கிக்கொண்டு வெளியே விடுகிறான் பரமாத்மா.

வேத கோஷத்தின் உயர்ந்த சப்தத்துக்கு பிரும்ம கோஷம் என்று பெயர். 'சமே' 'சமே' என்ற ஒலி மீண்டும் மீண்டும் ஒலிக்கக் கேட்கலாம். 'சமே' என்றால், 'அது எனக்கு உண்டாகட்டும்' என்று அர்த்தம்.

பகவானிடத்திலே என்ன கேட்க வேண்டும் என்பதைக் கூட வேதம் நமக்குச் சொல்லித் தருகிறது. நாமாகக் கேட்டால் அல்பமான விஷயத்தைத்தான் கேட்போம்.

இந்திரனுடைய தாயாரான அதிதி சொல்கிறாள்: 'கற்பக விருக்ஷத்திடம் போய் கௌபீனம்' கேட்டாற் போலே...' என்று!

அப்படியல்லாமல், மங்களம், கீர்த்தி, க்ஷேமம், எல்லாம் உண்டாகட்டும் என்று வேதம் கேட்கிறது. 'விச்வம் சமே' என்பதும் கோரிக்கைகளும் ஒன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'விச்வத்தை எனக்குக் கொடு' என்று கேட்டால், உலகம் மொத்தமும் கிடைக்குமா? அது பெருங்கோரிக்கை இல்லையா....?

இந்தக் கோரிக்கைக்கு என்ன வியாக்யானம் பண்ணுகிறார்கள் என்றால், விச்வ சப்தத்துக்கு 'பகவான்' என்று அர்த்தம். 'விச்வம்' என்றால் பகவான். சஹஸ்ரநாமத்திலே முதல் சப்தம் விச்வம். அந்த சப்தத்தினாலே பரமாத்மாவே சொல்லப்படுகிறான். அவனையே நாம் அடைய வேண்டும் என்பது கோரிக்கை. அந்த பரப்ரும்மத்தையே நாம் அடைய வேண்டும்!

அந்த பரமாத்மாவை, 'வா வா! வந்து என்னை ரக்ஷி' என்று பிரார்த்திப்பதுதான் 'விச்வம் சமே'.

"சுவாமி! நீ வரமாட்டாயா? சீக்கிரமாக வர மாட்டாயா? காலம் குறுகாதா?' என்று நெக்குருகி ஒருவர் உபந்யாசம் பண்ணுகிறார்.

பகவான் கருடாரூடராய் வந்து, 'இப்பவே வா, கருடனில் ஏறிக் கொண்டு போகலாம்...'' என்று அழைத்தால், போக முடியுமா? அவனே வந்து கூப்பிட்டாலும், போவதற்கு எத்தனை பேர் சித்தம்?

ஆகையினாலே பிரபுவினிடத்திலே என்ன சொல்ல வேண்டும்?

'நான் கூப்பிட்டால் நீ வந்துவிடுவாய்; ஆனால் நீ கூப்பிட்டால் நான் வருவேனா? ஒன்று செய்; இந்த சரீரம் கீழே விழுகிற வரையிலே அதிலே இருந்து கொள்கிறேன். அதற்குப் பிறகு இன்னொரு சரீரத்தைக் கொடுத்து விடாதே..." என்று பிரார்த்திக்கணும்.

அதற்கும் அவன் சித்தமாயிருக்கிறான் என்னும் போது, அவன் தயையை என்னவென்று சொல்வது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவானின் தயையைக் குறித்து தயா சதகம் என்றே பாடியிருக்கிறார் சுவாமி தேசிகன். எத்தனையோ குணமிருந்தாலும் தயாகுணம் இல்லாமல் பிரகாசிக்காது.

'அம்மா, தயே! நீ பகவானிடத்திலே இல்லையென்றால் மற்றைய குணங்களெல்லாம் அவனுக்கு தோஷமாகுமேயொழிய குணங்களாகா!' என்கிறார்.

நாம் அழைத்ததும் தயையினால் ஓடி வருகிறவனைப் பார்த்து, 'இப்போது நான் சித்தமாக இல்லை; அப்புறம் என்னை அழைத்துப் போ' என்று சொன்னால் அதற்கும் அவன் தயார்!

இப்படிப்பட்ட தயாளனான பரமாத்மா நமக்குக் கிடைப்பது விச்வ சப்தத்தினாலே... விச்வ சப்தத்தை தியானம் பண்ணினால், ஓம் விச்வஸ்மை நம: ஓம் விச்வாய நம: என்று அதைச் சொல்லி அர்ச்சனை பண்ணினால், அவன் தயை இல்லாமல் போகுமா, கிருபை கிடைக்காமல் போகுமா...?"

விச்வம் என்கிற சப்தத்துக்குப் பூரணத்துவம் என்றும் ஒரு பொருள் உண்டு. பகவான் எதிலும் குறைவில்லாதவன் என்று அர்த்தம். அதனால்தான் பூர்ணன், கொள்ளக் குறைவிலன் என்றெல்லாம் அவனைப் பாடியிருக்கிறார்கள்.

சுவாமி தேசிகன் சொல்கிறார்:

தமதனைத்தும் அவர்தமக்கும் வழங்கியும்
தான் மிக விளங்கக் கூடியவன் பரமாத்மா.

கொடுத்ததினாலே அவனிடத்திலே குறைவில்லை. பகவான் கொள்ளக் கொள்ளக் குறைவிலான்! 'கொள்ள மாளா இன்ப வெள்ளம் அவன்' என்கிறார் ஆழ்வார். கொடுக்கக் கொடுக்க அவனிடத்திலே விருத்தியாகிக் கொண்டேயிருக்கிறது. அதனால் அவன் பூர்ணன் ஆகிறான்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

எல்லாம் அவனிடத்திலே இருக்கிறது என்றால், அவனுக்கு நாம் என்ன கொடுக்க முடியும்? தேங்காயை அவனிடத்தில் சமர்ப்பிக்கிறோம்: அவனிடத்திலே தேங்காய் இல்லையா...? புஷ்பத்தைச் சமர்ப்பிக்கிறோம். அவனிடத்தில் புஷ்பம் இல்லையா...?

இந்தக் கேள்விகளுக்கான பதில் ஒரு அழகான கதையிலே அடங்கியிருக்கிறது. அதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

பகவான் வீதி ஊர்வலமாய் எழுந்தருள்கிறார். சரீர உபாதை இருப்பவர்களை உத்தேசித்து அவர்கள் வீட்டு வாசலுக்கே வருகிறார்; வந்து சேவை கொடுக்கிறார். அப்படியொரு நாள் பகவான் எழுந்தருளும்போது எல்லோரும் கற்கண்டு, புஷ்பம் என்று தட்டிலே வைத்துக் கொண்டு வீதியிலே காத்திருக்கிறார்கள். ஒருவர் மட்டும் விஷயம் தெரியாமல் உள்ளேயே இருக்கிறார். அவர் வீட்டு வாசலில் வந்து பகவான் நிற்கிறான். இவர் எதையும் சித்தமாய் வைக்கவில்லை. ஆனால் அவர் ரொம்ப சதுரர் – கெட்டிக்காரர் – பகவானிடம் போய் நின்று கொண்டு, "அப்பனே! அவர்களெல்லாம் புஷ்பம், தேங்காய், வாழைப்பழம் என்று சமர்ப்பித்தார்கள். உன்னிடம் எது இல்லையோ அதையல்லவா சமர்ப்பிக்கணும்..." என்றார்.

உடனே பரமாத்மா கேட்டானாம் – "இவ்வளவு கேட்கிறீரே... நீர் ஏதாவது சமர்ப்பிக்கப் போகிறீரா இல்லையா...?

"உன்னிடத்திலே எது இல்லையோ அதைக் கொடுத்தால் தானே உயர்த்தி...?" என்றார் பக்தர்.

"என்னிடத்திலே என்ன இல்லை என்று உனக்குத் தெரியுமா...?" – பகவான் கேட்கிறார்.

"அதைத் தெரிஞ்சு வைச்சுண்டுதான் அதைக் கொடுக்க வந்தேன்..."

"என்னது அது...?"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



''கிருஷ்ணாவதார காலத்திலே கோபிகா ஸ்த்ரீகளுடன் நீ சஞ்சாரம் பண்ணினாய் அல்லவா... அப்போதே உன் மனசை அவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆகையினாலே உன் மனசு உன்னிடத்தில் இல்லை... அதற்குப் பதில் என் மனசை உனக்குக் கொடுக்கிறேன்...'' என்றார் பக்தர்.

பகவான் பதிலே சொல்லலை; வாயை மூடிக் கொண்டு விட்டார்!

ஆகவே மனசை சமர்ப்பிக்கணும். தேங்காய், கற்பூரம், பூ என்று சமர்ப்பித்து, மனசை அர்ப்பணிக்கலைன்னா ஏற்பானோ அவன்...?

எதுவாயிருந்தாலும் மனசுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேர்த்துச் சமர்ப் பிக்கப்படுவதுதான் உயர்த்தி என்று உணர்த்தத்தான் அந்த பக்தர் மனசையே அர்ப்பணித்தேன் என்றார்.

பூரணனான அவன் நம்மிடத்திலே ஒன்றே ஒன்றைத் தான் எதிர்பார்க்கிறான். இந்த மனசு அவனுடையது என்று அர்ப்பணிக்கிறோமா என்பதைத் தான் எதிர்பார்க்கிறான். அதை மட்டும்தான் எதிர்பார்த்து உயர்ந்த நிலையை நமக்குக் கொடுக்கிறான்.

நம் மனசை சமர்ப்பிக்காவிட்டால் நாம்தான் அபூர்ணர்களாகிறோமே தவிர அவன் பூரணனாகத் தான் இருக்கிறான்.

எல்லா சுகுணங்களுக்கும் உரியவனாய், ஆபரணங்கள், ஆயுதங்களுடன் இருக்கிறான்; பகவான் சகலத்திலும் பூரணமாய் இருக்கிறான் என்று சரணாகதி கத்யத்தில் விவரிக்கப்படுகிறது.

திவ்யாபரணங்கள் அவனுக்கு உண்டா...? அவற்றை ஏன் தாங்கியிருக்கிறான்...?

'விச்வமாய்க் காட்சி அளிப்பவனே; தாமரைக் கண்ணனே! உனக்கு ரூபம் கிடையாது. ஆயுதம் கிடையாது. ஆகாரம் கிடையாதுன்னு அதைச் சொல்கிறோமே... அவையெல்லாம் உனக்கு இருப்பதைப் பார்த்துக் கொண்டே சொல்கிறோமே...?' என்று கேட்கலாம்.

ரூபம் இருக்கிறது என்றால் அது அவன் பொருட்டு இல்லை; பக்தர்கள் சேவித்து மகிழ்வதற்காகத்தான் இருக்கிறது.

அவனுக்கு ஆயுதங்கள் இருக்கிறது என்று சொன்னால், அவை நம் இடுக்கண் களைய அவன் தரித்தவை. அவன் பொருட்டு அல்லாமல் நம் பொருட்டு தான் அவன் அவற்றை ஏந்துகிறான்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆபரணங்கள்...! திவ்யமேனியில் இவ்வளவு திருவாபரணங்கள் பூரித்திருக்கிறானே! 'ஆபரணத்துக்கு அழகு செய்யும் பெருமாள்; முன்னழகைக் காட்டிலும் பின்னழகு விஞ்சி நிற்கும் பெருமாள்' என்று பராசர பட்டர் ஸ்ரீ ரங்கநாதருக்குக் கட்டியம் சொல்கிறார்.

ஒருத்தர் ஒரு லட்ச ரூபாய் செலவில் பெருமாளுக்கு முத்துக் கொண்டை செய்வித்தாராம். அதை அணிவித்து கற்பூர ஹாரத்தி காட்டி சேவிக்கிறார்கள் எல்லோரும். 'ஆஹா! அவன் எவ்வளவு அழகா இருக்கான்' என்கிறார்கள். இப்படிச் சொன்ன வார்த்தை ரொம்ப அபசாரமான வார்த்தை! இந்த முத்துக் கொண்டை இல்லையென்றால் அவன் அழகன் இல்லையா...?

உபசாரமாகச் சொல்ல வேண்டுமென்றால் என்ன சொல்லணும்...? 'அவன் திருமேனி சம்பந்தப்பட்டதனால் அல்லவோ இந்த முத்துக் கொண்டை. இவ்வளவு சோபை பெற்றது!' என்று சொல்ல வேண்டும்.

அதே மாதிரிதான் இந்த ஆத்மாவும், அவன் திருவடிக்கு அர்ப்பணமானதினாலேதான் அழகு பெறுகிறது. இந்த சரீரத்திலே அது உட்கார்ந்து கொண்டிருந்தால் அதற்கு அழகு ஏது...?

இன்னதால்தான் அவனுக்கு அழகும் தேஜஸும் உண்டாகின்றன என்று சொல்ல முடியாத அளவுக்கு சர்வத்தையும், தன்னுள்ளே அடக்கி, காத்து, அழிக்கும்படியான ஆற்றல் கொண்டவன் பரமாத்மா.

ருக்மிணி அவனை புவனசுந்தர்: என்று அழைக்கிறாள். 'உலகத்திலேயே அழகுடையவன் நீ ஒருவன்தான். நீ எல்லா சராசரங்களுக்குள்ளேயும் இருப்பதனாலே அவை அழகு பெறுகின்றன. அதனாலே உலகத்திலே அழகன் நீ ஒருவன்தான்' என்று அர்த்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருத்தர் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொள்கிறார். 'நான் அழகன்தான்' என்று அவருக்குத் தோன்றுகிறது. அவரைக் காட்டிலும் பல அழகர்கள் இருக்கலாம். அப்படியும் அவருக்கு அப்படித் தோன்றுவானேன்?

அவருக்குள்ளேயும் பகவான் அந்தர்யாமியாய் உட்கார்ந்திருப்பதினாலே தான் அப்படித் தோன்றுகிறது.

சுயக்ஞன் என்றொரு வித்யார்த்தி (மாணவன்) இருந்தான். தினமும் குருவின் வஸ்திரத்தைத் துவைத்து வைப்பது அவன் பொறுப்பாயிருந்தது. அதை எடுத்து உதறி குரு, தாமே உலர்த்திக் கொள்வார்.

ஒருநாள் அப்படி உதறிய போது, மாண்டு போன மீன்கள் அதிலிருந்து உதிர்ந்தன. அவற்றினால் ஏற்பட்ட அசுத்தம் வஸ்திரத்தில் கறை கறையாகப் படிந்திருந்தது.

ஆற்று நீரில் வஸ்திரத்தை அலசும் போது அதில் சிக்கிய மீன்களைக் கவனிக்காமல் சேர்த்துப் பிழிந்திருக் கிறான்!

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

'இவ்வளவு அலட்சியமா!' என்று குரு கோபித்துக் கொண்டார். உடனே சாபம்தான்! 'நீ பன்றியாகக் கடவாய்' என்று சாபம் கொடுத்து விட்டார்!

மாணவன் நடுநடுங்கிப் போய் விட்டான்.

"சுவாமி! பன்றி வாழ்க்கையை நினைத்தாலே நடுக்கமாய் இருக்கு. எப்படியாவது சாபத்தைப் போக்குங்கள்..." என்று கெஞ்சினான்.

"எனக்கு சாபம் கொடுக்கத்தான் தெரியும். போ!" என்று சொல்லி விட்டார் குரு.

சாபம் பலிதமாவதற்குள் சக வித்யார்த்திகளிடம் போனான். நடந்ததைச் சொன்னான்.

"ஆசார்யர் சுமுகமாய் இருக்கிற நேரத்திலே அவரைக் கேட்டு, நான் எந்த இடத்திலே இருக்கேன் என்று தெரிந்து கொள்ளுங்கள். நான் இருக்கிற இடத்துக்கு வந்து என்னை அடித்துக் கொன்று விடுங்கள். என்னாலே அந்த வராஹ ஜன்மத்தைத் தாங்க முடியாது...'' என்று வேண்டிக் கொண்டான்.

உடனே அந்த வித்யார்த்திகளெல்லாம், "கூடப் படிச்சதுக்காக நாங்கள் இதைக் கூடப் பண்ண மாட்டோமா...?" என்றார்கள்.

சாபம் பலித்து விட்டது. ஒருநாள் சாயங்காலம் குரு சந்தோஷமாக இருக்கிறார். வித்யார்த்திகளெல்லாம் அவரிடம் போய் காலில் விழுந்து சேவித்துக் கேட்கிறார்கள். "சுயக்ஞன் எங்கே பிறந்திருக்கிறான்? அவனுக்கு நாங்கள் உதவணும்" என்கிறார்கள்.

குரு, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி, "அங்கே ஒரு பன்றி, ஆறு குட்டிகள் போட்டிருக்கும். அதில் ஐந்து குட்டிகள் கறுப்பாயிருக்கும். ஒரு குட்டி மட்டும் முன்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னும் வெள்ளைத் திட்டு உள்ளதாய் இருக்கும்..." என்று அடையாளம் காட்டுகிறார்.

சீடர்கள், குரு சொன்ன இடத்தில் போய்ப் பார்க்க, அவர் சொன்னபடியே ஆறு குட்டிகளில் ஒன்று மட்டும் வேறுபட்டுத் தெரிந்தது. குரு சொல்லிக் கொடுத்த ஒரு மந்திரத்தைச் சொன்னார்கள். மற்ற குட்டிகளெல்லாம் ஓடிவிட, அது மட்டும் அவர்களின் அருகே வந்தது. எல்லா சிஷ்யர்களும் தடியை ஓங்கிக் கொண்டு தயாரானார்கள். அந்தப் பன்றிக் குட்டியோ ஓட ஆரம்பித்தது!

"நில்லு, நில்லு! நீ சொல்லித்தான் வந்திருக்கோம்..." என்றார்கள்.

"அப்போ நான் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்போது என்னை அடிக்காதீர்கள். என் தாயார் என்னிடம் எத்தனை அன்பாக இருக்கிறாள்! என்ன பட்டான மேனி இது...?" என்றது பன்றிக் குட்டி.

வித்யார்த்திகள் விக்கித்துப் போய் நிற்கையிலேயே, 'என்னை அடிக்கவே அடிக்காதீர்கள்' என்று அது ஓடிப் போய் விட்டது.

அந்த சிஷ்யர்களெல்லாம் ஒன்றும் புரியாமல் தலையைச் சொறிந்து கொண்டு குருவிடமே திரும்பிப் போனார்கள்.

ஆசார்யர், "நீங்களாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் பேசாமலிருந்தேன். உங்களுக்கு வேண்டுமானால் பன்றி பண்ணுகிற காரியம் அருவருப்பாய் இருக்கலாம். ஆனால் அதற்கு அது யோக்யமாய்த்தானே இருக்கு. திருப்தியாத்தானே இருக்கு... அதனுடைய ஆனந்தத்தை நாம் இல்லாமல் பண்ணி விட முடியுமா...!" என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படி ஒவ்வொரு உயிருக்குள்ளேயும் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் பகவான் என்பதைத் தெரிவிப்பதுதான் சுயக்ஞன் கதை. அதனால்தான் அவரவர்க்கு அவரவர் உருவம் உயர்த்தியாகத் தெரிகிறது. அதனாலே எந்த உயிரையும் நாம் அலட்சியம் பண்ணிவிட முடியாது!

பத்து லட்ச ரூபாய்க்கு நோட்டுக் கட்டாக அடுக்கி வைத்திருக்கு... நமக்கு அந்த ரூபாய் உயர்த்தியாகத் தெரிகிறது. அதிலே இரண்டு லட்சமிருந்தா உபயோகமா யிருக்குமேன்னு நினைக்கிறோம்.

ஆனால், அங்கேயிருந்து நாலு கட்டெறும்பு வரும். அந்த நோட்டுக் கட்டு மேலே ஊர்ந்து மறுபக்கம் போய்க் கொண்டேயிருக்கும்...!

நமக்கு ரொம்ப உயர்த்தியாய் உள்ள பொருள் கட்டெறும்புக்குப் பிடிக்கிறதா! அதுக்கு அதன் உயர்வு தெரியவேயில்லை! அப்படியும் ஒரு ஜீவன் உலகத்திலே ஜீவிக்கிறதில்லையா...?

இதனாலே உலகத்திலே எதுவுமே பரமார்த்தம் இல்லைன்னு தெரியறது. பரமாத்மாதான் பரமார்த்தம். அவன் அந்தர்யாமியாய் இருந்து, பூரணனாய் இருந்து பூரணமாய் ஆனந்தம் கொடுப்பதினாலேதான் 'புவன சுந்தர:' என்று ருக்மிணி அவனை அழைத்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8

ஒரு பானை இருக்கிறது. அது காரியம் - அதாவது உண்டான வஸ்து. அந்த வஸ்துவுக்கு - காரியத்துக்கு - மூன்று காரணங்கள்.

முதலாவது உபாதான காரணம். பானையாய் எது மாறியதோ, அது உபாதான காரணம். இங்கே பானையை உருவாக்கப் பயனான மண் உபாதான காரணம்.

அடுத்தது மனுஷ்ய சக்தி - அந்த சக்தி தானே பானையை ஆக்குகிறது? இது நிமித்த காரணம் எனப்படு கிறது. பானையை உருவாக்கியவர் குயவர் நிமித்த காரண மாகிறார்.

குயவருக்குப் பானை செய்ய சக்கரம் வேண்டும். ஒரு தண்டம் வேண்டும். இவை பானை செய்ய அவருக்கு சஹகரிக்கின்றதால் (உதவுவதால்) சஹகாரி காரணம் எனப் படுகின்றன.

இப்படி ஒவ்வொரு காரியத்துக்கும் காரணங்களை ஆராய்ந்து கொண்டே போகலாம். இந்த உலகத்தைக் காரியமாக எடுத்துண்டோமானால், பரமாத்மா அதற்கு உபாதான காரணமா? நிமித்த காரணமா? சஹகாரி காரணமா?... என்று விசாரிக்கலாம்.

இதைப் பற்றி உபநிஷத் சொல்வதை ஆசார்யர்க ளெல்லாம் விவரிக்கிறார்கள். எல்லாக் காரணங்களுமாய் அவனே இருந்து வருகிறான். ஜகத் காரண வஸ்து அவன்!

பகவானே விச்வமாய்க் காட்சி அளிக்கிறான்.

In Public Domain. Digitization: Muthulakshmi Research Academy

'தத்வம் அஸி' என்கிற மகா வாக்யத்தை ஒரே பதத்தில் சொல்லணும் என்றால் 'விச்வம்' என்று சொல்லணும்.

அந்த விச்வத்தில் நடப்பனவற்றுக்கு எல்லாம் எத்தனை காரணம் சொன்னாலும் ஐந்தாவது காரணமாய் பரமாத்மா இருக்கிறான்.

இந்த உபந்யாஸத்தையே எடுத்துக் கொண்டோமானால், இதற்கு ஐந்து காரணம்.

முதல் காரணம், உபந்யாஸகருடைய சரீரம். அது உபந்யாஸம் நடக்கிற இடத்துக்கு வந்து சேரணும்.

சரீரம் மட்டும் உபந்யாஸத்துக்குக் காரணமாயிடுமா...? சொல்கிறவனுடைய வாக்கு, கேட்கிறவனுடைய செவிப்புலன் என்கிற இந்திரியங்கள் இரண்டாவது காரணம்.

இந்த இரண்டுக்கும் மேலே மூன்றாவது காரணம் மனஸ். உடம்பு, இந்திரியங்களுடன் மனஸூம் கூடச் சேரணும்.

ஒருத்தர் ராத்திரி சௌகரியமாய் தலையணை வெச்சுண்டு தூங்கறார். விடிஞ்சதும் பார்த்தா தலையணையடியலே மூன்று பாம்பு! அது இருக்கறது மனஸூக்குத் தெரிஞ்சிருந்தால் தூக்கம் வருமோ...? மனஸூம் சேர்ந்து தூங்கினதால்தானே அவராலே தூங்க முடிந்தது...! ஆகையினாலே எந்தக் காரியத்துக்கும் மனஸ் கூடச் சேர வேண்டும்.

நாலாவதாக, சரீரத்துக்குள்ளே இருக்கிற ஆத்மா ஒரு காரணம். சாந்தோக்ய உபநிஷத்திலே ஒரு கதை உண்டு. உடம்பின் காது, மூக்கு, கண், வாய் எல்லாத்துக்கும் ஒரேயடியாய் பெரிய சண்டை வந்ததாம். எல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரும்மாவிடம் போய், 'எங்களுள் யார் பெரியவன்? நீங்களே சொல்லுங்கள்...' என்றதாம்.

அதற்கு பிரும்மா சொன்னார், 'நீங்கள் ஒவ்வொருத்த ராக ஒரு வருஷ காலத்துக்குத் தனித்தனியே சரீரத்தை விட்டுப் பிரிந்து போங்கள். யாரு விலகறதாலே உடம்புக்கு அதிக பாதிப்போ அவர் தான் உயர்த்தி...'

'அப்படியே ஆகட்டும்'னு முதலில் கண் ஒரு வருஷத்துக்குப் பிரிந்து இருந்ததாம். 'தீய விஷயங்களைப் பார்க்காமல் நிம்மதியாய் இருந்தேன்' என்றார் உடம்புக் குரியவர்.

அதே போலக் காதும் மூக்கும் மற்ற இந்த்ரியங்களும் அவரை விட்டுப் பிரிஞ்சு போன போதும் கஷ்டமில்லாமல் இருந்தார்.

ஒருநாள் அந்த உடலுக்குள் இருந்த பிராணன் புறப்பட்டுப் போனது... அவ்வளவு தான்! பிராணன் கிளம்பினதும் மற்ற எல்லா இந்த்ரியங்களும் மொத்தமாகப் புறப்பட்டுப் போய் விட்டன!

ஆகவே, எந்த ஒரு செயலுக்கும் பிராணன் நாலாவது காரணம் என்று தெரிகிறது.

ஆனால் பிராணன் மட்டுமே தனித்துச் செயல்பட முடியுமா...? உடம்பும் இந்த்ரியங்களும் மனஸூம் ஆத்மாவுடன் சேரணும். அதோடு இன்னொரு காரணமும் சேருகையில் தான் பூர்ணத்துவம் உண்டாகிறது. அது என்னவென்று பார்த்தால், அதுக்கு ஒரு கதை சொல்லலாம். நடந்த சம்பவம்...

ஸ்ரீரங்கத்திலே எம்பார் காலட்சேபம் பண்ணறார். அப்போ வடக்கு சித்திரை வீதிக்காரர் ஒருத்தர் திண்ணையிலே வீணாகக் காலத்தைப் போக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எல்லோரும் அவரை, "காலட்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேபத்துக்கு வரக் கூடாதா - இப்படி வீணா காலத்தைப் போக்கறீர்களே...?" என்று கேட்டுக் கேட்டுப் பார்த்தார்கள். யார் கேட்ட போதும் அவர் மசியவில்லை; அப்படியே மறு பக்கமா தலையைத் திருப்பிக் கொண்டு விட்டார். இப்படியே பல நாட்கள் கழிந்தன. திடீரென்று ஒருநாள் திண்ணைக்காரர் தாமே காலட்சேபத்துக்குக் கிளம்பி வந்தார்.

எல்லாரும் ரொம்ப மகிழ்ந்து போனார்கள். பிரவசனம் பண்ணின எம்பார் கேட்டார்: "இத்தனை நாளா வராத இவர் இன்னைக்கு வந்திருக்கார் என்றால் அதற்கு யார் காரணம்? ஆசார்யர் காரணமா? அவரை வரச் சொல்லி வற்புறுத்திக் கூப்பிட்டவர்கள் காரணமா..? ஆசார்யர்தான் காரணம் என்று நினைக்கிறவர்கள் கையை உயர்த்தலாம்... ஆசார்யர்தானே எதிரிலிருப்பவருக்கு எவ்வளவு புரியும் என்று பார்த்து, அதற்கு ஏற்பச் சொல்பவர்...? அதனாலே அவர் காரணம்னு நினைக்கறவர் கள் கை உயர்த்தலாம்..." என்றார்.

கூட்டத்தில் பாதிப் பேர் கையை உயர்த்தினார்கள்.

"சரி, அழைத்தவர்களின் வற்புறுத்தலால் தானே இவர் வந்திருக்கிறார்... அதனால் இவரை வரச் சொல்லிக் கூப்பிட்டவர்களே இவருடைய வருகைக்குக் காரணம் என நினைக்கிறவர்கள் கை உயர்த்தலாம்...?" என்றார்.

கூட்டத்தில் இன்னொரு பாதி கையை உயர்த்தியது!

அந்தச் சமயத்திலே ஆசார்யர் எம்பார் சொல்கிறார்... "இப்போ சொன்ன எதுவுமே காரணமில்லை... இவரை இங்கே வரவழைச்சதுக்குக் காரணமானவன் பரமாத்மா தான். இத்தனை நாளாக இல்லாமல், திடீரென்று இங்கே வரணும் என்று அந்த புத்தியைக் கொடுத்ததே அந்த பரமாத்மாதான்..." என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகத்தின் சகல காரியங்களுக்கும் ஐந்தாவது காரணமாய் இருப்பவன் அந்த பரமாத்மாதான்!

ஆடு, மாடு மாதிரி மனிதர்களை ஓட்டுவதில்லை. பகவான். ஜீவாத்மாவுக்கு ஒரே ஒரு முக்கியமான இடத்திலே சுதந்தரத்தைக் கொடுக்கிறான். நல்லது இது; கெட்டது இதுன்னு காட்டிக் கொடுத்து, அது எதைப் பிடிச்சுக்கறதுன்னு கவனிக்கிறான். 'மனிதன் நல்லதைப் பற்றுகிறானா? தீயதைப் பற்றுகிறானா?' என்று சோதித்துப் பார்ப்பது அவனுடைய லீலை!

ஆகையினாலே விச்வம் என்கிற சப்தத்துக்குக்குப் பொருள் கேட்டால், 'ஜகத்காரண வஸ்துவாக பரமாத்மா இருக்கிறான்; அவனே காரியமாய் இப்படிப் பரிணமிக்கிறான். விச்வத்துக்குக் காரிய காரணம் அவனே ஆனதனாலே விச்வம் என்கிற சப்தத்தினால் பரமாத்மா அழைக்கப்படுகிறான்.

இதுக்கு மேலே இன்னொரு அர்த்தமும் இருக்கிறது:

சுவாபாவிகமாக - அதாவது இயற்கையிலேயே எண்ணிறந்த திருக்கல்யாண குணங்கள் இருப்பதாலே பகவான் என்று அழைக்கப்படுகிறான் அவன்.

பகவான் என்றால்...?

புத்தி உடையவன், புத்திமான். குணமுடையவன், குணவான். பகத்தை உடையவன் பகவான். என்ன குணங்கள்...? ஆறு குணங்களை அவனுக்கே உரியவையாக விவரிக்கிறார்கள். பகம் என்றால் ஆறு குணங்கள்.

முதலாவதாக ஞானம். குறுகுதல், விரிதல் என்பது பகவானுடைய ஞானத்துக்குக் கிடையாது. மனித ஞானம் மாதிரி இல்லை. அது... மனிதர் ஒருவர் தத்துவம் படிக்கிறார். அவர் புத்தி ஒருநாள் அதை கிரஹிக்கிறது போல இன்னொரு நாள் கிரஹிப்பதில்லை! ஏன்...? அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்திக்கு சங்கோச விஹாஸம் இருக்கிறதனாலே அது அப்படி நடந்து கொள்கிறது. சில நாள் குறுகிப் போயிடறது; சில நாள் சாத்விகமான ஆகாரம் சாப்பிடாததாலே ஒத்துழைக்கிறதில்லை. இந்த மாதிரி கஷ்டங்களெல்லாம் பகவானுக்குக் கிடையாதே! நமக்கு இந்த்ரியங்கள் எல்லாம் வேண்டியிருக்கு. அப்படியில்லை பரமாத்மா. அவனுடைய ஞானம் சங்கோச விகாசம் இல்லாத ஞானம்.

பலம் என்பது பகவானின் இன்னொரு குணம் எல்லாவற்றையும் தாங்கும்படியான பலம். பதினாலு லோகத்தையும் தாங்கறான் பரமாத்மா. நாம் அவஸ்தைப் பட்டுத் தாங்கற மாதிரி தாங்கறானா...? அதெல்லாம் இல்லை. சங்கல்ப ஆதீனத்திலே - 'அப்படி இருக்கணும்' என்று அவன் நினைக்கிறதாலேயே மட்டுமே தாங்குகிற பலம் அவனுக்கு இருக்கிறது.

ஐச்வர்யம் மூன்றாவதான குணம். நித்ய விபூதி என்று சொல்லப்படுகிற வைகுண்டம், லீலாவிபூதின்னு சொல்லக் கூடிய இந்த உலகம், உலகத்தைச் சேர்ந்தவை - எல்லாம் அவனே! ஒரு மாந்தோப்பு இருக்கிறது - அதன் உரிமைக்காரர் ஒருத்தர். காவல்காரர் இன்னொருத்தர். காவல்காரருக்கு மாம்பழத்தை அனுபவிக்கும் உரிமை இருக்கிறதா என்றால், இல்லை! ஆனால், பகவான் அப்படி இல்லை. இந்த லோகத்தின் உரிமைக்காரனும் காவல் காரனும் அவனே!

அர்ச்சனை பண்ணும்போது எந்த மந்திரம் சொன்னாலும் நம: (நமஹ - உச்சரிப்பு) என்று முடிக்கிறோமே... இதற்கு அர்த்தம் என்ன...? 'நம' என்றால் 'இல்லை' என்னுடையது என்று பொருள். அதாவது, அத்தனை விஷயங்களையும், 'என் பொருட்டில்லை. உனக்காக' என்று அவனிடம் சமர்ப்பிக்கிறோம்.

'எனதில்லை' என்று சொல்வதுதானே வழக்கு. இல்லை என்னுடையது என்று ஏன் வர வேண்டும்...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'எனது' என்று முதலில் சொல்லி விட்டாலே அப்புறம் 'இல்லை' என்று சொல்ல மனம் வராமல் போய் விடுமோ என்கிறதுக்காகத்தான் 'இல்லை என்னுடையது' என்று சொல்ல வைத்தது!

ஐச்வர்யம் அத்தனையும் அவனுடைய குணம்!

நாலாவது குணம் வீரியம். எல்லாவற்றையும் ஜெயிக்கும் தன்மை. உயர்ந்த பராக்கிரமத்தாலே சர்வத்தையும் அடக்கி, ஆளும்படியான ஆதார குணம்.

சக்தி - ஐந்தாவது குணம். உலகத்திலே அததுவும் அதனதன் இடத்திலே நிற்பதற்கு ஆதார சக்தியாக இருக்கக் கூடியவன்.

ஆறாவது குணம் தேஜஸ். ஒளிப் பிழம்பாய், சூரியனாகவும் சந்திரனாகவும் நட்சத்திரங்களாகவும் ஜொலிக்கிறான் பகவான்.

இந்த ஆறு குணக்கூட்டங்களுக்குப் பகம் என்று பெயர். இவற்றை உடையவன் பகவான்! விச்வ சப்தத்துக்கு 'பகவான்' எனறு பொருள் ஆனதினாலே அப்படிப்பட்ட பகவானை 'விச்வம்' என்று சொல்லி நாம் ஆராதனை பண்ண வேண்டும்.

சஹஸ்ரநாமத்தின் முதல் நாமாவான 'விச்வம்' என்பதற்கு அப்படியொரு முக்கியத்துவம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9

வேதம் என்ற சொல்லுக்கு உணர்த்துதல் என்று அர்த்தம். பரப்ரும்மத்தை உணர்த்துவதனாலே அது வேதம். இதையே தமிழில் 'மறை' என்கிறோம். மறைப்பதனாலே அதற்கு மறை என்று பொருள்!

சமஸ்கிருத அர்த்தத்துக்கு தமிழ் அர்த்தம் முரணாக நமக்குத் தோன்றுகிறதல்லவா...? இந்த 'முரண்பாடு' கண்டு நாம் பிரமித்துப் போய்விடக் கூடாது. ஏனென்றால் சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்டதைத்தான் தமிழ் மேலும் வலியுறுத்திச் சொல்கிறது.

பரப்பிரும்மத்தை உணர்த்துவதனால் வேதம்.

பரப்ரும்மத்தைத் தன்னுள்ளே மறைத்து வைத்திருப்ப தனாலே அது மறை!

வேதமானது யாருக்கு மறைக்கிறது... யாருக்கு பரப்ரும்மத்தைக் காட்டுகிறது...?

ஆசார்ய கடாக்ஷம் அற்றவருக்கு மறைக்கிறது. ஆசார்ய கடாக்ஷம் பெற்றவருக்கு பரப்ரும்மத்தை அதுவே உணர்த்துகிறது.

பளிங்குக் கற்களால் தயார் பண்ணப்பட்ட திவ்யமான ஒரு மாளிகையிலே நான்கு பக்கமும் தேதீப்யமாய் விளக்குகளை ஏற்றி வைத்து, அந்த மாளிகைக்கு இடையிலே நவநிதிகளையும் கொண்டு கொட்டினால், அது எப்படி தகதகாயமாய்ப் பிரகாசிக்குமோ, எல்லாருக்கும் எப்படிப் பளீரென்று புலப்படுமோ, அந்த மாதிரி... ஆசார்ய கடாக்ஷம் பெற்றவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதத்தைப் பார்த்தாரானால், அதற்குள்ளே இருக்கக்கூடிய புரியாத விஷயங்கள் கூட சுலபமாக அவருக்குப் புரியும். சாமானியர்களுக்கும் இந்த மாதிரி புரிய வைக்கக் கூடியது மகான்களின் அனுக்கிரஹம்.

இந்த வேதம் ஓதி யக்ஞம் செய்யப்படும்போது, பூரணமாய் ஆயுள் உண்டாகவும், இறுதிவரையிலே பார்வையும் செவிப்புலனும் சித்திக்கவும், மனசு சலிக்காமல் இருக்கவும் வாக்கிலே எப்போதும் தேன் சிரவிக்கவும் அனுக்கிரஹமாகிறது.

வாக்குக்கான இந்திரியம் நாக்கு. அது பற்களைப் பார்த்துக் கேட்கிறது:

“கடுமையான விஷயங்களைப் பொடியாக்கி எனக்குக் கொடுக்கிறீர்களே... நான் உங்களுக்குக் கடமைப்பட்டேனே... என்ன பண்ணினால் உங்களுக்குப் பிரதியுபகாரமாய் இருக்கும்? அதை நீங்கள் சொல்ல வேண்டும்...”

அதற்கு முப்பத்திரண்டு பற்களுமா பதில் சொன்னதாம் : “நீ ஒண்ணும் உபகாரம் பண்ண வேண்டாம். பகவான் உன்னை எப்படி வைச்சிருக்கான்னு எண்ணிப்பாரு... அதை உணர்ந்து செயல்பட்டாலே போதும்.”

“எப்படி வைச்சிருக்கான்?” என்றது நாக்கு.

“உன்னை உள்ளே வைத்து, எங்களை வெளியே வைச்சிருக்கான். இதனோட தாத்பர்யம் என்ன...? எங்களைத் தாண்டி நீ வெளியே வரக்கூடாது. கட்டுப்பட்டு இருக்கணும்ன்றது பகவானின் சங்கல்பம். அப்படி இருந்துட்டா துன்பம் ஒண்ணுமில்லை...”

- பற்களின் இந்த பதிலைக் கேட்ட நாக்கு வருத்தப்பட்டது: “என்னை இப்படி நிஷ்டூரமா சொல்கிறீர்களே! நான் வெளியில் வந்தால் என்ன?”

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“நீ வெளியே வந்தால் எங்களுக்குத்தான் கஷ்டம். எதிரேயுள்ளவன் உன் பேச்சைக் கேட்டு என்ன சொல்வான்...? ‘உன் நாக்கை அடக்குவேன்’ என்று சொல்வதில்லை எதிராளி... ‘பல்லை உடைப்பேன்’ என்றுதான் சொல்கிறான்! அதனால் எங்களுக்குக் கட்டுப்பட்டு இரு” என்றன பற்கள்!

இது கலியுக தர்மம்! கலியுகத்திலேதான் தப்பை ஒருத்தன் பண்ணினாலும் சிக்ஷை இன்னொருத்தனுக்கு! எனவே நமக்கு வார்த்தைகள் மிகும்போதெல்லாம் இந்த சம்பாஷணை நினைவு வர வேண்டும். அடங்கிவிடுவோம்.

வாக்கு நமக்கு நல்லவிதமாய் அமையணும் என்றால், நாமாக அதைப் பெற்று விட முடியாது. யக்ஞங்கள் தான் நல்ல வாக்கை உண்டாக்கித் தர வேண்டும்.

வாக்கு மட்டுமல்ல, புலன்கள் யாவும், ஆத்மாவும்கூட யக்ஞத்தினாலே ரக்ஷிக்கப்படுகின்றன.

யக்ஞம் என்ற சொல்லால் எது மறைத்துச் சொல்லப்படுகிறது என்று பார்த்தால் அந்த பரமாத்மா தான் மறைத்துச் சொல்லப்படுகிறார். விஷ்ணுதான் யக்ஞன் - யக்ஞ சாதனன், யக்ஞரூபி, யக்ஞபுருஷன். எல்லாவற்றையும் அவன் உண்டாக்கித் தரட்டும் என்று வேதம் சொல்கிறது.

யக்ஞம் என்ற பதத்தினாலே நாம் அறிந்து கொள்பவர் பரமாத்மா. அதே போல்தான் மந்திரங்களுக்குத் துல்லியமாய் இருக்கக் கூடிய சஹஸ்ரநாமத்திலே, விச்வம் என்கிற சொல். வெளியே காணக்கூடிய உலகம் என்று கருத்து தென்பட்டாலும் அது நாராயணனையே உணர்த்துகிறது. விச்வ சப்தத்தினாலே உணர்த்தப்படுகிறவன் நாராயணனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நாராயண' என்ற சொல்லுக்கு நாம் பொருள் உணர வேணும். விஷ்ணு புராணத்திலே 'தீர்த்தம்' ஜலம் - இவற்றுக்கு நாரங்கள் என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

நாரம் ததாதி இதி நாரத:- பித்ரு தேவதைகளை ஏராளமாக தர்ப்பணம் பண்ணி ஆராதித்தார் என்பதாலே அவருக்கு நாரதர் என்று பெயர் - தீர்த்தத்தை நிறைய, பித்ரு தேவதைகளுக்குக் கொடுத்தவர்.

'நாரம்' என்றால் பிரும்ம ஞானம் என்றும் ஓர் அர்த்தம் உண்டு. பிரும்ம ஞானத்தை அனவரதம் உபதேசித்தவர் நாரதர். பரப்ரும்மத்தைத் தவிர மற்றொரு விஷயம் பேசமாட்டார் அவர்.

சிருஷ்டிக் கிரமத்தில், தக்ஷபிரஜாபதி என்பவர் ஹரியச்வரர்கள் என்று விசேஷமாக பத்தாயிரம் பேரை சிருஷ்டி பண்ணினார். அந்த பத்தாயிரம் பேரையும் உட்கார வைத்து, நாரதர்,'இந்த சிருஷ்டி உலகம் எதுக்கு? பரப்ரும்மத்தை அடைய வேண்டாமா...?' என்று உபதேசம் பண்ணினார்.

உடனே, அத்தனை பேரும் பரப்ரும்மத்தை தியானம் பண்ணி மோட்சத்துக்குப் போய் விட்டார்கள்! சிருஷ்டியே நடக்கவில்லை...!

இன்னொரு ஆயிரம் பேரை சிருஷ்டித்தார் தக்ஷபிரஜாபதி. நாரதர், அவர்களுக்கும் உபதேசம் பண்ண, அவர்களும் மோட்சத்துக்குப் போனார்கள்!

பார்த்தார் தக்ஷபிரஜாபதி! 'நாம சிருஷ்டிக்கறது... இவர் மோக்ஷத்துக்கு வழி பண்றதா...' என்று கோபித்துக் கொண்டு நாரதருக்கு ஒரு சாபம் கொடுத்தார்:

'நின்றவா நில்லா நெஞ்சம் போல்' அவர் அலைந்த வண்ணம் இருக்கக்கடவது என்று சாபம்! மனசு எப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓர் இடத்திலே நிற்காதோ... அப்படி நிற்காமல் போய்க் கொண்டேயிருக்க வேண்டும் என்று சாபம்!

அதனால்தான் நாரதர் ஒரு க்ஷணம்கூட ஒரு இடத்தில் இருக்க மாட்டார். அவர் எங்கேயாவது ஒரு நிமிஷம் தங்கினால், அங்கிருப்பவருக்கு மோக்ஷ சித்திதான்!

நாரம் என்றால் தீர்த்தம் என்று சொல்லப்போக, தீர்த்தம் கொண்டு தர்ப்பணம் செய்த நாரதரின் கதையைச் சொன்னேன். தீர்த்தத்தை எவனொருவன் படுக்கையாக - தன் இருப்பிடமாகக் கொண்டானோ... அவனுக்கு நாராயணன் என்று பெயர்.

ஒருவர் சமத்காரமாக பகவானை ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார் - சிலேடை என்று அதைச் சொல்வது:

பூர்வ காலத்திலே பழையது சாப்பிடுவது என்றொரு வழக்கம். சாதம் சேர்ந்து போயிருந்தால் அதை எடுத்து ஜலத்திலே போட்டுடறது. விடியற்காலையிலே அந்த சாதத்தை எடுத்துப் பிழிந்து போட்டுவிட்டு, அந்த ஜலத்திலே உப்பு சேர்த்து ஒருத்தர் சாப்பிட்டாரானால், காலை வெயிலைத் தாங்கக்கூடிய சக்தி உண்டாகிறது. குறிப்பா. விவசாயிகள், வயல் வேலைக்குப் போகிறவர்கள் இப்படிச் செய்வதுண்டு... (- இந்த விவசாயிகளுக்கு போக பாக்யங்களைத் தரச் சொல்லி கேட்கிற ஒரு பிரார்த்தனை கூட பிராதஹ்கால சந்தியாவந்தனத்திலே உண்டு.)

சாதத்துத் தீர்த்தத்தைச் சாப்பிட்டால் வெயிலைத் தாங்கற சக்தி வரும். 'இது பழையது சாப்பிட்ட உடம்பு... ஒண்ணும் பண்ணிக்க முடியாது...' என்று கூடச் சொல்வார்கள்.

'இந்த பழையதும் பகவானும் ஒண்ணு' என்றார் ஒருத்தர்!

இது பழையது; அவனும் புராண புருஷன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இது எங்கே படுத்திருக்கிறது? ராத்திரி முழுதும் சாதம் ஜலத்திலே படுத்திருக்கிறது. அவனும் ஜலத்திலேதானே படுத்துக் கொண்டிருக்கிறான்! அதனாலே 'ஜலே சயானம்.'

'என்னை உள்ளபடி உணர்கிறவர்கள் ஒரு சிலரே' என்றான் பரமாத்மா கீதையிலே. பழையதின் பெருமையும் அதை அனுபவித்துணர்ந்த சிலருக்கே தெரியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழையதை எப்போ சாப்பிட வேண்டும்? அதிகாலையிலே. எம்பெருமானையும் அதி காலையிலே தியானம் பண்ண வேண்டும்.

பழைய சாதத்தைப் போல் பரமாத்மாவும் நாரங்கள் சூழ இருக்கிறான்! எனவே அவன் நாராயணன்.

சேதனம் - அசேதனம்... அதாவது அசையும் பொருள்; அசையாத பொருள் என்ற இரண்டு விதமான பொருள்களிலேயும் இருப்பவன் நாரணன். இது அந்தப் பெயருக்கு இன்னொரு விளக்கம். 'சித்' ஆகவும் 'அசித்' ஆகவும் இருப்பவன் அவனே.

சித் என்பது நமது அறிவான ஜீவாத்மா.

அசித்-அசேதன-அறிவற்ற பதார்த்தங்கள். உலகில் எத்தனையோ ஜீவன்கள் உள்ளன. மனிதனுக்குள்ளே இருக்கும் ஜீவன் ஒரு சாக்கடைப் புழுவுக்குள்ளும் இருக்கிறது; ரொம்ப பரமாணுவான உயிர்களுக்குள்ளேயும் இருக்கு...! 'அதைக் கண்ணாலே பார்க்க முடியுமா?' என்றால்... 'பார்க்க முடியாது' என்கிறது உபநிஷத்.

பசுவின் வால் நுனியில் உள்ள கேசத்தில் ஒரே ஒரு கேசத்தை எடுத்துக் கொள். அதை நூறு கூறுபோடு.. 'ரோமத்தை நூறு கூறு போட முடியுமா!' என்று கேள்வி கேட்கக் கூடாது. மனசாலேயே கூறு போடு என்கிறது உபநிஷத்!

அப்படி நூறு கூறு போட்டதில் கிடைக்கும் ஒரு இழையை எடுத்து மறுபடியும் நூறு கூறு போடு... இப்படிப் போட்டுக் கொண்டே போனால் இறுதியில் கிடைக்கக் கூடியதுதான் ஜீவன் என்கிறது உபநிஷத்!

இந்தக் காலத்திலே மைக்ராஸ்கோப் என்கிற கருவியைக் கொண்டு பல நுண்ணிய விஷயங்களையெல் லாம் பார்க்கிறார்கள். ஆனால் மைக்ராஸ்கோப்பைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு ஆத்மாவைப் பார்க்க முடியுமா? முடியவே முடியாது! காரணம், அதற்கு இருக்கிற ஞானம் எங்கும் பரந்து விரிந்திருக்கும்.

இதற்கு ஒரு கதை சொல்லலாம்.

வியாஸர் உட்கார்ந்திருந்தார். ஒரு சின்ன புழு - ரொம்ப அல்பமான புழு - தன் உடம்பைக் கஷ்டப்பட்டு இழுத்துக் கொண்டு போயிற்று. வியாஸர் வாயை மூடிக் கொண்டு இராமல் இந்தப் புழுவோடு பேசுகிறார்:

"ஏ புழுவே, புழுவே! என்ன இவ்வளவு வேகம்? எங்கே போகிறாய்..." என்று கேட்கிறார்.

அந்தப் புழு அவரைத் திரும்பிப் பார்த்துச் சொல்கிறது:

"அதோ பாரும்! அங்கே இரண்டு காளை மாடு பூட்டப்பட்ட வண்டி வேகமாக வருகிறது. அந்த வண்டி இந்தப் பாதையிலே வேகமாகப் போகப் போகிறது. அது என்மீது ஏறினால் அநியாயமா நான் மாண்டு போய் விடுவேன். ஆகையினாலே அந்த வண்டி வந்து சேர்வதற்குள்ளே வேகமாகப் போகிறேன்..." என்றது புழு.

வியாஸர் அதோடு விடாமல், "அந்த வண்டி உன் மேலே ஏறட்டுமே... நீ போனால்தான் என்ன?" என்று கேட்டாராம்.

அந்தப் புழு நகர்வதை நிறுத்திவிட்டதாம்! உரையாடல் தொடர்ந்தது:

"வியாஸரே! என்ன சொன்னீர்...? மறுபடியும் சொல்லும்..."

"நீ போனால்தான் போயேன்னு சொன்னேன்... என்ன இப்போது...?"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உமக்கு என்னைக் கண்டால் அசூயை. அதனால் தான் அப்படிச் சொல்கிறீர்."

"என்ன அசூயை...?"

"நான் என்ன சந்தியாவந்தனம் பண்ணணுமா? நான் என்ன மாத்தியானிகம் பண்ணணுமா? உபந்யாஸம் கேட்கணுமா? இல்லை நான் என்ன பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணணுமா? பையனுக்கு உபநயனம் பண்ணணுமா? நான் என்ன பந்து பரிபாலனம் பண்ணணுமா? ஆசார்யனை சேவிக்கணுமா...? இதையெல்லாம் நான் செய்ய அவசியமில்லையே என்று உமக்கு அசூயை..." என்றது புழு!

இந்தக் கதையினாலே இரண்டு விஷயங்கள் உணர்த்தப்படுகின்றன.

ஒன்று: சக்தி சாமர்த்தியத்தைக் கொடுத்து, அறிவைக் கொடுத்து, சாஸ்திரத்தைக் கொடுத்து வைக்கப்பட்டிருக்கு நமக்கு. அப்படிப்பட்ட நாமே நமக்கு விதித்த காரியங்களைச் செய்யாவிட்டால் அந்தப் புழுவைக் காட்டிலும் நாம் மட்டமாகப் போய் விடுகிறோம்!

இரண்டு: புழுவுக்குள்ளேயும் இருக்கக்கூடிய ஆத்மா மிக நுண்ணியது. எவ்வளவு அல்பமான வஸ்துவானாலும் அதற்குள்ளேயும் அந்தராத்மா-பரமாத்மா இருக்கிறான்.

சித்- அசித் பதார்த்தங்கள் அனைத்திலும் பகவான் இருக்கிறான். சித்-அசித் சேர்ந்து அமைவனதான் நாரங்கள். நாரங்களை இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன். 'அந்த நாரங்கள் - அதாவது சேதன - அசேதன பதார்த்தங்கள் எவனிடத்திலே உறைகின்றனவோ அவன்' என்றும் இன்னொரு பொருள் சொல்லலாம் நாராயண சப்தத்துக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10

தர்க்க சாஸ்திரம் கற்க ஒருவர் போனார். 'இல்லை' என்கிற சொல்லுக்கு நான்கு விதமான விளக்கம் உண்டு என்றார் ஆசார்யர். மாணவர் ஆச்சர்யப்பட்டார். அது என்ன நான்கு விதமான 'இல்லை'...?

ஒரு பானையையே உதாரணமாய் எடுத்துக் கொள்வோம். ஒரு பானை உருவாக்கப்படுகிறது. அதை நாம் 'பானை' என்று சொல்கிறோம். உருவாக்கப்படுவதற்கு முன் அது இருந்ததோ...? இல்லை! இந்த 'இல்லை'யை பிராக பாவம் என்று சொல்வோம்.

பானை ரொம்ப அழகாக இருக்கிறது. அங்கேயிருந்து ஒரு குழந்தை வருகிறது கையிலே ஒரு தடியோடு வருகிறது. அதை ஓங்கி, பானையை ஒரு அடி....! பானை சுக்கு நூறாகப் போயிடறது. இப்போது அந்தப் பானை இருக்கிறதா...? இல்லை!... இந்த 'இல்லை' வேறு; முதலில் பிராக பாவமாய் சொன்ன 'இல்லை' வேறு... இந்த இரண்டாவது 'இல்லை'யை பிரத்வம்ஸாபாவம் என்று சொல்லலாம்.

அடுத்து அந்யோந்யா பாவம். ஒரு கடிகாரம், எனக்கு சற்று தூரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே இருக்கிறேன். அது இருக்கும் இடத்தில் நான் இல்லை; நான் இருக்கும் இடத்தில் அது இல்லை! - இந்த 'இல்லை' அந்யோந்யா பாவத்தில் சொல்லப்படுவது.

நாலாவதான அத்யந்தா பாவத்தை ஒரு கதை சொல்லி விளக்கலாம்: பரம ஏழை ஒருத்தர். ஒரு வீட்டு வாசலில் அதிகாலையிலேயே நின்று யாசகம் கேட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எட்டு மணி ஆகியும் அந்த வீட்டின் வாசல் கதவு திறக்கவில்லை. அந்த வழியே போன இன்னொருத்தர் பார்த்தார். கதவைத் தட்டி நின்றவரிடம் போனார். 'நீர் வேறு எங்கேயாவது போய் யாசகம் கேளும்; தாத்ருத்வம் என்கிறது இந்த வீட்டிலே அத்யந்தா பாவம் ஆயிற்றே...!' என்றார். யாசித்தவருக்குப் புரியவில்லை. 'வள்ளன்மை என்பது முன்பும் இல்லை, இப்போதும் இல்லை, இனியும் இராது இந்த கிரஹத்தில் என்பதே நான் சொன்னதன் அர்த்தம்' என்று விளக்கம் கிடைத்தது. ஆக, நான்காவது பாவத்தில் 'இல்லை' என்று சொன்னால், எக்காலத்திலும் இல்லை என்று பொருள்.

இந்த நான்கு அபாவங்களிலே அந்யோன்யா அபாவம் பகவானிடத்திலே இருக்கிறதா...? அவன் அங்கே இருக்கிறான்; இங்கே இல்லை என்று வரையறுக்க முடியுமா...!'

பகவான் சர்வ வியாபி! உள்ளும் - புறமும் - இடைப்பட்ட இடங்களிலும் வியாபித்திருக்கிறான். இப்படி எங்கும் வியாபித்திருப்பதனாலேதான் விச்வம் என்கிற சப்தத்துக்கு நாராயணன் என்று பொருள்.

இந்த வியாபித்தலைத்தான் பிரஹலாதன் நரசிம்ஹா வதாரத்திலே வெளியிட்டான். பகவானை நாடி வருந்தும்படியான ஒரு பெண்ணின் நிலையிலே - நாயிகா பாவத்திலே ஒரு பாசுரம்:

ஆடி ஆடி அகங் கரைந்து இசை
பாடிப் பாடி கண்ணீர் மல்கி – எங்கும்
நாடி நாடி நரசிங்காவென்று
வாடி வாடும் இவ்வாநுதலே!

- இதிலே எங்கும் என்பது உயிர்நாடியான சொல். 'நரசிம்ஹன் கம்பக்(தூண்) குழந்தை என்பதால் கம்பத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மட்டுமே பார்க்காதே... எங்கிருந்தும் அவன் வரலாம்' என்று உணர்த்துவது.

'தத்வ விவேகோ விஷ்ணு புராணாத்' என்று விஷ்ணு புராணத்தை மிகவும் கொண்டாடிப் பேசுகிறார் ஆதி சங்கர பகவத்பாதாள். அவர் தமது விஷ்ணு சஹஸ்ர நாம பாஷ்யத்திலே, அந்த விஷ்ணு புராணத்திலிருந்து நிறைய மேற்கோள் காட்டுகிறார். அதில் ஒன்று:

உலகம் என்கிற தாமரை மலர் மலர்வதற்காக, தேவகி என்கிற கிழக்கு திக்கிலிருந்து, அச்சுதன் என்கிற சூரியன் உதித்தான்.

தேவகியை கிழக்கு திக்காகச் சொல்லி, அச்சுதனை சூரியனாகச் சொன்னதில் ஒரு தர்ம சூக்ஷ்மம் இருக்கிறது. கிழக்கு திக்குக்கும் சூரியனுக்கும் என்ன சம்பந்தமோ அதே சம்பந்தம்தான் தேவகிக்கும் பரமாத்மாவுக்கும்.

இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்...?

கிழக்கு திக்குக்கும் சூரியனுக்கும் சம்பந்தம் உண்டா? மேற்கு திக்குக்கும் சூரியனுக்கும் சம்பந்தம் உண்டா? யோசனை பண்ண வேண்டும்.

கிழக்கு திக்கிலே உதித்து, சூரியன் மேற்கிலே மறைவது நமக்குப் பிரத்யட்சமாகத் தெரிகிறது. ஆனால், உண்மையிலே, ஆராய்ந்து பார்த்தால், சூரியன் தன்னுடைய மண்டலத்திலே சஞ்சாரம் பண்ணுகிறான். அவ்வளவுதான்! உலகத்திலே இருப்பவருக்குத்தான் அவன் உதிப்பதாகவும் மறைவதாகவும் தெரிகிறது.

- சாஸ்திரத்தைப் பார்க்காமலே இது கண்கூடாகவே தெரிகிறது - பாரத தேசத்தில் நமக்கு இரவு நேரமாக இருக்கிறது. அதே நேரத்திலே அமெரிக்காவிலே சூரியனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்... சூரியனுக்கும் கிழக்கு திக்குக்கும் யாதொரு சம்பந்தமு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மில்லை. அதே போல, தேவகியின் கர்ப்பத்துக்கும் பரமாத்மாவுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை!

எங்கும் பரவியிருக்கும்படியான பரமாத்மாவை தேவகியின் கர்ப்பத்திலே அடக்கிப் பேசலாமா...!

ஒன்றை வைத்து மற்றொன்றை அடையாளம் காட்டுவது என்பது ஏற்றுக் கொள்ளப் பட்ட மரபு. 'தடஸ்த லட்சணம்' என்று இதைச் சொல்வார்கள். ஒருத்தர் கேட்கிறார்; "இந்த ஊரில் நதி எங்கே இருக்கிறது? ஸ்நானம் செய்ய வேண்டும்..." என்று.

அவருக்கு இன்னொருத்தர் பதில் சொல்கிறார்:

"அதோ... கூட்டமாக தென்னை மரங்கள் தெரிகின்றனவே. அங்கே இருக்கிறது நதி..." தென்னை மரத்தை வைத்து நதியின் இடம் சொன்னது போல், தேவகியின் கர்ப்பமும் 'தடம்' - அவ்வளவுதான்!

ஒரு மூதாட்டி தவறாமல் சந்திர தரிசனம் செய்யும் பழக்கம் வைத்திருந்தார். ஒரு நாள் சந்திரன் மரக்கிளை பின்னாலே இருந்தது. அவரால் பார்க்க முடியவில்லை. பேரனை அழைத்துக் கேட்டார். "அதோ பார் பாட்டி, மரம் தெரிகிறதா? அந்த மரத்தின் நுனிக்கிளை தெரிகிறதா...? அந்தக் கிளை நுனியிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது பார், சந்திரன்..." என்றான் பேரன்!

உண்மையிலே சந்திரன் கிளை நுனியிலேயா ஒட்டிக் கொண்டிருக்கிறது? இல்லவே இல்லை. ஓர் அடையாளத் துக்காகச் சொல்லும் இந்த வர்ணனையைத்தான் தடஸ்த லட்சணம் என்பது.

எங்கும் வியாபித்திருக்கிற பரமாத்மாவை சங்கோச மான இடத்திலே வைத்து, 'இங்கே.யிருந்துதான் அவன் வந்தான்' என்று சொல்வதும் இது போல்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருக்மிணி பிராட்டி, கிருஷ்ணனுக்கு ஏழு சுலோகங்களை எழுதி அனுப்பினாள். அதில் ஏழாவது சுலோகமாக, 'இந்த ஜன்மாவிலே நீ எனக்குக் கிடைக்காவிட்டால், அடுத்த ஜன்மாவிலும், அதற்கடுத்த ஜன்மாவிலும், தொடரும் நூறு ஜன்மாக்களிலும் உன்னையே அடையத் தொடர்ந்து முயற்சி செய்வேன்' என்ற பொருள்பட எழுதினார்.

"நூறு ஜன்மா ஆனாலும் உன்னை விட மாட்டேன் என்றால், 'நூற்றியோராவது ஜன்மாவில் விட்டுவிடுவேன்' என்று பொருள் கொள்வதா...?"

– அடியேன் ஒரு சமயம் உபந்யாஸம் பண்ணியபோது முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் இந்தக் கேள்வியைக் கேட்டார். சுவாமி (அழகிய சிங்கர்) சமத்காரமாகப் பேசக் கூடியவர். ஆதலினாலேதான் பரிசோதனை மாதிரி அப்படி ஒரு கேள்வி கேட்டார். உபந்யாஸத்தின் கடைசி தினத்தில் விளக்கம் தருவதாகச் சொல்லி அவரிடம் அனுமதி வாங்கிக் கொண்டேன்.

நூறு ஜன்மம் என்று ருக்மிணி கணக்குச் சொல்வது எண்ணிக்கையைக் குறிக்க வந்ததில்லை... 'ஆயிரம், ஆயிரம்' என்று வேதம் சொல்வதெல்லாம் வெறும் ஆயிரம் இல்லை. 'அனேகம்' என்ற பொருளில் உபயோகிக்கப்படுகிறது 'ஆயிரம்' என்ற பதம். 'சதமானம் பவதி' (நூறு வயது சிறப்பாய் வாழுங்கள்) என்று ஆசி கூறுவதுண்டு. அப்படியானால் நூற்றியோராவது வயது வாழக்கூடாது என்றா பொருள்!? தீர்க்கமான ஆயுள் உண்டாகட்டும் என்ற உயர்ந்த பாவத்தில் ஆசி சொல்லப்படுகிறது. அவ்வளவு தான்!

'சதம்' என்பது எண்ணிக்கையைக் குறிக்க வந்ததன்று – அதை போலவேதான் 'சஹஸ்ரம்' என்பதும்.

In Public domain. Digitization, Muthulakshmi Research Academy

விச்வத்தையே கண்களாக உடையவனை எந்த எண்ணிக்கையில் அடக்கிச்சொல்ல முடியும்...? விச்வம் எவ்வளவு பெரியதோ, அவ்வளவு பெரிய கண்களை உடையவன் அவன். நாம் அவனைப் பார்க்க வேண்டு மானாலும் விச்வத்தையே நேத்திரங்களாக்கித் தான் பார்க்க வேண்டும். ஆதலினாலேதான் விச்வ சப்தம் அவனுக்கு மிகப் பொருத்தமான பெயராக அமைந்தி ருக்கிறது.

இந்த ஜன்மா பூராவும் செலவிட்டாலும் 'விச்வம்' என்கிறதுக்கான அர்த்தத்தைச் சொல்லி மாளாது. இந்த ஒரு நாமாவுக்கே இவ்வளவு பெருமை என்றால் சஹஸ்ர நாமங்களின் பெருமையை நினைத்துப் பாருங்கள்!'

சஹஸ்ர நாமங்களுக்கு என்ன ஒரு விசேஷமென்றால் அவை அனைத்துமே வேதத்திலே மந்திரங்களாக அமைந்திருக்கின்றன.

மந்திரம் என்று எடுத்துக் கொண்டோமேயானால், பல வகையான நிர்ப்பந்தங்கள். 'இப்படியிப்படித்தான் சொல்ல வேண்டும்' என்று நியமமுண்டு. சுவரம் மாற்றிச் சொன்னோமேயானால் அனர்த்தங்கள் ஏற்படும். எந்த சப்தத்தை அபஸ்வரமாகச் சொல்கிறோமோ அந்த சப்தமே வஜ்ராயுதமாக மாறி, சொன்னவரை அடிக்கிறது; கேட்டவரை ஹிம்சை பண்ணுகிறது!

ஒரு மந்திரத்தை சுவரம் மாற்றி உச்சரிப்பது பொய்யான வார்த்தை சொன்னதற்குச் சமமாகும்!

துவஷ்டா என்று ஒருவன் இருந்தான். குழந்தை வேண்டி, புத்ர காமேஷ்டி யாகம் பண்ண நினைத்தான். அமராவதி பட்டணத்திலேயே வைத்து இந்திரனை ஜெயிக்கக் கூடிய புதல்வன் வேண்டும் என்று அவன் விரும்பினான். அதற்குரிய யாகத்தை நடத்தித் தரச் சொல்லி புரோகிதரிடத்திலே கேட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மனத்திலே இந்த மாதிரி கோரிக்கையுடன் பண்ணக் கூடிய யக்ஞத்துக்கு, கர்த்தாவான நீயேதான் மந்திரத்தைச் சொல்லணும். புரோகிதனான நான் சொல்ல, நீ கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தால், பிரயோஜனமில்லை. முதலில் அந்த மந்திரத்தை அத்யயனம் பண்ணிவிடு..." என்றார் புரோகிதர்.

"இப்போது நான் எப்படி மந்திரம் கற்றுக் கொள்வது? நீங்கள் யக்ஞத்தை ஆரம்பித்து விடுங்கள். அவ்வப்போது தேவையானதைக் கற்றுக் கொண்டு சொல்கிறேன்..." என்றான் அவன்.

அவன் ரொம்பவும் நிர்ப்பந்தித்ததால், வேறு வழியில்லாமல், புரோகிதர் யாகத்தை ஆரம்பித்தார். துவஷ்டா சரியாக அத்யயனம் பண்ணாமல், சுவரம் மாற்றி மந்திரத்தை உச்சாரணம் செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவரம் மாறிப் போனதினாலே, 'இந்திரனை வீழ்த்தக் கூடிய பிள்ளை'' என்பது, 'இந்திரனால் வீழ்த்தப்படக்கூடிய பிள்ளை' என்று பொருள் மாறி ஒலித்தது.

அந்த யக்ஞத்தின் முடிவிலே விருத்திராசுரன் என்ற அசுரன் உண்டாகினான். அந்த விருத்திராசுரனை இந்திரன் தன் வஜ்ராயுதத்தினாலே கண்ட துண்டமாய் வெட்டி வீழ்த்தினான்!

அக்ஷரங்களைப் போலே சுவரங்களுக்குக் கூட அர்த்தம் உண்டு என்பதற்காக இக்கதையைச் சொன்னேன். தினம் தினம் ஒருவர் ஒரு கிரஹத்துக்குப் போகிறார். 'வாங்கோ!' என்று அவரை அழைக்கும் தொனியிலேயே அது 'வாங்கோ'வா, 'போங்கோ'வா என்று அர்த்தமாகிற தில்லையா- அது போல்தான்! லௌகிகத்தில் அர்த்தம் மாறுகிற மாதிரி வேதத்திலேயும் மாறுகிறது.

இவ்வளவு கடினமான வேதத்தை எல்லாரும் தரிக்க முடியுமா...? முடியாது என்பதால்தான் வேத வான்மயமான சஹஸ்ரநாமத்தைச் செய்திருக்கிறது. 'வேதம் போல, இவ்வளவு சுவர அமைப்போடு அதைச் சொல்லணுமா?' என்றால், சொல்ல வேண்டியதில்லை.

பீஷ்மர் வாக்கிலே வந்த சஹஸ்ரநாமம் சுலபமாய் உச்சாரணம் பண்ணக்கூடியது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11

ஒருத்தர் கை நீட்டி யாசிக்கிறார். பத்து ரூபாய் கேட்கும் அவருக்கு மற்றொருத்தர் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். 'ஆஹா! என்ன உதார ஹ்ருதயம்'னு கொடுத்தவரை நாம் கொண்டாடுகிறோம்.

இதை பகவான் கீதையிலே அப்படியே மாத்திட்டார்! 'என்கிட்டே கையை நீட்டிக் கேட்கிறீங்களே... என்ன உதார ஹ்ருதயம் உங்களுக்கு...' என்று கேட்பவரைச் சிலாகிக்கிறார்!

அவனிடத்திலே சென்று, அவன்தான் சர்வம் என்று உணர்ந்து, அவனைப் பார்த்துக் கை நீட்டுகிறவர்களை உயர்த்திச் சொல்கிறான் பகவான். 'இவர்கள் கேட்கா விட்டால் நான் யாருக்குக் கொடுப்பேன்?' என்கிறான்! வேறொருவர் கை நீட்டினாலொழிய கொடுப்பவருக்குப் பெருமை உண்டோ! அப்படிக் கை நீட்டுகிறவர்களை உதாரா: என்று கொண்டாடுகிறான் பகவான். அவனையே பற்றுதல் என்கிற அறிவை நமக்குத் தருகிறான். அந்த அறிவை உண்டாக்கும் தன்மையுடையவன் யார் என்று கேட்டால்... விச்வ சப்தத்தினால் அறியப்படுகிறவன்; சர்வத்திலும் இருப்பவன்; நமக்குச் சுலபமாய்க் கிடைக்கக் கூடியவன் - பரமாத்மா.

'அவன் ரொம்பப் பெரியவன்; அவன் கிட்டவே போக முடியாதுன்னு சொல்லி விட்டால், இந்த உபதேசம் எதற்கு... உபந்யாஸம் எதற்கு... எல்லாத்தையும் நிறுத்துங்கோ!' என்றுதான் சொல்லத் தோன்றும்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

ஆனால், எவ்வளவுதான் உயர்ந்தவனானாலும் அவன் திருவடியை அணுகிவிட்டால் நம்மிடத்திலே அன்பு கொண்டு ஓடி வருகிறான்.

'அகலில் அகலும் அணுகில் அணுகும்' என்கிறார் நம்மாழ்வார்.

ஒரு கப்பல் நிறைய அரிசி மூட்டை அடுக்கியிருக்கு. அதைச் சாப்பிட வருகிறது ஒரு காகம். சாப்பிட்டுக் கொண்டேயிருக்கையில் கப்பல் புறப்பட்டு நடுக்கடலுக்குப் போய்விடுகிறது. அதை உணர்ந்த காகம் கரைக்குத் திரும்பி விடலாம் என்று எண்ணி கிழக்குத் திக்காகப் பறக்கிறது. நெடுந்தூரம் பறந்தும் கரை தென்படவில்லை. இனிமேல் பறக்க சக்தியில்லைன்னு கப்பலுக்கே திரும்பி விடுகிறது காகம். சற்றைக்கெல்லாம் திரும்பவும் பறக்கிறது – மேற்குத் திக்கு நோக்கி... மீண்டும் திரும்புகிறது. இப்படியே நாலா திக்கிலும் பறந்து ஓடி, சோர்ந்து கப்பலுக்கே திரும்பிடறது!

நாம் அந்தக் காகம் மாதிரி. பரமாத்மா அந்தக் கப்பல் மாதிரி. 'நீ எங்கதான் போவே... எங்க போனாலும் இங்க தானே வரணும்...' என்று நாம் போவதைப் பார்த்துக் கொண்டு வாய் மூடி இருக்கிறான்!

ராமாயணத்திலே விபீஷண சரணாகதியை வர்ணிக்கும்போது, 'விபீஷணன் ராமனிருக்கும் இடம் சென்றான்' என்று சொல்லப்படவில்லை. 'ராமனிருக்கும் இடம் வந்தான்' என்றுதான் சொல்லி இருக்கிறது!

இதற்கு என்ன அர்த்தம்...? வர வேண்டிய இடத்துக்கு அவன் வந்து சேர்ந்து விட்டான் என்று அர்த்தம்.

நாமும் அப்படித்தான் பகவானை விட்டுச் சென்றவர்களாக இருக்கிறோம். அவனிடத்தில் சேர வழி அனைத்தையும் அவனே தான் காட்டிக் கொடுக்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதத்திலே புருஷ ஸூக்தமும் புராணங்களிலே விஷ்ணு புராணமும் பாரதத்திலே பகவத் கீதையும் தர்ம சாஸ்திரங்களிலே மனு ஸ்ம்ருதியும்

ரொம்ப உயர்ந்தவை என்று சொல்லப்படுகிறது.

அப்படிப்பட்ட புருஷ ஸூக்தத்திலே சொல்லப் படுபவன் தான் பரமாத்மா.

'புருஷ' என்கிற சப்தத்துக்கு நான்கு வித அர்த்தமிட்டார்கள்.

புரி சயனாத் புருஷ: புரி என்றால் சரீரம். நம் சரீரத்திலே இருக்கிறான் பகவான். கீதையிலே பகவான் குந்தி புதல்வனிடம் சொல்கிறார்: 'இதம் சரீரம் கௌந்தேய (குந்தி புதல்வ) க்ஷேத்ரம்' சரீரமே க்ஷேத்ரம்!

ஆகையினாலே ரொம்ப ஜாக்கிரதையாக அதைக் காக்க வேண்டும்.

இந்த சரீரம் எப்படிப்பட்டது...? அதிகாலை நாலுமணிக்கு எழுந்திருக்கும் வழக்கத்தை உண்டு பண்ணி விட்டால், எந்த ஊருக்கு நாம் போனாலும் இது நாலு மணிக்கு எழுந்து உட்கார்ந்து கொள்ளும்! நாம் எப்படி வளைக்கிறோமோ அப்படியெல்லாம் வளைந்து கொடுக்கும் நம் சரீரம்!

அதற்காக அதை எப்பாடு வேணுமானாலும் படுத்துவதா...?

பகவான் வாழும்படியான இந்த சரீரத்தை அழித்துக் கொள்ள நமக்கு உரிமை இல்லை. ரொம்ப ஜாக்கிரதையாக இதை ரக்ஷிக்கணும். சரீரத்தினுள்ளே ஆத்மா இருக்கிற தாலே அதை போஷித்து ரக்ஷிக்க வேண்டியுள்ளது.

ஒரு நல்ல பட்டு வஸ்திரம். துவைத்து உலரப் போட்ட வஸ்திரம். முள் புதரில் பறந்து போய் விழுந்து விடுகிறது. ஏகப்பட்ட முட்கள் சிக்கிக் கொண்டு நிற்கின்றன. பிடித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இழுத்தால் கிழிந்து விடும். முள்ளுக்கு நெருப்பு வைத்தால் மொத்தமும் போய்விடும்! அந்த நேரத்தில் என்ன வேண்டும் நமக்கு...? ரொம்பப் பொறுமை வேண்டும். பொறுமை இருந்தாலொழிய அந்தப் பட்டு வஸ்திரத்தை நாம் பெற முடியாது. நிதானமாக ஒவ்வொரு முள்ளி லிருந்தும் நீக்கி எடுக்க வேண்டும் அதை!

அந்த மாதிரி, இந்த ஆத்மா என்கிற பட்டு வஸ்திரம், சரீரமாகிற முள் புதரிலே அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. திடீர்னு அதை இழுத்துட முடியுமா...? ரொம்ப ஜாக் கிரதையாய், சாஸ்திரம் சொன்னபடி நின்று, சரீரத்தி லிருந்து ஆத்மா பிரியும்படியான அந்த உத்தமமான நிலையை, சாஸ்திர ரீதியாக நடத்தி வைக்க வேண்டும். கோணலான மார்க்கத்தில் போகக்கூடாது. ஏனென்றால் நமக்குள்ளே எம்பெருமான் இருக்கிறான் - புரி சயனாத் புருஷ:

விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே 'பூதாத்மா'ன்னு ஒரு நாமம் வருகிறது. பரம பவித்ரமான ஆத்மா, பாவனமான ஆத்மா... என்று இதற்கு அர்த்தம். அப்படிப்பட்டவன் நமக்குள்ளே இருக்கிறான்.

அப்படியானால் இயல்பான ஒரு சந்தேகம் வருகிறது. நமக்குத் தலைவலி வந்தால் அவனுக்கும் வருமா? ஒரே சளி பிடித்து மூக்கை அடைக்கிறது; அவனுக்கும் அடைக்குமா... நமக்கு ஏற்படும்படியான விசார, விகாரங்களெல்லாம் அவனுக்கும் உண்டா என்கிற கவலை வந்து விடுகிறது.

நமக்குள்ளே அவன் இருந்தாலும் இந்த சரீரத்துடன் சம்பந்தமில்லாமல்தான் இருக்கிறான்.

அப்படி அவன் இருக்கும்படியானது அவனுடைய அகடிதகடனா சாமர்த்தியம் என்பது! எல்லாம் வல்லவனான பரமாத்மாவுக்கு இது பெரிய விஷயமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபநிஷத் நம் சரீரத்தையே ஒரு மரமாகச் சொல்கிறது. (இதையே கீதையில் பதினைந்தாம் அத்தியாயத்திலும் பார்க்கலாம்) அந்த சரீர மரத்தின் இடது பக்கத்திலே நிறைய கிளைகள். அதிலே இரண்டு பக்ஷிகள் உட்கார்ந்திருக்கின்றன. ஒரு பறவைக்குத் திடமான இறக்கைகள் இருக்கின்றன. இன்னொரு பறவைக்கு அதெல்லாம் கிடையாது. இரண்டும் பக்கத்து-பக்கத்திலே தான் உட்கார்ந்திருக்கின்றன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த உடம்புக்கு ஏற்படக் கூடிய சுகம், துக்கம், ரோகங்கள் எல்லாம் இறக்கையில்லாத பறவை இருக்கே... அதுக்கும் பூரணமாய் ஒட்டிக் கொள்கிறது. ஆனால் அதன் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற பறவைக்கு எதுவும் ஒட்டிக் கொள்வதில்லை!

எவன் பரமாத்மாவை தியானம் பண்ணுகிறானோ அவன் இதைப்போல ஒன்றும் 'ஒட்டிக் கொள்ளாமல்' கதி அடைவான் என்பது பலசுருதி. (விளக்கம்)

இந்த விஷயத்தை குருகுலத்திலே, ஒரு கார்த்திகை மாசம் உபாத்யாயர் சொல்லிக் கொண்டிருந்தார்.

எல்லா மாணவர்களும் ஒரே மாதிரி இருப்பார்களா...? அதிலே ஒரு மாணவன் எழுந்தான். "ஆசார்யரே, இந்த விஷயத்தில் எனக்கு ரொம்ப பெரிய சந்தேகம்" என்றான். "இந்த மாதிரி இரண்டு பறவைகள். ஒரு பறவைக்கு மட்டும் ஒட்டும், இன்னொன்றுக்கு ஒட்டாதுன்னா நான் நம்ப மாட்டேன்..." என்றான்.

உபாத்யாயர் பார்த்தார். "நானா அப்படிச் சொல்கிறேன்? ஆயிரம் தாய் தந்தையருக்குச் சமானமாக நம்மிடம் அன்பு கொண்டிருக்கிற சாஸ்திரம் - வேதம் அல்லவா அப்படிச் சொல்கிறது! நீ விதண்டாவாதம் பண்ணலாமா...?" என்றார்.

"அப்படியே வேதம் சொன்னாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை! ஏதாவது ஆதாரம் காண்பிக்கணும் நீங்கள்... இல்லாவிட்டால் நான் நம்ப மாட்டேன்" என்றான் மாணவன்.

இன்னொரு குருவாக இருந்தால் மாணவனை அடித்திருப்பார். ஆனால் இவர் ரொம்ப சாத்வீகர். அடிக்கவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உட்காரு!" என்று மாணவனை அமர்த்தி விட்டார். "இப்ப நீ கேட்கிற விஷயம் எனக்குப் புரியவில்லை. அப்புறமா விளக்கறேன்..." என்றார்.

அன்றையிலிருந்து அந்தப் பையனுக்கு கர்வம் அதிகமாயிடுத்து. 'நான் கேள்வி கேட்டு ஆசார்யனுக்கு பதில் சொல்லத் தெரியலை...' அப்படின்னு ஒரு கர்வம்! எல்லோரிடமும் இதையே போய்ச் சொன்னான்!

குருவோ பொறுமைக்கு நிலைக்களனாய் இருந்தார்.

மார்கழி மாசம் வந்தது. திருப்பாவை இருபத்தேழாவது பாசுரம் படிக்க வேண்டிய நாள். அது எல்லோருக்கும் ரொம்பப் பிடித்தமான பாசுரம். ஏனென்றால் இரண்டாவது பாசுரம் மாதிரி அது விரதம் இருக்கச் சொல்வதில்லை; பாத்திரத்தின் மேலே ஒரு முழத்துக்கு நெய் மிதக்கிற மாதிரி சர்க்கரைப் பொங்கல் தயார் பண்ணி எல்லோரும் கூடியிருந்து அதை அனுபவிக்கச் சொல்கிறது! அந்த நெய் முழங்கை வழியே வழிந்து ஓட, அதை இன்னொருத்தர் ஏந்திக் கொள்ள, அவர் கையிலிருந்தும் வழிந்தோட மேலும் ஒருத்தர் கைநீட்டி ஏந்தணுமாம்...!

அப்படிப்பட்ட சர்க்கரைப் பொங்கல் அன்றைக்கு குருகுலத்திலே தயாரானது.

விதண்டாவாதம் பண்ணிய மாணவனை அழைத்து நிறைய சர்க்கரைப் பொங்கலை வாரிக் கொடுத்தார் குரு. அவனுக்கு ரொம்ப சந்தோஷம்! ஆசார்யரே கொடுக்கிறாரே! இன்னொரு கை எடுத்துப் போட்டார். 'நன்றாகச் சாப்பிடு' என்றார்.

திருப்தியாகச் சாப்பிட்ட அந்த மாணவனுக்கு, அந்த சர்க்கரைப் பொங்கலே ஞானத்தை உண்டாக்கியது!

அதை அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12

சர்க்கரைப் பொங்கல் உணர்த்தியது எப்படி?

விதண்டாவாதம் பண்ணிய சிஷ்யன் அதைச் சாப்பிட்டு முடித்தான். குரு, இன்னொரு சிஷ்யனை அழைத்தார். துளி சீயக்காய்ப் பொடி கொண்டு வரச்சொன்னார். முதலாமவனிடம் அதைத் தரச் சொன்னார். தானும் கொஞ்சம் வாங்கி வைத்துக் கொண்டார். "சீயக்காய்ப் பொடி போட்டு அவன் கையை நன்னா அலம்பிண்டு வரட்டும்... மற்றவர்களுக்கு அவன் சர்க்கரைப் பொங்கல் பரிமாறணும்..." என்றார்.

அவனும் சீயக்காயைப் போட்டு கையை நன்றாக அலம்பிக்கொண்டு வந்தான்.

ஆசார்யர் அவனை அழைத்து, தன் கையிலே இருந்த சீயக்காய்ப் பொடியைக் காண்பித்து, "கையை நீட்டு...: சீயக்காய்ப் பொடி போடறேன்" என்றார். அதற்கு அவன் சொன்னான்: "சுவாமி! கையிலே பிசுக்கில்லை. சுத்தமாகிவிட்டது. போதும், சீயக்காய் இனி வேண்டாம்."

அப்போது குருநாதர் சொன்னார்: "இது உன் கை பிசுக்குக்காக இல்லை; உன் வாயிலே, நாக்கிலே இருக்கிற பிசுக்கு போகறதுக்காகப் போடறேன்" என்றார். "கொஞ்சம் நாக்கிலே போட்டுத் தேயேன்..."

"நாக்கிலே ஒட்டிக்கலையே சுவாமி..."

"இப்ப அந்த வேத வாக்யம் உனக்குப் புரிகிறதா?" என்றார் குரு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"புரிஞ்சுடுத்தே! புரிஞ்சுடுத்தே" என்று மாணவன் கீழே விழுந்து விழுந்து சேவித்தானாம்!

ஒரு சின்ன, எளிய பதார்த்தம் நெய். நம் கையிலே ஒட்டிக்கொள்வது போல் நாக்கிலே ஒட்டிக் கொள்வதில்லை... அப்படி ஒட்டிக்கொண்டால் சீயக்காய்ப் பொடியைப் போட்டல்லவா தேய்க்க வேணும்...!

"ஒரு சாதாரண பதார்த்தமே இப்படி என்னும்போது, எல்லாவற்றையும் காத்து ரக்ஷிக்கிற அந்த சர்வேசுவரனுக்கு இந்த சக்தி இராதா? அவனை நாம் சாமான்யமாக எடை போடலாமா? 'வேதம் இப்படிச் சொல்கிறது' என்று சொன்னால், நான் ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று நீ சொல்வது பாவ்யமா?" என்று ஆசார்யர் சிஷ்யனைப் பார்த்துக் கேட்டார்.

"நான் ஒப்புக் கொண்டேன் சுவாமி!" என்றான் அவன்.

"இவ்வளவு தூரம் இதை வெளிப்படையாகக் காண்பித்துச் சொல்ல அவசியமில்லை. வேதம் சொல்கிறது என்றால் நாம் அதை அப்படியே நம்பலாம். ஏனென்றால் அதில் பொய்யான வார்த்தை எதுவும் இல்லை. பரமாத்மா எதிலும் ஒட்டிக் கொள்ளாமல், குண - தோஷங்கள் அற்றவனாக இருக்கிறான் என்பது வேதவாக்கு..." என்று விளக்கினார் ஆசார்யர்.

சூர்ய ரச்மி ஒரு நதியிலே விழுகிறது. அதே சூர்ய ரச்மி கோபுரத்திலே விழுகிறது; சாக்கடையிலும் விழுகிறது. அந்த இடங்களுடைய குண தோஷங்கள் சூர்ய ரச்மியில் ஒட்டிக்கொள்கிறதா என்ன...!

அதைப் போல்தான், எம்பெருமான் எங்கே யிருந்தாலும் அவன் இருப்பிடத்தின் குண தோஷங்கள் அவனிடத்தில் சேர்வதில்லை. அதனால்தான் அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூதாத்மா ஆகிறான். நமக்குள்ளே இருந்தாலும் நம்முடன் ஒட்டிக்கொள்ளாமல் இருக்கிறான்.

சஹஸ்ரநாம பாஷ்யத்திலே பராசர பட்டர் ரொம்ப அழகாக எழுதுகிறார். அதை இன்னொரு உபமானமாகச் சொல்லலாம்.

ஒரு பள்ளியிலே உபாத்யாயர் மாணவனிடம் 'வீட்டுப் பாடம் எழுதிண்டு வந்தாயா?' என்று கேட்கிறார். எல்லோரும் எழுதி வந்திருக்க, அவன் மட்டும் எழுதவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. நீளமான பிரம்பை எடுத்தார். இரண்டு கையையும் நீட்டச் சொன்னார். இந்தக் கையிலே ஆறடி; இன்னொரு கையிலே ஆறடி ஓங்கி அடித்தார். வலியிலே துடிக்கிறான் அவன். அடுத்த அடிக்குக் கையை நீட்ட அவனால் முடியவில்லை!

அடித்த அந்த பிரம்பு இருக்கிறதே... அதனுடைய சம்பந்தம் பள்ளி ஆசிரியருக்கும் உண்டு; பையனுக்கும் உண்டு. பிரம்பின் இந்த நுனியை அவர் பிடித்துக் கொண்டிருக்கிறார்; அந்த நுனி அவன் கையில் விழுகிறது. ஆனால் அடிக்கின்ற ஆசிரியருக்கு ஏதாவது நோவு, கிலேசம், கஷ்டம் என்பது உண்டோ...? இல்லவே இல்லை... ஆனால் அடிபடும்படியான மாணவன் துடிக்கிறான்!

அந்த மாதிரி, பரமாத்மா பிரம்பைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறான்! பரமாத்மா இருக்கிற இந்த சரீரம் என்பது பரமாத்மா இருக்கிற இடமாகவும் உள்ளது; ஆனால் கிலேசங்கள் எதுவும் அவனுக்கு இல்லை. இதைத்தான் புருஷ சூக்தம் தெரிவிக்கிறது. அப்படிப்பட்ட புருஷன்தான் விச்வ சப்தத்தினாலே சொல்லப்படுகிறான்.

சர்வ பதார்த்தங்களுக்குள்ளே அவன் இருந்தாலும் அவற்றுடைய குண தோஷங்கள் எல்லாம் ஒட்டிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ளாதவனாக அவன் இருக்கிறான். உத்தமோத்தமனான எம்பெருமானுடைய அந்தப் பெருமையைத்தான் 'புரிசயனாத்' என்றது.

அடுத்து பஹு தானத். கேட்கும் வரமெல்லாம் கொடுப்பான். வாரி வழங்குவான். மோட்சத்தையே கொடுப்பான். மோட்சத்தையே கொடுக்கும்படியான எம்பெருமான் இந்த லோகத்து சந்தோஷங்களையெல்லாம் கொடுத்து மோட்சத்தையும் கொடுப்பான்!

அதனால்தான் சாஸ்திரங்கள், 'அவனிடத்திலே போய் எதையும் கேட்காதே...' என்று நம்மை சிக்ஷிக்கின்றன. நாம் கேட்டால் ஏதாவது அல்பமான பொருளைக் கேட்போம். அவனோ வாரி வாரி வழங்கக் கூடியவன். அதனால், அவனிடத்திலே யாசிக்காதே; கட்டாயம் அவன் கொடுப்பான். பரிபூரணமாக விச்வாசிக்க (நம்ப) வேண்டும் அவ்வளவுதான்.

ஒரு சரித்திரத்திலே இந்த உண்மை தெரிகிறது.

குசேலர் பகவானைப் பார்க்க வருகிறார். பகவான் கிருஷ்ணன் பண்ணுகிற உபசாரத்திலே கூசிப் போய் உட்கார்ந்திருக்கிறார். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சிசுருஷை பண்ண, சாக்ஷாத் மகாலக்ஷ்மியே விசிறுகிறாள்.

சுற்றியிருப்பவர்கள், 'இந்த பிராமணன் ஜன்மாந்திரத்திலே என்ன புண்ணியம் பண்ணினானோ! இப்படி ஒரு யோகம் அனுபவிக்கிறாரே... மகாலக்ஷ்மியே விசிறுகிறாளே...' என்று ஆராய்ச்சியில் இறங்கி விட்டார்கள்!

குசேலரோ பிரமித்துப்போய் பிம்பம் மாதிரி, சிலை மாதிரி உட்கார்ந்திருக்கிறார்!

மஹாலக்ஷ்மி பகவானிடம் கேட்கிறார்: "இந்த பிராமணர் எந்தத் திக்கிலிருந்து வந்தார்...?"

In Public domain, Digitization Muthulakshmi Research Academy



யாராவது நம் வீட்டுக்கு வந்தால் 'இவர் எந்த ஊரிலிருந்து வந்தார்' என்று கேட்போம். 'கிழக்கா? மேற்கா?' என்று திக்கை யாராவது கேட்பாரோ...? மஹாலக்ஷ்மி கேட்கிறாள்!

கபட நாடக சூத்ரதாரியான பகவான் அவள் குறிப்பை நன்றாக உணர்ந்தான். உடனே இரண்டு கைகளையும் விரித்து, "இந்தப் பக்கம்..." என்று அழுத்தி ஜாடை காட்ட, அந்த திக்கை மஹாலக்ஷ்மி நோக்க, அஷ்ட ஐஸ்வர்யங்களும் போட்டி போட்டுக் கொண்டு அந்த திக்கை நோக்கிப் போயினவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூத்ரதாரியான பகவான் அவள் குறிப்பை நன்றாக உணர்ந்தான். உடனே இரண்டு கைகளையும் விரித்து, "இந்தப் பக்கம்..." என்று அழுத்தி ஜாடை காட்ட, அந்த திக்கை மஹாலக்ஷ்மி நோக்க, அஷ்ட ஐஸ்வர்யங்களும் போட்டி போட்டுக் கொண்டு அந்த திக்கை நோக்கிப் போயினவாம்.

இரவெல்லாம் நண்பர்கள் கிருஷ்ணனும் குசேலனும் பழைய கதைகள் பேசி மகிழ்ந்தார்களாம். விடிந்து எழுந்ததும் குசேலருக்குப் போகவும் மனமில்லை. கிருஷ்ணனுக்கு அனுப்பவும் மனமில்லை. ஆனால் புறப்பட்டாயிற்று.

ஒரு ரூபாயாவது தட்சணை கொடுக்க வேண்டாமோ...? ஒன்றும் கொடுக்கவில்லை பகவான்.

குசேலர் தம் வீட்டை நோக்கி வருகிறார். 'சின்ன வயதிலே நடந்ததையெல்லாம் கண்ணன் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தானே' என்று நினைத்த வண்ணம் வரும்போது, நூறு வேத வித்துக்கள் எதிரே பூரண கும்பத்தோடு நின்றார்கள்.

குசேலர் பின்னால் திரும்பிப் பார்க்கிறார், 'பூரண கும்ப மரியாதைக்குரிய பெரியவர் யாரேனும் வருகிறார்களா?' என்று.

"சுவாமிக்குத்தான்" என்கிறார்கள் வேத வித்துக்கள். பூரண கும்பத்தைத் தொட்டுவிட்டு ஊருக்கு உள்ளே போகிறார். 'இந்த ஊரா...?' என்று சந்தேகம் வந்து விடுகிறது அவருக்கு... குடிசையைத் தேடுகிறார். தேவேந்திர பவனம் போல், ஒரு பவனத்திலிருந்து ராணி வந்து அவரை சேவிக்கிறாள். அட்சதைத் தட்டு நீட்டப் படுகிறது.

தர்மபத்தினியின் பெயர் சுட்சாமா - பசியினால் ஒடுங்கியவள் என்று அர்த்தம்!

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

அட்சதையை எடுத்து சுட்சாமாவுக்குத் தூவி, "தீர்க்க சுமங்கலி பவ!" என்று ஆசீர்வதிக்கிறார் குசேலர்.

பத்தினி பதறுகிறாள். "சுவாமி! இப்படிச் சொல்லலாமா...?" என்கிறாள்.

'தீர்க்க சுமங்கலி' என்று சொன்னால் அது என்ன தப்பான ஆசியா...? கிடையாது! ஆனால் கணவன் தன் பத்னியை அப்படி ஆசி பண்ணக் கூடாது. அது தன் தலையிலேயே அட்சதையைப் போட்டுக்கற மாதிரி! இந்த சின்ன சாஸ்திரம் குசேலருக்குத் தெரியாதா? 64 நாளில் 64 சாஸ்திரத்தை கிருஷ்ணனுடன் சேர்ந்து பயின்றவராயிற்றே... அவருக்குத் தெரியாமல் இருக்குமா... தெரியும்! ஆனால் வந்து நமஸ்கரித்தவள் யாரோ ராணி என்று நினைத்துக் கொண்டு விட்டார்!

மஹாலக்ஷ்மி கடாக்ஷம் வேண்டும் என்று குசேலர் கேட்டாரா...? இல்லை! ஆனால் எப்படிப்பட்ட ஐஸ்வர்யம் கிடைத்தது!

அப்படிக் கொடுப்பதுதான் அவன் குணம். **பகுதானாத் புருஷ:** அவன் கொடுக்க ஆரம்பித்துவிட்டால் நம்மாலே தாங்கவே முடியாது!

புராணத்வாத் புருஷ: புராணம் என்றால் ரொம்பப் பழமையானவன். பழமையிலேயே புதுமையானவன்! அவனுடைய ஆதி எது என்று நமக்குத் தெரியுமா?

பூர்ணத்வாத் புருஷ: 'எல்லாம் நிறைவானவன். குறைவே இல்லாது சர்வமும் நிறைந்து விளங்கக் கூடியவன்' என்று அழகான இந்த புருஷ சப்தத்துக்கு நான்கு பொருள் சொன்னார்கள்.

விச்வ சப்தத்தினாலே சொல்லப்படக்கூடிய புருஷனாகிற அந்த எம்பெருமானை ஆச்ரயித்து (வணங்கி) எல்லோருமே ஜீவிக்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13

பகவானுக்கும் நமக்கும் ஒன்பது வித சம்பந்தம் என்று சாஸ்திரத்திலே சொல்வார்கள். அதில் ஒன்று பதி-பத்னி பாவம். அவன் பதி; நாமெல்லாம் பத்னி. கோபிகாஸ்த்ரீகள் வெளிப்படுத்தியது இந்த பாவம். பரமாத்மா வேணுகானம் பண்ணியபோது, குழந்தைக்கு தலைபின்னிக் கொண்டிருந்தவர்களும், பர்த்தாவுக்கு சிசுருஷை செய்து கொண்டிருந்தவர்களும், மாடு கன்றைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களும் தங்கள் காரியங்களை விட்டுவிட்டு அவனிடத்திலே போய்விட்டார்கள்.

பகவான் அவர்களிடத்திலே கேட்டான்: "இப்படி பர்த்தாவை விட்டுட்டு ஓடி வந்துவிட்டீர்களே, இது தோஷமில்லையா...?"

கோபிகாஸ்த்ரீகள் வெட்கத்தில் தலை குனிந்து காலால் பூமியைக் கீறினார்கள். "விச்வாத்மா இல்லையா நீ? எல்லோருக்கும் பதி அல்லவா நீ? அது எப்படி தோஷமாகும்?" என்றார்கள்.

இங்கேயிருந்து ஒரு கணவன்-மனைவி திருவல்லிக்கேணி போனார்கள். இரண்டு பேரும் பகவானைப் பார்த்து, கைகூப்பி சேவிக்கிறார்கள். பத்னி உரத்த குரலில் அந்த பார்த்த சாரதி பெருமானைப் பார்த்து, 'என் பதியே, விச்வஸ்ய பதியே! உன்னைவிட்டால் கதி ஏது...!' என்று கதறுகிறாள். அவள் பக்கத்திலே நிற்கும் கணவனுக்குக் கோபம் வருகிறதா என்றால், இல்லை!...

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

ஸ்த்ரீ-புருஷ பேதமெல்லாம் சரீரத்துக்குத் தானே யொழிய ஆத்மாவுக்கு உண்டோ! எனவே எல்லோரும் அவனைப் பதியாக மதிக்கும்படியான இந்த பாவம்...

ஸ்த்ரீகள் அவனைப் பதியாக பாவிப்பது போலவே, நிகரான பக்தியுடன் ஆண்களும் அவன் கையைப் பிடித்துக் கொள்ளலாம். ஆத்மா அவன், ஜோதி அவன் - விச்வ சப்தத்தினாலே அறியப்படுகின்ற நாராயணன் அவன்.

விச்வருபனானவன் எம்பெருமான் என்று பார்த்தோம். விச்வ சப்தத்தினாலே பத்து அவதாரங்களும் பேசப்படுகின்றன. இந்த அவதாரங்கள் எல்லாமே பின்னால் சஹஸ்ரநாமத்திலே வருகின்றன.

'வேதத்தை மீட்க பரமாத்மா மத்ஸ்யாவதாரம் பண்ணினான். அப்போது விச்வத்தினாலே வேதங்கள் மீட்கப்பட்டன.' என்ற பொருள்பட சுலோகம் இருக்கிறது. இதிலே 'விச்வம்' என்ற சொல் மத்ஸ்ய ரூபியைக் குறிக்கிறது. நம்மைக் காட்டிலும் பகவான்தான் அதிகமாக வேத சம்ரக்ஷணம் பண்ணுகிறான். நாம் பண்ணுவது ரொம்பக் குறைவு. பகவான் இப்படி ஏன் வேதத்தை ரக்ஷணம் பண்ணுகிறான்? ஏனென்றால் வேதம் அழிந்துவிட்டால் அவனை நாம் உணர முடியாது.

'வேதம் இருக்கிறது என்றால் பரமாத்மா இருக்கிறான்... வேதம் இல்லை என்றால் பரமாத்மா இல்லை!' என்பது சாஸ்திரம் சொல்லும் உண்மை. சாஸ்திர அறிஞர்கள் சொல்கிறார்கள்.

இதிலே முதல் பகுதியை எல்லோரும் ஒப்புக் கொள்வோம். வேதம் இருக்கிறது என்றால் பரமாத்மா இருக்கிறான். ஆனால் 'வேதம் இல்லை என்றால் பரமாத்மா இல்லை' என்று எப்படிச் சொல்லலாயிற்று? இந்த உலகத்திலே வேத பாராயணமே யாரும் பண்ணுவதில்லை;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போ பரமாத்மாவே இல்லைன்னு சொல்லி விட முடியுமா? இதன் பொருள் என்னவென்றால், "வேதம் இருந்தால்தான், அதன் மூலமாக பரமாத்மாவை நாம் உணர முடியும்."

வேதம்தான் பரம ப்ரமாணம் அதனால்தான், நம் மீது எல்லையில்லாக் கருணைகொண்ட பகவான், அவனை நாம் உணரும் பொருட்டு, அதைத் தன் ஹ்ருதயத்திலே தரித்துக் கொண்டிருந்தான். சிருஷ்டியிலே மீண்டும் அதை உபதேசம் பண்ணினான். பிரளயத்திலேயும் கூட சகலத்தையும் தாங்குகிறவன் அவன்.

'ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து ஓர் ஆலிலைச் சேர்ந்தவன் ஒரு வடபத்ரசாயி...

ஒரு சின்ன ஆலந்தளிரிலே, எல்லாவற்றையும் விழுங்கின விச்வம் என்று சொல்லக்கூடிய பரமாத்மா படுத்துக் கொண்டிருக்கிறான்!

இதைக் கேட்கிற நமக்கெல்லாம் என்ன சந்தேகம் வரும்? ஒரு சின்ன ஆலந்தளிர் அவ்வளவு பளுவான வஸ்துவைத் தாங்க முடியுமா?

அந்தத் தளிரா அவனைத் தாங்குகிறது? அதையும் சேர்த்துத் தாங்குகிறவன் அவன்தானே!

ஆகையினாலே, பரமாத்மா இளந்தளிரிலே படுத்திருப்பதைப் பார்த்தால், அவன்தான் சகலத்தையும் தாங்குபவன் என்பதை நேரே, நமக்குள்ளேயும் காட்டிக் கொடுக்கும்படியாக அந்தக் காட்சி இருக்கிறது.

அதுதான் அகடிதகடான சாமர்த்தியம்! அகடிதம் என்றால், 'பண்ண முடியாதது.' பண்ண முடியாததையும் பண்ணிக் காட்டக் கூடியவன் பரமாத்மா. அதற்கு சாட்சியாய் பிரளய காலத்திலே அந்த இளம் ஆலந்தளிரிலே படுத்திருக்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்க்க சாஸ்திரத்திலே, தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை ஆதாரமா? என்று ஒரு வாதம் எழுந்தது.

இந்த தொன்னைக்கே ஒரு சிறப்பு. அதைத் தைக்கிறதே ஒரு கலை. அந்தக் கலையைத் தெரிந்து வைத்துக் கொண்டவன் 'பாதி வாத்தியார்' என்று சொல்வார்கள். ஏனென்றால் ஹோமம் பண்ணுவதற்கான நெய்யை தொன்னைகள் தைத்து, அதிலேதான் வைத்துக்கொள்வது. அதைச் சரியாய் தைக்காமல் போனால் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து, நெய் கொட்டிவிடும்!

சரி, இப்படி யக்ஞத்துக்குத் தேவையான நெய்யைத் தாங்குகிறதே, அந்த தொன்னை... ஒரு பெரிய தொன்னை - அதில் நிறைய நெய்... இவற்றிலே எது, எதைத் தாங்குகிறது? என்பது சர்ச்சை.

சர்ச்சையிலே ஒருத்தர் சொன்னார்: "பிரத்யக்ஷம் பிரமாணம்' - நேரே நாம் கண்ணால் பார்க்கிறோமே... அந்த நெய், தொன்னையிலே வைக்கப்படுவதினாலே, தாங்குவது தொன்னை; தாங்கப்படுவது நெய்..." என்றார்.

சிலர் இவருடைய கருத்தை மறுத்து விட்டார்கள். "தாங்குவது தொன்னை இல்லை; தாங்குவது நெய்; தாங்கப்படுவது தொன்னை... நெய்யினால் தொன்னை தாங்கப்படுகிறது..." என்றார்கள்.

இது பிரத்யக்ஷத்துக்கு (கண்ணால் பார்ப்பதற்கு) விரோதம். ஆனால் சாஸ்திர திருஷ்டியாக அவர்கள் சொல்கிறார்கள். அதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எப்படி?

என்ன நடக்கிறது அவ்விடத்திலே...? ஹோமம் நடக்கிறது. ஹோமம் என்கிற காரியத்துக்குத் தொன்னை வேணுமா? நெய் வேணுமா? நெய்தான்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெய்யானது, தொன்னைக்கு உயர்த்தியை உண்டு பண்ணுகிறது. அவ்வாறு உண்டு பண்ணுவதாலே நெய்தான் தொன்னையைத் தாங்குகிறது. இதை யாராவது 'இல்லை' என்று சொல்ல முடியுமா?

தர்க்க சாஸ்திரத்தினாலே இப்படி 'இருக்கு' என்பதை 'இல்லை' எனப் பண்ணிவிடலாம். 'இல்லை' என்பதை 'இருக்கு' என்றும் ஆக்கிவிடலாம்! தர்க்க சாஸ்திரத்திலே ஒருவனுக்குச் சாமர்த்தியம் இருந்துவிட்டால் அவனால் சாதிக்க முடியாததே கிடையாது!

அஹோபில மடத்தின் நாற்பத்திரண்டாவது குரு ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஒரு கதை சொல்லுவார்:

வியாகரணம், ஜோதிஷம், தர்க்கம் என்று எல்லாவற்றையும் கற்ற நிபுணர் ஒருவர். அவர் தன்னைப் போலவே எல்லா சாஸ்திரங்களையும் ஒரே நபருக்குச் சொல்லித் தருவது கஷ்டம் என்று முடிவுக்கு வந்தார். தர்க்க சாஸ்திரத்தை ஒருவனுக்கும், ஜோதிஷத்தை வேறு ஒருத்தனுக்கும், வியாகரணத்தை இன்னொருவனுக்கும் சொல்லிக் கொடுத்தார்.

வியாகரணம் படிப்பவன் வந்தால் பல்லைத் தேய்த்துக் கொண்டே அவனுக்குப் பாடம் சொல்லித் தருவாராம். அவன் அப்படியே, பாவம்! அதை எழுதிக் கற்றுக் கொள்வான்.

ஜோதிஷம் கற்றுக் கொள்பவன் வந்தால் துணிகளைத் துவைத்தபடி பாடம் நடத்துவாராம்!

தர்க்க சாஸ்திரம் படிக்க வருகிறவனை மட்டும் பக்கத்திலே உட்கார வைத்துக் கொண்டு, அவன் தொடையைப் பிடித்து இழுத்துச் சொல்லித் தருவாராம்!

இதை குரு பத்னி பார்த்துக் கொண்டிருந்தாள். 'இரண்டு பேருக்கும் உதாசீனமாகச் சொல்லித் தருகிறார்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்க்கத்தை மாத்திரம் இழைச்சு இழைச்சு சொல்லித் தருகிறாரே?' என்று மனசிலே தோன்ற, அவரிடமே கேட்டாள்.

"சுவாமி! எல்லா சாஸ்திரங்களும் நமக்குக் கண்ணே போன்றவைதானே! ஒரு சாஸ்திரம் இல்லையென்றால் நம்மால் ஜீவிக்க முடியுமா? அப்படியிருக்கும்போது உமக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை? பட்சபாதம்? இது பாவ்யமா...?"

"உனக்கு நான் சொன்னால் தெரியாது. நாளைக்குக் காட்டறேன்..." என்று பதில் சொன்னார் குரு.

"நாளைக்குக் காட்டறதா?"

"நான் காட்டப் போவதில்லை. நீயே உன் செயலாலே தெரிந்து கொள்வாய்..."

மறுநாள் 'குருவின் காதிலே ஓர் ஓணான் புகுந்து விட்டது; அதனால் அவர் மாண்டு விட்டார்...' என்று ஒரு வாக்கியத்தைப் பத்னிக்குச் சொல்லிக் கொடுத்து, அதை மூன்று மாணவர்களிடத்திலும் சொல்லச் சொன்னார்.

வியாகரணம் படிக்கிறவன் வந்தான். அவனிடம் குரு பத்னி இதைச் சொன்னபோது, அவள் சொன்ன வாக்கியத்தின் இலக்கணத்திலே அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது... உடனே அதைச் சரி பார்க்க நூல்களைத் தேடிப் போனான்.

ஜோதிடம் படிக்கிறவனிடமும் அதையே சொன்னாள். அவனோ 'சனி தசையானால் நீங்கள் சொல்வது போல் நடக்கக் கூடும். குருதசையிலே நடக்காதே...' என்று குருவினுடைய ஜாதகத்தைத் தேடிப் பார்க்கப் போய்விட்டான்.

இத்தனையும் கேட்டபடி, குரு சமையலறையிலே, மறைவிலே இருந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றாவதாக, தர்க்கம் படிப்பவன் வந்தான். அதே விஷயத்தை குரு பத்னி அவனிடம் சொன்னதுதான், தாமதம் ''அசம்பவம்!'' என்றான் அவன். ''நீங்கள் சொன்னது நடந்திருக்க முடியாது...!''

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"குருவினுடைய காது துளை சிறியது. ஓணான் அவர் காதுக்குள்ளே எப்படி நுழையும்? நீங்கள் சொல்வது மாதிரி ஒரு வேளை ஓணான் நுழைந்து குரு மாண்டு போய் விட்டார் என்றே வைத்துக் கொள்வோம், இப்படி நீங்கள் சிரித்தபடி என்னிடம் பேசுவீர்களா? நித்தியம் கணவன் - மனைவி சண்டை நடக்கும் ஒரு கிரஹத்திலே கூட பர்த்தா மாண்டு போனால் பத்னி அழுவாள். நீங்களோ அழாமல் சிரித்தபடி இருக்கிறீர்கள்... ஆசார்யரே, என்னைப் பரீட்சை பண்ண வேண்டாம்; வெளியே வாருங்கள்!" என்றான் தர்க்க சாஸ்திர மாணவன்.

"சத்சிஷ்யனே!" என்று ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டார் குரு. "இப்போ புரிகிறதா தர்க்க சாஸ்திர மகிமை..." என்று பத்னியைப் பார்த்துக் கேட்டார்.

இடம் பொருள் ஏவல் அறிந்து பேசும்படியான புத்தி கூர்மை தர்க்க சாஸ்திரத்தைப் படிப்பவருக்கு அமைகிறது. இப்படிப்பட்ட தர்க்க சாஸ்திரம் சொல்வதுதான் தொன்னைக்கு நெய் ஆதாரம் என்கிற உண்மை.

'ஆலிலைக்கு பகவான் ஆதாரமா? பகவானுக்கு அது ஆதாரமா?' என்றால் பகவானே விச்வமாக இருக்கிறபோது அதில் ஒரு துளிதானே ஆலிலை... அதையும் சேர்த்து அல்லவா தாங்குகிறான் என்று ஆகிறது? இப்படி தர்க்க வாதத்திலே முடிவு கிடைக்கிறது. ஆனால் அந்த தர்க்கத்தையும் தாண்டி நிற்கக் கூடிய விச்வபதி அவன். ஆலிலை அவனைத் தாங்குவதாகத் தோன்றுகிறது. ஆனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலிலையோடு, விச்வத்தையும் அதிலுள்ள வேதங்களையும் சேர்த்து அல்லவா பகவான் தாங்கிக் கொண்டிருக்கிறான்?

எனவேதான் வேதங்களைக் காப்பாற்ற அவன் எடுத்த மத்ஸ்யாவதாரம் விச்வம் என்கிற சப்தத்தினால் அறியப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14

கூர்மாவதாரமும் விச்வ சப்தத்தினாலே அறியப்படுகிறது. கூர்ம ரூபதாரியான விச்வம்.

கூர்மமாக (ஆமையாக) அவதாரம் பண்ணி, மந்த்ர பர்வதத்தைத் தாங்கிப் பிடிக்கிறான். தேவாசுரர்கள் கடைகிறார்கள். அந்தக் காட்சியை மஹரிஷிகள் பார்க்கும்போது தேவாசுரர்கள் அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. பகவானே கடைவதாகத்தான் தெரிகிறது. அவ்வளவு சிரமப்பட்டுக் கடைகிறானாம்... வியர்வை யெல்லாம் கொட்டுகிறதாம் அவனுக்கு...!

இந்தக் காட்சியை திருமங்கையாழ்வார் வியந்து பாடியிருக்கார்.

எதற்காக இந்தச் சிரமம்? ஏன் இப்படிக் கடைய வேண்டும்?

உலகத்திலே வேறொருத்தருக்காக ஒரு காரியம் பண்ணுவதென்றால் அது ஒரு மாதிரி... ஆனால் அதையே தனக்காகப் பண்ணிக்கொள்வது என்றால் அதிலே ஒரு அவசரம் இருக்கும். மற்றவருக்காகப் பண்ணக்கூடியதை 'அடுத்த மாசம் பண்ணிக்கலாம்' என்பவர் கூட, அதில் தனக்கொரு லாபம் இருந்தால் 'இப்பவே பண்ணிடலாமே...' என்பார்! அதைத்தான் செய்தான் பரமாத்மா!

பரமாத்மாவுக்கு என்ன லாபம்...?

தேவதைகள் அமுதுண்ண, அந்த அமுதில் வந்த பெண்ணமுதுண்டான் பரமாத்மா, தேவர்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமிர்தத்தைக் கொடுத்துவிட்டு, அந்த அமிர்தத்துடன் வந்த மஹாலக்ஷ்மியை, தான் அடைந்தான்.

லக்ஷ்மியை அடைவதற்கு பரமாத்மா பரிசிரமப் பட்டான். அந்தக் கூர்மாவதாரத்திலே அவன் லக்ஷ்மியோடவே காட்சி தந்தான். அவ்வாறு ஸ்ரீயோடு (லக்ஷ்மியோடு) விளங்கும்படியான அவதாரமானவன் - கூர்மரூபதாரி - அவன் யார் என்றால், அவனே விச்வம்.

'பேராயிரமும் திருவும் பிரியாத நாராயணன் அருள்பெற்ற நாம்' என்கிறார் சுவாமி தேசிகன். பரமாத்மாவானவன் ஆயிரம் திருநாமங்களையும் மஹாலக்ஷ்மியையும் பிரியாதவன்.

மஹாவராஹ: விச்வாத்மா! விச்வத்துக்கெல்லாம் அந்தராத்ம ரூபியாய் இருக்கக்கூடியவன் மஹா வராஹ (பன்றி) ரூபியாய் அவதாரம் பண்ணிய அதே பரமாத்மாதான்.

விச்வத்துக்கு அந்தராத்மா அந்த வராஹப் பெருமாள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. வராஹ அவதாரத்தை மட்டும் 'விச்வாத்மா' என்று சொல்வது வழக்கம். எல்லார் க்ஷேமத்தையும் உத்தேசித்து, பேசிய அவதாரம் இந்த அவதாரம். அதனாலே இது எல்லாவற்றைக் காட்டிலும் பெரியது. வெண்பா பாடுவதிலே வல்லவரான பொய்கையாழ்வார், 'பிரான் உன் பெருமை பிறரார் அறிவார்!' என்று பாடியிருக்கிறார்.

'இந்த ஆழ்வாருக்கு என்ன கர்வம்! அவர் ஒருவர்தான் பகவானின் பெருமை உணர்ந்தவரா? இவ்வளவு கர்வமாய் அவர் பேசுவது பாவ்யமா' என்றெல்லாம் கேட்கத் தோன்றும். 'கர்வப் பேச்சு பிறருக்கு உபதேசம் ஆகுமா...?' என்று சந்தேகம் வரும்.

ஆனால் ஆழ்வாரின் சாத்வீக பாவம்தான் இதில் தெரிகிறது. ஏனென்றால், 'உன்னைத் தவிர உன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமையை யார் முழுதும் அறிவார்' என்பதுதான் அதன் பொருள்.

ஸ்ரீ கூரத்தாழ்வானோ, மஹாலக்ஷ்மியிடம், 'அம்மா உன் பெருமையை உன் வல்லபனான நாராயணன் கூட உணர மாட்டான்; ஏன் நீயே உணர மாட்டாய்' என்று பாடுகிறார்!

உலகத்திலே திரிவிக்கிரம அவதாரம்தான் மிகப் பெரிது என்று நாம் நினைக்கிறோம். லோகமெல்லாம் அளந்து நின்றானே, அந்த பிரும்மாண்ட ரூபத்தைத்தானே எல்லோரும் பெரிது என்று கொண்டாடுவோம்...! ஆனால் அந்த திரிவிக்கிரம அவதாரத்தை விடப் பெரியது வராஹ அவதாரம் என்பது யோசித்தால் புரியும். அதனால்தான் 'உன் பெருமையை யாரும் உணர முடியாது' என்று அவ்வவதாரத்தைப் பாடுகிறார் ஆழ்வார்.

வராஹ அவதாரம் எப்படி மற்றவற்றைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததாகிறது?

எந்த உலகத்தை அளப்பதற்குப் பரமாத்மா திருவடியைத் தூக்கி வைத்தானோ, அதே உலகமானது இந்த வராஹ அவதாரத்திலே பகவானின் மூக்கிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது! ஏதோ சிறு அழுக்கு போல் துளியூண்டு ஒட்டிக் கொண்டிருக்கிறது! உலகையே மூக்கின் மேலே தரிக்கிறான்!

அதனால்தான் ஆண்டாள் சொல்கிறாள்:

பாசிதூர்த்துக் கிடந்த
பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா
மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர்
திருவரங்கச் செல்வனார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பேசியிருப்பனகள்
　　பேர்க்கவும் பேராவே.

மானமிலாப் பன்றியாம்! அப்படியென்றால் என்ன...?

'வெட்கத்தை விட்டு, பகவான் நாராயணன் பன்றியாக அவதாரம் பண்ணினான்...' என்று வியாக்கியானம் (விளக்கம்) சொன்னார் ஒருத்தர்! சொல்லலாமா அப்படி...? 'மானமிலா' என்றால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அளவில்லாத' 'எவ்வளவு பெருமையுடையது என்று நிர்ணயிக்க முடியாத...' என்று அர்த்தம். அப்படிப்பட்ட மஹாவராஹம் அது! தாமரை புஷ்பம் போன்ற அதன் திருநேத்திரங்களே (கண்களே) அது நாராயணன் ஸ்வரூபம் என்று 'கோள்' சொல்லிக் காட்டிக் கொடுத்து விடுகின்றன!

அந்த வராஹ அவதாரிதான் விச்வாத்மா - ஜகத்துக்கெல்லாம் தலைவன்!

நான்கு வேதங்களையும் நான்கு தமிழ்ப் பிரபந்தங் களாக மாற்றிக் கொடுத்த நம்மாழ்வார், திருவிருத்தம் என்கிற முதல் பிரபந்தத்தை முடிக்கிற சமயத்திலே வராஹ மூர்த்தியைத்தான் தியானம் பண்ணுகிறார். 'அந்த வராஹ மூர்த்தியை விட்டால் நமக்கு வேறு கதி ஏது?...' என்கிறார்.

எப்படி, எந்த வகையிலே உயர்ந்தது இந்த அவதாரம்?

விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே பிற்பகுதியில் 'மஹா வராஹோ கோவிந்த:' என்று வருகிறது. அதையேதான் சஹஸ்ரநாமத்தின் ஆரம்பத்தில் வரும் விச்வ சப்தமும் சொல்கிறது.

ஹிரண்யாசுரனை சம்ஹாரம் பண்ணிய பரமாத்மா, பூமி பிராட்டியை எடுத்துக்கொண்டு, மேலே வருகிறான். கண்களை உருட்டுகிறான்; சப்தித்துக் கொண்டு வருகிறான். பூமி பிராட்டி அந்த நேரத்திலே அழுது கொண்டி ருக்கிறாள்!

பகவானுக்கு ஒரே வருத்தம்! 'காப்பாற்றுகிற நேரத்திலே அவள் அழுது கொண்டிருக்கிறாளே! உலகில் யாராவது கிணற்றில், பள்ளத்தில் விழுந்தவர்களைத் தூக்கிவிட்டால் அழுவார்களா...? தூக்கிவிட்டவர்களைக் கொண்டாடி மகிழ்வதல்லவா வழக்கம். பிராட்டி இப்படி ஏன் அழுகிறாள்...?'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நீ சந்தோஷப்பட வேண்டிய நேரத்திலே இப்படி அழலாமா?" என்று கேட்கிறார் பகவான்.

அதற்குப் பிராட்டி கேட்கிறாள்: "நான் கூக்குரலிட்டு அழுதபோது ஓடோடி வந்து ரக்ஷித்தீர்கள். நான் உங்கள் பார்யை (மனைவி), சிஷ்யை, பத்னி என்பதால் வந்தீர்கள். இந்த பூமியிலே இருக்கிற ஜீவன்கள் கூப்பிட்டால் வருவீர்களா? என்னை ரக்ஷித்த மாதிரி இவர்களை ரக்ஷிப்பீர்களா...?" என்று கேட்கிறாள்!

எத்தனை வித ரூபங்களில் பகவான் வந்தாலும் அவன் பேசுகிற பேச்சிலே மாற்றம் கிடையாது. பூமி பிராட்டிக்குப் பதில் சொன்னான் பரமாத்மா.

"ஒருத்தனுக்கு மனம் தெளிவாக, அலைபாயாமல் விகாரமில்லாமல் இருக்கிறபோதே - சின்ன வயதிலேயே மனத்தில் காமம் புகாத நிலையிலே, இந்திரியங்கள் சரியாக இயங்கும் நிலையிலே, என்னுடைய விச்வரூபத்தை எவன் உணர்கிறானோ, என் திருவடியிலே எவன் ஒரு புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை பண்ணுகிறானோ, எவன் என் திருநாமத்தை வாய்விட்டு உரக்கச் சொல்கிறானோ, என் திருவடியிலே எவன் ஆத்ம சர்ப்பணம் பண்ணுகிறானோ... அவன் அழைக்கும் போது நான் ஓடோடி வருவேன்..."

அந்திம காலம் என்பது மனிதர்களுக்கு எப்படி இருக்கும்... கல் கட்டைமாதிரி விழுந்து கிடக்கும் நிலை வந்து விடும். அப்போது சரணாகதி பண்ண முடியுமா? சுற்றம் அவனைச் சூழ உட்கார்ந்து, 'சொல்லு, சொல்லு, நீ பொருள் வைத்திருக்கிறாயா? சொல்லு...' என்று கேட்டுத் துளைக்கும்.

அவன் இதற்குப் பதில் சொல்வானா? இல்லை 'நாராயணா!' என்று பகவான் நாமத்தைச் சொல்லுவானா? இத்தனை நாள் ஓடி உழைத்துப் பொருள் தேடியும் அதை எங்கே வைத்தோம் என்று அவனுக்கு நினைவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரவில்லையே... அந்தச் சமயத்திலே பகவான் திருப்பெயரை அவன் எப்படிச் சொல்வான்...?

ஆகையினாலேதான், அதற்கு முன்பே மனத்திலே எம்பெருமானை பிரதிஷ்டை பண்ணி, அவன் திருவடியிலே பக்தியாகிற புஷ்பத்தை இட்டு வணங்க வேண்டும். ஏனென்றால் அந்திம காலம் என்பது ஒவ்வொருத்தருக்கும் கட்டாயம் உண்டு. அது நமது கட்டுப் பாட்டிலே இல்லை...

ஒருவர் தம் மனைவியிடம் குடிக்க தீர்த்தம் கேட்டார். அவள் கொண்டு தருவதற்குள் காலமாகி விட்டார்! சடங்குகளெல்லாம் நடந்து அவரை எடுத்துச் செல்ல சித்தமானபோது, திடீரென்று உயிர் திரும்பியது போல் கண்விழித்து, 'நான் எங்கே இருக்கேன்? இங்கே என்ன நடக்கிறது...?' என்று கேட்டார்!

எனவே, உயிர் போவதும் வருவதும் நம் கட்டுக்குள் இல்லை என்பதாகிறது.

அதனால்தான் இளமையிலேயே பகவான் நாமாவைச் சொல்ல வேண்டும் என்கிறான். என் திருவடியில் ஆத்ம சமர்ப்பணம் பண்ணினவனைக் கைவிடேன் என்கிறான். 'அவ்வாறு செய்பவன் என் பக்தன்; அவனை நான் ஒரு நாளும் கைவிடேன்; நானே வந்து அவனை உத்தம கதிக்கு அழைத்துப் போவேன்' என்கிறான்.

எம்பெருமானின் அப்படிப்பட்ட வாக்கு இந்த வராஹ அவதாரத்திலே வெளிப்பட்டதினாலே, அது பெருமையும் சிறப்பும் மிக்க அவதாரம். அந்த வாக்கை பூமி பிராட்டி மூன்று முடிச்சுகளாக முடித்து வைத்துக் கொண்டாளாம்; புஷ்பம் அர்ச்சித்தல், ஆத்ம சமர்ப்பணம், திருநாமம் சொல்லுதல் என்ற மூன்றுக்கும் மூன்று முடிச்சு...

பகவானின், இந்த மூன்று கட்டளைகளைத்தான் அவள் ஆண்டாள் அவதாரத்திலே நடத்திக் காட்டினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15

அவதாரங்களெல்லாம் முடிந்து பரமாத்மா ஆனந்தமாக வைகுண்டத்திலே உட்கார்ந்திருக்கார். தேவர்கள், முனிவர்கள் சூழ, பெரிய சதஸ் அங்கே... அப்படிப் பல நாள் உட்கார்ந்திருந்தவர் பூமியைப் பார்க்கிறார். பூமியைப் பார்த்ததும் அவருக்கு வருத்தம் வந்ததாம். ஏனென்றால் அவ்வளவு அக்கிரமங்கள் அங்கே நடந்து கொண்டிருந்தன!

'கிருஷ்ணாவதாரம் பண்ணினோமே. அப்போ கீதையைச் சொல்லிட்டு வந்தோமே. அதைச் சொல்லிட்டு வந்த பிற்பாடு கூட இன்னமும் உலகத்திலே அக்கிரமம் நடந்து கொண்டிருக்கிறதே... அப்படியென்றால், நாம் சொன்ன கீதை பிரயோஜனமில்லாமல் அல்லவா போய் விட்டது!' என்று ரொம்ப வருத்தம் பரமாத்மாவுக்கு.

'நாம் சொன்னது போதவில்லை போலிருக்கிறது. நம் வாக்கு சரியில்லை போலும், அதனாலே வேறு வாக்கைக் கொண்டு அதே கருத்தை உலகத்துக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று முடிவு செய்தான்.

பக்கத்தில் இருக்கும் மஹாலக்ஷ்மியைப் பார்த்துச் சொன்னான்: "லக்ஷ்மி! நீ போய் பூலோகத்திலே பிறந்து, கீதையிலே நான் என்ன சொல்லி உபதேசம் செய்தேனோ, அதையே சொல்லித் திருத்தக் கடவாய்..." என்றான்.

பூலோகத்திலே அவதாரம் பண்ணின காலத்திலே மஹாலக்ஷ்மியாலே பகவானை ஒன்றும் தட்டிக் கேட்க முடியல்லையாம். இப்போது, வைகுண்டத்திலே, பகவான்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லக்ஷ்மியினிடத்திலே ஏகாந்தத்திலே அகப்பட்டுக் கொண்டு விட்டான்! நினைத்ததையெல்லாம் கேட்க அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. கேட்கலானாள்:

"என்ன அக்கிரமம்! என்னைப் போய் அவதரிக்கச் சொல்லுகிறீர்களே. இது நியாயமா? உங்களோடு கூட வந்தபோதே எனக்குக் கௌரவம் இல்லை. இன்னும் தனியாக வேறு போகச் சொல்கிறீர்களே... இது நியாயமா?

"ராமாவதாரத்திலே உங்கள் கூட வந்தேன். எங்கேயாவது சுகம் என்பது எனக்கு அதில் இருந்ததா? ஏதோ கொஞ்சமே கொஞ்ச காலம், கனவு கண்ட மாதிரி அயோத்தியிலே கொஞ்சம் நாள் இருந்தது போல் தோன்றுகிறது. அதற்கப்புறம் ரொம்ப சிரமம். காட்டிலே வாழ்ந்து... இதெல்லாம் போகட்டும் என்றால், காமாசுரன் ராவணன் என்னைக் கண்டவாறு பேசினான். அதைக் கூட சகித்துக் கொள்ளலாம் போலாக்கி விட்டது உங்கள் செயல்... அத்தனை பேர் நடுவிலே என்னை நிறுத்தி மேலே தேவதைகள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே... என்னைக் கொண்டு வந்து நிறுத்தி நீங்கள் பேசினீர்களே...! அதை நினைத்தால்தான் துக்கம் தாளாமல் போகிறது..."

அக்னிப் பிரவேசத்தைப் பற்றித்தான் இவ்வாறு பேசினாள் மஹாலக்ஷ்மி. அக்னியை மூட்டச் சொல்லி லக்ஷ்மணனுக்கு சீதா தேவி கட்டளை பிறப்பித்தபோது, அவன் அண்ணாவின் முகத்தை அனுமதி தேடி நோக்கினானாம்! அப்போது ராமன் வாய் திறந்து கூடப் பேசாமல் புருவத்தை நெறித்தே அதற்குப் பதில் சொன்னாராம்!

அக்னிப் பிரவேசம் முடிந்து வைதேகியை வெளியிலே எடுத்து வந்த பிற்பாடு, 'என் சீதை ரொம்ப நல்லவள். இந்த உலகத்துக்காகத்தான் அவளை அப்படி அக்னிப் பிரவேசம் பண்ண வைத்தேன்' என்று ராமன் சொன்னதை நினைவூட்டி இப்போது மஹாலக்ஷ்மி பேசுகிறாள்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

"காமாதுரன் ராவணன் பேசியது இருக்கட்டும்! அன்று நீங்கள் என்னை அத்தனை பாடுபடுத்தி, அவ்வளவு தூரம் பரீட்சை பண்ணிய பிறகும் நிறைமாத கர்ப்பிணியாக என்னைத் தனியே காட்டிலே விட்டு விட்டீர்களே! நான் மற்றவர்களால் பட்டதை விடவும் உங்களால் பட்டதே அதிக அவஸ்தை..."

பகவான் பார்த்தான். மஹாலக்ஷ்மி இன்னமும் நிறுத்துகிற வழியாக இல்லை. ஒரு கமா போட்டு... அப்படி இலேசாக நிறுத்தியிருக்கிறாள் என்று புரிந்து கொண்டான். அடுத்து என்ன சொல்லப் போகிறாள் என்று பார்த்தான்... அதற்கப்புறம் ஏகமாக துக்கம் வந்து விட்டதாம் லக்ஷ்மிக்கு!

"இந்த ராமாவதாரமே பரவாயில்லே போலிருக்கிறது அதற்கடுத்த அவதாரத்தை நினைத்துப் பார்க்கும் போது..." என்று மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

அவளுடைய இந்தப் பேச்சுக்கு என்ன அர்த்தம் என்பது போல் பகவான், கண்களை அகல விரித்துப் பார்க்கிறான்!

"ராமாவதாரத்திலே நீங்கள் எனக்குத்தான் என்று இருந்தது. கிருஷ்ணாவதாரத்திலே அதுவும் போய்விட்டது! அதிலும் அந்த சத்யபாமா இருந்தாளே...! எத்தனையோ பேர் உங்கள் மேல் பிரேமை கொண்டிருந்தாலும் உங்களைத் தன் முந்தானையிலேயே முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்ளணும் என்று எண்ணம் அவளுக்கு! இந்த சத்யபாமாவோடு ஒவ்வொரு விஷயத்துக்கும் நான் போராடிப் போராடி, உங்களை என் கிரஹத்துக்கு அழைத்துக்கொண்டு வருவதற்குள் நான் பட்டபாடு...!"

அந்த ருக்மிணி-சத்யபாமா கதையைக் கொஞ்சம் பார்ப்போம்...

நாரத மஹரிஷி வீணையை வாசித்துக் கொண்டு ருக்மிணியின் கிரஹத்துக்கு வந்து விட்டார். ருக்மிணி துளசி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜை பண்ணியபடி இருந்தாள். "ருக்மிணி! நீ இப்படி இருக்கிறாயே! உலகத்திலே உன்னைப் போல ஓர் அபலை உண்டா...?" என்று கேட்டார் நாரதர்.

"சுவாமி! என்ன சுவாமி சொல்கிறீர்கள்?"

"நாளைக்கு ஒரு நாளாவது உன் பர்த்தாவை அழைத்துக் கொண்டு வந்து உன் கிரஹத்திலே இருக்கச் செய்ய வேண்டாமா நீ? இப்படி நீ அவனை நாளைய தினத்துக்காகவாவது அழையாமல் இருப்பது நியாயமா?" என்று கேட்டார் நாரதர்.

"நாளைக்கு என்ன சுவாமி?" வியப்புடன் கேட்டாள் ருக்மிணி.

"இதுகூடத் தெரியாமலிருக்கிறாயே? என்னை மாதிரி ஒருத்தர் உனக்கு எடுத்துச் சொல்லாமல் இருந்தால் என்னவாகியிருக்கும்! நாளைக்கு உன் பிறந்த நாள் அல்லவா? அன்றைய தினம் பர்த்தா (கணவன்) கூட இருக்க வேண்டாமா? நாளைக்குக் கூடவா சத்யபாமா கிரஹத்திலே அவன் இருக்கிறது?"

'நாரத: கலஹப்ரிய:' என்று நாரதரைப் பற்றி வசனம் சொல்வதுண்டு. கலகம் செய்வதிலே நாட்டம் உடையவன் என்று அர்த்தம்! அவர் தமக்குப் ப்ரியமான வேலையைச் செய்து விட்டார்.

உடனே ருக்மிணி, "இப்பவே போய் பகவானை அழைச்சுண்டு வந்துடறேன்..." என்று புறப்பட்டாள். வேத கோஷங்களும், வாத்ய கோஷங்களும் சூழ பகவானை அழைக்க அவள் போகிறாள்.

ருக்மிணி போய்ச் சேர்வதற்குள் நாரதர் சத்யபாமாவினுடைய கிரஹத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். அங்கே சத்யபாமாவைப் பார்த்து, "உன்னைப் போலே ஓர் அபலை உண்டா?" என்றார்!

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

"ஏன் சுவாமி! ஏன் அப்படிச் சொல்கிறீர்?" என்றாள் சத்யபாமா.

"இந்த ருக்மிணிக்கு உன் பேரில் ரொம்ப அசூயை. வேண்டுமென்றே நாளைக்கு நாள் பார்த்து அந்த கிருஷ்ணனை உன்னிடத்திலேயிருந்து பிரிக்க வேண்டுமென்று அவள் வந்து கொண்டிருக்கிறாள். நாளைக்கு உன் புருஷன் அவசியம் உன்னோடு இருக்க வேண்டாமா?"

"நாளைக்கு என்ன விசேஷம் சுவாமி...?"

"இதுகூடத் தெரியாமல் இருக்கிறாயே. நீ கல்யாணம் பண்ணிக் கொண்ட நாள் அல்லவா... அன்றைக்கு நீ பர்த்தாவோடு இருக்க வேண்டாமா? அந்த நாளைக் கொண்டாட வேண்டாமா?"

"அந்த நாளைக் கொண்டாடணும்னு உண்டா சுவாமி...?"

"அப்படி வழக்கம் இல்லாமப் போனால்தான் என்ன, நீதான் அதை ஆரம்பித்துவையேன்!" என்றார் நாரதர்! ஆகையினாலே அன்னைக்கு ஆரம்பித்தது இன்னைக்கும் நடக்கிறது!

"சரி!" என்றாள் சத்யபாமா.

அந்த நேரம் பார்த்து ருக்மிணி அங்கே வந்தாள். அவளைப் பார்த்துவிட்ட சத்யபாமா உள்ளே போய்விட்டாள். உள்ளே கிருஷ்ணன் படுத்திருக்கிறான். பாமா போய் பகவான் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். 'வாய் திறந்து பேசவே கூடாது!' என்று அவனுக்குக் கட்டளை போட்டுவிட்டாள்!

ருக்மிணி, பகவானைப் பிரதட்சணம் பண்ணிவந்து நமஸ்காரம் பண்ணினாள். தன் வேண்டுகோளைச் சொன்னாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேசவே முடியலையாம் பகவானுக்கு! இப்படியும் பேச முடியலை - 'வரேன்' என்று சொல்ல முடியவில்லை; 'போக மாட்டேன்' என்றும் சொல்ல முடியலை - அங்கேயும் பேச முடியவில்லை!

வேதாந்த விஷயங்களையெல்லாம், ஏதோ கேலி பேச்சு பேசுகிற மாதிரி இலகுவாகப் பேசிய பரமாத்மா, அவ்வளவு உபநிஷத் விஷயங்களையும் கீதையாகக் கொட்டிய பரமாத்மா... பேச்சடைத்து நிற்கிறாராம்; பதில் சொல்ல முடியாமல் அவஸ்தைப் படுகிறாராம்...!

இந்தக் காட்சியைத் தொலைவிலிருந்து பார்த்தபடி நாரதர் கைகூப்புகிறார். ஏனெனில், வைகுண்டத்துக்குப் போனால் இந்தக் காட்சி யெல்லாம் பார்க்க முடியாது. அங்கே பகவான் சுவாமியாக - மஹாவிஷ்ணுவாக - அல்லவா உட்கார்ந்திருப்பார். இந்த மாதிரி லீலை களெல்லாம் காணக் கிடைக்காதே அங்கே! எனவே அந்த லீலையைப் பார்த்து, நாரதர் கைகூப்பி ஆனந்தித்து சேவிக்கிறார்.

புளகாங்கிதமாய் நின்ற நாரதரை பகவான் பார்த்தார். ரொம்பக் கோபம் வந்துவிட்டது அவருக்கு. இவ்வளவு தூரம் சிண்டு முடியும் வேலையைச் செய்துவிட்டு சேவித்தபடி நிற்கிறாரே என்று கோபம். அவரையே பிரச்னைக்குத் தீர்வு கேட்போம் என்று முடிவு செய்து கேட்டார்.

"நாரதரே! பிறந்த நாள் அன்று தன்னுடன் இருக்க வேண்டுமென்று விதர்ப தேசத்து ராஜகுமாரி ருக்மிணி சொல்கிறாள்; 'நாளைக்குத் திருமண நாள், என்னுடன் இருங்கள்' என்று என் சத்யபாமா சொல்கிறாள்... இப்போ நான் எங்கே போகட்டும்? அங்கேயா? இங்கேயா... இவ்வளவுக்கும் காரணமாயிருந்த நீரே பதில் சொல்லும்" என்றார்.

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

அதற்கு நாரதர் சொன்னார்: "இந்தச் சண்டையெல்லாம் என்னால் தீர்க்க முடியாது. ஒரு மனைவி கணவனுக்குள்ளே சண்டையென்றாலும் பரவாயில்லை... அதுவோ பல மனைவி தகராறு... என்னைப் பார்த்துக் கேட்கிறாயே கிருஷ்ணா! உலகத்திலே எனக்கு இந்த விஷயம் பற்றி ஏதாவது அனுபவம் உண்டா!" என்றார்.

அந்தக் கட்டத்தில் பகவான் பட்ட அவஸ்தையைச் சொல்லி முடியாது. எப்படியோ சத்யபாமாவை வஞ்சித்துவிட்டு, ஒருத்தருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பிப் போகிறான்.

இந்த வரலாறையெல்லாம் (ராமாவதாரம் கிருஷ்ணாவதாரம்) ஞாபகப்படுத்தி பகவானுக்குச் சொன்னாளாம் மஹாலக்ஷ்மி. சொல்லி விட்டு, "இவ்வளவு கஷ்டங்கள் நான் ஏற்கெனவே பட்டது போதாதா? என்னைப் போய் திரும்பவும் அவதாரம் பண்ணச் சொல்கிறீர்களே; அதுவும் தனியாக! நான் போக மாட்டேன்" என்று மறுத்து விட்டாளாம் மஹாலக்ஷ்மி.

மஹாலக்ஷ்மி சொன்ன சரித்திரத்தையெல்லாம் கேட்டு, வைகுண்டத்திலிருந்தவர்கள் ஆனந்தித்தார்களாம். அவள் வாக்கிலேயிருந்து வருபவை எத்தனை ஆனந்தம் அளிக்கும்!

ஆனால் பகவானுக்குத் தன் காரியம் ஆகவேண்டும் இல்லையா... அவன் இப்படித் திரும்பியிருந்த பார்வையை அப்படித் திருப்பி பூமித் தாயாரை நோக்கினான். மஹாலக்ஷ்மியிடம் சொன்னதை அப்படியே அவளிடம் சொன்னான். அவள் பதில் வேறு விதமாய் இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16

பொறுமையே உருவானவர் பூமிபிராட்டி: நாம் எவ்வளவுதான் தப்பு பண்ணினாலும் அதை பகவானிடத்திலே சொல்ல மாட்டாளாம்! நாம் ஒரு துளி நல்லது செய்தால் கூட அதைப் பெரிசுபடுத்தி அவனிடத்திலே சொல்வாளாம்! அவ்வளவு காருண்யம் நம்மிடத்திலே அவளுக்கு!

எம்பெருமான் அந்த பூமாதாவைத் திரும்பிப் பார்த்தான். "இந்த மஹாலக்ஷ்மி சொன்னதையெல்லாம் நீயும் கேட்டாய். இப்போது நீ போய் கீதைசாரத்தை எடுத்துச் சொல்லி, உலகத்திலே உள்ளவர்களைத் திருத்துவாயா...?" என்று கேட்டான்.

"அதற்குத்தானே காத்துக் கொண்டு உட்கார்ந்திருக் கிறேன் சுவாமி!" என்றாளாம் பூமாதா!

மஹாலக்ஷ்மி முடியாது என்று சொன்னபொறுப்பை பூமாதா உடனே ஏற்றுக்கொண்டு விட்டாள்.

"நீங்கள் என்னைப் போகச் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கேன்" என்று முந்தானையிலே போட்ட முடிச்சோடு சொல்கிறாளாம்!

எப்போது போட்ட முடிச்சு அது...?, வராஹ அவதாரத்திலே, வராஹத்தின் மூக்கின் மேலே உட்கார்ந்திருந்தபோது, அவன் (பகவான்) சொன்ன மூன்று கட்டளைகளுக்காகப் போட்ட மூன்று முடிச்சுகள்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- அவன் திருவடியிலே புஷ்பத்தை இட்டு அர்ச்சனை செய்ய வேண்டும்;
- அவன் திருநாமத்தை உரக்கச் சொல்ல வேண்டும்;
- அவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும்;

என்ற முன்று கட்டளைகளுக்காகப் போட்ட மூன்று முடிச்சுக்கள்.

"இப்போதே நீங்கள் போகச் சொன்னாலும் சித்தமாயிருக்கிறேன்" என்றாள் பூமாதேவி.

"எங்கே போவாய்? யாரிடம் பிறப்பாய்?" என்றார் பகவான்.

"உங்களுடைய அனுக்கிரஹம் உதவும்" என்று புறப்பட்டு விட்டாள் தேவி. விஷ்ணுசித்தரின் மகளாய் வந்து அவதரித்தாள். நம் திராவிட தேசத்துக்கே அந்த அவதாரம் பெருமை சேர்த்தது.

கல்பத்தின் ஆதியிலே கேட்ட வராஹ மூர்த்தியினுடைய வாக்கைத் தானே எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காக துளசி கானகத்திலே அவதரித்தாள் பூதேவி. பிறக்கும்போதே மேன்மையுடையவளாய், சுவாசனையுடன் ஆவிர்பவித்தாள். இரு மாலை கட்டினாள் - ஒரு மாலை பாமாலை; ஒரு மாலை பூமாலை. ஒன்றைப் பாடிச் சமர்ப்பித்தாள்; மற்றதைச் சூடிச் சமர்ப்பித்தாள். சூடிக் கொடுத்த நாச்சியார் என்று பெயர் பெற்றாள்.

திருப்பாவை முப்பது பாசுரங்கள் பாடினாள். ஆண்டாள். அவற்றில் முதல் பத்து, 'அவன் திருநாமத்தைச் சொல்லு' என்று உணர்த்துகின்றன. இரண்டாவது பத்து, 'உயர்ந்ததான அவன் திருவடியை அர்ச்சனை பண்ணிப் பாரு' என்கிற பாசுரங்கள். மூன்றாவது பத்தோ 'அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவடியிலே ஆத்மசமர்ப்பணம் பண்ணு' என்று சொல்கின்றன! ஆக, வராஹ மூர்த்தியினிடத்திலே அன்று கேட்ட மூன்று விஷயங்களை முப்பது பாசுரங்களாய்ப் பாடி ஆண்டாள் அவதாரத்திலே எடுத்துக் காட்டினாள்.

திருப்பாவை என்பது ஒரு நூல் மட்டுமல்ல... அது ஒரு யக்ஞம் (யாகம்). ஆண்டாள் பண்ணிய வேள்வி அது. வராஹ மூர்த்தியினிடத்திலே பெற்ற உபதேசத்தைக் கொண்டு தனுர் (மார்கழி) மாசத்திலே ஒரு வேள்வி வளர்க்கிறாள்.

வேள்வி - யக்ஞம் செய்வதற்கு கபாலம் என்றொரு பாத்திர சாதனம் உண்டு. அதிலே புரோடாசத்தை வைத்து நெய்யைத் தடவி சமர்ப்பிப்பார்கள். ஆண்டாள் பண்ணிய திருப்பாவையின் மூன்று பத்தும் மூன்று கபால சாதனங்கள் என்றே சொல்லலாம். ஆசார்ய அனுக்கிரஹம் என்கிற நெய்யினால் தடவி அதைச் சமர்ப்பிக்கிறாள்.

யக்ஞம் பண்ணும்போது ஒவ்வொரு கபாலத்தைச் சமர்ப்பிக்கும்போதும் திரிவிக்கிரமாவதாரனான எம் பெருமானை ஸ்தோத்திரம் பண்ணிச் சமர்ப்பிப்பது மரபு.

திருப்பாவையின் மூன்று பத்தும் மூன்று கபாலங்கள் என்றேன் இல்லையா...? ஒவ்வொரு கபாலத்தின் தொடக் கத்திலும் திரிவிக்கிரமனைத் துதிக்கிறாள் ஆண்டாள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று முதல் பத்திலே திரிவிக்கிரமனை நினைக்கிறாள்.

'அம்பர மூடறுத்து ஓங்கி உலகளந்த...' என்று அடுத்த பதினொன்று முதல் இருபது வரையிலான பாசுரத்துக் குள்ளே இரண்டாவது முறையாக திரிவிக்கிரமாவ தாரத்தைப் பாடுகிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி' என்று மறுபடியும், இருபத்தொன்று முதல் முப்பது வரையிலான பாசுரங்களுக்குள்ளே மறுபடியும் திரிவிக்கிரமன் திருவடி களைப் போற்றுகிறாள்.

ஆகையினாலே, திருப்பாவை ஒரு வேள்வி போன்றது. ஆண்டாள் நமக்கு கீதையின் வழியைக் காட்டி, 'நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா!' என்று ஆச்ரயித்து, அவனையே திருக்கல்யாணமும் பண்ணிக் கொண்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டாள் அழைத்தாள் என்று வந்து குதித்த பெருமான், ஸ்ரீவில்லிபுத்தூரிலே மடிந்த திருவடியோடு காட்சி தருகிறான்!

பெரியாழ்வாரோ, கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட்டு அழுகிறார்! 'ஒரு பெண்ணைப் பெற்றேன்... அவளைச் செங்கண்மால் கொண்டு போனான்... நான் என்ன பண்ணுவேன்...' என்று அவருக்கு வேதனை.

ஆனால் ஆண்டாள் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்தாள். அப்படிச் சேர்ந்ததில் நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டல் இருக்கிறது.

வராஹமூர்த்தி சொன்னதை அனுசரித்து அவள் அவனை அடைந்ததுபோல, நாமும் அவனை அடையலாம் - 'அவன் நமக்குப் பதி... நாம் அவனுக்கு பத்னி' என்ற பாவத்துடன் உத்தமமான சரணாகதி மார்க்கத்தைக் கடைப் பிடித்தோமானால், நாமும் அவனை அடையலாம்.

சரணாகதி மார்க்கத்துக்கு மூலமானவன் மஹா வராஹ மூர்த்தி - மஹா வராஹ: விச்வாத்மா!

இந்த வராஹ அவதாரத்திலே பகவானுடைய பூர்ணத்துவம் பேசப்படுகிறது; சரணாகதி மார்க்கமும் பக்தி மார்க்கமும் உணர்த்தப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் மேலாக, மிக உயர்ந்ததான யக்ஞப் பிரகடனங்களை யெல்லாம் இந்த அவதாரத்திலே காட்டி நின்றான் பகவான். அதனால்தான் இந்த அவதாரத்தை 'விச்வாத்மா' என்றழைத்தது.

எத்தனை யக்ஞங்கள் உண்டோ அத்தனை யக்ஞங்களையும் தன் திருமேனியில் காட்டினான் - வராஹ அவதாரத்தின் போது. நான்கு வேதங்களும் நான்கு கால்களாக அவன் நின்றான். எனவே வேதத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமையை இந்த அவதாரத்திலே காட்டியதுபோல் வேறு எந்த அவதாரத்திலேயும் காட்டவில்லை.

அழியாத பிரமாணம் கொண்டது வேதம். 'ஓலைபடா கிளவி!' என்று சொல்லப்படுவது. ஓலையிலே எழுதிவைத்துப் பாதுகாக்க முடியாதது. உச்சரித்துத்தான் சொல்லித் தர வேண்டும்; கற்றுக் கொள்ள வேண்டும்.

ராஜமுந்திரியிலே ஜகாந்நாத கனபாடிகள் என்பவர். ஒரு மாணவனுக்கு வேதம் சொல்லித் தர வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு. ஒரு குறிப்பிட்ட கட்டத்திலே 'த்ஸ' என்கிற ஒலி நிறைய வர, அதை அவனால் திருப்பிச் சொல்ல முடியவில்லை. மாணவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார்! ஒருநாள் வீதியிலே மாணவன் சைக்கிளைத் தள்ளியபடி வந்தான். பார்த்தார் கனபாடிகள்.

"சைக்கிள் டயரிலிருந்து காற்றைப் பிடுங்கு" என்றார்.

"எதுக்கு...?" என்று விழித்தான்.

"நீ எடுத்துவிடேன் சொல்றேன்..." என்றார்.

அப்படியே அவன் காற்றைப் பிடுங்கவும் 'த்ஸ... த்ஸ...' என்ற ஒலியோடு அது வெளியேறியது.

"இப்படித்தான் உச்சரிக்கணும்!" என்று அந்த ஒலியையே உதாரணமாகச் சொன்னார் கனபாடிகள்!

"குருவே!" என்று விழுந்து சேவித்தான் மாணவன்.

"எதற்கு என்னைச் சேவிக்கிறாய்? சைக்கிளைத்தான் நீ விழுந்து சேவிக்கணும்!" என்றாராம் குரு!

வேத உச்சாரணம் எத்தனை கஷ்டமானது என்று உணர்த்த இந்தக் கதை.

வேதங்களிலே நான்கு வகை உண்டு என்பது தெரிந்திருக்கும். அதே போல் வேதத்துக்கான குணங்களும் நான்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நித்யத்வம்: எப்பொழுதும் இருக்கக்கூடியது அழிவே இல்லாதது. இயற்கையாகவே நித்யமானதாய், காலவெள்ளோட்டத்தினாலே பாதிப்பு இல்லாமல் நிதியமாய் இருக்கும் குணம்.

அதற்குத்தான் எழுத்து வடிவு இல்லையே? கம்பன், காளிதாஸன் காவியம் போல் நூல் வடிவாய் இல்லையே என்றால்... பகவானின் மூச்சுக் காற்றாய் இருப்பதே அதற்கு நித்தியத்துவம் தருகிறது. அதற்கும் மேலே என்ன நித்யத்வம் வேண்டும்!

சப்த ப்ரஹமமாய்ப் பரமாத்மாவை - வேதத்தைப் பார்த்தார்கள் ரிஷிகள்.

இரண்டாவது குணம் அபௌருஷேயத்வம். வித்யாரண்ய சுவாமி எழுதுகிறார்: வேதம் என்றால் என்ன? அத்துடன் சம்பந்தப்பட்டவர் யார்? அதன் பயன் என்ன? என்று கேட்கிறார்.

இஷ்ட பிராப்தி: அநிஷ்ட நிவிருத்தி என்பார்கள். நம் உடல் ஆரோக்கியமாய் இருப்பதே 'இஷ்டம்.' பிராப்தி என்பது அப்படி அது அமையப் பெற்ற வரம். 'அநிஷ்டம்' என்றால் உடலுக்குள் இருக்கும் வியாதி.

வைத்தியர் மருந்து கொடுத்தால் வியாதி போய்விடுகிறது. அப்புறம் தளர்ச்சி வருகிறது. தளர்ச்சியைப் போக்க வேறு மருந்து தருகிறார்! இப்படி சரீரத்துக்கு (உடலுக்கு) ஔஷத சேவனமெல்லாம் (மருத்துவ சிகிச்சை) பண்ணுகிறோம்.

எப்படி மருந்து உற்பத்தி நாள் முடிவு நாளோடு காட்சி அளிக்கிறதோ அப்படி சரீரத்துக்குக் கூட இரண்டும் எழுதியிருக்கிறது. ஆனால், முடிவு நாள் கண்ணுக்குத் தெரியாததாலே சௌக்யமாக, நிம்மதியாக இருக்கிறோம். சரீரமும் மருந்தும் அழியக்கூடியவை. ஆனால் ஆத்ம

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ரோகத்துக்கு நிவர்த்தியான வேதமருந்து அழிவற்ற வஸ்து. அது பிறப்பு இறப்பு இல்லாத நிலையை அடைவதற்கான மருந்தைச் சொல்கிறது!

ஆனால் பரமாத்மாவே கூட இயற்றாதது அந்த வேதம். எந்தவொரு புருஷனாலும் இயற்றப்படாதது: அபௌருஷேயத்வம்.

மூன்றாவது குணம்: அவிச்சின்னபரம் பராகதத்வம் - அதாவது ஒருவர் சொல்லி, இன்னொருவர் கேட்டு, வழி வழியே வந்துகொண்டிருக்கும் குணம். சிரமப்பட்டு சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது; கற்றுக் கொள்ளவும் சிரமப்பட வேண்டும்.

நான்காவது குணம்: அனந்தத்துவம். வேதம் மொத்தத்தையும் யாரும் கற்றுக் கொண்டு விட முடியாது. வேதங்கள் அனந்தம்!

பரத்வாஜ மஹரிஷி மிக இளமையிலேயே வேதம் கற்க ஆரம்பித்தார். 96 வயசு ஆகிவிட்டது. ஆனால் முழுக்க கற்றுக் கொண்டு முடிந்தபாடில்லை. எனவே இந்திரனை நோக்கித் தவமிருந்தார். அவன் அவர் முன் தோன்றி, 'என்ன வேண்டும்?' என்று கேட்டான். 'இன்னும் நூறு வயது வரை வாழ ஆயுள் வேண்டும்' என்றார். இந்திரனும் வரமளித்துப் போனான். அந்த ஆயுளும் 96 ஆண்டுகள் முடிந்தது. ஆனாலும் வேதத்தை முழுதும் கற்க முடியவில்லை. பரத்வாஜரால்! மறுபடியும் தபஸ், மறுபடியும் வரம் என்று மூன்று நூறு வருடங்கள் கடந்தன. நான்காவது முறை அவர் மீண்டும் வரம் கேட்டு விடுவாரே என்று அஞ்சி, இந்திரன் அவர் தவத்தைத் தொடங்கும் முன்பே பிரத்யட்சமாகி விட்டான்!

"உமக்கு நான்காவது ஆயுளைக் கொடுத்தால் அதைக் கொண்டு என்ன செய்வதாக இருக்கிறீர்?'' என்று பரத்வாஜரைக் கேட்டான் இந்திரன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"என்ன கேட்கிறாய் இந்திரா நீ! பிரம்மசர்யம் அனுஷ்டித்து வேதம் பயில்வதைத் தவிர வேறு காரியம் எனக்கு இல்லை..." என்றார்.

உடனே இந்திரன் பூ: புவ: சுவ: என்ற மூன்று மந்திரங்களினாலே மூன்று பர்வதங்களை (மலைகளை) உண்டாக்கினான்.

"இதோ தெரிகின்ற மூன்று மலைகளும் வேதங்கள்" என்றான் பரத்வாஜரை நோக்கி.

பரத்வாஜருக்கு ஒரே சந்தோஷம். தம் மூன்று பிறவிகளில் மூன்று மலைகளான வேதங்களைக் கற்று விட்டதாக நினைத்து, "இந்திரா இது மொத்தமும் எனக்கு வந்து விட்டதா...?" என்றார்.

"உமக்கு வந்ததைக் காட்டட்டுமா...?" என்றான் இந்திரன். ஒவ்வொரு மலையிலிருந்தும் ஒரு பிடி மண்ணை எடுத்துப் போட்டு, "முந்நூறு வருஷ காலத்திலே அத்யயனம் பண்ணினது இந்த மூன்று கைப் பிடி. இன்னும் எத்தனை நூறு வயசு எடுத்தால் இந்த மூன்று மலைகளையும் உம்மாலே கரைக்க முடியும்...?" என்றான்.

நடுங்கிப் போய் விட்டார் பரத்வாஜர்!

'கற்றது கைமண் அளவு' என்கிற வசனம் இப்படி வேதத்தைக் குறித்துச் சொன்ன கதையினாலே வந்ததுதான்!

ஆக, அனந்தத்துவம் - முடிவில்லாத தன்மை என்பது வேதத்தின் இன்னொரு குணம்.

இப்படி நான்கு குணமுடைய நால்வேதங்களை நான்கு கால்களாகக் கொண்டு வராஹமூர்த்தி நிற்கிறான் என்றால் நாம் அவனைக் குறித்து என்ன சொல்ல முடியும்...? 'ஓம் விச்வஸ்மை நம:' என்றுதான் சொல்ல முடியும். அதைச் சொல்லிவிட்டால் பரம சந்தோஷம் அடைவான் வராஹமூர்த்தி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17

'முனியே நான்முகனே முக்கண்ணப்பா...' என்று நம்மாழ்வார், திருவாய் மொழியிலே ஈச்வரனை விசேஷமாக அனுபவிக்கிறார்.

மூன்று நேத்திரங்களால் (கண்கள்) சொல்லப்படக் கூடியவன் பரமசிவன். அதே போல், மூன்று நேத்திரங் களால் சொல்லப் படக்கூடியவன் நரசிம்ஹன் - லக்ஷ்மி நரசிம்ஹன்.

மூன்று நேத்திரங்களையுடையவன் நரசிம்ஹன் என்று தாபனீய உபநிஷத் கொண்டாடுகிறது. இதை சுவாமி தேசிகன் எடுத்துச் சொல்கிறார்:

காஞ்சிபுரம் அருகே திருவேரிக்கை என்கிற க்ஷேத்ரம். அங்கே வேகவதி நதி தீரத்திலே அமைந்துள்ளது அது. 'இப்படி அமர வேண்டும் - இங்கே இருக்க வேண்டும்' என்கிற கட்டாயமில்லாமல் பகவான் தானாகவே இஷ்டமாய் அமர்ந்திருக்கும் க்ஷேத்ரம்! அதனால் அதற்கு காமாஸிகை என்றொரு பெயர். அந்த க்ஷேத்ரத்திலே சுவாமி தேசிகன் வாக்கிலே ஓர் அஷ்டகமானது உதிக்கிறது. அதிலே வருகிற வரிகள்:

தபன இந்து அக்னி நயன:

....

தாபனீய ரஹஸ்யானாம் சார:

தாபனீய உபநிஷத்தில் சொல்லப்பட்ட சமஸ்த ரகசியங்களின் சாரமாய் இருக்கக் கூடியவன் காமாஸிகா ஹரி:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு அமர்ந்திருக்கிறானே, அந்த நரசிம்ஹன் எப்பேர்ப்பட்டவன்...? பகவானுக்கு ஒரு பக்கம் வலது திருநேத்திரம் - சூரியனே (தபன) வலது திருநேத்ரமாக அமைந்துள்ளது. இடது திருநேத்திரம் சந்திரன் (இந்து). இடையிலே ஒரு நேத்திரம் - அது அக்னி.

எல்லோருக்கும் நேத்திரமாய் இருக்கக் கூடிய பரமாத்மாவுக்கு இந்த மூன்று தேவதைகள் நேத்திரமாய் இருக்கிறார்கள்!

பகவானுடைய நேத்திரத்திலிருந்தே சூரியன் உண்டானான் என்று புருஷ ஸூக்தம் சொல்கிறது. இப்படி பகவானின் நேத்திரத்திலிருந்து தோன்றியவனே அவனுக்கு வலது நேத்திரமாய் இருக்கிறான்!

சூரியனுக்கு என்ன விசேஷ சக்தி? நித்யம் அவனை நமஸ்காரம் பண்ண வேண்டும்; அனுதினம் அவனை வந்தனம் பண்ண வேண்டும். சூரியனைப் பார்க்காமல் யாராவது சாப்பிடுவாரேயானால், அவர் சாணியிலே தோன்றும் புழுக்களைக் காட்டிலும் மட்டமானவர் என்று வேதம் ஓதுக்குகிறது! அத்தகையவன் மனிதனாய் இருந்தும், அல்பமான கிருமியைக் காட்டிலும் மட்டமானவன்!

எவனொருவன் சூர்ய நமஸ்காரம் செய்யாமல் வாழ்கிறானோ, அவன் வாக்கு நன்றாக இராதாம்! எப்போதும் அமங்கலமே அவனிடத்திலிருந்து வெளிப் படுமாம்! அவன் எதைக் கேட்டாலும் பாவமான வார்த்தைகளாகவே இருக்குமாம்! இப்படி, காதிலும் அமங்கலமே விழுகிற, பேசுவதும் அமங்கலமேயான ஒருத்தனிடம் யாராவது போவார்களோ...?

சூரியனை ஆராதித்தால் ஆரோக்கியம் வாய்க்கும் என்கிறது சாஸ்திரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரியன் நான்கு நாள் பிரகாசிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்... உலக சலனம் நடக்குமா? சரீரம் வேலை செய்யுமா?

சூர்ய: என்ற சொல்லுக்கே, நம்மை சத்கர்மானுஷ்டானத்திலே செலுத்துகிறவன் என்றுதான் பொருள். நம் இந்திரியங்களெல்லாம் வேலை செய்யணும்னா சூர்யன் பிரகாசிக்கணும்.

சூர்யன் பிரகாசிக்காத நாளை துர்தினம் என்றே சாஸ்திரம் சொல்கிறது. கர்மானுஷ்டானங்களுக்குத் தகாத நாள் அது. மகான்களாகப்பட்டவர்கள், மப்பும் மந்தாரமுமாக இருக்கிற நாட்களிலே சாப்பிட மாட்டார்கள். என்றைக்கு சூரியன் தென்படுகிறதோ, அன்றைக்கு அவனைப் பார்த்துவிட்டே உணவு கொள்வார்கள்.

இப்பேர்ப்பட்ட சூரியன் பகவானின் வலது திருநேத்திரமாய் அமைந்திருக்கிறான். அவன் என்ன உபகாரம் பண்ணுகிறான் நமக்கு...? ஞானத்தையும் ஐச்வர்யத்தையும் கொடுக்கிறான்.

ஞானத்தைக் கொடுக்கிறான் என்பதை விசேஷமாய் எப்படி அறியலாம் என்றால் அதற்கொரு கதையிருக்கிறது.

வைசம்பாயனர் பல பேருக்கு வேதத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். வியாசரிடம் கற்ற யஜுர் வேதத்தைப் பல சிஷ்யர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். ஒருநாள், நதியிலே நீராடி விட்டு, சிந்தனை பண்ணிக் கொண்டே ஆசிரமத்தை நோக்கி வந்தார் வைசம்பாயனர். அப்போது நடு வழியிலே வேதத்தைப் பூரணமாகக் கற்றுணர்ந்த பிரம்மசாரி சிறுவன் படுத்திருந்தான். அதைக் கவனிக்காது, அவன் வயிற்றிலே கால் வைத்து விட்டார் வைசம்பாயனர். அவன் துடிதுடித்து மாண்டு போய் விட்டான்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைசம்பாயனருக்கு பிரும்மஹத்தி தோஷம் வந்து விட்டது. ரொம்ப வருத்தம் அவருக்கு... ஆசிரமத்திலே உட்கார்ந்திருக்கிறார். எல்லா சிஷ்யர்களும் வந்து வணங்குகிறார்கள் அவரை...

சிஷ்யர்கள் பண்ணும் பாவம் ஆசார்யர்களை அடையும்... இங்கோ, ஆசார்யரே பாவம் பண்ணி யிருக்கிறார். சிஷ்யர்களெல்லாருமாய்ச் சேர்ந்து ஏதாவது பிராயஸ்சித்த கர்மா அனுஷ்டித்தால் அது போகும். வைசம்பாயனரும் அவர்கள் அவ்வாறு அனுஷ்டித்து, பிரும்மஹத்தி தோஷத்திலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சிஷ்யர்களெல்லாம், 'அப்படியே நாங்கள் பண்ணுகிறோம்... அதைக் காட்டிலும் ஒரு கடமை எங்களுக்கு உண்டா...!' என்று முன் வந்தார்கள். 'ஆசார்யருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போக்கவில்லை யென்றால் சிஷ்யஜன்மா எதற்கு...?' என்றார்கள்.

அப்போதுதான், அந்த சிஷ்யர்களுள் ஒருவரான யாக்ஞவல்க்யர் சொன்னார்: "இத்தனை பேர் எதற்கு...? நான் ஒருவனே ஆசார்யனின் பிராயஸ்சித்தம் பண்ணி கஷ்டத்தைப் போக்குவேனே..."

வைசம்பாயனருக்குக் கடும் கோபம் வந்தது:

"எல்லோரையும் சாமானியர் என்று மதித்து நீயொருவனே உயர்வானவன் என்று காட்டிக் கொண்டாயே... அது உன் அகங்காரத்தைக் காட்டுகிறது. இவ்வளவு அகங்காரமுடைய ஒரு சிஷ்யன் எனக்கு வேண்டியதில்லை! நீ வெளியே போ, ஆசிரமத்தை விட்டு" என்றார்.

யாக்ஞவல்க்யருக்கு அதற்கு மேல் கோபம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தங்களிடத்திலே இருக்கிற பரிவினாலே, ப்ரீதியினாலே சொன்ன வார்த்தையேயொழிய இவர்களையெல்லாம் மட்டம் தட்டுவதற்காக நான் பேசவில்லை... அப்படி நீங்கள் நினைக்கிறது அனுசிதம். என் எண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் என்னைப் போகச் சொன்னீர்களே! உங்கள் ஆசார்யத்வம் எனக்கு வேண்டியதில்லை!" என்று சொல்லிவிட்டார்.

"ஆசார்யத்வம் வேண்டியதில்லையானால் என்னிடம் கற்ற வேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு போக முடியுமா...? அதனால் வேதத்தை முழுக்க கக்கிவிட்டுப் போ!" என்று வைசம்பாயனர் பேசிவிட்டார்!

– கடன் கொடுத்தவன், சண்டை அதிகமானால் 'காசை எண்ணி வைச்சுட்டுப் போ' என்பானே அது போல...!

யாக்ஞவல்க்யர் சளைக்கவில்லை. அப்படியே ஒரு மாமிச கோளமாக மொத்தத்தையும் கக்கி விட்டார். கக்கிவிட்டு, மகா கோபத்தோடு அகன்று போய் விட்டார்!

வேத வித்தை கேட்பாரற்றுக் கிடந்தது. ஒரே மாமிசம் சூழ்ந்து கிடந்தது! வைசம்பாயனர் பார்த்தார். மற்ற சிஷ்யர்களையெல்லாம் கூப்பிட்டு, தித்திரா என்கிற புறா வகையாக அவர்களை மாற்றினார். மாமிசத்தைச் சாப்பிடச் செய்தார். அவர்களும் அப்படியே மாறி அந்த வேத வித்யை வீணாகாமல் அதைத் தரித்தார்கள்.

இவ்வாறு கக்கப்பட்டு மறுபடியும் கொள்ளப்பட்டு தரிக்கப்பட்டதனாலே, கிருஷ்ண-யஜுர்வேத தைத்ரீய சம்ஹிதை என்று அந்த சம்ஹிதைக்குப் பெயர். (தித்திரா - என்கிற புறாவின் பெயரிலிருந்து வந்தது 'தைத்ரீய')

வேதமிழந்த யாக்ஞவல்க்யர் சமுத்திரக்கரையிலே போய் நின்று கொண்டார். சூரியனைப் பார்த்து தியானம் பண்ணினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆச்சர்யம் பாருங்கள்...! சூரியன் அவருக்குப் பிரத்யட்சமானான். எப்படி...? ஒரு குதிரை வடிவிலே தோன்றினான்!

(அதனால்தான் இப்போதும் முறைப்படி முத்திரை யிட்டு சூரியனைப் பாத்துவிட்டு, கண்ணை மூடினோ மானால், குதிரை ரூபம் கண்ணுக்குள்ளே தெரியும்.)

யாக்ஞவல்க்யரின் முன் தோன்றிய சூரியன் 'உனக்கு என்ன வேணும்?' என்று கேட்டான்.

"என் ஆசார்யர் வைசம்பாயனர் என்னை அனுப்பி விட்டார். அவருக்குத் தெரியாத வேதம் முழுதும் எனக்கு வேண்டும்..." என்றார் அவர்!

உடனே சூரியன், குருவுக்கு என்ன தெரியாதோ, அதை சிஷ்யருக்கு உபதேசம் பண்ணினார். அப்படி சூரியன் உபதேசம் பண்ணியதுதான் சுக்ல யஜுர்வேதம்.

இந்த வரலாறு எதை உணர்த்துகிறது என்றால், சூரியன் ஆரோக்கியத்தை மாத்திரம் கொடுப்பவன் அல்ல... சிறந்த ஞானத்தையும் கொடுப்பவன். வேதத்தையே கொடுக்கக்கூடியவன்.

ஐச்வர்யத்தையும் கொடுக்கக் கூடியவன் சூரியன். சத்யபாமாவினுடைய தந்தை சத்ராஜித். சூரியனை அவன் உபாஸனை பண்ணினான். அப்போது சூரியன் அவனெதிரே பிரத்யக்ஷமானான். 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

சூரியனின் கழுத்திலே அழகான ஒரு மணி இருந்தது. அந்த மணியைத் தர வேண்டும் என்று கேட்டான் சத்ராஜித்.

ச்யமந்தக மணி என்று அதற்குப் பெயர். சூரியனும், அதைக் கேட்டவுடனே கழற்றிக் கொடுத்துவிட்டான். அதை வைத்திருப்பவருக்கு ஒரு நாளைக்கு எட்டு பாரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கம் கிடைக்குமாம்! அப்பபடிப்பட்ட ஐச்வர்யம் வாய்த்தது சத்ராஜித்துக்கு...

அதனாலேதான் அவன் மகள் சத்ய பாமாவுக்கு அவ்வளவு கர்வம்! ஒருவேளை பூண்ட நகைகளை அடுத்த வேளை பூணமாட்டாளாம்!

எனவே, அப்பேர்ப்பட்ட ஐச்வர்யம் தரக்கூடியவன் சூரியன்.

அன்னத்தைக் கொடுக்கக்கூடியவன் சூரியன்.

பாண்டவர்கள் வனவாசம் பண்ணுகிறார்கள்... அந்த நேரத்திலே, அவர்களுக்கு உணவு கிடைக்க வேண்டுமே. குறிப்பாக பீம சேனனுக்கு வயிறு நிரம்ப வேண்டுமே என்று கவலை வந்தது வியாஸ பகவானுக்கு! உடனே பஞ்சபாண்டவர்களுக்கு சூரியன் பேரிலே ஒரு சுலோகத்தை உபதேசம் பண்ணுகிறார், வியாஸபகவான். அத்தனை பேரும் அதைச் சொல்ல, சூரியன் எதிரே பிரத்யட்சமானான். ஒரு யந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்தான். அக்ஷய பாத்திரம் என்பது அதன் பெயர். எவ்வளவு அன்னம் வேண்டுமானாலும் அது கொடுக்கும்! சகல பதார்த்தங்களையும் கொடுக்கும். அன்றைய பொழுதுக்கு அலம்பிக் கவிழ்த்து வைக்கிறவரை கொடுத்துக் கொண்டேயிருக்கும்...!

அந்த அக்ஷய பாத்திரத்தைக் கொண்டு தாங்களும் நன்றாகச் சாப்பிட்டு, வனவாசத்தில் தங்களைத் தேடி வந்தவர்களையும் உபசரித்தார்கள் பஞ்சபாண்டவர்கள்.

இப்படி, ஐச்வர்யமா? ஆரோக்கியமா? ஞானமா...? அன்னமா...? எது வேண்டுமானாலும் கொடுக்கும் சக்தி சூரியனுக்கு இருக்கிறது. அது சர்வேச்வரனான பகவானால் கொடுக்கப்பட்ட சக்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்படிப்பட்ட சூரியன், நரசிம்ஹனின் வலது திருநேத்திரமாய் இருக்கிறான் என்றால்... பகவான் அந்த திருநேத்திரத்தினால் நம்மைக் கடாக்ஷிக்கும்போது ஞானமும் ஐச்வர்யமும் ஆரோக்யமும் அன்னமும் நமக்கு சங்கல்பிக் கின்றன.

எனவேதான் நரசிம்ஹ தியானத்துக்குள்ளே சூரியனும் அடங்கிவிடுகிறான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18

நரசிம்ஹனின் இடது திருநேத்திரம் சந்திரன்!

தன்னுடைய திவ்ய மனோகர ரூபத்தினாலே எல்லோரையும் ஆகர்ஷிப்பவன். சின்னக் குழந்தை முதல் முதியோர் வரை அத்தனை பேரையும் ஆகர்ஷிப்பவன். 'சந்தா மாமா ராவே,' 'நிலா நிலா ஓடிவா!' என்று எல்லா மொழிகளிலும் விளையாட்டுப் பாடல்களால் வரவேற்கப் படுகிறான்.

சோம ஸவம் என்று ஒரு பெரிய யாகம் செய்வார்கள் சந்திரனுக்கு. என்ன கொடுக்கிறான் இந்த சந்திரன்...?

கன்றுடன் கூடிய பசுவைக் கொடுக்கிறான். பாலை வருஷிக்கக்கூடிய. பலத்தையும் புஷ்டியையும் தரவல்ல... வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்! சந்திர அனுக்கிரஹத்தினாலேதான் அது கிடைக்கும்.

குதிரை! வேகமாகப் போகக்கூடிய, நல்ல சுழியை யுடைய குதிரைகள் ஒரு நாட்டிலே இருந்தால் நிரம்ப க்ஷேமம் உண்டாகும். அவற்றை அளிப்பவன் சந்திரன்.

வீரம் - இந்த வீர சப்தத்துக்கு நல்ல புத்ரன் என்று அர்த்தம். நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் பண்ணக்கூடிய சத்புத்திரன் ஏற்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறது யாகம்.

வீட்டிலே எல்லோராலும் கொண்டாடப்படக் கூடியவனாய், சபையிலே கொண்டாடப்படுபவனாய், அப்பாவின் கீர்த்தியை உலகிலே பிரகாசிக்கச் செய்யக் கூடியவனாய் இருக்கும் புத்திரன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- இவையெல்லாம் சோமதேவன் - சந்திரனால் ஏற்படுகிறது.

இத்தனையையும் கொடுக்கும் சந்திரன்தான் பகவானின் இடது திருநேத்திரம்.

மூன்றாவது நேத்திரம் அக்னி - அக்னிக்கு வித்வான் என்று ஒரு பெயர். வித்வான் என்றால் வழிகாட்டி. 'நல்ல மார்க்கத்திலே என்னை அழைத்துப் போ. என்னிடத்திலே இருக்கக்கூடிய பாவக் குவியலைப் போக்க வழிகாட்டு' என்று அக்னிய்யை வேண்டுகிறது உபநிஷத் மந்திரம்.

பாவங்களிலே இரண்டு வகை! சஞ்சிதம்; பிராரப்தம்.

சஞ்சிதம் என்றால் இன்னும் பலனைக்கொடுக்க ஆரம்பிக்காதது - அவிழ்க்காத மூட்டை! அதாவது, இந்தப்பிறவியிலே நாம் செய்து வரும் பிழைகளினால் நம் கணக்கில் ஏறிக் கொண்டிருக்கும் பாவ மூட்டை!

'பிராரப்தம்! என்ன பண்றது... அனுபவிச்சாகணும்...' என்று பேச்சு வழக்கிலே சொல்வதுண்டு. இந்த பிராரப்தம் என்பது ஏற்கெனவே எடுத்த பிறவிகளில் செய்த பாவங்களுக்கு நாம் இப்போது அனுபவித்து வரும் பலன்!

'இந்தப் பாவங்கள் மொத்தத்தையும் நீ போக்கடிக்க வேண்டும்' என்று அக்னியை வேண்டுகிறோம். 'பதிலுக்கு நாங்கள் உனக்கு என்ன செய்ய முடியும்...? நம: நம: என்று ஸ்தோத்திரம் பண்ணலாம்; அவ்வளவுதான்' என்று இரைஞ்சுகிறோம்.

'அக்னி மாதிரி நான் ஜொலிக்க வேண்டும். மனிதர்க்குள்ளே உயர்ந்த வகை வேண்டும். என்னையும் உன்னைப் போன்ற தேஜஸ்வியாக ஆக்கு...' என்று பிரார்த்திக்கிறோம்.

நல்வழிப்படுத்தக் கூடியவன் அக்னி; அனைத்தையும் கொடுக்கக்கூடியவன். யார் துதித்தாலும் ஐச்வர்யத்தைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுக்கக்கூடியவன். இப்படிப்பட்ட வரங்களை அருளக்கூடிய அக்னியானது பகவானுடைய மூன்றாவது திருநேத்திரம்.

சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்களுடையவன். ஆதலினாலே தபன இந்து அக்னி நயன: என்று நரசிம்ஹனைச் சொல்லி ஆராதிக்கிறோம்.

ம்ருத்யு ம்ருத்யவேஸ்வாஹா: என்றும் நரசிம்ஹனை ஆராதிக்கிறோம்.

ம்ருத்யு - மரணம்! மருத்யுவுக்கு ம்ருத்யுவாய் இருக்கக்கூடியவன் நரசிம்ஹன் என்பதாலே ம்ருத்யு பயம் நீங்க, சம்சார பயம் நீங்க அந்த எம்பெருமானின் திருவடியை ஆச்ரயிக்க வேண்டும். ம்ருத்யுவையும் விரட்டியடிக்கும்படியான பராக்கிரமமுடையவன் நரசிம்ஹன்!

விச்வயோனி: விச்வாத்மா என்றும் அவனை அழைக்கிறோம். விச்வயோனி: விச்வத்துக்கெல்லாம் காரணமாய் இருக்கக்கூடியவன்.

ப்ரஹ்லாதப்ரியனான நரசிம்ஹனை முமுக்ஷுபாஸ்ய தேவதை என்று நினைப்பவர்கள் அவனை உபாஸனை பண்ண வேண்டும்.

சம்சாரம் வேண்டாம் என்கிற விவேகம் மட்டும் எப்போது வரும் என்றே சொல்ல முடியாது!

சௌபரி என்று ஒரு மஹரிஷி - 'வெளியிலே இருந்தால் உலகம் நம்மைக் கெடுக்கிறது' என்று கருதி சமுத்திர ஜலத்துக்கு அடியிலே போய் உட்கார்ந்து கொண்டார். உட்கார்ந்து தவம் பண்ணினார். பத்தாயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் கண்ணைத் திறப்பார் அவர்! வெளியிலே வருவார். ஏதாவது பழமிருந்தால் பறித்துச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் சமுத்திரத்துக்குள்ளே போய் விடுவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு சமயம் அவர் கண்ணைத் திறந்த போது, ஒரு மீன் குடும்பம் கடந்து செல்வதைக் கண்டார் - தாத்தா, பாட்டி தொடங்கி பேரன், கொள்ளுப்பேத்தி என்று சுமார் இருநூறு மீன்கள் ஒரே குடும்பமாய்ப் போய்க் கொண்டிருந்தன. உடனே அவருக்கு மனசிலே ஏக்கம் வந்ததாம்.

'அடடா! வாழ்க்கைன்னா இதுவல்லவா வாழ்க்கை! இப்படி அழகா குடும்பமா இருக்கறதை விட்டுட்டு மூக்கைப் பிடிச்சுண்டு ஜலத்தடியிலே உட்கார்ந்திருக் கோமே...? இதனாலே நாம் என்னத்தைக் கண்டோம்' என்ற சிந்தனை வந்ததாம்.

உடனே அவர் தவம் அப்படியே கலைந்து போய்விட்டது.

மீன்களைப் போல் குடும்பமாக வாழவேண்டு மென்றால் திருமணம் செய்துகொள்ள வேண்டுமல்லவா...? ஒரு சன்னியாசிக்கு யார் பெண் கொடுப்பார்கள்...? யோசித்துப் பார்த்த சௌபரி, மாந்தாதா என்கிற இக்ஷ்வாகு வம்ச மன்னனிடம் போனார். அந்த மன்னருக்கு ஐம்பது பெண்கள்!

'ஐம்பது பெண்களிலே ஒரு பெண்ணை நமக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்க மாட்டாரா என்ன...' என்கிற தைரியம் முனிவருக்கு!

ஆனால், எவ்வளவுதான் பெண் குழந்தைகள் இருந்தாலும், எந்தத் தந்தைதான் ஒரு வயோதிகருக்கு அவர்களைத் திருமணம் செய்து வைக்க ஒப்புக் கொள்வார்! அல்லது எந்தப் பெண்ணாவது ஒரு வயோதிகனை விரும்பி வரிப்பாளா...?

ராஜாவுக்கு ரொம்ப தர்மசங்கடமாகப் போய் விட்டது. ஒரு உபாயம் செய்து இக்கட்டிலிருந்து தப்பிக்க முயன்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சுவாமி! எங்கள் குல வழக்கம் என்னவென்றால், பெண்கள் யாரை வரிக்கிறார்களோ அவருக்குத்தான் அவர்களை மணமுடித்துக் கொடுப்போம். அந்த மாதிரி சுயம்வரம் வைக்கும் குலவழக்கத்தை நான் மீற முடியாதே; நிர்ப்பந்தம் இருக்கிறதே" என்றார் செளபரியிடம்.

செளபரி சளைக்கவில்லை. "எனக்கொரு ஆட்சே பணையும் இல்லை. உங்கள் பெண்கள் இருக்கும் இடத்துக்கு என்னை அழைத்துப் போங்கள். அவர்களில் யாரேனும் என்னை வரித்தால் கல்யாணம் பண்ணிக் கொடுப்பீர்கள் அல்லவா...?" என்றார்.

அரசன் ஒப்புக் கொண்டான். "கட்டாயம் கொடுப்பேன்" என்று சொல்லி அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனான்.

அங்கே, உள்ளே நுழையும்போதே அதிரூப சுந்தரராக, மன்மதனையும் பழிக்கக்கூடிய ரூபனாய் நுழைந்தார் முனிவர்.

அந்தப்புரத்திலிருந்த ஐம்பது ராஜகுமாரிகளும் ஒரு சேர அவரை வரித்து விட்டனர்! எல்லோருக்கும் போட்டியே வந்து விட்டதாம். ஓடிச் சென்று, அரசனிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அவனும் வேறு வழியின்றி, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஐம்பது பெண்களையும் அவருக்கே மணமுடித்துக் கொடுத்தான். அவரும் ஒவ்வொரு பெண்ணையும் தனித்தனியே கல்யாணம் பண்ணிக் கொண்டு, தன் பின்னோடு அழைத்துப் போனார்.

நடந்து போகையிலே, தனக்குப் பின்னால் வந்த மனைவிமாரைத் திரும்பிப் பார்த்தார் முனிவர். "மீன் குடும்பத்திலே கால் பங்கை அடைந்திருக்கிறோம்' என்று ரொம்ப மகிழ்ச்சி அவருக்கு!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனித்தனியாக ஐம்பது பவனங்கள் (வீடுகள்) நிர்மாணம் பண்ணினார். ஒவ்வொரு கிரஹத்திலும் ஒரு மனைவியைக் குடிவைத்தவர், அத்தனை கிரஹங்களிலும் தானும் இருக்கும்படியான மாயத் தோற்றத்தை ஏற்படுத்தினார். ஐம்பது கிரஹங்களிலுமிருந்தவர் வெளியே மரத்தடியிலேயும் இருக்கலானார்!

இப்படி ஒரு கிழவருக்குக் குழந்தைகளைக் கொடுத்து விட்டோமே என்ற வருத்தத்துடன் சக்ரவர்த்தி மாந்தாதா, தம் பெண்களைப் பார்க்க வந்தார்.

ஒரு பெண் விடாமல் அத்தனை பெண்களும் தந்தையை ஸ்தோத்திரம் பண்ணி வணங்கினார்கள்! 'இப்பேர்ப்பட்ட ஒரு வரனுக்கு எங்களைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தீர்களே... நாங்கள் சகல போகத்தோடு சந்தோஷமாயிருக்கிறோம்' என்று ஒத்தாற்போல் ஐம்பது பெண்களும் சொன்னார்கள்!

பார்த்தார் மாந்தாதா. முதல் பெண்ணைத் தனியே அழைத்து விசாரித்தார். அவள் சொன்னாள்:

"தந்தையே, நான் ரொம்ப மகிழ்ச்சியாகவும் சுபிட்சமாகவும் இருக்கிறேன். எனக்கொன்றும் போகத்தில் குறையில்லை. ஆனால் ஓரே ஒரு கஷ்டம்..."

"என்ன கஷ்டம்...?" என்றார் தந்தை.

"எப்போது பார்த்தாலும் பர்த்தா (கணவர்) இங்கேயே என் வீட்டிலேயே இருக்கிறார். மற்ற தங்கைகளின் கிரஹத்துக்குப் போவதேயில்லை... அவர்களை நினைத்தால் எனக்கு மனசுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்றாள்.

அடுத்த மகளைத் தனியாய் விசாரிக்கையிலும் மாந்தாதாவுக்கு இதே பதில் கிடைத்தது! தொடர்ந்து ஐம்பது பெண்களும் இதே பதிலைச் சொன்னார்கள் தந்தையிடம்!

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இப்படிப்பட்ட மகிழ்ச்சியான வாழ்க்கையினூடே ஒவ்வொரு கிரஹத்திலும் ஐம்பது குழந்தைகள் பிறந்தன. அவர்கள் வளர்ந்து நடக்கும் பருவத்திலே, குடும்பமே ஒன்றாயிருந்த ஒரு சமயத்தில், தன் பின்னே பார்த்துக் கொண்டார் முனிவர். "ஆஹா! எத்தனை அழகான குடும்பம் என்னுடையது!" என்று வியந்து கொண்டார்.

இவ்வாறு மகிழ்ந்தபடியே போய்க்கொண்டிருந்த போது திடீரென்று அவருக்கு விவேகம் வந்துவிட்டது!

இந்த விவேகம் மட்டும் எப்போது, எங்கிருந்து, எப்படி வருமென்று சொல்வதற்கேயில்லை!

'இப்போது நாம் குடும்பஸ்தனாகி என்ன சாதிச்சோம்...' என்ற எண்ணம் வந்தது அவருக்கு.

"பந்தத்தை இப்படி அதிகமாக்கிக் கொண்டோமே... ஜலத்துக்குள்ளே உட்கார்ந்திருந்தபோது ஒரு பந்தமு மில்லாமல், ஒரு நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தோமே. இப்போது ஏகப்பட்ட பாசத்தினால் பிணைக்கப்பட் டிருக்கிறோமே...! அநியாயமாய் ஒரு மீன் குடும்பம் நம்மைக் கெடுத்து விட்டதே' என்று... 'தடாரென்று' அத்தனை பந்தங்களையும் உதறி விட்டு, மறுபடியும் பழையபடி ஜலத்திலே போய் உட்கார்ந்து கொண்டார்.

இந்தக் கதையை ஆராய்ந்து பார்த்தால் எதுவுமே சாசுவதமில்லை என்பது புரிகிறது.

சாச்வதமான நித்யானந்தத்தை அடைய வேண்டு மென்றால் யாரை உபாஸனம் செய்வது...?

நரசிம்ஹனைத்தான் உபாஸனை செய்யவேண்டும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19

நரசிம்ஹ அனுஷ்டுப் மந்திரம் என்று ஒன்று உண்டு. அதிலே முப்பத்திரண்டு அக்ஷரங்கள். ஒவ்வொரு அக்ஷரமும் ஒரு பிரும்ம வித்தையை நமக்கு உபதேசம் பண்ணக்கூடியது. ஆகவே 32 பிரும்ம வித்தைகளாலும் ஆராதிக்கப்படுகிறவர் நரசிம்ஹர் என்று கொள்ளலாம்.

'ஏதாவது ஒரு பிரும்ம வித்தையை நம்மால் கற்றுக்கொண்டு அனுஷ்டிக்க முடியுமா?' என்றால் அது ரொம்பவும் சிரமம். ஒன்றைக்கூட நம்மால் அனுஷ்டிக்க முடியாது.

ஆனால் நரசிம்ஹனைப் பார்த்து, ஸ்ரீநரசிம்ஹாய நம: என்று ஒரு புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை செய்ய முடியும்! அந்த நரசிம்ஹனை தியானம் பண்ண முடியும். அப்படி தியானம் பண்ணிவிட்டால் எல்லா பிரும்ம வித்தையும் கிடைத்த பலன் நமக்கு உண்டாகும். அத்தனை பிரும்ம வித்தைகளின் நிலைக்களன் அந்தப் பரமாத்மா தான்.

பூர்வ காலத்திலே ஜாந சுருதி என்றொருவன் இருந்தான். வாரிவாரி வழங்கும் வள்ளன்மை மிக்கவன். எல்லாருக்கும் வாரிவாரிக் கொடுப்பான். தானம், தைரியம் போன்ற குணங்கள் இயல்பாக அமையணும். அவனுக்கு அது அமைந்திருந்தது.

ஏழு அடுக்கு உப்பரிகையிலே ஜான சுருதி படுத்துக் கொண்டிருந்தான் இரவு நேரம்... இரண்டு பரதேசிகள் அவனுக்கு உபதேசிக்க எண்ணினார்கள்.

Public domain. Digitization: Muthulakshmi Research Academy

வானத்தில் ஒரு ஹம்ஸ கூட்டம் (அன்னப் பறவைக் கூட்டம்) பறந்து போய்க்கொண்டிருந்தது. தாங்களும் ஹம்ஸப் பறவைகளாக மாறி, கூட்டத்துடன் பறந்தனர் அவ்விருவரும். ஜான சுருதி படுத்திருந்த இடத்துக்கு நேர் மேலே வந்தபோது, அவர்கள் இருவரும் பேசிக் கொண்டார்கள்.

ஒரு பறவை சொன்னது: "மந்தமான பார்வையுடைய நண்பா! கீழே படுத்திருப்பவனைப் பார்த்தாயா...? இவன் எப்பேற்பட்டவன் என்று உனக்குத் தெரியுமா?"

மற்றது பதில் பேசியது: "இவனொன்றும் அப்படி உயர்ந்தவன் இல்லை. ரைக்குவரைக் காட்டிலும் இவன் எப்படி உயர்ந்தவனாக முடியும்?"

உரையாடல் தொடர்ந்தது.

"அது யார் ரைக்குவர்?"

"உனக்கு ரைக்குவரைத் தெரியாதா? நான் காட்டுகிறேன், வா..."

படுத்திருந்த ஜான சுருதி எழுந்து விட்டான். தன்னைக் காட்டிலும் உயர்ந்த ரைக்குவரைத் தெரிந்துகொள்ள அவனுக்குப் பொறுக்க முடியாத ஆவல்!

தான் ஏழு அடுக்கு உப்பரிகையில் படுத்திருந்தால் ரைக்குவர் பதினாலு அடுக்கில் படுத்திருக்க வேண்டும் என்று எண்ணி, ஆட்களைக் கொண்டு நகரம் தோறும் தேடச் செய்தான். ஒரு நகரத்திலும் அவர் அகப்படவில்லை. பிறகு கிராமம், குக்கிராமம் என்று தேடி, ஒரு வழியாக ரைக்குவரைக் கண்டு பிடிததார்கள்.

எங்கே?

மிகச் சிறியதொரு குக்கிராமத்தில், ஒரு சேரியில் இருந்தார் ரைக்குவர். அங்கே ஒரு கட்டை வண்டி இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிலே முதுகைத் தேய்த்தபடி நின்றார்! அவர் உடல் முழுவதும் புழுத்து நெளியும் புண்கள்!

தியான சுருதியினால் நம்பமுடியவில்லை. 'இவரைத் தவிர வேறு ரைக்குவர் கிடையாது' என்றதும், இரண்டு யானைகள் மீது தங்கத் தாம்பாளத்தில் பட்டு, பீதாம்பரம், செல்வம் என்று குவித்து எடுத்து வருகிறான். அத்தனையையும் அவர் முன் சமர்ப்பித்து அனுக்கிரஹம் பண்ணப் பிரார்த்திக்கிறான்.

"இது அத்தனையும் ஒரு புழுவுக்குச் சமம்!" என்று தம் உடம்பிலிருக்கும் ஒரு புழுவைக் காட்டிச் சொல்கிறார் ரைக்குவர்!

"உன் நிலைக்கு இதெல்லாம் உயர்வாகத் தெரிகிறது. நான் இருக்கும் நிலைக்கு நீயும் வந்தால், என்னைப் போல்தான் நீயும் இவற்றைப் பார்ப்பாய்..." என்றார்.

"இவ்வளவு ஐச்வர்யத்தையும் புழுவாய் நினைக்கும் ஒரு நிலை இருக்கிறதா?" என்று வியக்கிறான் ஜான சுருதி.

"ஏன் இல்லை!"

"அப்படியானால், அதை அடைய நான் என்ன பண்ண வேண்டும்...?"

இப்படிக் கேட்ட ஜான சுருதியிடம் ரைக்குவர் யாரை உபாசிக்கச் சொல்லி உபதேசம் பண்ணினார் என்றால்... நரசிம்ஹனையே உபாசிக்கும்படி உபதேசித்தார்! அவனும் அவர் சொல்படி நரசிம்ஹனை உபாசித்து மோக்ஷத்தை அடைந்தான்.

ஆக, யார் தன்னை உபாசிக்கிறார்களோ அவர்களுக்குப் பலனைக் கொடுக்கக் கூடியவன் நரசிம்ஹன்.

'அடித்த கை பிடித்த பெருமான்' என்று பெயர் அவனுக்கு! 'எங்கடா!' என்று அடித்துக் கூப்பிட்டால்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'இதோ' என்று வந்து நம் கையைப் பிடித்துக் கொள்வான். வேறு எந்த அவதாரத்திலாவது இந்த அதிசயம் உண்டா!

விச்வத்துக்குக் காரணமானவனும் வேதாந்தத்திலே சொல்லப்பட்ட வித்யைகளுக்குப் பொருளாய் இருக்கக் கூடியவனும் நரசிம்ஹன்தான்.

அப்படிப்பட்டவனை வெறும் உக்ர ரூபியாக இல்லாமல், லக்ஷ்மியோடு கூடிய லக்ஷ்மி நரசிம்ஹனாக நாம் உபாசிக்க வேண்டும்.

ஈச்வரனே ஆச்சர்யமாய், நரசிம்ஹனை உபாஸிக்கும் படியான மந்திரத்தைச் சொல்கிறார். அதை யார் தினமும் சொல்கிறார்களோ அவர்களுக்கு ஆரோக்கியம், வித்யை, செல்வம் எல்லாம் சம்பவிக்கும்.

முக்கண்ணனே முக்கண்ணனின் பெருமையைச் சொல்லும் இந்த ஸ்தோத்திரம் அஹிர் புத்ரிய சம்ஹிதை என்பதில் உள்ளது.

எனவே, எல்லா அவதாரங்களிலும் உயர்ந்தது நரசிம்ஹ அவதாரம் எனக் கொள்ளலாம். இதை உபசாரமாகவோ, அதிசயோக்தியாகவோ சொல்ல வில்லை... காரணமிருக்கிறது!

நரசிம்ஹ அவதாரம் எதனால் ஏற்பட்டது என்று கேட்டால், ஹிரண்ய கசிபுவை சம்ஹரிப்பதற்காக ஏற்பட்டது என்று சாதாரணமாய் பதில் கிடைக்கும்.

ஆனால் ஹிரண்ய சம்ஹாரத்துக்காக ஏற்பட்டது அல்ல இந்த அவதாரம்.

'சரி, பிரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டதா இந்த அவதாரம்...?' என்றால், அதுவும் இல்லை!

அக்னியில் தூக்கிப்போடும் போதும் மலையிலிருந்து உருட்டும் போதும், சமுத்திரத்தில் எறிந்த போதும், யானையைக் கொண்டு இடறச் செய்த போதும், விஷப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்புகளிடையே விடப்பட்ட போதும் பிரஹலாதனை யார் ரக்ஷித்தார்கள்?

அப்போதெல்லாம் அவதரிக்காத நரசிம்ஹன், பிரஹ்லாதனின் வார்த்தையைக் காப்பாற்றத்தான் அவதரிக்கிறான்!

'எங்குமுளன் கண்ணன்...' 'அவன் இல்லாத இடம் கிடையாது' என்று பிரகலாதன் சொன்னபோது அதை உண்மையாக்க பரமாத்மா அவசரத் திருக்கோலம் பூண்டு சர்வ பதார்த்தங்களிலேயும் நிறைந்தான்!

இப்படி அவனை அவதரிக்கச் செய்த பிரஹ்லாதனே அவன் பெருமையைப் பேசுகிறான்.

அவசர அவசரமாகப் போட்டுக் கொண்ட வேஷமாம்! யோசித்து எடுத்த ராமாவதாரம் போலன்றி, தேவதைகளின் பிரார்த்தனைகளுக்கிரங்கித் தோன்றிய கிருஷ்ணாவதாரம் போலன்றி, நினைத்த மாத்திரத்தில் எடுத்த அவதாரம் நரசிம்ஹ அவதாரம்!

அவசரத் திருக்கோலம் என்றாலும் அதுதான் மிகவும் அழகான அவதாரமாக அமைந்திருக்கிறது!

மிக ஏற்பாடாக விருந்து சமைக்கும்போதெல்லாம் பிரமாதமாக அமைவதில்லை. ஆனால் ஊரிலிருந்து வரும் திடீர் விருந்தினருக்கு அவசரமாய்த் தயாரிக்கப்படும் எளிய உணவு அற்புதமாக அமைகிறது!

நரசிம்ஹ அவதாரம் இந்த அவசர உபசரணை மாதிரி.... அதன் அழகைச் சொல்லி முடியாது!

பிரஹ்லாதனின் வாக்கை மட்டுமின்றி பிரும்மாவின் வாக்கைக் காப்பதற்காகவும் எடுக்கப்பட்டது நரசிம்ஹாவதாரம்.

ஹிரண்யகசிபுவுக்கு எசகுபிசகான நிபந்தனைகளடங்கிய வரத்தைக் கொடுத்தவர் அவர்தானே...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'இரவிலும் பகலிலும், மனிதராலும் மிருகத்தாலும் எனக்கு அழிவு வரக்கூடாது' என்றெல்லாம் கேட்டான் அல்லவா?

பிரும்மா கொடுத்த அத்தனை வாக்கையும் காப்பாற்றிக் கொடுத்து அதே சமயத்தில் ஹிரண்யகசிபுவை சம்ஹாரமும் பண்ணப் பரிவுடன் எடுத்த அவதாரம் நரசிம்ஹ அவதாரம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பிரும்மா வாக்குக் கொடுத்துவிட்டால் என்ன?' என்று அதை மீறும் வல்லமையும் உரிமையும் பகவானுக்கு இல்லையா என்ன...? ஆனால் அவன் பிரும்மாவின் வாக்கைக் காப்பாற்றிக் கொடுக்க பிரயத்தனத்துடன் அவதரித்தான். ஏன்...

அந்த வாக்கு மீறப்பட்டால், பிரும்மாவின் வரம் செல்லாது என்று ஆகிவிடும்! அப்புறம் யாராவது பிரும்மாவை ஸ்தோத்திரம் பண்ணுவார்களா? ஏற்கெனவே அவருக்கு ஸ்தோத்திரமும் கோயிலும் குறைவு... அவர் தொடர்பான மந்திரங்களை தொனி குறைத்துத்தான் சொல்ல வேண்டும் என்று வாக்கு தேவதையின் சாபம் வேறு இருக்கிறது...

ஒரு ஊரில் உபன்யாசகர் ராமாயண உபந்யாசம் 48 நாள் முடித்து, வீட்டுக்குக் கிளம்புகிறார். உபன்யாசத்தை ஏற்பாடு செய்தவருக்குச் சந்தேகம்.

"சுவாமி! இந்த நாற்பத்தெட்டு நாட்களும் 'ராமன் ராமன்' என்றும் 'ராவணன் ராவணன்' என்றும் 'ராக்ஷஸன், ராக்ஷஸன்' என்றும் சொல்லிக் கொண்டேயிருந்தீர். இதிலே ராக்ஷஸன் யார்? ராமனா? ராவணனா?'' என்று கேட்டாராம்!

உபந்யாசகர் தமது மூட்டைகளைக் கட்டுவதை நிறுத்திவிட்டார்!

சந்தேகப் பேர்வழி தொடர்ந்து கேட்டார்.

"இப்ப கேட்ட சந்தேகம் இந்த நாற்பத்தெட்டு நாட்களா உண்டானதுதான். அதற்கும் மேல, ரொம்ப நாளா ஒரு சந்தேகம். பிரும்மாவுக்கு ஏன் நம் தேசத்தில் கோயில்களே இல்லை...?''

உபந்யாசகர் சொன்னாராம்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“உம்மையும் படைச்சு, எம்மையும் படைச்சு, உம்மெதிரே எம்மை நாற்பத்தெட்டு நாள் உபந்யாசம் பண்ண வைத்தாரே அந்த பிரும்மா! அதனால்தான் அவருக்குக் கோயிலே இல்லை போலும்...”

ஆக, பிரும்மாவுக்கு ஏற்கெனவே ஸ்தோத்திரமும் கோயில்களும் குறைவு. இந்த நிலையிலே பகவான் அவரை மதிக்கலைன்னா... வேறு யார் மதிப்பார்கள்? அதனால்தான் பிரும்மாவின் வாக்கைக் காப்பாற்ற நரசிம்ஹ அவதாரம் எடுத்தான்.

நாராயணனின் நாபியிலிருந்து உருவானவன் நான்முகன். அவன் நாபிக் கமலத்தில்தான் அமர்ந்திருப்பதை உணர்வதற்கே அவனுக்கு ரொம்ப நாட்களாயிற்றாம்! ஆயிரம் கோடி யுகங்கள் தவம் பண்ணி, நாராயணனே தமக்கு மூலம் என்று உணர்ந்தான் பிரும்மா! அந்த தேவதைக்கு ஒரு அகௌரவம் வரக்கூடாது என்கிற பரிவினால் அவன் கொடுத்த வரத்துக்கு எந்த வித பங்கமுமில்லாமல், அகடிதகடனா சாமர்த்தியத்தோடு அவதரித்தான் பகவான். அவனுக்கு எத்தனை காருண்யம் பாருங்கள்!



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20

நரசிம்ஹ அவதாரத்துக்குத் தனியான ஏற்றம் தருவது அவருடைய அத்யத்புத ரூபம்.

'ஸ்தம்பே ந த்ருச்யதே...?' என்று (ஸ்தம்பத்திலே - தூணிலே - தெரியலையே...?) என்று ஹிரண்ய கசிபு கேட்டபோது

'ஸ்தம்பேந த்ருச்யதே' (ஸ்தம்பத்திலேதான் தெரிகிறான்) என்று பதில் சொல்கிறான் குழந்தை பிரஹ்லாதன்.

"எனக்குத் தெரியாமல் உனக்குத் தெரிகிறானா...? இரு! இதோ உன் தலை வேறு, உடம்பு வேறுன்னு துண்டிக்கறேன்... அது பிரிஞ்சு போய்த் துடிக்கறச்சே அவன் வந்து தைப்பானா? பார்ப்போம்!" என்கிறான் அசுரன்.

"அந்தக் காரியம் அவன் பண்ண மாட்டான்!" என்கிறான் பிரஹ்லாதன்.

"அவன் பண்ணமாட்டான் என்றால் நீ ஏன் அவனை ஆச்ரயிக்கிறாய்...?"

''அங்கே ஸ்தம்பத்திலே இருக்கிறவன் என்ன அவ்வளவு கடினாத்மாவா... நீ கத்தி எடுத்து வெட்டறேன்னு சொல்றியே... அந்தக் கத்தியைக் கழுத்தருகே கொண்டு வர முடியுமா உன்னாலே! அதுவரை அவன் பார்த்துக் கொண்டிருப்பானா...!" என்கிறான் பிரஹ்லாதன்.

அவ்வளவு விச்வாசம் பகவானிடத்திலே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த மாதிரி பூரண விச்வாசம் வைத்தால்தான், "என்னை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது!' என்று பகவானிடத்திலே உரிமை கொண்டாடலாம்.

விச்வாசம் பண்ணுவதற்கு முன்னே சரணாகதி பண்ணினால் எடுபடுமா...?

யாகம் பண்ண ஒருவர் திரவிய உதவி செய்கிறார். நம்பிக்கை இல்லாமலேதான் செய்கிறார். ஆனால் யாகம் செய்து மழை பெய்த பிறகு அவருக்கு நம்பிக்கை வருகிறது! சரணாகதி விஷயம் அப்படி இல்லை... விச்வாசம் இல்லாமல் சரணாகதி பண்ணினால் பலிக்காது.

எம்பார் அவர்கள் காலட்சேப கோஷ்டியிலே இருந்த தமது சிஷ்யர்களுக்குச் சொல்லுவார்: "கர்ம, ஞான, பக்தி யோகமெல்லாம் பண்ணுவது கஷ்டம். அதெல்லாம் பண்ணி அவஸ்தைப்படாமல் சரணாகதியை சுலபமாகப் பண்ணிவிடலாம் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் சரணாகதிக்கு முன்னாடி மஹாவிச்வாசம் என்று ஒன்று இருக்கே... அது சுலபத்திலே வருவதில்லை... அக்கம்பக்கத்திலே உள்ளவர்களிடம் ஏற்படும் விச்வாசம் கூட நமக்கு பகவானிடத்திலே வருவதில்லை. கல எள்ளுக்கட்டு கல எண்ணெய் ஆன கதைதான்..." என்பார்.

சொல்லிவிட்டுக் கதையையும் விளக்குவார்:

பூர்வ காலத்திலே ஓர் எண்ணெய் வியாபாரி இருந்தான். நித்யம் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தான் அவன். செக்கு ஆடி, எண்ணெய் பிழிந்து, வியாபாரம் செய்ய வேண்டும்.

ஒரு நாள் அவன் செக்கு இரண்டாக உடைந்து போயிற்று! இன்னொரு செக்கு செய்வதற்கு மரத்தைத் தேடிப் போனான். ஒரு பிரும்மாண்ட மரம் - செக்குக்கு ஏற்றது என்று நான்கு ஆட்களைக் கூப்பிட்டு மரத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெட்டச் சொன்னான். நாலு ஆட்களும் தலைப் பாகையைக் கட்டிக் கொண்டு கோடரியை எடுத்து ஓங்கிய நேரத்திலே...

அந்த மரத்திலிருந்து 'பொத்'தென்று ஒன்று குதித்து, எண்ணெய் வியாபாரியின் திருவடியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

"இந்த மரத்தை வெட்டாதே! இதில் ரொம்ப நாட்களாக நான் இருக்கிறேன். இதை வெட்டினாயானால் எனக்கு வாசம் செய்ய வேறு இடம் இல்லாமல் போய்விடும்..." என்றது.

எண்ணெய் வியாபாரி யோசித்தான்... அவன் யோசிப்பதைப் பார்த்து அது மேலும் சொன்னது:

"இந்த எண்ணெய் வியாபாரம் உனக்கு எதுக்கு...? கையெல்லாம் எண்ணெய் ஒட்டிக்கொண்டு... சங்கடமில் லையா.... நீ எள்ளு வியாபாரம் செய்யலாமே? அதுக்கு நான் உதவி செய்யறேன். தினமும் சூர்ய அஸ்தமன வேளையிலே உன் வீட்டு வாசலில், ஒரு கல எள்ளு ஆகும்படியான அளவுக்கு எள்ளுக் கட்டைக் (எள் விளைந்த கதிர்கள்) கொண்டு வந்து போடுகிறேன்..." என்றது.

இவ்வளவு தூரம் அது பேசிய பிறகு அவன் கேட்டான்: "இத்தனை அக்கறையாகச் சொல்கிறாயே, நீ யார்...?" என்று.

"நான் இந்த மரத்திலே ரொம்ப நாட்களாக இருக்கிற பிசாசு!" என்றது அது.

நடுநடுங்கிப் போய் விட்டான். முதலில் அதனிடம் பேச பயப்படாதவன் 'பிசாசு' என்றவுடனேயே பயந்து விட்டான். ஆனால் அது அவன் திருவடியைப் பிடித்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு தொடர்ந்து கெஞ்சுவதைப் பார்க்க, அவனுக்குத் தைரியம் வந்து விட்டது.

“சரி... மரத்தை வெட்டவில்லை. ஆனால் சொன்னபடிக்கு நீ எள்கட்டுக் கொண்டு போடாவிட்டால் நான் என்ன செய்ய...?” என்றான்.

“நான் என்ன மனிதனா... ஒரு சொல் சொல்லிவிட்டு அதைச் செய்யாமல் போறதுக்கு...? துர்தேவதையானாலும், கொடுத்த வாக்கைக் காப்பேன்” என்றது!

துர்தேவதைகளும் பரிகசிக்கிற அளவுக்கு நமது நிலை ஆகியிருப்பதைப் பாருங்கள்!

எண்ணெய் வியாபாரி பிசாசு சொன்னதை ஒப்புக்கொண்டு மரத்தை வெட்டாமல் போனான்.

சொன்னதுபோலவே ஒரு கலம் எள் ஆகும்படியான எள்ளுக்கட்டை தினமும் ஆறுமணிக்கு அவன் வீட்டில் கொண்டு போட்டது அந்தப் பிசாசு.

போகப் போக ஆறு மணி என்பது ஆறரை ஆயிற்று. அப்புறம் ஏழு... ஏழரை... என்றாகி... ஒரு நாள் இரவு ஒரு மணிக்குக் கொண்டு வந்து எள்கட்டைப் போட்டது!

ஏன் என்று பார்த்தால்... பிசாசுக்கு எள் பயிரிட முடியுமா...? யார் யாரோ பயிரிட்டதை அறுத்துக் கொண்டு வந்து அது போட்டு விடுகிறது. நிரந்தரமாக எள் பயிர் செய்பவர்கள் கிடைப்பார்களா என்ன...?! அதனாலே அந்த எள்ளுக்காக பிசாசு பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்லை! நானா திக்கிலும் போய்த் தேடி அலைந்து அவஸ்தைப் படுகிறது.

ஒருநாள் இரவு இரண்டு மணிக்கு எள்ளுக்கட்டைக் கொண்டு வந்து போட்டுவிட்டு அது யோசிக்க ஆரம்பித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'இந்த வேலையை தினமும் பண்ணுகிறோமே... எதற்காகப் பண்ணுகிறோம்...? குடியிருந்த அந்த மரத்தை ரக்ஷிக்கத்தானே பண்ணுகிறோம். ஆனால் இந்த வியாபாரியிடத்திலே இந்த வாக்கைக் கொடுத்த பிறகு ஒருநாள் கூட அந்த மரத்திலே போய் உட்கார முடியலையே... இந்த நிலையை விட அவன் அந்த மரத்தை வெட்டிக் கொண்டு போகவே அனுமதித்திருக்கலாம் போலிருக்கிறதே...! மூன்று மாத காலமாக வீணான காரியத்தையல்லவா நாம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்... இன்றைக்கு எப்படியாவது ஒரு நிமிஷமாவது அந்த மரத்திலே போய் உட்கார வேண்டும்' என்று தீர்மானம் பண்ணிக்கொண்டது.

'இப்படிப் பிசாசுக்கு வந்த விவேகம் மனிதனுக்கு வருமா...?' என்று கேள்வி எழுப்புவார் எம்பார்! 'மனிதன் உட்கார்ந்து அறியான்! எத்தனை நாள் ஆனாலும் தேக சஞ்சாரம் பண்ணுவதற்கே சரியாயிருக்கிறதே... எப்போது மனிதனுக்கு விவேகம் வருமோ...?' என்பார்.

இன்றைக்கு எப்படியாவது நேரத்திலே போய் உட்காரணும் என்று தீர்மானித்த பிசாசு அந்த மரத்திடம் போனது. அங்கே போனால்... அந்த மரத்திலே வேறொன்று உட்கார்ந்திருந்தது! நூதனமான புதுப் பிசாசு அது!

புதுப் பிசாசைப் பார்த்துப் பழைய பிசாசு, "நீ யார்?" என்று கேட்டது!

புதுப் பிசாசு சொன்னது: "உன்னைப் போல ஒரு பைத்தியம் உண்டா? மனுஷனைப் பிடித்துக்கொண்டு பிசாசு ஆட்டும் என்பார்கள். உன்னைப் பிடித்துக்கொண்டு அந்த மனிதன் ஆட்டுகிறானே...! உன்னைப் போல அசடு உண்டா? நீ போன பிறகு மூன்று மாதமாக இந்த மரத்திலே நான் வசித்து வருகிறேன். இப்போது நீ வந்திருக்கிறாய். உன்னை விரட்டியடிக்க நான் தயாராயில்லை... ஒன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்கிறேன் - அந்த எண்ணெய் வியாபாரியைக் கொன்றுவிட்டு வருகிறேன் - அதன் பிறகு எனக்கும் இந்த மரத்திலே இருக்க நீ இடம் கொடுப்பாயா?" என்றது.

"அந்தக் காரியத்தை நீ பண்ணினால் நீயும் நானும் சௌக்கியமாக இருக்கலாம்..."

'சரிதான்' என்று கிளம்பிய புதுப் பிசாசு நேராக எண்ணெய் வியாபாரி வீட்டின் புழக்கடைக்குப் போயிற்று. அங்கே இரண்டு மாட்டுக் கொட்டகைகள் இருந்தன. ஒன்றில் இருபது மாடுகள் இருந்தன. இன்னொன்றில் ஒரே ஒரு மாடு தனித்து இருந்தது. அந்த இரண்டாவது கொட்டகையிலே போய் உயரத்திலே உட்கார்ந்து கொண்டது புதுப் பிசாசு. விடியற்காலை எண்ணெய் வியாபாரி கொட்டகைப் பக்கம் வந்தால் அவனை அமுக்கிக் கொன்று விடலாம் என்று காத்துக் கொண்டிருந்தது.

ஆனால் விடிந்து நேரமாகியும் எண்ணெய் வியாபாரி மாட்டுக் கொட்டகைக்கு வரவேயில்லை. ஓர் அரசமரத்தடியிலே உட்கார்ந்து கொண்டு மாடுகளுக்கு லாடம் அடிக்கும் வேலையை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு மாடாகப் பிடித்து அழைத்து வரும்படி பணியாட்களுக்குக் கட்டளையிட்டுக் கொண் டிருந்தான்.

"அதோ அந்தக் கொட்டகையிலே இருக்கிற புதுப் பிசாசைப் பிடித்துக் கொண்டு வா!" என்று ஒரு கட்டளை அவனிடமிருந்து வரவும் நடுநடுங்கிப் போய் விட்டது புதுப் பிசாசு!

எண்ணெய் வியாபாரி குறிப்பிட்டது தனியே கட்டியிருந்த மாட்டை! அது சந்தையிலே பிடித்த புது மாடு. முரண்டு பண்ணி மற்ற மாடுகளை இடித்ததால் தனியே கட்டி வைத்திருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிஜப் பிசாசோ, தன்னைத்தான் எண்ணெய் வியாபாரி பிடித்து லாடம் அடித்துவிடுவான் என்று பயந்தது! ஓடிப் போய் அவன் திருவடிகளில் விழுந்து, 'என்னை ஒன்றும் பண்ணிவிடாதே!' என்று கெஞ்சியது!

"நீ யாரு?" என்று கேட்டான் அவன்!

"நான்தான் புதுப் பிசாசு..."

"புதுப் பிசாசா?"

"என்னை ஒன்றும் செய்யாமல் விட்டாயானால் அந்தப் பழைய பிசாசைக் காட்டிலும் உனக்குச் சகாயமாய் இருப்பேன். அது ஒரு கலம் எள்ளு ஆகும்படியான எள்ளுக் கட்டை தினமும் உனக்குக் கொண்டு போட்டது. நான் ஒரு கலம் எண்ணெயே பிழிந்தெடுக்கும் அளவுக்கான எள்ளுக்கட்டை தினமும் கொண்டு போடறேன்..."

"கட்டாயம் போடுவாயா...?"

"கட்டாயம் போடுவேன்..."

"அப்படியானால் போ!" என்றான் எண்ணெய் வியாபாரி.

தலையைச் சொரிந்தபடி போய் பழைய பிசாசைப் பார்த்தது புதுப் பிசாசு!

"என்ன, போன காரியம் முடிந்ததா?" என்று அது கேட்க, இது நடந்த கதையைச் சொல்ல... "நான் ஒப்புக் கொண்டதைக் காட்டிலும் அதிகமாக அல்லவா நீ ஒப்புக் கொண்டிருக்கிறாய்... உனக்கெங்கே இந்த மரத்துக்கு வர நேரமிருக்கப் போகிறது!" என்றது அது!

கலம் எள்ளு கலம் எண்ணெய் ஆனகதை இதுதான்.

கர்ம யோகமும் ஞான யோகமும் கடினமானவை. அதனால் சரணாகதியைச் சுலபமாகப் பண்ணிவிடலாம் என்று நாம் எண்ணினால் இந்தக் கலம் எண்ணெய் போல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு விஷயம் குறுக்கே வருகிறது. அந்த விஷயம்தான் மகாவிச்வாசம்! கலம் எண்ணெய்க்கான எள்ளுக்கட்டை தினமும் அடைவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் சரணாகதிக்கான மஹா விச்வாசத்தை நம் மனத்திலே எய்துவது.

பகவான் எதிரே இருக்கிறான் என்ற பாவனையில் தூபம், தீபம், நைவேத்தியம் என்று சமர்ப்பிக்கிறோம். அவன் வாஸ்தவத்தில் அங்கே உட்கார்ந்திருக்கிறான், நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்கிற எண்ணம் நமக்கு வர வேண்டாமா? பூரணமான விச்வாசம் வர வேண்டாமா...? அது வருவது ரொம்ப சிரமம்.

அந்த விச்வாசம் பிரஹ்லாதனுக்கு இருந்தது. அதனால்தான் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திலே சொன்னதுபோல் உறுதியுடன் அவனால் பேச முடிந்தது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21

எல்லா புராணங்களும் போற்றும் அவதாரம் நரசிம்ஹ அவதாரம்; எல்லா பக்தர்களும் புலவர்களும் துதிக்கும் அவதாரம் நரசிம்ஹ அவதாரம்.

சரஸ்வதி நதி தீரத்திலே ரொம்ப சிந்தனையோடு - கவலையோடு அமர்ந்திருந்தார் வியாஸர். நாரதர் அங்கே எழுந்தருளினார்.

"இவ்வளவு சிந்தை உமக்கு எதற்கு...?" என்று வியாஸரிடம் கேட்டார்.

சிதா - சிந்தா - இவை இரண்டிலே எது உயர்ந்தது என்று கேட்டால் 'சிதா' தான் உயர்ந்தது என்று சொல்லி விடலாம்.

சிதா என்றால் சிதை - விறகு - விராட்டிகளினால் ஆன படுக்கை!

சிந்தை என்பது மனத்திலே எழுகிற கவலை.

- இந்த இரண்டிலே சிதையே உயர்ந்தது என்றால்...? சிதையானது பிராணனற்ற சரீரத்தைத்தான் எரிக்கிறது. சிந்தையோ பிராணனுள்ள சரீரத்தையே எரிக்கிறது! அதனால் சிதையே தேவலாம்!

"இப்படிப்பட்ட சிந்தைக்கு இடம் கொடுக்கலாமா...? அந்த சிந்தை போக வேணுமென்றால் ஸ்ரீ கிருஷ்ண புராணத்தை நீர் எழுத வேண்டும்" என்று வியாஸரிடம் சொன்னார் நாரதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“இதுவரை எழுதின மகாபாரதத்திலே கிருஷ்ண புராணத்தை ஆங்காங்கே கோடி காண்பித்திருக்கிறீர்கள். அதை நன்றாக, விரிவாக, ஸ்பஷ்டமாக எடுத்துச் சொல்ல வில்லை. அவன் லீலையைச் சொல்லக்கூடிய ஒரு புராணத்தை இயற்றுங்கள்; உமக்குத் தெளிவு பிறக்கும்...” என்றார் நாரதர்.

அதற்காகவே ஸ்ரீமத் பாகவதம் இயற்றப்பட்டது. கிருஷ்ணாவதாரத்துக்காகவே எழுந்த பாகவத புராணத்திலே, ‘அற்புதமான அவதாரம்’ என்று கிருஷ்ணரைச் சொல்கிறார் வியாஸர். ஆனால் அவரே நரசிம்ஹனைச் சொல்கிறபோது அதியத்புத அவதாரம் என்று விளக்குகிறார்!

ருக்மிணி பிராட்டி, கண்ணனுக்கு ஓலை எழுதுகிறாள். அதிலே ஏழு இடங்களில் பகவானை அழைக்கிறாள். ஓரிடத்தில் கூட ‘கிருஷ்ணா’ என்று அவனைக் கூப்பிடவில்லை. ஏன்...?

‘கிருஷ்ணன் பொய் சொல்கிறவன்; புளுகிலே வல்லவன்’ என்றெல்லாம் கோபிகாஸ்த்ரீகள் அவனைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். ‘பொய் அவதாரம்’ ஆனதினாலே கிருஷ்ணனைக் கூப்பிட்டால் காரியம் ஆகாது! பொய்யில்லாத பெருமான் யாரென்றால் நரசிம்ஹன்தான்! அழைத்தவுடனே வந்து ரக்ஷிக்கக் கூடியவன். எனவே ருக்மிணியின் இதயம் கவர்ந்த அவதாரமாகிறது இந்த அவதாரம்.

ராமாவதாரத்திலேயும் மாரீசன் ராமனை ‘நரசிம்ஹா’ என்று அழைக்கிறான். ஆஞ்சநேயரும் இலங்கையிலே சீதா தேவியிடம் ‘அம்மா நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? என் முதுகிலே ராமன் வருவான். நரசிம்ஹனைப் போல் வருவான்’ என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராமாவதாரத்திலே எங்கு தொட்டாலும் இப்படி நரசிம்ஹ பலம் தெரிகிறது.

மஹாபாரத சாரமான விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே, விச்வ சப்தத்தினாலே, விச்வயோனி என்று நரசிம்ஹனைக் காட்டினதாலே... நரசிம்ஹன்தான் விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் ஸாரம் என்று காட்டியிருக்கிறார்கள். விஷ்ணு சஹஸ்ரநாமம் முழுதுமே பாரதத்தின் ஸாரம் என்பதாலே மகாபாரதம் மொத்தமும் நரசிம்ஹனையே கொண்டாடு கிறது என்று தெரிகிறது.

பத்மாவதி கல்யாணத்திலே ஒரு காட்சி. தாயார் மணவறையிலே மணக்கோலத்திலே அமர்ந்திருக்கிறார். எல்லா உணவு வகைகளும் தயாராகி நிரம்பியிருக்கிறது. ரிஷிகள், வேத வித்துக்கள் உணவு கொள்ளக் காத்திருக் கிறார்கள். 'உணவை யாருக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பரிமாறுவது?' என்கிற கேள்வி எழுகிறது.

பகவானிடமே கேட்கிறார்கள். "அஹோபில க்ஷேத்திரத்திலே உள்ள நரசிம்ஹனுக்கு நிவேதனம் செய்து உணவு வினியோகிக்கப்படட்டும்" என்று சொல்கிறார் ஸ்ரீநிவாஸ பெருமாள். அதனால்தான் ஸ்ரீநிவாஸர் நரசிம்ஹருக்குக் கைகூப்பி வணங்குவதை இன்னமும் அஹோபில க்ஷேத்திரத்திலே பார்க்கலாம். ஸ்ரீ ராமனாலும் ஸ்ரீநிவாஸ பெருமாளினாலும் வணங்கப்பட்டவர் என்பதாலே நரசிம்ஹனை பெரிய பெரிய பெருமாள் என்று அழைக்கிறோம்.

பெரியாழ்வார் பல்லாண்டு பாடுகிறபோது 'அந்தியம்போதில் அரியுருவாகி அரியை அழித்தவனை...' என்று பாடுகிறார்! அன்று அவன் உக்கிரமூர்த்தியாக இருந்ததாலே யாரும் அருகே போய்ப் பல்லாண்டு பாட முடியவில்லை. அந்தக் குறைதீர, பிற்காலத்தில் பாடினார்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஹோபில க்ஷேத்திரத்திலே அவன் அழகைப் பாடுகிறார் திருமங்கையாழ்வார்.

ஹிரண்யனை சம்ஹாரம் பண்ணியவன் அங்கே காட்சியளிக்கிறான். ஆழ்வார் பார்க்கிறபோது அவருக்கு என்ன தெரிகிறதாம் அங்கே...? சிம்ஹங்கள் எல்லாம் யானைகளை அடித்துத் தின்றுவிட்டு, தந்தங்களை வகைப்படுத்தி வைத்திருக்கிறதாம்! ஒவ்வொரு தந்தமாகக் கொண்டு வந்து நரசிம்ஹனின் திருவடியிலே இட்டு ஓம் நரசிம்ஹாய நம: என்று அர்ச்சனை பண்ணுகிறதாம். சிம்ஹம் சிம்ஹத்தை அர்ச்சனை பண்ணும் காட்சி சிங்கவேள் குன்றத்திலே!

திருமங்கையாழ்வாரின் அழகிய பாசுரம் ஒன்றில் 'நரசிம்ஹனைப் பாடாத பாட்டும் ஒரு பாட்டா? அவனைப் பேசாத நாவும் ஒரு நாவா? அவன் புகழ் கேளாத செவியும் ஒரு செவியாகுமா?' என்று கேட்கிறார்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்திலே கம்பராமாயண அரங்கேற்று மண்டபம் இருப்பது தெரியும். அங்கே கம்பர் யுத்த காண்டம் ஆரம்பிக்கும்போது இரணியன் வதைப்படலத்தைச் சொன்னாராம். விபீஷணன் ராவணனுக்கு உபதேசம் பண்ணுகிறான். 'இப்படியெல்லாம் தீமை செய்யாதே! இரணியனை அழித்த நரசிம்ஹன் தான் ராமனாக அவதரித்திருக்கிறான். அவனை எதிர்த்து அழிவைத் தேடிக் கொள்ளாதே' என்று நரசிம்ஹ அவதாரக் கதையைச் சொல்கிறான்...

அரங்கேற்று மண்டபத்தில் இருந்த மகான்கள், பண்டிதர்களெல்லாம் ஆட்சேபித்தார்களாம். வால்மீகியின் மூலத்திலே இரணியன் வதைப் படலம் கிடையாது. எனவே கம்பராமாயணத்திலும் அது இருக்கக் கூடாது. அதை நீக்கிவிட்டு கம்பர் தம் ராமாயணத்தை அரங்கேற்றலாம் என்றார்களாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கம்பனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை... அப்போது ஒரு சில வித்வான்கள், 'இந்தப் புராணத்தின் தெய்வீக அம்சம் என்ன என்பதைக் காட்டினால் இதை ஒப்புக் கொள்கிறோம்' என்றார்கள்.

கம்பர், அழகிய சிங்கர் சன்னதிக்கு எதிரிலே போய் நின்று கொண்டார். 'ஒன்றே உரைக்கில் ஒன்றேயாம்...' என்ற காப்புச் செய்யுளில் ஆரம்பித்துப் பாட ஆரம்பித்தார். 'ஆரடா சிரித்தாய்?' என்ற சொல் வந்த கட்டத்திலே, உள்ளுக்குள்ளே விக்ரஹ ரூபியாய் இருக்கும் பெருமான் சிரித்து, தலையை ஆட்டி, இருகைகளையும் தூக்கி, 'நான் ஏற்கிறேன்' என்று இரணியன் வதைப் படலத்தை ஏற்றானாம். ஆகையினாலே இரணியன் வதைப் படலம் கம்பராமாயணத்திலே இடம்பெற்று அரங்கேறியது. பகவானே அங்கீகரித்த அவதாரமாகிறது நரசிம்ஹ அவதாரம்!

நம்மாழ்வார் வாக்கிலே வருவதைப் பாருங்கள்: 'அங்கே அப்பொழுதே அவன் வீயத் தோன்றியவன்' என்கிறார். நினைத்த இடத்தில் நினைத்த கணத்தில் தோன்றியவனின் காருண்யத்தைச் சொல்கிறார். 'என் சிங்கப் பிரான்' என்று அவனை அழைக்கிறார். அந்தப் பாசுரத்தை பிறர் சொல்லும்போது, அனைவருமே அவரவர் நரசிம்ஹனை அபிமானிக்கும்படியாகச் செய்து விட்டார் நம்மாழ்வார்.

காஞ்சி வரதராஜ பெருமாளைப் பார்த்து, 'நரசிம்ஹா' என்கிறார் சுவாமி தேசிகன். உலகத்தின் எல்லா பதார்த்தங்களிலுமே நிறைந்திருக்கிறான் அவன். என்றாலும், அவன் வெளிப்பட்டது ஒரு ஸ்தம்பத்திலிருந்து தான். 'குழந்தை பிரகலாதன் எந்த இடத்தைக் காட்டுவானோ?' என்று காருண்யத்துடன் எல்லா இடத்திலும் நிறைந்து இருந்தான். எங்கு தட்டினாலும் உடனே வர சித்தமாயிருந்தான்.

In Public domain- Digitization Muthulakshmi Research Academy

வேகத்தைப் போல், கருணையும் தயையும் அதிகம் இந்த அவதாரத்திலே!

அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர் சிங்க உருவாய்
உளந்தொட்டு இரணியன் ஒண்மார்வகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி...

என்று பெரியாழ்வார் பாடுகிறார்.

அளந்திட்ட தூண்! தங்கச் செங்கல் கொண்டு ரத்தினங்கள் இழைத்த ஸ்தம்பமாம் அது! குழந்தை பிரஹ்லாதனை இழுத்து வந்து, பிரத்யேகமாய் அதைக் காட்டிக் கேட்டானாம் ஹிரண்யன். தானே அருகிலிருந்து கட்டுவித்த தூணில் நாராயணன் இருக்க முடியாது என்கிற தீர்மானம் அவனுக்கு!

'ஏன் இருக்க முடியாது?' என்று கேட்டது குழந்தை. உடனே அந்த இடத்திலிருந்து ஆவிர்பவித்தான் பரமாத்மா. சிம்ஹமாய் - நரம்கலந்த சிம்ஹமாய்த் தோன்றினான்.

'ஏன் சிம்ஹமாகத் தோன்ற வேண்டும்? புலியாக வரக்கூடாதா?' என்றால்... நாம் நினைக்கிற, விரும்புகிற, ரூபத்தில் தோன்றுகிறவன் அவன்.

குழந்தை பிரஹ்லாதனை மடியில் உட்கார்த்திக் கொண்டு இரணியன் கேட்கிறான்:

"உலகிலேயே மிகவும் சாது யார்...?" என்று

அப்போது பிரஹ்லாதன் 'இதைத்தான் சாது என்று நினைக்கிறேன்...' என நரசிம்ஹனைச் சொன்னானாம். எனவேதான் அந்தக் குழந்தை விரும்பிய ரூபத்திலே எம்பெருமான் தோன்றினார்.

'இசை பாடிப் பாடி கண்ணீர் மல்கி எங்கும் நாடி நாடி நரசிங்கா என்று வாடி வாடும் இவ்வாநுதலே...' என்று நம்மாழ்வார் பாடுகிறார். இவரது ஆசையைப் பாருங்கள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைகுண்டத்திலே போனால் பரவாசுதேவனாக, ஆதிசேஷன் கர்ப்பத்தில் - ஒரு கால் மடித்து, ஒரு காலை ஒயிலாகத் தொங்கவிட்ட நிலையில் நாராயணனைப் பார்க்கலாம். ஆனால் ஆழ்வாரோ அங்கேயும் நரசிம்ஹனையே பார்க்க வேண்டும் என்கிறார்!

சொட்டை நம்பி என்று ஒருவர் ஸ்ரீரங்கத்திலே இருந்தார். அவருடைய அந்திம காலம் நெருங்கியபோது, சிஷ்யர்களெல்லாம் சூழ்ந்திருந்து கேட்டார்கள்: "இப்போது உங்கள் மனத்திலே என்ன நினைப்பு ஓடுகிறது...? நினைப்பதைச் சொல்லுங்கள்" என்றார்கள்.

அதற்கு அவர் சொன்னார், "எனக்கு நல்ல ஆசார்ய சம்பந்தம்; மோக்ஷத்தைக் கட்டாயம் அடைந்துவிடுவேன். திரும்பி வருதல் இல்லாத சாசுவத நிலையை அடைவேன். வைகுண்டம் கட்டாயம் போவேன். ஆனால்... வைகுண்டத்துக்குப் போய்ப் பார்ப்பேன்... அங்கிருக்கும் படியான பரமாத்மா, நம் க்ஷேத்திர ரங்கநாதரைப் போல இல்லாவிட்டால் முறித்துக்கொண்டு வந்துவிடுவேன்...!"

சொட்டை நம்பி வைகுண்டத்திலேயும் ரங்க நாதரையே சேவிக்க விரும்பிய மாதிரி, ஆழ்வார் மோஹத்திலும் நரசிம்ஹ மூர்த்தியையே சேவிக்க விரும்புகிறார்.

அந்த மூர்த்தியைச் சேவித்தவருக்கு வேறு மூர்த்தியை சேவிக்கப் பிடிக்குமோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22

மட்டபல்லி க்ஷேத்திரத்தில் குகைக்குள்ளே வாசம் பண்ணுகிறான் நரசிம்ஹன். யாரேனும் ஒருத்தர் தீவட்டி எடுத்துப்போய் வழிகாட்டினால்தான் உள்ளே போகலாம். அந்த மாதிரி குகை. வேதாந்த குகைக்குள்ளே தத்துவமாய் அடங்கியிருப்பவனை ஓர் ஆசார்யரின் வழிகாட்டலில்தான் சேவிக்க முடியும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான். அப்படி ஒருத்தர் வழிகாட்ட உள்ளே போய் விட்டோமானால், இன்றைக்கெல்லாம் சேவிக்கலாம். எம்பெருமான் வடிவழகைக் கண்டு ஸ்தோத்திரம் பண்ண எல்லா துன்பமும் போய்விடும் என்கிறது வேதம்.

எப்பொழுதும் பகவானின் பெருமையையே பேசணும் என்று வேதம் காட்டும் வழியைத்தான் ஆசார்யர்களும் காட்டுகிறார்கள். 'எம்பெருமானை உபாஸனை பண்ணு - அப்படிப் பண்ண முடியாவிட்டால் அவனை இந்த விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே வரும் 'விச்வம்' என்கிற சப்தத்தைச் சொல்லி அவன் பெருமையை நினை.'

கடினமான கனத்தை (வேதம்) அத்யயனம் பண்ணி மஹரிஷிகளைப் போல சிரமப்பட்டு, சரீரத்தை வருத்தி, ஊன் வாட வாட உண்ணாதிருந்து அவனை வேண்டின காலம் மாறி விட்டது.

இப்போது சிரமமில்லாமல் காரியம் செய்ய வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. அடியேன் பண்ணுகிற இந்த உபன்யாஸத்தையே எடுத்துக் கொள்வோம். இதிலே என்ன சிரமம். உடம்பு சிரமப் படாமலிருக்க, மின் விசிறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுற்றுகிறது. குரல் எல்லாருக்கும் கேட்கும்படியா ஒலிபெருக்கி இருக்கிறது...

ஆனால் ஆதி காலத்திலே முனிவர்கள் பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று பகவானை உபாஸித்திருக்கிறார்கள். நான்கு பக்கமும் நான்கு அக்னி தகிக்கும்; தலைக்கு மேலே சூரியன்; கடும் வெயில் காலம் - சித்திரை வைகாசியிலே இது நடக்கும். குளிர் காலத்திலே தனுர் மாசத்திலே - கழுத்தளவு ஜலத்திலே நின்று கொண்டு உபாஸனை பண்ண வேண்டும்! நமது இந்திரியங்கள் மிகவும் பலம் வாய்ந்தவையானதாலே அவற்றை நிக்ரஹம் பண்ணி, ஊன் வாட வாட உண்ணாதிருந்து உயிருக்குக் காவலிட்டு மஹரிஷிகளெல்லாம் பகவானைக் கண்டார்கள்.

இப்போது அந்த சக்தியெல்லாம் நமக்கில்லை என்பது ரொம்ப ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. கால வெள்ளோட்டத்தில் வேக வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறோம்...

'அப்படியானால் வேத அத்யயனமே நடப்ப தில்லையா?' என்று கேட்டால், நடந்து கொண்டு தானிருக்கிறது. மகான்கள் பலர் அதைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 'நம்மால் பண்ண முடியாது' என்கிறவர்கள் சுலபமாய் அவனை இந்த விச்வ சப்தத்தினாலே ஆராதித்தால், ஒரு புஷ்பத்தை எடுத்துப் போட்டால்... அந்த வேத உபாஸனையின் பயனைச் சுலபமாய் அடையலாம்.

விச்வ யோனி: விச்வத்துக்கெல்லாம் காரண மானவன் என்று அறியப்படுகிற அந்த நரசிம்ஹனை ஆராதித்தவர்கள் வேறு நினைப்பே மனத்தில் கொள்ளமாட்டார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விச்வ சப்தத்தினாலே மறைத்துச் சொல்லப் படுகிறவன் நரசிம்ஹன் என்று பார்த்தோம். அந்த விச்வமாகிய பரபிரும்மம் ஒரு முறை அசுவமேத யாகத்துக்குப் போயிற்று! எங்கே...?

நர்மதா நதி தீரத்திலே நடந்தது அந்த அசுவமேத யாகம்.

ஒவ்வொரு நதிக்கும் ஒரு பெருமை உண்டு. நர்மதா நதியின் பெருமை கூர்ம புராணத்திலே பேசப்பட் டிருக்கிறது. சந்தியாவந்தனத்திலே இந்த நதி குறித்த தியானம் வருகிறது. நர்மதா நதியை தியானம் பண்ணினால் நம் பக்கத்திலே விஷ ஜந்துக்களே வராது.

சரி, அந்த நதிக்கரையில் யாகம் செய்தவன் யார்...?

பிரஹ்லாதனின் பிள்ளை விரோசனன். இந்த விரோசனனின் மகன் வைரோசனன். இவனுடைய பிள்ளை மகாபலி. அவன் நர்மதா நதிக்கரையிலே அசுவமேத யாகம் பண்ணினான்.

அசுவமேத மஹா மந்திரம் என்ற ஒன்று அந்த யாகத்தின்போது ஜபிக்கப்படும். அந்த மஹா மந்திரத்தைக் கேட்டாலே மஹா புண்ணியம். அதனால்தான் இப்போது கலிகாலத்திலும் நம்மால் அசுவமேதயக்ஞம் பண்ண முடியாவிட்டாலும் அந்த மந்திரத்தை மட்டும் பாராயணம் பண்ணுவது என்று தொடர்ந்து நடைபெறுகிறது.

சுவாமி தேசிகன், 'எல்லா மகான்களும் ஒருசேர ஏகாதசியன்று அசுவமேத மந்திரத்தைப் பாராயணம் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்.

அஹோபில மடத்திலே ஸ்ரீமத் அழகிய சிங்கர் அசுவமேத மந்திர பாராயணத்தை நடத்தி வைக்கிறார்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

இப்படியொரு விசேஷ மந்திரத்தை உள்ளடக்கிய யாகம் என்றால் அது எத்தனை சிரேயஸ் உண்டு பண்ணக் கூடியது!

இந்த அசுவமேத யக்ஞம் என்பது ரொம்ப பெரிய கர்மா என்கிறது வேதம்.

ஓர் அரசன் (மஹாபலி அல்ல... வேறொருவன்...) சங்கல்பம் செய்து கொண்டு இதை நடத்திக் கொண்டிருக்கிறான். நடத்திவைக்கும் வேத வித்துக்கள் சர்வ சிரமங்களையும் அனுபவித்து நடத்திக் கொண்டிருக் கிறார்கள்.

பூர்ணாஹூதிக்கு முன்னே அங்க ஹோமம் நடக்கிறது. நாற்பத்தெட்டு நாட்களாக சர்வஜாக்கிரதையாக ஹோமத்தை நடத்திய வேத விற்பன்னருக்கு அன்றைய தினம் தூக்கம் வந்து விட்டது! அவருடைய கை மட்டும் அனிச்சையாக திரவியங்களை எடுத்து, அனிச்சையாக அக்னியில் சேர்த்த வண்ணம் இருக்கிறது!

யாகம் நடத்தும் போது தூங்கக் கூடாது என்பது சாஸ்திரம். நடத்துபவரும் தூங்கக்கூடாது அதைப் பார்ப்பவரும் தூங்கக்கூடாது. ஆனால், அப்போதுதான் கட்டாயமாகத் தூக்கம் வரும்! உணவு கொள்ளாமல் விரதமாக இருந்து யாகம் நடத்தும் போதே தூக்கம் வரும்! அதைக் கட்டுப்படுத்தித் தொடர வேண்டும்.

அரசன் பார்த்துக் கொண்டே இருக்கும்போது, யக்ஞம் பண்ணுகிறவர் தூங்கினார்! அவரை எப்படி எழுப்பலாம் என்று பார்த்த மன்னன், செங்கோலால் அந்த வேத விற்பன்னரைத் தட்டுகிறான்...

அந்தத் தூக்கத்திலும் அவருக்கு ஸ்வப்னம் வந்திருக்கிறது! புலி துரத்துகிற மாதிரி ஸ்வப்னத்தில் வந்த அதே சமயத்தில் மன்னன் செங்கோலைக் கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதுகில் ஒரு குத்து குத்த, ஸ்வப்னத்தில் புலி அப்போது தான் அவர் மேல் பாய...

"ஹா! புலி!" என்று அலறியபடி பிரதான அக்னி குண்டத்திலே விழுந்து விட்டார்: பஸ்மமாகப் போய் விட்டார்!

அசுவமேத யாகம் பண்ணினால் பிரும்மஹத்தி தோஷம் நீங்கும் என்கிறது வேதம். ஆனால் இந்த அரசனோ, அசுவமேத யாகம் பண்ணப் போய் பிரும்மஹத்தியை மூட்டை கட்டிக் கொண்டான்!

யாகத்திலே இப்படியெல்லாம் தவறுகள் நடந்தால் கர்த்தா நாசத்தை அடைவதுடன் பார்க்கிறவர்களும் கஷ்டத்தை அடைகிறார்கள்.

ஹோமத்திலே புகை இருக்கக்கூடாது. அக்னி ஜொலிக்காத போது மேலே ஹவிஸைப் போட்டுக் கொண்டேயிருக்கிறார் ஒருத்தர்! இவ்வாறு போடுகிறவர் குருடராகிறார்! அதைப் பார்க்கிறவர்களுக்கும் பார்வை போகிறது!

ஹோம குண்டத்தில் நான்கு புறமும் தர்ப்பை போடுவது உண்டு. இப்படி நாலு பக்கமும் போடுகிற பரிஸ்தரணத்திலே முப்பது முக்கோடி தேவர்கள் உட்கார்கிறார்களாம். நமக்கும் இந்த தேவர்களுக்கும் இடையே பூதகணங்கள் உட்கார்ந்திருக்குமாம்.

அதனால்தான் பரிஸ்தரணத்துக்கு வெளியே எதுவாவது விழுந்து விட்டால் அதை அக்னியிலே சேர்க்கக்கூடாது என்று சொல்வார்கள். அப்படிச் சேர்த்தால் யாகம் கெட்டுப் போய்விடும். ஏனென்றால் இடம் தப்பி விழும் பொருள் பூதகணங்கள் உட்காரும் இடத்தில் விழுகிறது. அதைக்கூட பூத்கணங்களுக்கென்றே அப்படி விழும்படியாகப் பண்ணுவது அக்னி பகவான் தான்!

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பூர்வ காலத்திலே மஹரிஷிகள் ஹோம குண்டம் தயாரித்து, கையைக் காண்பித்தாலே அக்னி உண்டாகி விடும். இது மிகவும் உயர்ந்த நிலை. இரண்டாவது நிலை: அரணியைக் கடைந்து அக்னி உண்டாக்குவது. மூன்றாவது நிலை, ஏதேனும் ஒரு முறையைப் பயன்படுத்தி அடுப்பிலிருந்து தணல்கள் எடுத்து வந்தோ, கற்பூரத்தை ஏற்றியோ - அக்னி உண்டாக்குவது.

முறையாகப் பண்ணப்படும் யக்ஞத்தில் மூன்று அக்னிகளுக்கிடையே பகவான் உபாஸிக்கப்படுகிறான். அக்னிக்கு இடையிலே பரமாத்மா காட்சியளிக்கிறான்.

இப்படி முறையாகச் செய்யப்படும் அசுவமேத மஹா யக்ஞத்திலே உலக க்ஷேமத்தைப் பிரார்த்திக்கும் மந்திரம் இருக்கிறது. அதனால் தான் தெற்கே பித்ரு தேவதா காலங்களிலும், வடக்கே மாங்கல்ய தாரணத்தின் போதும் இதைச் சொல்கிறார்கள்.

தினமும் 1008 காயத்ரி சொல்வதால் இரண்டு புருவங்களுக்கும் மத்தியிலே தேஜஸ் உடையவர்களான வேத வித்துக்கள் இந்த அசுவமேத யாகத்தைச் செய்ய வேண்டும்.

சத்புத்ரன் பிறக்க வேண்டியும், மழை வேண்டியும், தானியங்களின் விளைச்சல் வேண்டியும், இந்த யாகம் செய்யப்படுகிறது. உலகத்தில் உள்ள எல்லோருக்கும் யோக க்ஷேமம் வேண்டிச் செய்யப்படுகிறது.

யோகம் என்பது வேறு; க்ஷேமம் என்பது வேறு.

கிடைக்காதவையெல்லாம் கிடைப்பது யோகம்; கிடைத்த செல்வங்களெல்லாம் தங்கி நிலைத்திருப்பது க்ஷேமம்.

உலகத்தில் அத்தனை பேருக்கும் யோகமும் க்ஷேமமும் உண்டாகட்டும் என்கிறது அந்த அசுவமேத யாகம் இப்படிப்பட்ட உசத்தியான யாகத்துக்குத்தான் அந்த விச்வம் போனது..!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23

'விச்வ சப்தத்தினால் அறியப்படக்கூடியவன் வாமனன்' என்கிறார்கள் வித்வான்கள்.

வித்வான் என்பவர் யார்...? எந்த மந்திரத்தினால் ஒரு தேவதை பேசப்படுகிறதோ அந்த தேவதையை எதிரில் கொண்டு வந்து நிறுத்தக்கூடியவன் வித்வான். மந்திரங் களை வெறுமனே ஒப்பிப்பவன் வித்வான் அல்ல... பரப் பிரும்மத்தைக் கொண்டு வருவாயா...? காட்டுவாயா...? என்றால் அவ்வாறு கொண்டு வந்து காட்டக்கூடியவன் வித்வான்.

நாம் அப்படியில்லை. பெரியவர்கள் சொல்லித் தந்த மந்திரங்களைத் திருப்பிச் சொல்கிறோம் - அவ்வளவுதான். அந்தக் காலத்திலே அவர்கள் அனுஷ்டித்ததைப் போல் கடும் விரதங்கள், நோன்புகளை நாம் அனுஷ்டிப்பதில்லை. எல்லா பதார்த்தங்களும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று அன்றைக்கு அந்த வித்வான்கள் உபாஸித்து, தேவதைகளைக் கொண்டு வந்து நிறுத்தி வரம் கேட்டார்கள். அப்படியே கிடைத்து, க்ஷேமம் நிலவியது.

அப்படிப்பட்ட வித்வானின் உபாஸனையினாலே பகவான் சர்வவியாபியாய், விச்வவியாபியாய் திரிவிக்கிர மனாய் அவதாரமெடுத்துப் பரவி நின்றான். அந்த விச்வத்தை ஆவிர்பவித்து எவர் யக்ஞம் செய்கிறாரோ அவருக்குப் பூரண பலம் கிடைக்கிறது.

யக்ஞம் செய்ய பலவித ரித்விஜ்கள் இருப்பார்கள். அவர்களுக்கு தக்ஷிணை கொடுக்கப்பட வேண்டும். அதைக்

In Public domain, Digitization: Muthulakshmi Research Academy

கொடுத்தால்தான் யக்ஞம் பூர்த்தியாகிறது. யக்ஞம் செய்பவர்களெல்லாம் விசாரமில்லாமல் இருக்க வேண்டுமல்லவா...? 'அது என்னாச்சு? இது என்னாச்சு...?' என்று எண்ணம் வந்தால் யக்ஞம் கெட்டுப் போய்விடும்.

ஆகையினாலே யக்ஞத்துக்கு ரித்விஜ்களை அழைக்கும்போது, 'ஒரு பகுதி தக்ஷிணையை இப்போதே கொடுத்து விடுகிறேன்' என்று சொல்லியே அழைப்பார்களாம். அதை வாங்கி அவர்களும் கிரஹத்திலே வைத்து விட்டு வந்து யக்ஞத்தை நடத்திவிட்டு பிறகு பூரண தக்ஷிணையை வாங்கிக் கொள்வார்களாம்.

லௌகிகத்திலே இதைத்தான் 'advance' என்று சொல்கிறோம்!

இப்படியிப்படி யக்ஞ கர்மா நடத்த வேண்டும் என்று ஆபஸ்தம்பர் சொல்கிறார். எதை தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும் என்றால், குள்ளமான பசுவைக் கன்றோடு கொடுக்க வேண்டுமாம்!

'ஏன்? உயரமான பசுவைக் கொடுக்கக் கூடாதா...?' என்றால், பகவான் வாமன ரூபியான எம்பெருமானை நாம் நினைப்பதற்காகத்தான், குள்ளமான பசுவாகப் பார்த்து தக்ஷிணையாகக் கொடு என்கிறது வேதம்!

ஆகையினாலே குள்ளமான பசுவைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும் ஒரு பசுவின் உடலில் எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ, அத்தனை வருஷங்கள், இவனுக்கு (கொடுப்பவனுக்கு) சுவர்க்க லோகத்திலே வாஸம் கிடைக்குமாம்.

இவ்வாறு குள்ளப் பசுவால் நினைவூட்டப்படுகிற வாமன ரூபியானவனே உலகத்தை அளந்தவனும் ஆகிறான். 'உலகை அளந்தவனே' என்று திரும்பத் திரும்ப அவனைக் கொண்டாடுகிறது வேதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நர்மதை நதி தீரத்துக்கு விச்வம் போனது என்று சொன்னேன் அல்லவா...? அது வாமன ரூபனாய்த்தான் அங்கே முதலில் எழுந்தருளியது.

வாமன அவதாரம் விச்வ சப்தத்தினால் அறியப் படுகிறது - என்று அதன் உயர்வுகளை எடுத்துச் சொல்லும்போது, 'நரசிம்ஹ அவதாரத்தை உயர்ந்ததுன்னு சொன்னீர்களே?' என்ற கேள்வி வரும். இனிமேல் சொல்லப் போகிற ராமர், கிருஷ்ணர் அவதாரங்களையும் அப்படித்தான் உயர்ந்தவையாகச் சொல்லப் போகிறேன். அதனாலே வாமன அவதாரமே மகிமை குறைந்து போய் விடாது. எல்லா அவதாரங்களுமே உயர்ந்தவைதாம்.

வாமன அவதாரத்துக்கு வருவோம்... அந்த அவதார மகிமையைத் தெரிந்து கொள்வதற்கு முன் ஆசார்ய (குரு) மகிமை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆசார்யரைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்கிறார் சுவாமி தேசிகன். பகவானை எப்படியெல்லாம் உபாஸிக்கிறோமோ அப்படியெல்லாம் ஆசார்யனையும் உபாஸிக்க வேண்டும் என்கிறது உபநிஷத்.

ஆசார்யன் என்றால் யார்...?

நிறைய சாஸ்திரத்தைப் படித்தவர் ஆசார்யன். எல்லா வித்யா ஸ்தானங்களும் அவர் நுனி நாக்கிலேயே தாண்டவமாடும். எதைக் கேட்டாலும் சொல்லக்கூடியவர். நல்ல வாக்கு உடையவர்.

வித்யை என்பது நிரந்தரமானது.. பொருள் (செல்வம்) அப்படி இல்லை. வரும் - போகும். நாளை வரப்போகும் செல்வத்தை நம்பி இன்று ஒரு காரியம் பண்ண முடிகிறதா...?

இப்படிப்பட்ட நிரந்தரமான வித்யைகள் நிரம்பப் பெற்றதனால் மட்டுமே ஒருவர் ஆசார்ய ஸ்தானம் வகித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட முடியாது. தாம் எடுத்துச் சொல்லும் விஷயங்களை அனுஷ்டிப்பவராகவும் அவர் இருத்தல் வேண்டும். அப்படி அனுஷ்டிக்காதவர் (கடைப்பிடிக்காதவர்) ஆசார்யராக இருக்கவே முடியாது.

'கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்' என்று பிரார்த்தனை பண்ணுகிறோம். ஜகத்துக்கெல்லாம் குரு அவன். எல்லா சாஸ்திரங்களிலும் குருவாக, பரமாசார்யனாகச் சொல்லப்படுகிறவன் நாராயணன். அந்த நாராயணன் கூட கீதாசாரியனாக கிருஷ்ணாவதாரத்திலே உபதேசம் செய்ததை அப்படியே ராமாவதாரத்திலே நடத்திக் காட்டினான்.

எனவே, கற்றதை அனுஷ்டித்து நடத்திக் காட்டி, பிறருக்கு உபதேசிப்பவன்தான் ஆசார்யன். அவர் எதை மனத்தால் நினைக்கிறாரோ அதையே நாவால் சொல்ல வேண்டும். எதை நாவால் சொல்கிறாரோ அதையே நடத்திக் காட்ட வேண்டும்.

உடல் ஆரோக்கியத்துக்காக எத்தனையோ மருந்துகளைச் சாப்பிடுகிறோம். ஆனால், அதெல்லாம் மருந்தில்லை என்கிறது சாஸ்திரம். பின்னே எது நல்ல மருந்து...?

நினைவு, சொல், செயல் என்று மூன்றும் ஒன்றாக வாழ்க்கை நடத்துவதே உயர்ந்த மருந்து. அப்படியில்லாமல் நினைப்பது ஒன்று, சொல் வேறு, நடப்பது வேறு என்று இருந்தால்... அப்படிப்பட்டவர்கள் துராத்மாக்கள்! மகாத்மாக்களுக்கு இந்த மூன்றும் - சிந்தை, சொல், செயல் - ஒன்றுபட்டிருக்கும்.

அப்படிப்பட்ட மகாத்மாக்களை ஆசார்யராக அடைவதால் நமக்கு என்ன பலன்...? அதற்கு ஒரு கதை சொல்கிறேன்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதி மலையை எல்லோரும் பார்த்திருக்கிறோம். இங்கே ஒரு சிகரம்; அங்கே ஒரு சிகரம். ஒரு சின்ன எறும்பு... ஒரு சிகரத்தில் ஊர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு, அதோ... அந்த மலைச் சிகரத்துக்குப் போக வேண்டும் என்று ஆசை!

எவ்வளவு அல்பமான ஜீவன் அந்த எறும்பு! ஒரு மலைச் சிகரத்திலிருந்து மற்றொன்றுக்கு ஏறிப் போவதற் குரிய அங்கங்களோ, அவயங்களோ அதற்கு இல்லை. ஆனால் அதுவும் அந்த சிகரத்தை அடைந்தது. எப்படி...?

எப்படியென்றால், ஒரு சிங்கம் அந்த இடத்திலே மலைக்கு மலை தாவி ஓடிக் கொண்டிருந்தது. எறும்பு, தான் நினைத்த மாதிரியே சிங்கமும் இந்த சிகரத்திலிருந்து அந்த சிகரத்துக்குப் போக இருப்பதைப் பார்த்தது. உடனே, 'இதுதான் சமயம்' என்று அங்கேயிருந்து போய் அந்த சிங்கத்தின் சரீரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது சிங்கம் சிகரத்துக்குச் சிகரம் தாண்டியபோது, எறும்பும் தாண்டி விட்டது!

ஆகையினாலே, ஓர் ஆசார்யனின் திருவடியை நாம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டோமானால், சம்ஸார சாகரத்தை அவர் தாண்டும்போது நாமும் கூடவே தாண்டி விடுகிறோம்! அந்த மாதிரி உயர்ந்த கதியை நமக்கு அடைவிக்கக் கூடியவர்கள்தான் ஆசார்யர்கள்.

தனத்தை உடையவனை தனவான் என்கிறோம். குணம் உடையவனை குணவான் என்று அழைக்கிறோம். ஆனால் எப்படிப் பட்டவனும் ஆசார்ய சம்பந்தத்தோடு தான் இருக்க வேண்டும். அது மட்டும் இல்லாமல் போனால் வேறெது இருந்தும் பயனில்லை.

'ஆசார்யவான் புருஷோ வேத' - ஒரு நாளும் தனித்து இராதே. ஆசார்ய சம்பந்தத்தோடுதான் நீ இருக்க வேண்டும்' என்கிறது. சாஸ்திரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகாசத்தில் பிரகாசிக்கிறானே சூரியன்... அவன் கிரணங்கள் பட்டதுமே தாமரை புஷ்பமானது விகசிக்கிறது. எப்படி விகசிக்கிறது என்று யோசிக்க வேண்டும்.

ஒரு பெரிய தாடகத்திலே, தீர்த்தம் நிறைய இருந்தால், சூர்ய ரச்மி பட்டவுடனேயே தாமரை விகசிக்கிறது. ஆனால், தடாகத்திலே தீர்த்தமே இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள், சூர்ய ரச்மி வந்து பட்டால்...? அந்தத் தாமரையானது வாடி வதங்கித்தான் போகுமேயொழிய விகசித்து மலராது!

அப்போ, தாமரை மலர்வதற்கு முக்கியமான பொருள் தீர்த்தம். தீர்த்தத்தில் இருக்கிற தாமரையை மலரச் செய்பவன் சூரியன். அதுபோல, ஆசார்ய சம்பந்தத்தைப் பெற்ற ஜீவனை பரமாத்மா அனுகிரஹித்து விகசிக்கச் செய்வான். தாமரை - ஜீவன். தீர்த்தம் - ஆசார்யன். சூர்யன் - பரமாத்மா. தீர்த்த சம்பந்தம் போலே எப்போதும் ஆசார்ய சம்பந்தம் வேண்டும். மோக்ஷம் பெறுவதற்கு இந்த சம்பந்தம் கட்டாயம் வேண்டும்.

யோகத்திலே கெட்டிக்காரரான ஒரு ஆசார்யர் இருந்தார். சமாதி நிலையிலே அவர் அமர்ந்தாரானால் எம்பெருமானை நேருக்கு நேரே பார்க்கக்கூடியவர்! ஒருநாள் அப்படி அவர் யோகத்திலே இருந்தார். பகவானை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆனால், வழக்கமாக இவர் பார்வையை நேருக்கு நேராகச் சந்தித்த பகவானின் நோக்கு அன்று மட்டும் வேறு திசையில் திரும்பியிருந்தது.

அந்த யோகிக்கு இந்த மாற்றத்தைக் குறித்து வியப்பும் விசாரமும் உண்டாயிற்று.

பகவானின் பார்வை மாறியதற்குக் காரணம் என்ன...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24

பகவானைத் தம் முன்னே கொண்டு வந்து நிறுத்தக்கூடிய யோகியைப் பார்க்க ஆளவந்தார் என்கிற ஆசார்யர் வந்தார். அவர் வந்த நேரத்திலே யோகி ஆழ்ந்த தியான நிலையில் இருந்தார். 'சரி, இவர் யோக நிலை மாறட்டும், பிற்பாடு பேசலாம்' என்று அவர் பின்னாலே போய் ஒரு பக்கமாய் அமர்ந்து கொண்டார் ஆளவந்தார்.

அந்த சமயத்திலேதான் பகவானின் பார்வை யோகியின் பேரிலிருந்து ஆளவந்தார் பேரில் திரும்பிற்றாம்.

'பகவான் தம் பக்கமிருந்து பார்வையைத் திருப்பி விட்டாரே!' என்கிற அதிர்ச்சியில் யோகியின் மோனம் கலைந்து போனது. ஒருநாளும் பக்கம் நோக்கி அறியாத பகவான் இன்று பக்கம் நோக்கினது ஏன் என்று மகான் யோசித்து வர,

"இங்கே சொட்டை நம்பி வம்சத்திலே வந்தவர்கள் யாராவது இருக்கிறீர்களா...?" என்று பெருத்த குரலில் கேட்டார்!

அவர் அப்படிக் கேட்டதற்கு அர்த்தம் என்ன...?

நாதமுனிகளின் மகன் சொட்டை நம்பி வம்சத்திலே பகவானுக்கு மிகுந்த அபிமானம் உண்டாம். அந்த வம்சத்தைச் சேர்ந்த யாரேனும் வந்தாலொழிய பகவானின் பார்வை திசை திரும்ப வழியில்லை என்பது யோகியின் கணிப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தக் கணிப்பு சரியான கணிப்புத்தான். ஏனெனில் அவர் பின்னாலே வந்து அமர்ந்த ஆளவந்தார், நாதமுனியின் பேரன் ஆவார்.

பகவானின் பார்வை தம் மேல் திரும்பியதும் அந்த ஆளவந்தார் என்ன சொன்னார் தெரியுமா...?

"நான் ரொம்ப சிறியவன்; எளியவன். ஆனால் என் உருவத்தைப் பாராதே... பகவானே என்னுடைய தாத்தாவுக்காக என்னை கடாக்ஷித்து அனுக்கிரஹம் பண்ண வேண்டும்..." என்று கேட்டுக் கொண்டாராம்.

இந்த உலகத்திலே பொதுவாக உறவுகளை உதறிவிட வேண்டும், தேக சம்பந்தம் கூடாது என்று நாம் பேசினாலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் விதிவிலக்கு இருக்கிறது. உத்தம அதிகாரிகளின், ஆசார்யர்களின் தேக சம்பந்தம் நமக்கு அருள் செய்கிறது என்று ஏற்கிறோம்.

உயர்ந்த ஆசார்யரின் சம்பந்தம் மட்டும் ஏற்பட்டால், எப்பேர்ப்பட்ட உயர்நிலையையும் நாம் அடைந்து விடலாம்.

புண்யாத்மாக்களாயிருந்தாலும் சரி; பாவாத்மாக்களாக இருந்தாலும் சரி, ஆசார்ய சம்பந்தம் பெற்றால்தான் உயர்ந்த கதியை அடையலாம்.

ஒரு காலத்திலே க்ஷத்ரபந்து என்று ஒருவன் இருந்தான். அவன் திருடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தான். போகிற, வருகிறவர்களை அடித்துப் போடுவான். வழிப்பறி செய்து அவர்களுடைய செல்வத்தையெல்லாம் மூட்டை கட்டி தன் வீட்டுக்குக் கொண்டு போவான். இப்படி அவன் திருட்டுத் தொழில் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் ஒருநாள், நாரதர் தம் வீணையை மீட்டிக் கொண்டு அந்த வழியாய் வந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நீ இவ்வளவு தூரம் மூட்டை மூட்டையாய்க் கட்டிக் கொண்டு போய் மனைவி மக்களுக்கெல்லாம் கொடுக்கிறாயே... கூடவே இன்னொரு மூட்டை வருகிறதே, உனக்குத் தெரியுமா...?" என்று கேட்டார்.

அவன் மேலும் கீழும் பார்த்தான். "அதென்ன மூட்டை சுவாமி? நான் எடுத்துக் கொண்டு போகிற மூட்டை தவிர வேறு மூட்டை நான் பார்த்ததேயில்லையே... ஒரு நாளும் பார்த்ததில்லையே..." என்றான்.

நாரதர் சொன்னார்: "அது பார்க்கக்கூடிய மூட்டை இல்லை; பாவம் என்கிற மூட்டை அது! இந்தப் பண மூட்டையையெல்லாம் உன் வீட்டிலே கொண்டு போய்க் கொடுக்கிறாய். மனைவி - மக்களும் சுற்றமும் அதைப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள்... அவர்களிடம் போய்க் கேள். இந்த செல்வ மூட்டை போலவே பாவ மூட்டை ஒன்று இருக்கிறது. அதையும் அவர்கள் பங்குபோட்டுக் கொள்ளத் தயாரா என்று கேளேன்..." என்றார்.

"சரி சுவாமி; கேட்கிறேன்..." என்று புறப்பட்டுப் போனான் அவன்.

இந்தக் கதையைப் படிக்கும்போதே எல்லோருக்கும் ஒரு சந்தேகம் எழுவது இயல்பு. இவ்வளவு தூரம் வழிப்பறி செய்கிற துராத்மா இப்படிப் பொறுமையாக இருந்து முனிவரின் உபதேசத்தைக் கேட்டு நடப்பானா... முதலில் அவர் சொல்வதை அவன் பொறுமையாகக் கேட்க வேண்டும்; அப்புறம் செயல்படுத்த வேண்டும்; அதன் பிறகு பாடம் கற்றுத் திருந்த வேண்டும்... இது சாத்தியமா?

சாதுக்கள், மகான்களின் தரிசனம் தொடர்பு எப்படிப்பட்டவரையும் மாற்றமுடியும் என்பதையே இக்கதை காட்டுகிறது.

ஒரே கணத்தில் க்ஷத்ரபந்து சிந்தனை வயப்பட்டான். மனம் தணிந்து, பத்னியிடம் போய்க் கேட்டான்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பாவ மூட்டையில் பங்கு எடுத்துக் கொள்வாயா?"

மனைவி சொன்னாள்: "நீங்கள் பர்த்தா - அதாவது பாரத்தைத் தாங்குபவர். நியாயமாய்ச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு. நீங்கள் அக்கிரமமாக சம்பாதித்தால் அந்தப் பொருளிலே தான் எங்களுக்குப் பங்கேயொழிய பாவத்திலே பங்கு கிடையாது...'' என்று சொல்லி விட்டாள்! அவன் குழந்தைகளும் அதையேதான் சொன்னார்கள்!

திரும்பி நாரதரிடம் வந்தான் திருடன். நாராயண மந்திரத்தை அவரிடத்திலே உபதேசமாகக் கேட்டான். அவனுக்கு மோக்ஷமே கிடைத்து விட்டது!

நாரதர் சம்பந்தம் மட்டும் அவனுக்கு வாய்த்திருக்கா விட்டால், இந்த பாக்கியம் கிடைத்திருக்குமா?

புண்டரீகர் என்று ஒருத்தர். 'அனந்த பத்மநாபனை எங்கே பார்க்கலாம்?' என்று கேட்டாராம் அவர். சமுத்திரத்திலே தான் அவர் இருப்பார் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள்.

உடனே புண்டரீகர் சமுத்திரத்துக்குள்ளேயே நடந்து போக ஆரம்பித்தார்! கழுத்து வரை ஜலம் வந்து விட்டது. மேலே போக முடியாத நிலை.

பார்த்தார் புண்டரீகர்... சமுத்திர ஜலம் முழுவதையும் இறைத்து எடுத்துவிடலாம் என்று இறைக்க ஆரம்பித்தார்!

அப்போதும் நாரதர்தான் அங்கு வந்து கை கொடுத்தார்!

"இதை - இந்தக் காரியத்தை உடனே நிறுத்து. இப்படி ஜலத்தை இறைத்து அவனைப் பார்க்க முடியாது. என்னுடன் வா...'' என்று திருக்கடன்மல்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



(மஹாபலிபுரம்) என்கிற க்ஷேத்திரத்துக்குப் புண்டரீகரை அழைத்துப் போனார் நாரதர்.

அங்கே பார்த்த பெருமாளின் கோலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார் புண்டரீகர். வரக்கூடியவர்களை, 'வாருங்கள்! வாருங்கள்!' என்று வரவேற்கும் தோற்றம், அங்கே எம்பெருமானுக்கு. அதைக் கண்டு மகிழ்ந்து ஆயிரம் தாமரைப் புஷ்பங்களாலே அர்ச்சனை பண்ணினார் புண்டரீகர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோணலான மார்க்கத்திலே போனவரை மாற்றி, குறுக்கு வழியிலே பகவானிடத்திலே கொண்டு சேர்த்து விட்டார் நாரதர். ஆகையால், ஆசார்ய சம்பந்தம் மட்டும் இருந்து விட்டால் எப்பேர்ப்பட்டவரும் உயர்கதி அடையலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இப்படி வழிகாட்டி உயர்கதி அடையச் செய்யவல்ல ஆசார்யர்களுள் ஒருவராக இருந்தார் சுக்ராச்சார்யார்.

மாண்டு போனவர்களைக் கூட எழுப்பி உட்கார வைக்கும் சக்தி அவருக்கு இருந்தது!

'சுக்ர தசை' என்று சொல்கிறோம். அந்த கால கட்டம் ஒருவரது வாழ்க்கையிலே அமைந்தால், எல்லா உயர்வுகளும் அவனுக்கு அந்த நேரத்திலே ஏற்படும். அனுகூலமான காலம் அது!

அதே போல்தான் சுக்ராச்சார்யாரை குருவாகக் கொண்டவனுக்கு அனுகூலங்கள். அவருக்கு எல்லா மந்திரங்களும் தெரிந்திருந்தன. அவற்றிலே ஒரு மந்திரம் ம்ருத சஞ்சீவினி மந்திரம் என்று சொல்லப்படுகிறது. இது சுக்ராச்சாரியாருக்கு ரொம்ப விசேஷமாகத் தெரியுமாம். தேவ குருவான பிரஹஸ்பதிக்குக் கூட தெரியாதாம் இந்த மந்திரம். மாண்டு போனவர்களையும் பிழைக்க வைக்கவல்ல மந்திரம் அது.

இப்படிச் சொன்னால், ஒரு சந்தேகம் வரும். மாண்டு போனவர்களை எழுப்புவது ஒரு மந்திரத்தால் சாத்தியமானால், அந்த மந்திரத்தை அறிந்தவர்கள் அதைச் சொல்லி பலபேரின் துயரைப் போக்கலாமே. அடியேன் போன்றோர் உபன்யாஸம் பண்ணுவதற்குப் பதில் இந்த உபகாரத்தைப் பண்ணலாமே என்று கேட்கத் தோன்றும்.

ஒரு விஷயத்தை நன்றாக நாம் கவனிக்க வேண்டும். மந்திரம் பலருக்குத் தெரிந்திருந்தாலும் அது பலித்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுக்ராச்சார்யாருக்கு மட்டும்தான்! வேறு ஒருத்தருக்கும் அது பலிக்கவில்லை!

காரணம்...?

இந்த மந்திரத்தை மிகவும் சிரமப்பட்டு சித்தி செய்துகொண்டார் அவர்.

இப்போது அதே மந்திரத்தை நாம் சொன்னால் கனம் போதவில்லை; சக்தி போதவில்லை என்பது பிரத்யக்ஷமாகத் தெரிகிறது.

'இந்திரா ஆச்ராவாயா...' என்று யாகம் பண்ணும் போது இந்திரனை அழைப்பதுண்டு. அப்படி மும்முறை அழைத்தும் அவன் நேரில் வரவில்லையானால், யக்ஞத்தையே முடித்துக் கொள்ள வேண்டுமாம்! ஏனென்றால், முறையாக முழு மனசுடன் கூப்பிட்டால் அவன் வந்தே தீருவான். அவன் வராவிட்டால், போதுமான பலத்துடன் நாம் அழைக்கவில்லை என்றே அர்த்தமாகிறது!

பிரும்ம வித்துக்களும், பெரிய மஹான்களும் மந்திரத்திலே பூர்ண சித்தி அடைந்தவர்களும் கூப்பிட்டால் தேவதைகள் பிரத்யக்ஷமாவார்கள். மந்திரங்களின் பரிபூரண பலனை அவர்கள் அடைவிப்பார்கள். அப்படிப்பட்ட மஹான்கள் வரிசையில் வந்தவர் சுக்ராச்சார்யார் என்பதால்தான் ம்ருத சஞ்சீவினி மந்திரத்தைக் கொண்டு அவரால் பலி சக்ரவர்த்தியைப் பிழைக்க வைக்க முடிந்தது.

அது மட்டுமல்ல... விச்வஜித் என்றொரு யாகம். எஜமானரை உட்கார வைத்து அந்த யக்ஞத்தை நடத்தினார் சுக்ராச்சார்யார். என்ன ஆச்சர்யம்! அந்த யக்ஞத்தின் ஹோம குண்டத்திலேயிருந்து, வில், அம்புராத் தூணி என்று விதவிதமான ஆயுதங்களும் கவசங்களும் வெளிப்பட்டன. 'இவற்றை வைத்துக் கொண்டு நீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயர்நிலை அடைவாய்' என்று பலி சக்ரவர்த்தியிடம் அவற்றைக் கொடுத்து மந்திரம் ஓதி அனுப்பினார் சுக்ராச்சார்யார்.

அந்த ஆயுதங்களைக் கொண்டு தேவலோகத்தையே சூன்யமாக்கினான் மஹாபலி! அப்படி சமஸ்த தேவதைகளையும் நடுங்கச் செய்யும் சாமர்த்தியம் ஆசார்ய அனுக்கிரஹத்தினாலே மஹாபலி சக்ரவர்த்திக்குக் கிடைத்தது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25

பிள்ளை ரொம்ப துஷ்டன், சதா அப்பா அம்மாவோடு சண்டை போடுகிறவன். அப்படிப்பட்ட பிள்ளையை அடி அடின்னு அடிச்சுட்டார் அப்பா! பையன் கோபத்தில் வீட்டை விட்டே போய்விட்டான். ‘அவன் எங்கே போய் அலைகிறானோ? சாப்பாட்டுக்கு எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறானோ...?’ என்று தாயார் கதறுகிறார்.

“பசியெடுத்தா, தானா வீடு வந்து சேர்வான். ஏன் கவலைப்படறே” என்று அப்பா சுலபமாகச் சொல்லி விடுகிறார்.

இந்த நேரத்திலே அந்த வீட்டுக்கு வந்தவர் ஒருத்தர், “உங்க பிள்ளையை அந்தச் சத்திரத்து வாசல்லே பார்த்தேன்...” என்கிறார்.

உடனே அங்கே போய், குழந்தைக்குப் பசியாற்ற வேண்டும் என்று அம்மா நினைக்கிறாள். நேரடியாகப் போய் உணவைக் கொடுத்தால், அவன் வாங்கிச் சாப்பிட மாட்டான் என்று தெரியும் அவளுக்கு. சத்திரத்து வாசலிலே இட்லி, தோசை போன்றவற்றை விற்கும் ஒரு கடையைப் போட்டாள். துணியால் முகத்தை மறைத்துக் கொண்டு அங்கே அடுப்படியில் உட்கார்ந்தபடி பலகார வியாபாரம் பண்ணினாள்.

மகன் வந்து சத்திரத்து வாசலிலே உட்கார்ந்தான்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

"அப்பா, உன்னைப் பார்த்தால் பசியாகத் தெரியறதே... ஏதாவது வாங்கிச் சாப்பிடேன்" என்றாள் அம்மா.

"எங்கிட்டே பணமில்லையே..." என்றான் மகன்.

"நிதானமாகக் கொடுக்கலாம். கையிலே பணம் கிடைக்கறச்சே கொடுத்தால் போதும்..."

மகன் பசியாறினான்! மறைந்திருந்து அந்தத் தாயார் மகனுக்கு ஊட்டினது போல, மஹாலக்ஷ்மி தாயார் நமக்கு மறைந்திருந்து கொடுக்கிறாள்.

பகவான் சொல்வதை நாம் கேட்காமல் போகும் போது அவன் நமக்கு தண்டம் கொடுக்கிறான். தாயார் பரிவு காட்டுகிறாள். பிறகு பகவானே நம்மை உய்விக்கறதுக்காக வேறு யார் மூலமாவது அனுக்கிரஹம் பண்ணி விடுகிறான்!

வேதம் சொல்கிறது-பகவான் நேரடியாக உதவாமல் வேறு ஒருத்தர் மூலமாகத்தான் செய்வார் என்று...

மஹாபலியின் அட்டகாசம் தாங்காமல் தேவர்கள் துன்பப்பட்டபோது, அதிதி அவனிடம் போய் வேண்டினாள். பகவான் நினைத்திருந்தால் தானே நேரடியாக தேவர்களுக்கு உதவியிருக்கலாம். ஆனால் அவன் என்ன பண்ணினான்...? ஓர் உயர்ந்த விரதத்தைச் சொல்லி, அதைப் பண்ணினால் கஷ்டம் நிவர்த்தியாகும் என்றான்!

அந்த விரதத்தைச் செய்து பூஜை பண்ணினாள் அதிதி... அந்த விரதத்திலும், எல்லா யக்ஞங்களிலும் ஆராதிக்கப்படுகிறவன் அந்த நாராயணன் தானே!

பித்ரு தேவதைகளுக்கு நாம் ஆராதனை செய்தால்கூட அது அந்த நாராயணனுக்குத்தான் போய்ச் சேருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிம்மாசனத்திலே உட்கார்ந்திருக்கும் ராஜாவுக்கு சேவகன் சந்தனம் பூசுகிறான்; பன்னீர் தெளிக்கிறான். அந்த ராஜா உடலை மறைத்து அங்கி அணிந்து கொண்டிருக்கிறார். அதற்கு மேலே பட்டு-பீதாம்பரம். அதற்கும் மேலே இன்னொரு அங்கி! சேவகன் தடவுகிற சந்தனத்தை அந்த ஆடை, ஆபரணமா ஏற்கிறது? உள்ளே இருக்கிற ஆத்மா தானே ஏற்கிறது!

அதுபோலத்தான், அதிதி செய்த விரதத்தின் பலன் பகவானையே போய் அடைந்தது. அவனே அதிதியின் மகனாய் அவதாரம் பண்ணினான்.

கல்யாண காலத்திலே ஒரு மந்திரம் சொல்வதுண்டு. கோடி உடுத்தும்போது சொல்வது... "இவரே எல்லா ஜன்மாவிலும் எனக்கு பர்த்தாவாக இருக்க வேண்டும்..." என்று வேண்டும் மந்திரம்.

அந்நியோன்ய தம்பதிகள்-சிந்தையிலும் செயலிலும் ஒன்றுபடுபவர்களின் வீட்டிலே, மஹாலக்ஷ்மி வாசம் செய்வாளாம்.

அன்னியோன்ய! தம்பதி என்றால்...? சீதையையும் ராமரையும்தான் முதல் உதாரணமாகச் சொல்லுவார்கள்.

கோதாவரி தீரத்திலே ராமனும் சீதையும் இருக்கும் நேரம். இருவரும் மௌனமாய் இருக்கிறார்கள். திடீரென்று ராமன் சிரித்தான்.

அவன் ஏன் சிரித்தான் என்று சீதாபிராட்டிக்குச் சந்தேகம் வந்தது. ஆனால் கேட்கத் தயக்கம். மனசுக்குள்ளேயே கேள்வியைக் கேட்டுக் கொண்டாள்.

சற்று தூரம் நடந்து போனதும் சீதை சிரித்தாள். அதைப் பார்த்துவிட்டு ராமன் கேட்டான்.

"சீதா! எதற்குச் சிரிக்கிறாய் நீ?" அவர் இப்படிக் கேட்டதும் சீதைக்குத் தைரியம் வந்ததாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நீங்கள் எதற்குச் சிரித்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்..." என்றாள்.

"நீதான் முதலில் சொல்ல வேண்டும்."

"அதோ, அப்படிப் பாருங்கள்...!"

- சீதை சுட்டிய திசையில் ஒரு யானைக் கூட்டம். அந்த யானைகளெல்லாம் ராமனின் கம்பீரமான நடையைப் பார்த்துவிட்டு, தங்களின் நடையை எண்ணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெட்கம் கொண்டனவாம்! "அதைக் கண்டுதான் சிரித்தேன்" என்றாள் சீதை.

உடனே ராமன் சொன்னான்: "நானும் அதே காரணத்துக்காகத்தான் சிரித்தேன். சற்றுமுன் நாம் நடந்து வந்த அன்னப் பறவைகளின் கூட்டம் ஒன்று வெட்கித் தலைகுனிவதைக் கண்டேன். தாங்கள் நடையழகிலே உன்னிடம் தோற்றுவிட்டதை எண்ணித்தான் அந்த அன்னப் பறவைகள் வெட்கமுற்றன என்பது தெரிந்தது. அதைப் பார்த்துச் சிரிப்பு வந்தது."

அவனும் சிரித்தான்; அவளும் சிரித்தாள்! இருவருக்குமே மற்றவர் சிரித்ததற்கான காரணம் தெரியாது! ஆனால் இருவருமே 'நடை'யைத்தான் காரணமாகச் சொல்கிறார்கள்! இவர்கள் கருத்தொருமித்த தம்பதி என்றாகிறதல்லவா!

இப்படிக் கருத்தொருமித்து வாழ்க்கை நடத்தும் தம்பதிக்கு பகவான் அருள் செய்கிறான்.

யோக சித்தியை அடையும்படியான நிலையை ஒரு தம்பதி விரும்பினர். அதற்காக பகவானை நோக்கி இணையாக தபஸ் பண்ணினார்கள். பகவானும் அவர்கள் தவத்துக்கு இரங்கி பிரத்யக்ஷமானான். ஆனால், பகவானுடைய பேரழகைப் பார்த்ததும் அந்த தம்பதியின் மனம் மாறிவிட்டது! யோக சித்தியைக் கேட்பதற்குப் பதிலாக, "நீயே எங்களுக்குக் குழந்தையாகப் பிறக்க வேண்டும்" என்று வரம் கேட்டுவிட்டார்கள்!

பகவானும் அவர்களுக்கு அனுக்கிரஹம் பண்ணினான். அவர்களுக்குக் குழந்தையாய் அவதரித்தான். 'ப்ரச்னிகர்பன்' என்று அவனுக்குப் பெயர் அந்த அவதாரத்திலே!

இப்படி வேண்டித் தவமிருந்து பெற்ற பிள்ளையாகத் தான் அதிதியின் கர்ப்பத்தில் வாமனனாக அவதரித்தார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவான். அந்த அதிதியையேதான் பின்னால் தேவகியாய்ப் பிறக்கச் செய்து, அவள் கர்ப்பத்திலே சாக்ஷாத் கிருஷ்ணனாய் அவதரித்தார். (ஆகையினாலே, கிருஷ்ணாவ தாரத்துக்கு மூலமான அவதாரம் வாமனாவதாரம்தான்.)

ஆழ்வார்கள் வாக்கிலே வாமனாவதாரம் குறித்தும் கிருஷ்ணாவதாரம் குறித்தும் தான் நிறைய பாசுரங்கள் அமைந்துள்ளன.

வாமனாவதாரத்திலே பகவானுக்கு விசேஷமாக உபநயனம் நடக்கிறது! சூரியனே வந்து குழந்தை வாமனனுக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசம் பண்ணுகிறார்!

இதைக் கேட்கவே எவ்வளவு அழகாயிருக்கிறது? அது சரி... பகவான் இங்கே பூமியில் வந்து இப்படி உபநயனம் பண்ணிக் கொண்டான் என்றால் அதற்கு என்ன காரணம்...? அந்த ஸம்ஸ்காரம் தொடர்ந்து இங்கே நடக்கணும் என்பதற்காக! அந்த வாமனாவதாரத்தை நினைத்து வேண்டிக் கொண்டாலே குழந்தைகளுக்குச் சீக்கிரமாய் உபநயனம் ஆகிவிடுமாம்.

நாற்பது ஸம்ஸ்காரத்திலே மிக உயர்ந்த ஸம்ஸ்காரம் உபநயனம்தான். அந்த உபநயன மந்திரத்திலே என்ன போதிக்கப்படுகிறது?

"கர்மாவைப் பண்ணு..."

"பண்ணுகிறேன்..." என்று பதில் சொல்ல வேண்டும். உபநயனம் செய்து கொள்ளும் சிறுவன்.

"ஆசார்யரிடம் அபிமானமாக இருக்கணும்..."

"இருக்கிறேன்..."

"ஆசார்யருக்குக் குடை பிடிக்கணும்..."

"பிடிக்கிறேன்..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆசார்யர் உயர்ந்த ஸ்தானத்திலே உட்கார்ந்தால் நீ கீழே உட்காரணும்... அவர் உட்காரு என்று சொன்னால் தான் உட்காரணும்..."

"செய்கிறேன்."

"ஆசார்யருக்கு ஆசார்யர் பக்கத்திலே இருந்தால் அவருக்கு முதல் வந்தனம் பண்ணணும்."

"பண்ணுகிறேன்..."

இவ்வாறு வாழ்க்கை முறையை உபதேசிப்பதுதான் உபநயனம். அந்த சமயத்தில் அணிவிக்கப்படும் பூணூலும் பவித்ரமானது.

பூர்வ காலத்திலே ஒரு மகான் பூணூல் திரிப்பதையே தொழிலாகச் செய்து வந்தார். அதைத் தவிர வேறெதுவும் அவருக்குத் தெரியாது.

மந்திரம் சொல்லித் திரித்து, அதை பகவான் திருவடியிலே வைத்து எடுக்க வேண்டும். அப்புறம் ஓலைப் பெட்டியிலே பரம பவித்ரமாக அதை வைக்க வேண்டும். வெகு சிரத்தையாய் இதைப் பண்ணி வந்தார் அந்த மகான். யாராவது வந்து கேட்டால் அந்த யக்ஞோபவீதத்தை எடுத்துக் கொடுத்து அனுக்கிரஹம் பண்ணுவார்.

ஒரு நாள் அந்த மகானின் பத்னி அவரை வந்து சேவித்தாள். "நீங்கள் எப்போது பார்த்தாலும் இப்படிப் பூணூலைத் திரித்துக் கொண்டிருக்கிறீர்களே! நம் குழந்தைக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா?" என்று நினைவூட்டினாள்.

"பக்கத்து தேசத்திலே ஒரு ராஜா, விசேஷமாய் எழுந்தருளியிருக்கிறார். அவரைப் போய் உதவி கேட்டால் கட்டாயம் வாரி வாரிக் கொடுப்பார். ஒரு தடவை போய்ப் பார்க்கக் கூடாதா?" என்று யோசனையையும் சொன்னாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனைவியிடம் அவர் உறுதியாக ஒன்றும் பதில் சொல்லவில்லை. போய்த்தான் பார்ப்போமே என்று அரசனிடம் போனார். அவரிடமிருந்து பிரும்ம தேஜஸ் சொட்டுவதைப் பார்த்ததும் அந்த ராஜாவே எழுந்து நின்று விட்டார். முதலில் அவரை உட்கார வைத்தார்.

துரியோதனன் சபையிலே, பகவான் கிருஷ்ணன் நுழையும் போது யாரும் நின்று மரியாதை செய்யக்கூட..து என்று சகுனி உத்தரவு போட்டிருந்தானாம். ஆனால் பகவான் நுழைந்ததும் துரியோதனன் தன்னையறியாம லேயே தானே எழுந்து நின்றானாம்! அவன் பின்னோடேயே துச்சாதனனும் கர்ணனும் அந்தச் சகுனியும் கூட எழுந்து நின்றார்களாம்! அப்படிப்பட்ட தேஜஸ் பகவானுடையது.

அந்த மாதிரி, ராஜாவும் அந்த மகானின் தேஜஸுக்குக் கட்டுப்பட்டு எழுந்தார். அவரை அமர்த்தி, "சுவாமி உங்களுக்கு என்ன வேண்டும்? இவ்வளவு பிரும்ம தேஜஸோடு இருக்கிறீர்களே! உங்களுக்கு என்ன வேண்டு மானாலும் கேளுங்கள்; தருகிறேன்..." என்றார்.

கேட்டு அறியாதவர் அந்த ஏழை. எப்படிக் கேட்க வேண்டும் என்பது கூடத் தெரியவில்லை. யோசித்து விட்டுச் சொன்னார்.

"நான் ஒரு யக்ஞோபவீதம் (பூணூல்) கொண்டு வந்திருக்கிறேன். அதன் எடைக்கு நிகராகத் தங்கம் கொடுத்தால் போதும்... அதைக் கொண்டு என் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிவிடுவேன்..."

"அது போதுமா? அதற்கு மேலே வேண்டாமா?"

"போதும்."

தராசைக் கொண்டு வரச் சொன்னான் ராஜா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26

ஓலைப் பெட்டியிலிருந்த பூணூலை எடுத்து, மந்திரத்தைச் சொல்லி தராசுத் தட்டில் வைத்தார் அந்த ஏழை பிராமணர்.

'இந்தப் பூணூல் அப்படி என்ன எடை இருந்து விடப் போகிறது? பாவம் இது கூடத் தெரியாமல் இவர் அதன் எடைக்கு நிகராகப் பொருள் கொடுத்தால் போதும் என்கிறாரே...' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான் ராஜா.

ஒரு காசை எடுத்துத் தட்டிலே போட்டான். அந்தத் தட்டு கொஞ்சம் கூடத் தாழவேயில்லை! இரண்டு காசுகள் போட்டான்... பத்து... எவ்வளவு போட்ட போதும் அசையாமல் நின்றது. தன்னுடைய ஆபரணங்கள் அனைத்தையும் கொண்டு வரச் சொல்லி பூணூலுக்கு நிகராக எடை போட்டுப் பார்த்தான். அப்போதும் அதன் இணையை எட்ட முடியவில்லை. உடனே தனது ரத்தின கிரீடத்தை எடுத்து வைத்தான். "என்னிடம் இருக்கிறது மொத்தத்தையும் எடுத்து வைச்சுட்டேன்..." என்கிறான்.

உடனே அந்த நாட்டின் மந்திரி போய், ராஜாவின் காதோடு சொன்னான்: "அவசரப்பட வேண்டாம்! இந்த நூல் நம்ம ராஜ்ஜியத்தையே சூறையாடிவிடும். இந்த பிராம்மணரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாளைக்குத் திரும்பவும் வரச் சொல்லுங்கள்..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராஜாவும் அந்த உத்தமரைப் பார்த்து "நீங்கள் நாளைக்கு வந்தால் இந்த நூலுக்கு நிகரான எடையில் செல்வத்தைத் தருகிறேன்..." என்றான்.

பிராம்மணர் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை நடுங்கிக் கொண்டிருந்தார். 'இப்படி பூணூல் எடைக்கு மேல் வாங்கிக்கலை என்று சொல்லி விபரீதத்தில் மாட்டிக் கொண்டோமே' என்று அவருக்கு ஒரே பயம்.

அந்த பயத்துடனேயே புறப்பட்டுப் போனவர் மறுநாள், 'சிரச்சேதம் பண்ணி விடுவானோ அரசன்...?' என்கிற பயத்துடனேயே திரும்பி வந்தார்.

தராசு கொண்டு வரப்பட்டது. பூணூலை வைத்தார் அந்தணர். ராஜா ஒரு காசை எடுத்துப் போட்டான். உடனே பூணூல் தட்டு மேலே போய் விட்டது!

'அதே நூல்தான் அதே தராசுதான். பிறகெப்படி இந்த அதிசயம் நிகழ்ந்தது? நேற்று வேறு மாதிரி அல்லவா நடந்தது?'' - ராஜா மந்திரியை அழைத்து தன் சந்தேகத்தைக் கேட்டான்.

மந்திரி அதற்கு விளக்கம் சொன்னான்:

"நேற்று அவர் கொண்டு வந்தது யக்ஞோபவீதம். யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம்னு சொல்வதுண்டு. மிகவும் புனிதமானது அது. அதற்கு நிறை காண முயல்வதே தப்பு. நமக்கெல்லாம் ஆத்மா என்று பெயர். பகவானை மட்டும் பரமாத்மா என்று 'பரம' - உத்தமமான' என்கிற அடைமொழி சொல்லி அழைக்கிறோம். அதே அடைமொழி இந்த யக்ஞோபவீதத்துக்கும் சொல்லப்படுகிறது. அவ்வளவு பவித்ரமானதாக அது இருந்ததினாலேதான் ராஜ்யத்தையே எடை கொண்டது. ஆனால் இன்றைக்கு அதனுடைய பவித்ரம் போய் விட்டது. அதனாலே சுலபமாக அதை எடை போட்டு விட்டோம்."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஏன் போனது அதனுடைய பவித்ரம்?" என்று கேட்டான் அரசன்.

"பூணூலைத் திரிப்பவர்கள் (தரிப்பவர்களும்) சில நியமங்களிலிருந்து தவறவே கூடாது. ஆனால், இந்தப் பெரியவர் தமது பயம் காரணமாக இன்றைக்கு அந்த நியமங்களைச் செய்யவில்லை. அதனாலேதான் அதன் பவித்ரம் போனது."

நியமமாகச் செய்யப்படும் பூணூலின் மகிமையைச் சொல்வது இந்தக் கதை. சர்வமேன்மை பொருந்திய பரம பவித்ரமான யக்ஞோபவீதம் பகவானுக்கு வாமனாவ தாரத்தின் போது அணிவிக்கப்பட்டது. சூரியனே அவருக்குப் பிரம்மோபதேசம் பண்ணினார் என்று சொன்னேனில்லையா...? பார்வதி தேவி வந்து அவருக்கு முதல் பிக்ஷை இடுகிறாள்! பலாச தண்டத்தை பகவானின் கையிலே தருகிறார்கள்.

பலாச தண்டம் என்பது என்ன...? தண்டம் என்பது சன்னியாசிகளின் கரத்தில் கொடுக்கப்படும் கோல். உபநயன காலத்தில் பலாச மரத்தின் கிளையை இப்படி 'வடு'வின் கையில் கொடுப்பதுண்டு.

ஏன் பலாச மரத்தின் கிளையைக் கொடுக்க வேண்டும்? வேறு மரக் கிளையைக் கொடுத்தால் என்ன என்று கேட்டால் அதற்கொரு விளக்கம் இருக்கிறது.

வேத வித்துக்கள் பலர் ஒரு சமயம் பலாச மரத்தடியில் கூடினார்கள். அங்கே அமர்ந்தபடி காயத்ரி மந்திரத்தை ஓதி அதன் மகிமையைப் பேசினார்கள். இதைக் கேட்டுக் கொண்டே இருந்த பலாச மரத்தின் வட்டமான இலைகள், மூன்று மூன்று கூறுகளை உடைய இலைகளாக வடிவத்தில் மாறிவிட்டன. காயத்ரி மந்திரத்தில் மூன்று பாகங்கள் உண்டு. அந்த மந்திரத்தைக் கேட்டதும் அதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று பாகங்களையும் தன் இலையிலேயே காட்டியது பலாச மரம்! அதனால்தான் பலாச தண்டத்தைக் கொடுக்கும் வழக்கம் உண்டாயிற்று.

பலாச தண்டம் ஏந்தி, பிரும்ம தேஜஸோடு ஜொலிக்கிறார் பரமாத்மா. வடிவமோ வாமன வடிவம் 'மாயா' என்கிற சப்தம் கிருஷ்ணாவதாரத்தோடு தொடர்பு படுத்திச் சொல்லப்படுவது போல் வாமனாவதாரத்துடனும் இணைத்துச் சொல்லப்படுகிறது. அவனும் மாயன்; இவனும் மாயன்!

'மாயா வாமனனே மதுசூதா நீயருள்வாய்' என்று 'வாமனனையும் மாயனை மன்னு வடமதுரை மைந்தனை' என்று கண்ணனையும் பாடுகிறார்கள் ஆழ்வார்கள்.

இப்படிப்பட்ட மாயன்தான் மூவுலகளந்த திரிவிக்கிரமனாய் விச்வரூபமெடுக்கவிருக்கிறான்.

விச்வ சப்தத்துக்குரிய இந்த மாயன், நர்மதா நதி தீரத்திலே, பிரஹ்லாதனுடைய பேரனான பலி சக்ரவர்த்தி செய்த அசுவமேத யாகத்துக்கு வருகிறான்.

யக்ஞ சம்ரக்ஷகன் அந்த பரமாத்மா. சிராத்த சம்ரக்ஷகன் என்றும் அவனைச் சொல்வதுண்டு. சிராத்தம் பண்ணும் போது ஸ்ரீ மஹாவிஷ்ணும் ஆவாஹயாமி என்று அவனை ஆவாஹனம் பண்ணுகிறோம். எனவே அவன் சிராத்த சம்ரக்ஷகன் ஆகிறான்.

சிராத்த சம்ரக்ஷகனாக மட்டுமா ' அவன் இருக்கிறான்? எல்லாவற்றுக்கும் சம்ரக்ஷகன் அவன்தான். சர்வதா ரக்ஷகன் - எப்போதும் ரக்ஷிக்கிறவன். சர்வத்ர ரக்ஷகன் - எங்கும் ரக்ஷிக்கிறவன்!

இதை உணர்த்த வேடிக்கைக் கதை ஒன்று சொல்வார்கள். ஒருத்தர் மாதம் இருபத்தைந்தாம் தேதி வரைக்கும் எப்படியோ குடும்பத்தை நடத்தி விட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அடுத்த ஆறு நாளைக்கு பகவான் எப்படியாவது நடத்திக் குடுத்துட்டான்னா, ஒண்ணாம் தேதி எனக்கொரு ஐயாயிரம் ரூபாய் பணம் வரும். அடுத்த மாசம் பரவாயில்லை; சமாளிப்பேன்..." என்றார் அவர்.

இருபத்தைந்து தேதி வரை இவர் நடத்தி விட்டாராம் குடும்பத்தை! மேல் வருகிற ஆறு நாட்களுக்குத்தான் பகவானுடைய சகாயம் வேண்டுமாம்! அடுத்த மாதம் ஐயாயிரம் ரூபாய் நம்மை ரக்ஷிக்கும் என்கிறார்! எத்தனை வித ரக்ஷணம் பாருங்கள்...! திரவிய ரக்ஷணம், இவரே ஒரு ரக்ஷகர். அப்புறம் பரமாத்மா...? சும்மா இடையிலே ஆறு நாட்களுக்கு ரக்ஷித்தால் போதுமாம்!

இது நம்மிடத்திலே இருக்கிற அவிவேகத்தினாலே வரும்படியான சொல்! உண்மையில் பகவான்தான் சர்வதா ரக்ஷகன். அவன் ரக்ஷிக்கிறதில்லை என்று நாம் நினைக்கலாமா...? நினைக்கத்தான் முடியுமா? எப்போதும் அவன்தான் நம்மை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் பூரணமாக உணர வேண்டும்.

பராசர பட்டர் ஸ்ரீரங்கத்திலே உபன்யாசம் பண்ணுகிறார் - பகவானை ரக்ஷகன் ரக்ஷகன் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார். உபன்யாஸம் கேட்கிற கோஷ்டியிலே ஒருத்தர் எழுந்தார்.

"வெறுமனே ரக்ஷகன் ரக்ஷகன் என்று சொல்லி விட்டால் போதுமா? புத்தகத்திலே இருக்கற பிரமாணத்தைக் காண்பித்தால் போதுமா? எங்கே பகவான் நம்மை ரக்ஷிக்கிறான்? அப்படி அவன் ரக்ஷிப்பதாகத் தெரிய வில்லையே. நானல்லவா அவஸ்தைப்படுகிறேன் என் குடும்பத்தை ரக்ஷிக்க! ஓடி ஓடி உழைத்தாலும் பொழுது போதவில்லையே... பகவான்தான் ரக்ஷிக்கிறான் என்று சொன்னால் எப்படி சுவாமி பொருந்தும்?"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“அப்போ, பகவான் உன்னை ரக்ஷிக்கலை என்கிறாயா?” - பட்டர் கேட்டார்.

“ரக்ஷிக்கறதாகத் தெரியலை. படற அவஸ்தை மொத்தமும் நான்தான்...!”

பார்த்தார் பாரசர பட்டர். “இதுக்கான பதிலை நாளைக்குச் சொல்கிறேன். காலையில் பத்து மணிக்கு என் கிரஹத்துக்கு வாரும்” என்று சொல்லி அனுப்பி விட்டார்.

பராசர பட்டர் ரங்கநாதர் கோயில் புரோஹிதர், கோயில் காரியங்களை முடித்துக் கொண்டு பத்து மணிக்கு பட்டர் தன் திருமாளிகைக்கு வந்தார். கேள்விகேட்டவரும் சரியாக வந்துவிட்டார்.

பட்டர் கேட்டார்: “ராத்திரி நன்றாகச் சாப்பிட்டீரா?”

“சாப்பிட்டேன்...”

“நன்றாகப் படுத்துத் தூங்கினீரா?”

“தூங்கினேன்.”

“எத்தனை மணிக்குப் படுத்தீர்?”

“ஒன்பது மணிக்கு...”

“எத்தனை மணிக்குத் தூக்கம் வந்தது?”

“ஒரு ஒன்பதரை மணியிருக்கும்...”

“எப்போது வழக்கமாய் எழுந்திருப்பீர்?”

“காலை நாலரை மணிக்கு.”

“ராத்திரி ஒன்பதரை மணிக்கப்புறம் உம்மை நீர் உணர்வீரா...?”

“தூக்கத்தில் யார்தான் உணர்வார்கள்...?”

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இரவு ஒன்பதரையிலிருந்து பிராதஹ் காலம் நாலரை மணி வரைக்கும் உம்மை நீரே தான் ரக்ஷித்துக் கொள்கிறீரா...?"

"தூங்கும்போது எப்படி ரக்ஷித்துக் கொள்ள முடியும்?"

"தூங்கும்போது நாம் படுத்திருக்கும் பவனமே இடிந்து நம் மீது விழலாம். துஷ்ட ஜந்துக்கள். விஷ ஜந்துக்கள் வந்து கடிக்கலாம்... இதிலிருந்தெல்லாம் நம்மைக் காப்பாற்றி அந்த பரமாத்மா ரக்ஷிக்கவில்லையா...? இவ்வாறு தூக்கத்திலே ரக்ஷிப்பவன் விழிப்பின் போதும் ரக்ஷிப்பான் என்று தெரியவில்லையா...?" என்று கேட்டார் பராசர பட்டர்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27

'தூக்கத்திலே நம்மை ரக்ஷிக்கிற பரமாத்மா விழிப்பின் போதும் ரக்ஷிக்க மாட்டானா...?' என்று பராசர பட்டர் கேட்டாரல்லவா?

தூக்கம் என்பதை நமக்கு விதித்ததே இந்தப் பேருண்மையை நாம் உணரவேண்டும் என்பதற்காகத்தான்! அவன் சர்வாந்த்ரயாமி என்பதை உணர்த்துவதற்குத்தான்!

பகவானே ரக்ஷகன் என்பதை சகல சித்தாந்தங்களும் ஒப்புக் கொள்கின்றன.

இப்படிப்பட்ட பகவானை ஆவாகனம் பண்ணி, சாதாரணமாய் யாக பூஜைகளுக்கு வரவழைக்க வேண்டும். ஆனால் அதெல்லாம் பண்ணாமலே, பலி சக்ரவர்த்தியின் அசுவமேத யாகத்துக்கு வருகிறான் பரமாத்மா. மஹா பலியுடைய யாகத்தின் பயனே நேரே வருகிறது!

எங்கும் வியாபித்து இருக்கக்கூடிய விபு - விச்வமாக இருப்பவன், தன்னை ஒடுக்கி, எல்லாவற்றையும் மறைத்து, குள்ளமாய் வாமனனாய் அல்லவா வருகிறான்! அவன் விபு: அவன் பிரபுவும் கூட - எல்லாவற்றுக்கும் மேலானவன்; எல்லாவற்றையும் நியமிக்கக்கூடியவன். அவனே யாசித்தலுக்கு வருகிறான் என்றால்... அதுதான் பரமாத்மாவினிடத்திலே இருக்கிற உத்தமமான குணம்.

இந்த வாமன அவதாரத்திலே ஆண்டாள் ரொம்ப ஈடுபாடு கொண்டு, வாமன மூர்த்தியை 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று கொண்டாடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தமன்...? பிறருக்காக காரியம் செய்கிறவன் உத்தமன். தம்மை ஆச்ரயித்தவர்களுக்காக எதையும் செய்பவன்.

தன்னை ஆச்ரயித்த அர்ஜுனனுக்கு ஸாரதியாய் இருந்தான் பகவான். 'உனக்கு நான் ஸாரதியாக இருக்கிறேன்' என்று, தானே அந்த வேலையைக் கேட்டு வாங்கிக் கொண்டான். எடுத்துக் கொண்ட காரியத்துக்கு ஏற்ப பவ்ய மூர்த்தியாய் விளங்கினான். ரதத்தை நிறுத்திய போதெல்லாம் தான் முன்னதாகக் கீழே இறங்கி, அர்ஜுனனுக்குக் கைகொடுத்து கீழே இறக்கி விட்டான். அவ்வளவு பவ்யம்! 'இங்கே நிறுத்து', 'அங்கே கொண்டு போ' என்று அர்ஜுனன் இட்ட வழக்காய் வேலை செய்தான்.

கடைசியில் யுத்தமெல்லாம் முடிந்த பிறகு பகவான் மாறி விட்டான்! தான் முன்னே இறங்காமல் அர்ஜுனனை இறங்கச் சொன்னான். 'கீழே இறங்கி, தூரப் போய்விடு! என்றான். அர்ஜுனன் நகர்ந்ததும் பகவான் இறங்கினான்; அந்த ரதம் அப்படியே கருகிப் போய்விட்டது! அத்தனைக் காலமும் பாணங்களின் சக்தியால் அந்த ரதம் அழியாமல் பகவான் அல்லவா ரக்ஷித்துக் கொண்டிருந்தான்!

அதைப் போல, இந்திராதி தேவர்கள் தன்னை ஆச்ரயித்தற்காக அவர்கள் பொருட்டு - இந்த யாசகத்தை மேற்கொண்டான் பகவான். வாமனனாக அவதரித்து வந்தான். இந்த யாசகம் இருக்கிறதே... ரொம்ப சிரமமான காரியம்.

கேட்கிறபோது கை நடுங்கும்; வாக்கு குழறும். உடலெல்லாம் வியர்க்கும்... என்ன கேட்பதென்று புரியாமல் வார்த்தையே வராது. "அடியேன்... அடியேன்..." என்று யாசிப்பவர் மேலே கேட்கத் தெரியாமல் தவிப்பார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்திம காலத்திலே என்னென்ன விகாரங்கள் எல்லாம் ஏற்படுகின்றனவோ, அது மொத்தமும் ஒருத்தரிடம் கையை நீட்டி யாசிக்கும்போதும் ஏற்படும் என்று சாஸ்திரம் சொல்கிறது. ஆகையினால் இரத்தல் இறத்தலுக்குச் சமம்! அப்படியிருந்தும் அந்தத் தொழிலையே பரமாத்மா மேற்கொண்டானே...!

வந்து நின்ற பகவானைப் பார்த்து ஒரே ஆச்சர்யமாம் மகாபலிக்கு!

"தாங்கள் யார் தெரியலையே...!" என்று அவன் கேட்கிறான்.

யாரென்று சொல்வான் பரமாத்மா...?

"அபூர்வ:" என்று பதில் சொல்கிறான். "என்னை நீ பார்த்திருக்க முடியாது. நா்ன் யார் என்பதைச் சொன்னாலும் புரியாது."

தினமும் இங்கே நான் வந்து உபன்யாஸம் பண்ணுகிறேன். இதில் சொல்வது எல்லாம் புரிகிறதா என்றால், இல்லை! எனக்கே இன்னும் பல விஷயங்கள் முழுவதுமாய்ப் புரியவில்லை. விச்வ சப்தத்தினுடைய முழு அர்த்தமும் புரிந்து விட்டதாகச் சொல்ல முடியுமா? ஏதோ பரஸ்பரம் இங்கே வந்து பகவான் குணத்தை நாம் பரிமாறிக் கொள்கிறோம்.

'கொண்டி பசுவுக்குத் தடி கட்டி விட்டாற்போல...' என்று பழமொழி சொல்வார்கள். அது மாதிரிதான் இந்த உபன்யாசம்.

ஒருத்தன் நூறு பசு வைத்திருந்தான். அதிலே ஒரு 'பசு ரொம்ப துஷ்டை! புல்லை மேயாமல் கதிர் விட்டிருக்கிற பயிரைப் போய் மேயும்! பயிருக்குச் சொந்தக்காரரான விவசாயி அதை நன்றாகப் போட்டு அடித்து விட்டார். பசு மாட்டுக்காரனுக்கு ஒரே வருத்தம். 'இந்தப் பசு இப்படி அடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படறதே' என்று ஒரு மரக்கட்டையை அதன் கழுத்திலே கட்டி வைத்தான். பசு அப்படி இப்படிப் போனால் அந்தக் கட்டை ஆடி, அதன் முட்டியிலே இடிக்கும். இடித்தால் ஏகமாய் வலிக்கும். அதனாலே பசு மேயப் போவதை நிறுத்தி விட்டது!

நாமும் அப்படித்தான். விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்கிற தடி கட்டி வைத்திருக்கு நமக்கு!

- தினமும் இரண்டு மணி நேரம் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதாலே மனம் அங்கே இங்கே போகாமல் இருக்கிறது. எல்லோரும் ஒரே இடத்திலே ஒரே மனத்துடன் பகவானை நினைக்க ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. கலியுகத்திலே இதைப் போன்ற கூட்டுப் பிரார்த்தனைக்கு மகிமை அதிகம். இப்படி உபன்யாஸம் சொல்லிக் கொண்டேயிருந்து, கேட்டுக் கொண்டேயிருந்தால் பகவத் அனுக்கிரஹத்தினாலே ஒருநாள் எல்லாம் புரிய ஆரம்பிக்கும். அதுவும் அவன் அருளால்தான் நடக்கிறது!

ஆக, அறிய முடியாத தன்மையைத்தான் 'அபூர்வ:' என்கிற பதில் மூலம் பலிசக்ரவர்த்திக்கு உணர்த்தினான் பகவான்.

சக்ரவர்த்தி அடுத்த கேள்வி கேட்கிறான்:

"சரி, உங்களுக்கு எந்த ஊர்?"

"பிரும்ம சிருஷ்டியிலே இருக்கும்படியானது மொத்தமும் என் ஊர்தான்!"

இந்த பதிலைக் கேட்டு பலி சக்ரவர்த்திக்கு, 'ஐயோ பாவம்!' என்று தோன்றியதாம். 'இவ்வளவு தேஜஸ்வியாய் இருக்கிறாரே... இவருக்கு இவ்வளவு ஏழைமையா!' என்று வருத்தம் வந்ததாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இந்த சென்னை மொத்தமும் என்னுது" என்று ஒருத்தர் சொன்னாரானால் என்ன அர்த்தம்? ஒரு அடி மண் கூடச் சொந்தமில்லை - மேலே ஆகாசம் கீழே பூமின்னு வாழ்கிறவர் என்றுதானே அர்த்தம்! அப்படி அர்த்தம் புரிந்து கொண்டான் மஹாபலி.

அடுத்த கேள்வி கேட்டான்:

"உங்க அப்பா என்ன பண்ணுகிறார்? யாருடைய பிள்ளை நீர்...?"

"நான் அனாதை. எனக்கென்று யாரும் கிடையாது."

இதைக் கேட்டு பலி சக்ரவர்த்திக்கு ரொம்ப வீர்யம் ஏற்பட்டுப் போய்விட்டது.

'ஆஹா! எப்பேர்ப்பட்ட பாத்திரமிது! நல்ல பாத்திரத்திலே தானம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திர மல்லவா... வந்திருப்பவரோ ஏழை, அப்பா - அம்மா கிடையாது. பிரும்ம தேஜஸ் வேறு சொட்டுகிறது. அவரிடத்திலே...' என்று எண்ணுகிறான். பெரிதாக ஒரு வார்த்தை வருகிறது அவனிடமிருந்து.

"என்ன வேண்டும் உனக்கு...? என்ன வேண்டுமானா லும் கேள்; தருகிறேன்."

பகவான் தன் சின்ன திருவடியைக் காட்டிச் சொல்கிறான் - "இந்த அடியினாலே மூன்றடி மண் வேண்டும்."

"அதற்கு மேலே வேண்டாமா...?"

"வேண்டியதில்லை. அதிலேயே சந்தோஷம் எனக்கு ஏற்படும்."

இந்த சம்பாஷணையை சுக்ராச்சார்யார் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். 'இவனுக்காக இவ்வளவு தூரம் சிரமப்பட்டு யாகத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தச் சமயத்திலே ஏமாற்றுவதற்கென்றே ஒருவன் வந்திருக்கிறானே...!'

மஹாபலியை எச்சரித்தார் சுக்ராச்சார்யார். ஆனால் பலிச்சக்ரவர்த்தி கேட்கவில்லை. 'சாக்ஷாத் நாராயண'னே வந்தாலும், அவன் கை தாழ்ந்து யாசிக்க, என் கை உயர வேண்டும் என்று இருக்கிறதே... அதுவும் அவனுடைய சங்கல்பத்தினாலேதானே அமைந்திருக்கிறது. அதனால் அவன் கேட்டதைக் கொடுப்பேன்' என்றான்.



In Public domain: Digitization Muthulakshmi Research Academy

பரம பாகவதோத்தமன் அந்த பலி சக்ரவர்த்தி. தேவதைகளைச் சித்ரவதை பண்ணினாலும் சொன்ன வாக்கைக் காப்பாற்றியவன். தன்னிடம் யாசித்தது பகவானே என்று உணர்ந்த பிறகும் அவன் பின்வாங்கவில்லை.

மஹாபலியின் தர்மபத்தினி விந்த்யாவளி. அவன் தானம் கொடுக்கும்போது அருகிருந்து தீர்த்தம் சேர்க்க வருகிறார். அப்போது சுக்ராச்சார்யார் தவளை வடிவாக மாறி, கமண்டலத்திலிருந்து ஜலம் விழுவதைத் தடுக்கிறார்.

அப்போது பகவான் தம் கையில் அணிந்திருந்த விச்வாமித்ர தர்பத்தினால் அந்த கமண்டலத்தின் தாரையைக் குத்துகிறார்.

தர்ப்பத்தை பகவான் கையிலே வைத்திருக்கிறார். தேஜஸ் மிகுந்த பிரும்மச்சாரியாய் வந்தார் என்று பார்த்தோமல்லவா. அந்தக் கோலத்துக்கு உரியதுதான் இந்த தர்ப்பம் (தர்பை). கிருஷ்ணாஜினம் என்னும் வஸ்திரத்தாலே மார்பைப் போர்த்திக் கொண்டு வருகிறார். மார்பை ஏன் மறைத்துக் கொள்கிறார் என்றால், அந்த பிரும்மச்சாரி கோலத்திலும் மஹாலக்ஷ்மி தாயார் விடாமல் அவன் திருமார்பிலே வாசம் பண்றாளாம். அவள் பார்வை மஹாபலியின் பக்கம் படக்கூடாது என்பதற்காக மார்பை மறைத்துக் கொண்டானாம் பரமாத்மா. லக்ஷ்மி கடாக்ஷம் பட்டு விட்டால் மஹாபலிக்குக் கொள்ளக் குறையா செல்வமல்லவா ஏற்படும்! அப்புறம் அவதார பூர்த்தி ஆகாது அல்லவா!

எனவே கிருஷ்ணாஜினம் போர்த்தி வருகிறார் பகவான். மஹாபலியின் மனைவி தீர்த்தத்தை அவர் கையிலே விடும்போது அதை வாங்கிக் கொள்வது போல, தம் கையில் இருக்கும் தர்ப்பத்தைக் கொண்டு சுக்ராச்சார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாரின் கண்ணைக் குத்தி விடுகிறார். அவருக்கு ஒரு கண்ணே போய் விட்டது!

தர்ப்பத்தால் குத்தினால் கண் போய் விடுமா என்று கேட்டால், பகவான் சுதர்ஸன சக்ரத்தை அல்லவா பவித்ர மாகப் (விரலில் மோதிரம் போல் அணியப்படும் தர்ப்பை) போட்டுக் கொண்டிருக்கிறான்? அதனால் அத்தனை சக்தி, தர்ப்பத்தைக் கொண்டு செய்த அந்த பவித்ரத்துக்கு!

கிண்டியிலிருந்து ஜலம் பகவான் கையிலே விழுகிறது. அந்த நேரத்திலே அவன் திருவடி எங்கே போச்சு... என்று கேட்டால்... நீண்டு கொண்டே போகிறது! பூலோக மேலோகங்களெல்லாம் தாண்டி, பிரும்மாவின் உறைவிட மான சத்யலோகம் வழியே போகிறது அந்தத் திருவடி. சத்ய லோகத்தையும் தாண்டிப் போய் ஆவரண ஜலத்தைக் கிழிக்கிறது!

ஆவரண ஜலம் என்றால் ஒவ்வொரு அண்டத்தையும் சுற்றிக் காணப்படும் ஜலம். கருவிலே சிசுவைச் சுற்றி ஜலம் இருப்பது போலே ஒவ்வொரு அண்டத்தைச் சுற்றியும் இப்படி ஆவரண ஜலம் இருக்கும். பகவானின் திருவடி இந்த ஆவரண ஜலத்தைக் கிழித்து விடுகிறது.

பிரும்ம லோகத்தைத் தாண்டி ஆவரண ஜலத்தை நோக்கிப் போன அந்தத் திருவடியை பிரும்மா பார்த்தார். நான்கு வேதங்களும் தேடிக் காண முடியாமல் தோற்ற திருவடி! மனசும் வாக்கும் அலைந்து தேடியும் கண்டறியாத திருவடி!

மனமும் வாக்கும் அந்தத் திருவடியைத் தேடி அலைந்த கதையொன்று உபநிஷத்தில் உண்டு... அதை அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28

ஒரு சமயம் மனசுக்கும் வாக்குக்கும் இடையே பெரிய சண்டை வந்தது. வாக்கு, மனசைக் கேட்டது – "சதா என்னை சச்சரவு பண்றியே... கொஞ்சம் யோசனை பண்ணிப் பாரு நீ... நான் இல்லைன்னா உனக்குப் பிரயோஜனம் உண்டா? என் உதவியினால்தானே நீ வெளியில் வர முடியறது...?"

மனசிலே ஆயிரம் எண்ணங்கள் இருக்கும். அடியேன் இங்கே வந்து உட்காருகிறேன். ராத்திரி ஒன்பது மணி வரைக்கும் வாயைத் திறக்காமலே உட்கார்ந்திருந்தால், என் மனத்திலே என்னதான் விஷயங்கள் ஓடினாலும் அது எதிரே இருப்பவர்களுக்கு ஏதாவது புரியுமோ?

வாக்தேவதை இல்லாத மனத்தினாலே பிரயோஜன மில்லை – என்று வேதமே சொல்கிறது. இன்னொரு இடத்தில், 'மனிதர்கள் ஒருத்தரோடு ஒருத்தர் தொடர்பு கொண்டு எதனாலே மேன்மையுறுகிறார்கள் என்றால், வாக்கினாலேதான் அவ்வாறு மேன்மையுறுகிறார்கள் என்கிறது வேதம்!

உலகிலே மனிதர்கள் வாக்கினால் பரிமாறிக் கொண்டுதான் உறவு முறையை வளர்த்துக் கொள்கிறார் கள். வாக்கு கேட்ட கேள்விக்கு வருவோம்... அதற்கு மனசு பதில் சொன்னது: "நான் மட்டும் இல்லாவிட்டால் நீ தனியாப் பேசிவிட முடியுமா? நான் விஷய தானம் பண்ணினால்தானே நீ பேச முடியும்?"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வாக்கு' வாதம் தொடர்ந்தது. ஏகமாய்ச் சண்டை! கடைசியில், இரண்டுமே, 'பிரும்மாவிடம் போய்க் கேட்போம்' என்று நியாயம் கேட்கக் கிளம்பிப் போயின.

வாதி - பிரதிவாதி இரண்டுமே பிரும்மாவிடம் போய் நின்றன. 'எங்களுள் யார் பெரியவன்' என்று கேட்டன. இந்த பிரும்மா பாவம்! லௌகிகமே தெரியாதவர். உலகம் முழுவதையும் படைக்கிறவர் என்றாலும் அவருக்கு லௌகிகம் தெரியவில்லை!

"என்னுடைய படைப்பைச் சொல்கிறேன்... எப்படி படைத்தேன் என்று சொல்கிறேன் - நீங்கள் சண்டை போடக் கூடாது!" என்றார்.

"மனசை முன்பு சிருஷ்டி பண்ணினேன்.

வாக்கை பின்பு சிருஷ்டி பண்ணினேன்.

பிராணனை முன்பு சிருஷ்டி பண்ணினேன். அபானனை பின்பு சிருஷ்டி பண்ணினேன். ஆகவே மனசுதான் பெரிது. வாக்கு சிறியது! ஏ வாக்கே, மனசுடன் சண்டை போடாதே..." என்று சொல்லி விட்டார்.

வாக்குக்கு ஏகமாய்க் கோபம். "என்னையும் படைத்து, மனசையும் படைத்து... இப்படி நாங்கள் மத்யஸ்தம் கேட்க வந்த நேரத்தில் என்னை மட்டம் என்று சொல்லி விட்டீரே! அதுவும் அந்த மனஸ்ஸைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே சொல்லி விட்டீரே... என்னால் உமக்குப் பிரயோஜனமே இல்லாமல் போகக் கடவது!" என்று சாபமே கொடுத்து விட்டது வாக்கு!

இந்தச் சாபம் காரணமாகத்தான் பிரும்மாவுக்கு என்ன மந்திரம் சொன்னாலும் உரக்கச் சொல்லக்கூடாது என்று வழக்கம் ஏற்பட்டுள்ளது. உரக்கச் சொல்லப்படும் மந்திரம் பிரும்மாவுக்குப் போய்ச் சேரவே சேராது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபித்துவிட்டுப் போன வாக்தேவதை அதோடு விட்டு விடவில்லை. கோபத்துடன் ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து அழுதது. இந்த மனசு சும்மா இருக்கலாமல்லவா! அதான் இல்லை! அங்கேயிருந்து வந்து வாக்தேவதையை முதுகிலே ஒரு தட்டு தட்டியது. "பெரிசா பேசினியே... பிரும்மா என்ன சொன்னார் பார்த்தியா....? அதுக்கப்புறமும் உனக்குத் தெளிவு வரலை... இப்படி விசாரப்பட்டுக் கொண்டு அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கியே...? என்னைப் பெரியவன் என்று ஒப்புக் கொள்வதில் உனக்கென்ன கஷ்டம்?" என்று கிண்ட ஆரம்பித்தது.

"சரி, பிரும்மா சொன்னதை விட்டுடு; இப்போ உனக்கும் எனக்கும் போட்டி. நான் பரப்ரும்மத்தைப் பார்க்கப் போறேன். உனக்கு சக்தி இருந்தால் ஓடி வா பார்ப்போம்..." என்று மேலும் சொல்லிவிட்டு மனசு 'குடுகுடு'வென்று ஓட ஆரம்பித்து விட்டது.

வாக்குக்கு அந்தக் கணத்தில் ரொம்ப பௌருஷம் வந்து விட்டது. அப்படியா சங்கதி! நானும் வருகிறேன் என்று மனஸோடு சேர்ந்து ஓடியது. மனசு ரொம்ப ரொம்ப வேகமாகப் போயிற்று. அந்த வேகத்தில் போக முடியாமல் வாக்கு ஏதோ தன் வேகத்திலே ஓடிப் போனது. ஆனால் இரண்டும் எத்தனை வேகமாய்ப் போய்த் தேடியும் அந்த பரப்ரும்மத்தைக் காண முடியவில்லை!

வேகமாய் வந்து கொண்டிருந்த வாக்கு திரும்பி ஓடி வந்து கொண்டிருந்த மனஸைப் பார்த்துக் கேட்டது:

"ஏ மனசே! என்னைக் காட்டிலும் அதிவேகமாய் ஓடினாயே... அந்த பரபிரும்மத்தைக் கண்டாயா...?"

'இல்லை' என்று கையை விரித்து விட்டது மனசு! வாக்குக்கு ஒரே சந்தோஷம்! ஒரு எகிறு எகிறி மனசினுடைய தோள் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நீயும் நானும் கூட்டாளி தான்; நீயும் நானும் ஒண்ணு தான்... வா!" என்றதாம்.

இப்படி ஒப்புவமை சொல்லிக்கறதுல சிலர் சமர்த்தர்கள். ஒருத்தர் சொல்கிறார். "அந்த சதுர்முக பிரும்மாவும் நானும் ஒண்ணுதான்..." என்று!

"எப்படி?"

"ஒருவிதத்துலே சமம்."

"எந்த விதத்திலே...?"

"அந்த சதுர்முக பிரும்மாவுக்கும் பரப்ரும்மத்தைக் குறித்துப் பிரமாணமாய்த் தெரியாது... எனக்கும் தெரியாது!" என்றார்!

அந்த மாதிரிதான்! மனம் ஓடியதையும் வாக்கு ஓடியதையும் அட்டவணை போட்டுப் பார்த்தால், மனம் ஓடிய தூரம் ரொம்ப அதிகம். ஆனால் வாக்கு, மனம் இரண்டுக்கும் வாய்த்த பலன் ஒன்றுதான்! ஓடிய தூரம்தான் வேறுபட்டது.

இப்படி மனசும் வாக்கும் தேடி ஓடிய திருவடி, அவை தேடியும் காண மாட்டாத திருவடி, தம்மை நாடி வந்ததே என்று பிரும்மாவுக்கு ஒரே சந்தோஷம். சத்ய லோகத்தில், அவர் பக்கத்தில் பகவானின் திருவடி தெரிய பிரும்மா அதைத் தம் கமண்டல தீர்த்தத்தால் அலம்புகிறார். அந்தத் திருவடி தீர்த்தம், பகவானின் பாதம் துளைத்துக் கிழித்த ஆவரண தீர்த்தம், பலி சக்ரவர்த்தி பகவானின் கையிலே விடுகிற தீர்த்தம் என இந்த மூன்றும் ஏக தாரையாக - ஒரே நேர்க்கோடாக விழுந்ததாம்.

அவ்வாறு விழுந்ததென்றால், பகவான் எத்தனை வேகத்தில் உலகளந்தான் என்பதை நாம் யோசனை செய்து பார்க்க வேண்டும்! கற்பனைக்கெட்டாத வேகம் அது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகளந்த சேவடியை உயர்த்திய நிலையில் பகவானை சீர்காழியிலே பார்க்கலாம். அந்தக் காட்சியை ஞானசம்பந்தப் பெருமானின் முன்னிலையில் பாடியிருக்கிறார் திருமங்கையாழ்வார்.

சின்னக்குறளுருவாய் வந்தான். இந்த இரு நிலத்திலே மூன்றடி கேட்டான். இரண்டாவது அடியால் அளந்து முடித்துவிட்டு, 'மூன்றாவது அடியை எங்கே வைக்க?' என்றான்!

ஆழ்வார் இதைப் பாடிய உடனே ஞானசம்பந்தர் தம் கையிலிருந்த வேலை அவரிடம் கொடுத்து விட்டாராம்.

ஒரு வித்வானுக்குத்தானே இன்னொரு வித்வானின் சிரமம் தெரியும்!

இந்தச் சீர்காழிப் பெருமான் ஒரு காலை உயர்த்தியிருப்பதுடன் ஒரு விரலையும் உயர்த்தி, 'மூன்றாவது அடியை எந்த இடத்தில் வைக்க...?' என்று கேட்கிறான்! அந்த மூன்றாவது அடிக்குத்தான் மஹாபலி தன் தலையைக் காட்டி விட்டானே... பிறகு ஏன் விரல் இன்னும் உயர்ந்த நிலையிலேயே இருக்க வேண்டும்?

நாமும் பலி சக்ரவர்த்தியைப் போல அவனுக்குத் தலைதாழ்த்த வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தத்தான்!

ஆளவந்தார் அப்படித்தான் பகவானிடம் போய் வேண்டிக் கொண்டார்:

"ஹே பிரபு! நாராயணா! திரிவிக்கிரமா! மறுபடி உன் திருவடியை என் சிரஸில் வையேன்..."

'மறுபடி' என்ற சொல் கவனிக்கத்தக்கது.

'முதலில் நீ திரிவிக்கிரமனாய் இந்த உலகை அளந்த போது நான் என்ன வஸ்துவாக இருந்தேனோ, தெரியாது... அப்போது என்னையும் சேர்த்துத்தானே அளந்திருப்பாய்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே இப்போது இரண்டாவது முறையாக...' என்று ஆள வந்தார் உட்பொருள் வைத்து வேண்டுகிறார்.

ஆகையினாலே, பகவான் எல்லா இடத்தையும் சமமாக அளந்து எடுத்துக் கொண்ட அவதாரம் வாமன அவதாரம். விச்வமாகிற பரமாத்மா, தன்னையே தான் கேட்டுப் பெற்றுக் கொண்டான்! கேட்டால் பலி சக்ர வர்த்தி கொடுக்கிறானா இல்லையா! என்று பரீட்சித்துப் பார்த்தான். அதே போல்தான் நமது ஆத்மாவும் அவனுடையது. அதை நாம் அவனிடம் கொடுக்கிறோமோ என்றுதான் அவன் சோதித்துக் கொண்டிருக்கிறான். நமது ஆத்மா அவன் சொத்து... அதைப் பெற வேண்டுமென்கிற முயற்சியிலேயே அவன் இருப்பான். - அதைத்தான் இந்த விச்வம் என்கிற சப்தத்தினால் உணர்த்தப்படும் வாமன அவதாரமும் காட்டிக் கொடுக்கிறது.

ஒருவர் கையிலே ஒரு சவரன் மோதிரம் போட்டுக் கொண்டிருக்கிறார். மோதிரம் காணாமல் போய் விடுகிறது. தொலைத்தவருக்கு ரொம்ப விசாரம். ஆனால், விரலைப் பிரிந்தோமே என்று மோதிரம் விசனப்படுகிறதா என்ன...!

அந்த மோதிரத்தின் நிலைமைதான் நம்முடையது! பகவான் நமக்காக விசனப்படுகிறார். எப்போது நாம் நற்கதி அடைவோம் என்பது அவருக்குக் கவலை. நாமோ, கீழே விழுந்த மோதிரம் மாதிரி எதையும் லட்சியம் பண்ணாமல் உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் நம்மை விட்டு விடுவானா பரமாத்மா...? நம்மைக் கரை சேர்ப்பதே காரியமாய் இருப்பான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29

'விச்வம்' என்கிற சப்தத்தினால் பரசுராமர் சொல்லப்படுகிறார். தசாவதாரத்திலே (வாமனாவதாரத்தை அடுத்து) வரக்கூடியவர். இவரை 'பார்கவ ராமர்' என்று அழைப்பது. சாமான்யரால் பார்க்க முடியாதவர். பகவதவதாரத்திலே எத்தனையோ அவதார வகைகள் உண்டு. சாக்ஷாத் அவதாரம், அனுப்ரவேசாவதாரம், ஆவேசாவதாரம் என்று இப்படிப் பல. சாக்ஷாத் அவதாரமென்றால், ராமர், கிருஷ்ணர், நரசிம்ஹர் என்று பிரத்யக்ஷமாய்ப் பார்க்கப்பட்ட அவதாரங்கள். அனுப்ரவேசாவதாரம் என்பது இன்னொரு உருவிலே பகவான் உட்புகுந்து வந்த அவதாரம். வியாஸாவதாரம் என்பது அனுப்ரவேசாவதாரம். இதிலே ஆவேசாவதார வகையைச் சேர்ந்தது பரசுராம அவதாரம்.

இந்த அவதாரத்திலே பகவான் ஆவேசித்து முழுமையாய் நின்று பிரகாசிக்கிறான். இந்த அவதாரம் ஏன் ஆவேசாவதாரமாகிறது என்று பார்த்தோமானால், நித்யம், ஜபம், ஹோமம் பண்ணக்கூடியவளாலே தான் அதைப் பார்க்க முடியுமேயொழிய சாமான்ய ஜனங்களால் பார்க்க முடியாது. அத்தனை தேஜஸ் அந்த அவதாரத்துக்கு!

இருபத்தி மூன்று தலைமுறை க்ஷத்ரிய வம்சங்களைப் பூண்டோடு அழித்தவர் இந்த பரசுராமர்! க்ஷத்ரிய ரத்தத்தினாலே தர்ப்பணம் பண்ணினவர். உலகமெல்லாம் சஞ்சாரம் பண்ணினவர் என்பதாலே விச்வம் என்கிற சப்தத்தினால் இவர் அழைக்கப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரசுராமரை அடுத்தவன் சாக்ஷாத் விச்வ ரூபியாய் விளங்கக்கூடிய விச்வ சப்தத்தினால் சொல்லக்கூடிய ராகவன். அது எப்படித் தெரிகிறது...?

விஷ்ணு சஹஸ்ரநாமத்திலேயே வருகிறது... ராமாவ தாரத்தைக் குறிக்கக்கூடிய முக்கியமான, விசேஷமான 16 திருநாமங்கள் வருகின்றன. அதை நன்றாக நாம் கவனிக்க வேண்டும்.

புருஷ சூக்த ஹோமம் செய்ய வேண்டும் என்பதை விதிக்கின்ற ரிக் வேதத்தில் கூட பதினாறு ரிக்குகள் - மந்திரங்கள் - இருக்கின்றன. பதினாறு என்பது அத்தனை சிறப்புடையது. பகவான் ராமனும் பதினாறு குணங்களை உடையவன்.

வால்மீகி ராமாயணத்திலே வால்மீகி நாரதரைப் பார்த்துக் கேட்கிறார்: 'பதினாறு குணங்களை உடைய ஒருவன் இருக்கிறானா என்ன?''

அதற்குத்தான் ஸ்ரீ ராமனை முன்நிறுத்தி பதில் சொல்கிறார் நாரதர்: 'குணவான் அவன்; குணக்குன்று அவன்; குணக் கடல் அவன்...'

குணவான் என்று சொல்லும்போது என்ன குணம் சொல்லப்படுகிறது? ஒரு குணத்தைக் காட்டி இந்தக் குணம் உடையவனா? என்று வால்மீகி கேட்கவில்லை... நாரதரும் அப்படி ஒரேயொரு குணத்தைக் காட்டி பதில் சொல்ல வில்லை. அளவிடமுடியாத குணங்களைச் சொன்னார்.

கோவிந்தராஜர் என்பவர் வியாக்யானத்திலே எழுதுகிறார்: 'சௌசீல்யம்' என்பதே பகவானின குணம் - உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று பாராமல் சகலரிடத்திலும் கலந்து நிற்றல், தன் உயர்த்தி பார்ப்பதில்லை பகவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹாதேசிக சுவாமிகள், பகவானை 'சௌசீல்ய ஸாகரம்' என்று சொல்கிறார். அத்தனை காருண்யம் அவனுக்கு - தயா சதகத்திலே சொல்கிறார். 'ஏ, ஏழுமலை பெருமாளே... உன் தயை, காருண்யத்தை நினைத்தால் எனக்கு உடம்பு அப்படியே நடுங்கிப் போகிறது...' என்று... அத்தனை கருணை!

குகனுடன் ஐவரானோம் என்று சொன்னானே...; வாத்ஸல்யத்தால் அவனை நனைத்தானே...; சுக்ரீவனுக்காக எதையும் செய்யத் தயாராய் இருந்தானே; யாரோ ஒருத்தி அந்த சபரி. அவளுக்கு உயர்ந்த கதியைத் தந்தானே...!

சபரி எவ்வளவு கெட்டிக்காரி பாருங்கள்! 'பிரபோ, உன் பார்வை என்மேல் பட்டது; அது ஒன்றே எனக்குப் போதும்; உயர்ந்த கதியை அடைந்து கொண்டிருக்கிறேன்; மோக்ஷம் போய்க் கொண்டிருக்கிறேன்' என்று போய் விட்டாள் அவள்!

அதனால்தான் சுவாமி தேசிகன், 'சபரிக்கு மோக்ஷம் தந்தவனே...' என்று சொல்லாமல் 'சபரி மோக்ஷம் போவதற்கு சாக்ஷியாய் நின்றவனே' என்று சொன்னார். மோக்ஷத்துக்கு உண்டான காரியத்தை சபரி பண்ணியிருக்கிறாள். அதனாலே பகவான் அதை அவளுக்குக் கொடுக்க வேண்டியதேயில்லை... அவன் வெறுமனே அவளைப் பார்த்தபடி நின்றானாம்!

இப்படி சபரி, குசேலர் என்று உதாரணம் சொல்லி பகவானுடைய சௌசீல்ய குணத்தை விசேஷமாய்ச் சொல்லலாம். விச்வ மூர்த்தியாகிய பரமாத்மா, இப்படி சௌசீல்ய குணவானாக இக்ஷ்வாகு வம்சத்திலே வந்தான்.

ஸஹஸ்ரநாம ரீதியாக அவனுக்குச் சொல்லப்படுகிற குணங்களைப் பார்ப்போம். பதினாறு குணங்களிலே முதல் குணமாகச் சொல்லப்படுவது உத்தம குணம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதாவது, பகவான் இராமபிரான் இருக்கிறானே... அவன் எப்படிப்பட்டவன் என்று கேட்டால் ரூபத்திலும், ஸ்வரூபத்திலும், வாக்கு, நடை, உடை பாவனை என்று எதை எடுத்துக் கொண்டாலும் உத்தமமானவன். அவன் வடிவ அழகை நாம் பார்க்கிறோம். எப்படி இருக்கிறது அந்த அழகு...?

'ஓவியத்தில் எழுதவொண்ணா உருவத்தாய்' என்கிறார் கம்பர்.

வாலி ராமனைப் பார்த்துச் சொல்வதாக வருவது இந்த வாக்கு:

'அடடா! என்ன சுந்தர வடிவம்! ஒரு சித்திரம் எழுதக்கூடியவன் இந்த அழகை எழுத முடியுமா? எத்தனை நாழி எழுதினாலும் கிழித்துக் கிழித்துப் போட்டுக் கொண்டே யிருக்க வேண்டியதுதான்!

வால்மீகியினுடைய வர்ணனையைப் பாருங்கள்:

'சந்திரகாந்தாநனம் ராமம்!. -சந்திரனைப் போன்று பிரகாசிக்கிறான். புருஷர்களுடைய திருஷ்டி சித்தத்தைக் கூட அபகரிக்கிறான். சமஸ்தத்தையும் துறந்தவர்கள்கூட அவன் தோளை ஆலிங்கனம் செய்து கொள்ள ஆசைப் படுகிறார்களாம்!

எழுத முடியாத அழகு என்று கம்பர் சொன்னதை, 'எழுத முடியும்' என்கிறார் சுவாமி தேசிகன். அது எப்படி என்று கேட்டால், "நாமாக எழுத முடியாது. ஆனால், அந்த அழகை அவனே எழுதினால் நம்மாலே அதை அழித்து விட முடியுமா என்ன...?" என்று கேட்கிறார்.

விளையாட்டு என்கிற எழுதுகோலைக் கையிலே எடுத்துக் கொண்டு, காருண்யம் என்கிற மையிலே தோய்த்து, நம் ஹ்ருதயம் என்கிற பலகையிலே, அவனே தன் உருவத்தை எழுதினால், அதை அழிக்க முடியுமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடிவழகிலே உயர்ந்த பரமாத்மா, குணங்களிலும் உயர்ந்தவன்தான்.

தசரத சக்ரவர்த்தி ராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ண முடிவு செய்து பிரஜைகளை அழைத்துக் கேட்டாராம்! "ஹே மஹா ஜனங்களே! என் குழந்தைக்குப் பட்டாபிஷேகம் பண்ணணும் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?" என்று.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நாங்களும் அதையே விரும்புகிறோம். உடனே அந்தக் காரியத்தைச் செய்யுங்கள்..." என்று அத்தனை ஜனங்களும் வேத மந்திரத்தைச் சொல்கிற மாதிரி உடனே பதில் சொன்னார்களாம்.

ஒருத்தருக்கொருத்தர் கலந்து ஆலோசிக்காமல் அத்தனை பேருமே எப்படி இவ்வாறு ஏகமனதாகச் சொன்னார்கள்?

"வெண்கொற்றக் குடை திருமுக மண்டலத்தை மறைக்க, யானை மீது பவனி வரும் அவனை நாங்கள் சேவிக்க இச்சை கொள்கிறோம்..." என்றார்கள்.

அது மாத்திரமல்ல... "அறுபதாயிரம் வருஷம் பரிபாலனம் பண்ணின தள்ளாத கிழவர்! இப்போதாவது உனக்கு இந்த எண்ணம் வந்ததே... சீக்கிரம் இறங்கு!" என்றார்களாம்.

இந்த வார்த்தைகள் தசரதனைச் சுரீரென்று சுட்டதாம்.

"நான் என்ன தப்பு பண்ணினேன்...? என்னை இறங்கச் செய்வதில் ஏன் இத்தனை ஆவல்...?" என்று கேட்டானாம்.

மக்கள் சொன்னார்கள்: "ஹே ராஜாவே! தாங்கள் தவறாக எண்ணக் கூடாது. தங்கள் ஆட்சியிலே குறை கண்டதாலே இதை நாங்கள் சொல்லவில்லை. தங்கள் மகனிடத்திலே உள்ள குண நிறையைக் கண்டு சொன்ன வார்த்தைகள் இவை..."

முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர், ராமாயணத்தில் இந்தக் கட்டத்துக்கு விசேஷமான ஓர் அர்த்தத்தைச் சொல்லுவார்:

'ந்ருப' என்ற பதத்தை 'ராஜாவே' என்று விளியாக நான் மேலே சொன்னேன். சுவாமி தேசிகன் இந்த ந்ருப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்கிற பதத்தை 'குணங்கள்' என்கிற சொல்லுக்கு அடைமொழியாக இடம் மாற்றிப் பொருள் சொல்லுவார்... "பஹவ: ந்ருப கல்யாண குணா:" 'அரசகுணங்கள் - அதாவது அரசனாக இருப்பதற்குரிய அத்தனை தகுதிகளும் கல்யாண குணங்களும் - உடையவன் ராமன்' என்று பொருள்.

சரி, பிரஜைகளின் பதிலைக் கேட்ட தசரதனுக்கு வருத்தம் போய் ஆனந்தம் ஏற்பட்டது. எப்பேர்ப்பட்ட ஆனந்தம் அது என்று பாருங்கள்:

'புத்ரகாமேஷ்டி யாகம் பண்ணி, குழந்தையைப் பெற்ற ஆனந்தம், பிற்காலத்தில் அவன் தாடகையை வதம் செய்தபோது விருத்தியடைந்த ஆனந்தம், சிவ தனுஸை முறித்து சீதா கல்யாணம் செய்து கொண்டதைப் பார்த்த போது விளைந்த ஏகமான ஆனந்தம், பரசுராமனை பங்கப்படுத்தியபோது ஏற்பட்ட கரையில்லா களிப்பு... அத்தனை ஆனந்தத்தையும் தூக்கி வேறுபுறம் தள்ளி விட்டது இந்த ஆனந்தம்! இந்த ஆனந்தத்துக்குச் சமானமேயில்லை. தன் புத்திரன் குணவான் என்று பிறர் சொல்லக் கேட்கும்போது விளையும் ஆனந்தம் அலாதி அல்லவா!

இப்படி உத்தமமான நல்ல பிள்ளையாக அவன் இருந்ததாலே பரர்தி: (உத்தமன்) என்று சஹஸ்ரநாமம் ஸ்ரீராமனைச் சொல்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

30

ஸ்ரீராமனின் குண இயல்புகளைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தேன். இதரர் நலனையும் தன்னலனாகவே கருதக் கூடியவன் அவன்.

இங்கேயிருந்து அணை கட்டி இலங்கைக்குப் போக வேண்டும். விபீஷணனைக் கூப்பிட்டுப் பரமாத்மா கேட்கிறான்:

"உங்க ஊருக்குப் போகணும்னா, இவ்வளவு பெரிய சமுத்திரம் குறுக்கே இருக்கிறதே... என்ன பண்ணலாம்?"

உடனே விபீஷணன் சொல்கிறான்: "ஹே ராகவா! சமுத்திர ராஜனிடத்திலே சரணாகதி பண்ணு... அவனே வழி காட்டுவான்..."

தான் சரணாகதி பண்ணினதாலே, பகவானையும் அதே மாதிரி சரணாகதி பண்ணும்படி சொன்னான் விபீஷணன்!

பகவானுக்குக் கொஞ்சம் யோசனை... 'நம்மைப் போய்ச் சரணாகதி பண்ணச் சொல்கிறானே... இவன் பண்ணினதால்தான் நாமும் பண்ணவேண்டும் என்கிறான்...'

ஆனால் பரமனுக்கு விபீஷணனுடைய உள்ளத் தூய்மை புரிந்திருந்தது. சரணாகதி பண்ணினால் பலன் ஏற்படும் என்பது அவன் (விபீஷணன்) அனுபவத்தில் அறிந்த உண்மை. அதனால் பகவான் அப்படி சரணாகதி பண்ணலாமா? அவ்வாறு அவனைப் பண்ணும்படி சொல்லலாமா? கூடாதா? என்கிற கேள்விகளெல்லாம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அவன் மனத்தில் எழவேயில்லை... இதை பகவான் அறிந்திருந்தான். விபீஷணனின் உள்ளத் தூய்மையை மதித்து அவனும் சரணாகதி பண்ணினான்.

இங்கு ஆசார்யர்கள், விபீஷணன் எவ்வளவு நல்லவன் என்கிறதைக் காட்ட ஒரு கதை சொல்லுவார்கள். வேடிக்கையான கதை.

ரொம்ப பரமைகாந்தியாக ஒருத்தர். பாவம்! லௌகீகமே தெரியாது அவருக்கு! ஆசார அனுஷ்டானங்களைத் தவிர வேறொன்றையும் அறியாதவர். வாசல் திண்ணையை விட்டு எங்கும் போய் அறியார்.

நித்தியம் அந்தத் திண்ணையிலேதான் படுத்து உறங்குவார். ஒருநாள், அப்படிப் படுத்துத் தூங்கவிருந்த சமயம்... அவருடைய தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா காலத்திய வெள்ளிச் செம்பு... அதைத் தலைமாட்டிலே வைத்துக் கொண்டு படுத்திருந்தார்.

அங்கேயிருந்து அவருடைய தர்மபத்தினி வந்து சேர்ந்தாள். வந்து, "சுவாமி! இப்படிப் படுத்துண்டிருக்கீரே! நிராதரவா, தலைமாட்டிலே வெள்ளிச் செம்பை வைத்துண்டு படுத்திண்டிருக்கீரே... உள்ளே வைக்கிற, பூட்டி வைக்கிற வஸ்துவே திருட்டுப்போய் விடுகிறதே... இப்படிப் பந்தோபஸ்து இல்லாமல் செம்பை வைத்தால் திருடு போய் விடாதா...?" என்றாள்.

"இது திருடு போகாது...!" என்று உறுதியாக பதில் சொன்னார் அவர்.

"அது எப்படிச் சொல்றீங்க?"

"அந்த செம்பைப் பாரேன்..."

"பார்க்கிறேனே... எனக்கு ஒன்றும் தெரியலையே..."

"செம்பை நான் எப்படி வைச்சிருக்கேன் பாரேன்..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“கவிழ்த்து வைச்சிருக்கீர். அப்படி வைத்தால் திருட்டுப் போகாதா சுவாமி?”

அதற்கு அவர் சொல்கிறார்: “நிமிர்த்து வைச்சேனானால் அதிலே ,தீர்த்தம் - ஜலம் இருக்கும். கவிழ்த்து வைச்சால் அதுலே ஒரு சொட்டு ஜலம்கூட இல்லைங்கறது தெளிவாயுடுத்தோல்லியோ... அதனாலே திருட்டுப் போகாது.”

“தீர்த்தம் இல்லைன்னா திருட்டுப் போகாதா சுவாமி!”

“இப்ப இந்த செம்பைத் தொடணும்னா கையலம்பணுமோயில்லையோ... கையலம்ப இங்க தீர்த்தம் எங்க இருக்கு...?” என்று கேட்டார் அந்த எளியவர்!

இவர் செம்பைத் தொடவேண்டுமென்றால் முதலில் கையலம்பிக் கொண்டுதான் தொடுவார். வருகிற திருடன் கூடவா கையலம்பிக்கொண்ட பிறகே செம்பைத் தொட வேண்டும் என்று நியமம் பார்க்கப் போகிறான்!... ஆனால் அவர் அப்படியெல்லாம் யோசிக்கவில்லை. ஆசார சீலர்! இந்த உலகத்திலே அத்தனை பேருமே தம்மைப் போல ஆசார சீலர்களாக இருப்பார்கள் என்று அவர் நினைக்கிறார்! அதிலே ஏதாவது தப்பு உண்டோ!

அதே மாதிரிதான், ராமன் சரணாகதி பண்ணலாமா கூடாதா என்கிற விசாரமெல்லாம் விபீஷணனுக்கு ஏற்பட வில்லை.

பகவானும் விபீஷணன் சொல்படி சமுத்திர ராஜனிடம் சரணாகதி பண்ணினார். மூன்று நாட்கள், திருப்புல்லாணி என்கிற க்ஷேத்திரத்திலே சரணாகதி பண்ணியும் சமுத்திரராஜன் வழி விடவில்லை. உடனே, “சுமித்ரா நந்தனா! வில்லை எடு! இந்த சமுத்திரத்தின் மீது அஸ்திரப் பிரயோகம் பண்ணுகிறேன்...!” என்று சொல்லி-பாணத்தைப் பிரயோகம் பண்ணினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அதன்பிறகு விசேஷமாக ஐந்து நாட்களில் சேது பந்தனம் நடந்து முடிந்தது.

சின்னக் குரங்கு, பெரிய குரங்கு அதைக் காட்டிலும் பெரியது. கிழட்டுக் குரங்கு என்று அத்தனை குரங்குகளும் வந்து சேர்ந்து உதவின. அந்தக் குரங்குகள் செய்த பாக்கியம் தான் என்ன?

அவை அத்தனையும் எகிறிக் குதித்துக் கொண்டு சந்தோஷத்துடன் சேதுவைக் கடந்து போயினவாம். மறு பக்கத்தில் என்ன வாழையிலை போட்டு விருந்தா பரிமாறப் போகிறார்கள்...? அதெல்லாம் கிடையாது; பிராணனை விடுவதற்காகத்தான் போகிறோம் என்று அத்தனை குரங்குகளுக்கும் தெரியும். பகவான் ராமனுக்காகப் பிராணனை விடுவதற்குத்தான் அத்தனை உத்ஸாஹம்!

இலங்கைக்குப் போன சுக்ரீவன் அந்த நாடு எப்படியிருக்கிறது என்று பார்க்க முதலில் கிளம்பினானாம். இதற்குள்ளே, வானரப்படை வந்திருப்பதைக் கேள்விப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டு, ராவணனும் என்னவென்று பார்க்கப் புறப்பட்டா னாம்.

ஆகாச மார்க்கமாய் வருகிறான் ராவணன். சுக்ரீவனுக்கும் அவனுக்கும் பெரிய சண்டை உண்டாகிறது. உடனே சுக்ரீவன் அந்த பத்துத் தலை கிரீடங்களிலிருந்தும் பத்து ரத்தினங்களைப் பறித்துக் கொண்டு விட்டானாம். அவற்றை அப்படியே எடுத்து வந்து ராமபிரானுடைய திருவடியிலே வைத்து, நடந்ததைச் சொல்லுகிறான்.

இந்த மாதிரி நிலைமையிலே வேறொரு தலைவனா யிருந்தால் என்ன சொல்லியிருப்பான்?

"சபாஷ்! பேஷ்! உன்னைப் போல வீரன் உண்டா? இவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கியே...!" என்று கொண்டாடியிருப்பான்.

ஆனால் ராமபிரான் சுக்ரீவனை இப்படிக் கொண்டாடவில்லை. சுக்ரீவனைப் பார்த்துக் கண்ணீர் விடுகிறான் பரமாத்மா: "ஹே சுக்ரீவா! என்ன காரியம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்ணினாய் அடா நீ...! எனக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தை நீ பண்ணியிருக்கலாமா...? இது நியாயமா?" என்று வருத்தப்படுகிறான்!

பகவானுடைய இந்த குணத்தைப் பார்க்க வேண்டும் நாம். இதரர் நலனைத் தன் நலனாய்க் காணக் கூடியவன் அவன். அதனால் அவன் சொல்கிறான்: "உன்னை இழந்து, சீதை கிடைப்பதானால் அந்த சீதை எனக்குத் தேவையில்லை!"

எவ்வளவு உயர்ந்த குணம் இது! தன் காரியம் நடந்தால் போதும் என்று நினைக்காமல், எல்லோரும் சௌக்கியமாய் இருக்க வேண்டும். தம் காரியமும் கைகூட வேண்டும் என்று நினைக்கிற குணம்.

இத்தனை உயர்ந்த குணம் படைத்தவனானதாலே தான் அவனை விச்வ மூர்த்தி: என்பது.

விச்வ யோனி: என்பது நரசிம்ஹனுக்குச் சொல்லப் பட்ட திருநாமம். 'விச்வமாகதா' என்பது வாமனாவ தாரத்திலே சொல்லப்பட்டது. விச்வ மூர்த்தி: எல்லார் நலத்தையும் தன்னலனாகக் கருதக்கூடியவன். இக்ஷ்வாகு வம்ச திலகனான ராமபிரான் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

பரமஸ்பஷ்ட: என்றே அவனை அழைப்பதுண்டு. தெளிவாய்த் தெரிகிறவன் என்று அர்த்தம். ராமன்தான் விச்வம்; அவன்தான் பிரபிரும்மம் என்பது நன்கு தெரிகிறது.

தசரதன் அசுவமேத யாகம் முடித்து, புத்ர காமேஷ்டி யாகம் நடத்தப் போகிறான். எல்லா தேவதைகளும் பாகத்தை வாங்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறார்கள். எல்லா தேவதைகளும் நிற்கிற இடத்திலே பகவான் கருடா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரூடனாக, சங்கு சக்ரதாரியாக ஆச்சர்யமாய்த் தோன்றினான்.

இதை வேதம் எப்படிச் சொல்கிறது என்றால், 'எல்லா தேவதைகளையும் அங்கங்களாக உடைய பரமாத்மா, அவர்களின் இடையிலேயே தோன்றினான்' என்கிறது.

தோன்றியவன் என்ன பேசினான்? "சமஸ்த தேவதைகளும் எம் திருவடியிலே சரணாகதி பண்ணினார்கள். அவர்களை ரக்ஷிப்பதற்காக நான் இந்த பூலோகத்திலே வாசம் பண்ணப் போகிறேன். பதினோராயிரம் வருஷ காலம் பூலோகத்திலே இருக்கப் போகிறேன். நீங்கள் துக்கத்தை விடுங்கள். ராவணனை ஹதம் பண்ணப் போகிறேன்..." என்று அபயம் சொல்லி, தசரதனைத் தந்தையாய் வரித்து ராமனாக வந்து பிறந்தான்.

இந்த விஷயம் ராமாயணத்திலே ஒளிவு மறைவு இன்றி ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதினாலே, நாராயணன்தான் ராமனாகப் பிறந்தான் என்பது சந்தேகமற்ற உண்மை. இதை விச்வாமித்திரர் மேலும் ஸ்பஷ்டப் படுத்துகிறார். தசரதனிடம் சொல்லும்போது: "புருஷ சூக்த தேவதை உன் பிள்ளை; அதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் நீ உணரவில்லை" என்று எடுத்துச் சொல்கிறார்.

அதற்குப் பிற்பாடு, விசேஷமாக, பரசுராமரின் கர்வ பங்கத்தின்போது, நாராயணனே ஸ்ரீராமனாக அவதரித்தான் என்பது இன்னும் ஸ்பஷ்டமாகிறது.

பாலகாண்டம் முடிந்து பரசுராம கர்வ பங்கம் ஆனதுமே... ராமாயணம் முடிந்து போய் விடுகிறது! அதற்கு மேலே சொல்லப்பட்டதெல்லாம், பகவான் 'பதினோராயிரம் வருஷம் இருப்பேன்' என்று சொன்னான் அல்லவா... அவனுடைய அந்த வாக்குக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளேயொழிய வேறில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரசுராம கர்வ பங்கத்திலேயே ராமாயணம் முடிந்து போவது எப்படி....?

தக்ஷ யக்ஞத்தை துவம்சம் பண்ணியவர் பரமசிவன். அந்த ஈச்வரனிடத்திலே அத்யந்த பக்தி கொண்ட ராவணன் என்ன பண்ணினான்? அந்த ஈசுவரன் எழுந்தருளியிருக்கிற போதே அந்த கைலாச பர்வதத்தைத் தூக்கி ஒரு ஆட்டு ஆட்டினான்! ராவணனுடைய பலம் அத்தனை பலம்! அஷ்ட திக்கஜங்களின் தந்தங்களைத் தன் மார்பிலே தாங்கியவன் அவன். குபேரனை ஜெயித்து, அவனுடைய புஷ்பக விமானத்திலே வந்து கொண்டிருக் கிறான்.

மாஹிஷ்மதி என்கிற பட்டணத்துக்கு அதிபதியான கார்த்தவீர்யார்ஜுனன் அந்த சமயத்திலே நர்மதை நதியிலே ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறான். தன் எல்லையில் ஒருவன் வருவதைப் பார்த்து ஒரு எகிறு எகிறி புஷ்பக விமானத்தில் குதிக்கிறான். குதித்து விட்டுப் பார்த்தால் பத்துத் தலை ராவணன்!

இந்த கார்த்தவீர்யார்ஜுனன் என்ன பண்ணினான்? கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையிலே அந்தப் பத்துத் தலைகளையும் அப்படியே ஒரு பிடி பிடித்தான். குழந்தைகள் தும்பியைப் பிடிப்பது போல, பிடித்த வாக்கில் அப்படியே தூக்கிப் போய் தன் ஊரில் சிறைவைத்து விட்டான்! கொஞ்சம் நாள் கழித்து, 'பிழைத்துப் போ! என்று ராவணனை வெளியே விட்டு விட்டான் கார்த்தவீர்யார்ஜுனன். இல்லாவிட்டால் ராவணன் வெளியே வந்திருக்க முடியுமா?

அஷ்ட திக்கஜங்களை வென்றவன், கைலாச பர்வதத்தை அசைத்தவன் ராவணன் என்றால் அவன் பலத்தை என்ன சொல்வது அத்தகைய ராவணனையே விரல் நுனியில் பிடித்துப் போனான் கார்த்தவீர்யார்ஜு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னன் என்றால் அவன் பலம்தான் எத்தகையதாய் இருக்க வேண்டும்! அந்த கார்த்தவீர்யார்ஜுனனின் இருப்பிடம் என்று தெரியாமல் பரசுராமர் அடித்து நொறுக்கினார். அப்படியானால் அவருடைய பலம் முதல் இருவர் பலத்தைக் காட்டிலும் அதிகமில்லையா...?

அப்படிப்பட்ட பரசுராமரை பன்னிரண்டு வயதேயான பாலகன் ராமன் அடக்கி ஆள்கிறான் என்றால்... ராவணனை ஜெயித்தவனை, ஜெயித்தவனை, ஜெயித்து நிற்கிறான் என்றால்... அப்போதே... அந்தக் கணத்திலேயே அவதார பலன் கிடைத்து விடுகிறதல்லவா? ராவண வதத்துக்காகத்தான் ராமாவதாரம் என்று யாராவது சொன்னால் அது இந்தக் கட்டத்திலேயே முடிந்து போகிறதல்லவா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31

பரசுராமனின் கர்வ பங்கத்தினாலே தான் யார் என்பதை உலகுக்குக் காட்டினான் பகவான். நாராயணனின் திருவவதாரம் ஸ்ரீராமன் என்பதை மீண்டும் மீண்டும் ராமாயணத்திலே பார்க்கிறோம்.

ஸ்ரீ ராம பிரானைப் பாதுகையின் மேல் ஏறி நின்று, அந்தப் பாதுகையைத் தமக்கு ஈந்தருளும்படி கேட்கிறான் பரதன். பரதன் கேட்டது போல் வசிஷ்டரும் பகவானின் பாதுகைகளைக் கேட்டதாக ராமாயணத்தில் வருகிறது!

சுவாமி தேசிகன் அந்தப் பாதுகையைப் பார்த்தே கேட்பது போல் பாடுகிறார்: "தந்தைக்கு சமானமான அண்ணனின் பாதுகையைக் கேட்டு வாங்கி பரதன் பூஜை பண்ணியது சரி... ஆனால் ப்ரும்மரிஷியான வசிஷ்டர் உன்னைக் கேட்டாரே... அவர் எதை மனத்தில் வைத்துக் கொண்டு கேட்டார்? நீயே சொல்லு..."

வசிஷ்டருக்குத் தெரியாமலிருக்குமா என்ன! பாதுகையின் மேல் நிற்பவன் சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணன் என்பது தெரியாதா? அவனே ராமனாக அவதரித்திருக் கிறான் என்பது தெரிந்துதான் அவர் அப்படிக் கேட்டார்.

தேரெழுந்தூர் ஸ்ரீமத் ஆண்டவன், தமது பாதுகா சஹஸ்ரத்திலே இதை அழகாக வியாக்யானம் பண்ணுகிறார்.

முதலில் விச்வாமித்ரர் வந்து, ராமனை யார் என்று காட்டிக் கொடுத்தார். அது எந்த சந்தர்ப்பம் என்றால், விச்வாமித்ரர் ராமனைத் தம்முடன் காட்டுக்கு அனுப்பச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லிக் கேட்டபோது தசரதர் தயங்கினார் அல்லவா...? அப்போது! "உனக்கே உன் மகனின் பராக்கிரமம், மகிஷ்மை தெரியவில்லை. பகவான் நாராயணனின் திருவவதாரம் அவன்" என்று சொல்லிக் கொடுத்தார்.

பிறகு ஆரண்ய காண்டத்தில் ஒன்பதாவது சர்கம்... எட்டாவது சர்கத்தைப் படித்துவிட்டு, ஒன்பதாவதைப் படிக்காமலே பத்தாவது சர்கத்துக்குப் 'போகலாம் - தொடர்ச்சி விட்டுப் போகாது... கதைக்குப் பங்கம் வராது. ஆனால் ஒன்பதாவது சர்கத்திலே முக்கியமான விஷயம் இருக்கிறது. ராமாயணத்திலே ரொம்ப முக்கியமான விஷயம் இது. அது என்ன விஷயம்...?

சரண்ய தம்பதிகளான ராமரும் சீதையும் பேசுகிறார்கள். ராமன் சில இடத்திலே பேசுகிறான். சீதை வேறு இடங்களிலே பேசுகிறாள்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்றால், இரண்டு நோட்டுப் புத்தகங்களை வாங்க வேண்டும். ராமன் பேச்சை ஒரு புத்தகத்திலும் சீதையின் பேச்சை இன்னொன்றிலும் தனித் தனியாக எழுத வேண்டும். பிறகு இரண்டையும் பக்கத்திலே வைத்து ஒப்பு நோக்கிப் பார்த்தோமானால், இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கும். மாறுபட்ட கருத்தே இருக்காது! இதில் சீதாபிராட்டி ராமனைப் பார்த்துப் பேசுகிறாள் - ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறாள்:

''தாங்க முடியாத மூன்று விசனங்கள் இந்த உலகத்திலே உண்டு சுவாமி! பொய் சொல்வது; பிறன் மனையாடல், துவேஷம் எதுவும் இல்லாத சமயத்தில் கூட அனாவசியமாக ஆயுதம் தாங்கி நிற்றல். இந்த மூன்று குற்றங்களில் முதல் இரண்டும் தங்களிடத்திலே இல்லை; ஆனால் மூன்றாவது குற்றம் தங்களிடத்திலே இருக்கிறதே..." என்கிறாள் சீதை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஒரே சொல், ஒரே இல், ஒரே வில்!' என்று பெயர் பெற்றவன் ராமன்.

பொய் பேச மாட்டான்.

பிற பெண்களைக் கண்ணெடுத்தும் பாரான் - ராவணனின் பதினாலாயிரம் சைன்யமும் அடித்து வீழ்த்தப் பட்ட நேரத்தில் அவனிடம் போய் அந்தச் செய்தியைச் சொன்னான் ஒருவன்.

ராவணன் ஆரவாரமாய்ச் சிரித்து கைதட்டினானாம்! "என்ன உளறுகிறாய்! எல்லோரும் மாண்டு போய்விட்டார் கள் என்றால் நீ மட்டும் எப்படிப் பிழைத்தாய்...?" என்று கேட்டானாம்.

செய்தி கொண்டு வந்தவன் சொன்னான்: "எனக்கிருக்கிற சாமர்த்தியம் அவர்களுக்கு இல்லையே!"

"அப்படி என்ன தனி சாமர்த்தியம் உனக்கு? நீ என்ன பண்ணி தப்பித்தாய்?" என்றான் ராவணன்.

"சீதையைத் தவிர வேறு ஸ்த்ரீயைப் பார்க்காதவன் ராமபிரான். அதனால், பெண்ணுடை உடுத்தி ஓடி வந்தேன். இல்லா விட்டால் தப்பித்திருக்க முடியுமா...?"

- எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடியவன் ராமனுக்குத் தந்த நற்சான்று பத்திரம் இது! ராவண குடும்பமே ராமபிரானை இப்படி நிறைய ஸ்தோத்திரம் பண்ணியிருக் கிறது!

இந்த நற்குணங்களைத்தான் சீதையும் சுட்டிக் காட்டினாள்: முதல் இரண்டு நற்குணங்கள் வாய்க்கப் பெற்ற மாதிரி மூன்றாவது ஏன் வாய்க்கப் பெறவில்லை என்றும் கேட்டாள்- "ஜடாமுடியும் மரஉரியும் தரித்துக் கொண்டு, ஒரு கையிலே தர்பையும் மறுகையிலே சமித்தும் அல்லவா வைத்துக் கொள்ள வேண்டும்? சுவாமி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்படியில்லாமல், தாங்கள் வில்லையும் அம்பையும் ஏந்தியிருக்கிறீர்களே...? இது பொருந்தாமல் இருக்கிறதே..."

பரமாத்மா அதற்கு பதில் பேசுகிறான்:

"உத்தம குலத்தில் பிறந்து, உத்தம குலத்தில் வாழ்க்கைப்பட்டதற்கேற்ப நீ பேசினாய் சீதா! ஆனால், அவசியமேற்பட்டால் நான் உன்னையும் கைவிட வேண்டும்- என் பிராணனாக, என் உடலுக்கு வெளியே நடமாடும் லக்ஷ்மணனையும் உதற வேண்டும்- என் திருவடி பற்றினவர்களைக் காப்பதற்காக, அவசியமானால் அப்படிச் செய்யத்தான் வேண்டும்..." என்கிறான்.

அந்த வார்த்தையை முடிச்சுப் போட்டு வைத்துக் கொண்டாளாம் சீதை! சீதாபஹரணமே அதனால்தான் சாத்தியமாயிற்று! ராமனின் இந்த வார்த்தை நிரூபணமாக வேண்டும் என்பதற்காகத்தான் சீதை அவனை விட்டுப் பிரிக்கப்பட அனுமதித்தாள். அவள் மட்டும் அப்படி நினைத்திருக்காவிட்டால் ராவணனால் அவளை பகவானிடமிருந்து பிரிக்க முடியுமா! அந்த திவ்ய தம்பதிகள் இணைந்த சிந்தனையால் அந்த நிகழ்ச்சியை சங்கல்பித்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அதோடு, அப்படியொரு சொல் ராமனிடமிருந்து வெளிப் பட்டதே அவன் பகவான் நாராயணன்தான் என்பதைத் தெளிவாக மீண்டும் உணர்த்துவதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து கிஷ்கிந்தா காண்டத்திலே... தாரை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல், வாலி யுத்தம் செய்கிறான். அப்புறம் ராமபாணத்தால் வீழ்த்தப்பட்டு அவன் கிடப்பதைப் பார்த்து அவள் ராமனை நோக்கிச் சொல்கிறாள்:

"தாமரைக் கண்ணன் நீ. உன் நேத்திரமே உன்னை பகவான் நாராயணன் என்று காட்டிக் கொடுக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்படுகிற எட்டு குணங்களையும் உடையவன் நீ..." என்று தாரை பகவானாகவே ஸ்ரீராமனைக் கொண்டு பேசுகிறாள்.

யுத்த காண்டத்தில், விபீஷணன் ராவணனோடு உரையாடும்போது இந்த விஷயம் மீண்டும் உறுதியாகிறது. ராவணன் என்ன சொல்கிறான்:

"விபீஷணா! எனக்கு நன்றாகத் தெரியும்; நான் முற்றிலும் உணர்கிறேன்- அவனே ஸ்ரீமன் நாராயணன்- ஆனால், என்னோடு கூடவே பிறந்த குணம் என்று ஒன்று இருக்கிறது பார்... யாருக்கும் வணங்காத குணம். அதனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான் நான் பணியாமல் இருக்கிறேனேயொழிய அவனே நாராயணன் என்பது தெரியும்!"

ராமாயணத்திலே ஜெயித்தது ராமனா? ராவணனா? என்று தெலுங்கு கவி ஒருத்தர் அலசுகிறார். ராவணன் தான் ஜெயித்தான் என்கிறார். 'யார் வந்தாலும் ரட்சிக்கிறேன்' என்றான் ராமன்; 'ஒருத்தருக்கும் தலை வணங்க மாட்டேன்' என்றான் ராவணன். 'இறுதி வரைக்கும் அப்படியே இருந்தவன் ராவணன்தானே' என்று ஹாஸ்யம் பண்ணுகிறார்!

ஆனால் அந்த ராவணன் வீழ்ந்த போதும் வந்து நின்று ரக்ஷித்தான் பரமாத்மா. ராவணன் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்து மண்டோதரி புலம்புகிறாள்:

'நல்லது பண்ணியவன் நல்லதை அடைகிறான். தீமை செய்தவன் தீயதையே அடைகிறான். விபீஷணன் நல்லதை அடைந்தான். நீங்கள் இப்படிக் கெட்டுப் போய்விட்டீர் களே...' என்று அவள் அரற்றுகிறபோது ராமன் எதிரே வந்து நிற்கிறான்! வாலியின் எதிரில் வந்து நின்றது போலவே வந்து நின்று ரக்ஷிக்கிறான்.

'இதோ இருக்கிறானே, இந்த ராமன் பரமாத்மா' என்று மண்டோதரியைப் பேச வைக்கிறான்.

ராமாயணத்தின் 24,000 சுலோகங்களிலே வேறு எந்த இடத்தில் தேடினாலும் இந்த வார்த்தை கிடைக்காது! பரமாத்மா! இந்த ஒரு இடத்தில்தான் வருகிறது அந்த வார்த்தை. மஹா பதிவிரதையான மண்டோதரியி னிடத்திலே பகவானால் தன்னை மறைத்துக் கொள்ள முடியவில்லை!

அக்னிப் பிரவேச கட்டத்தில், பாருங்கள்... சீதை அக்னிக்குள் இறங்க இருக்கும் சமயம் அங்கே ஈஸ்வரன் எழுந்தருளியிருக்கிறார். ப்ரும்மா வந்திருக்கிறார். இந்திராதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவதைகள் வந்திருக்கிறார்கள். 'அக்னியில் விழக்கூடிய சீதையைத் தடுத்து நிறுத்தாமல் இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே... உன்னை நீ உணரவில்லையா?' என்று ராமனிடம் கேட்கிறார்கள்.

அதற்குப் பரமாத்மா சொல்கிறார்:

"நன்றாக உணர்ந்திருக்கிறேன். நான் மனிதன். தசரதன் பிள்ளை ராமன்..." என்று.

"நீ மனிதனா? நீ யார் என்பதை நாங்கள் சொல்கிறோம்! விஷ்ணு நீதான்! கிருஷ்ணன் நீதான்! புருஷ சூக்த பிரதிபாத்ய தேவதை நீதான்..." என்று அங்கே அழுத்தம் திருத்தமாய் வேதலோகமே சொல்கிறது.

இப்படியாக, பால காண்டத்திலே ஆரம்பித்து ஒவ்வொரு காண்டத்திலும் பரமஸ்பஷ்டமாக ராமனை பகவான் என்று சொல்லியிருக்கிறது.

இதை கூரத்தாழ்வான் ரொம்ப நயமாகச் சுட்டிக் காட்டுகிறார். "ஹே ராமனே! சீதையைக் காணோம் என்றதும் 'ஏ மரமே நீ சீதையைப் பார்த்தாயா? மட்டையே அவளைக் கண்டாயா?' என்று புலம்பி அலைந்த நீ, ஜடாயுவுக்கு மட்டும் மோக்ஷம் கொடுக்க முன்வந்தாயே! அத்தனை நேரமும் உன்னை ஆட்டி வைத்த அஞ்ஞானம் அந்தக் கணத்திலே எங்கே பறந்து போனது! அந்த நிகழ்ச்சியே தெளிவாகக் காட்டி விடுகிறதே நீதான் பரமாத்மா என்று..."

பரமாத்மா பரமஸ்பஷ்ட:

ஆகவே, விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் முதல் சப்தமான விச்வ சப்தத்தினாலே சொல்லப்படுகிற ஸ்ரீமன் நாராயணன் தான் ஸ்ரீராமன் என்றாகிறது. விச்வ சப்தத்தால் சொல்லப் படுபவன் ராமன் என்றும் ஆகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

32

பகவானுடைய சுவாஸமாகவும் நிஸ்சுவாஸமாக வும் - அதாவது உள்ளிழுக்கும்படியான காற்றாகவும் வெளியே விடும்படியான காற்றாகவும் விளங்குவது வேதம். பகவானுக்கும் சுவாஸம் உண்டு என்கிறது வேதம் இங்கே... நமது சரீரம் மூச்சுக் காற்றினாலே பெருமை அடைவது போலே பகவானுக்கும் வேதமாகிற மூச்சுக் காற்றினாலே பெருமை உண்டாகிறது. பகவானுக்கே பெருமை உண்டாக்குகிறது என்றால் அந்த வேதம் எப்பேர்ப்பட்ட தாக இருக்க வேண்டும்! அதில் சொல்லப்பட்ட விஷயத்தை எல்லாரும் சுலபமாகத் தெரிந்து கொள்வதற் காகவும் புரிந்து கொள்வதற்காகவும் புராண இதிகாசமாக மாற்றிக் கொடுத்தார்கள்.

இப்படிச் சொன்னால் வேதத்தில் சொன்ன விஷயங்கள் முன்பாக நிகழ்ந்தனவா? புராண இதி ஹாசங்கள் முன்பாக நடந்தனவா என்று கேள்வி வரும்.

புராண இதிஹாசங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு அவதாரத்தையும் வேதம் சொல்கிறது. அப்படி யென்றால் அவதாரங்களுக்குப் பின்பாகத்தான் வேதம் உண்டானதா...?

நன்கு கவனிக்க வேண்டும். வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைத்தான் பகவான் நடத்திக் காட்டினான். 'பகவான் வராஹ அவதாரம் பண்ணி பூமியை உய்வித்தான்' என்று வேதத்தில் வருகிறது. அதையே பகவான் நடத்திக் காட்டினான். வேதத்தைப் பூரணமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனுஷ்டித்தான் பரமாத்மா. அதை அனுஷ்டானம் பண்ணுவதற்கென்றே இந்த லீலா விபூதிகள்!

வேதம் சொல்படி நடந்தான் பரமாத்மா என்பதை நாம் ஸ்பஷ்டமாக உணர வேண்டும். வேதத்தில் வரும் ஒரு வாக்கியம் - தேவதைகளெல்லாம் யக்ஞம் பண்ணினார்கள் என்கிறது.

நாம் யக்ஞம் பண்ணினால் இந்திராதி தேவர்களைப் பார்த்துப் பண்ணுகிறோம். பகவான் அவர்கள் ரூபத்தில் இருந்து நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறான்.

ஆனால் தேவதைகள் யக்ஞம் பண்ணினால்...?

தேவதைகள் யக்ஞம் செய்தால் தேவலோகத்தில் பண்ண முடியாது. பூலோகத்துக்கு வந்துதான் பண்ண வேண்டும்!

'வையத்து வாழ்வீர்காள்...' என்று ஆண்டாள் அழைப்பதைப் பார்க்கிறோம். வையத்தில் வாழ்வதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பொருள். எல்லா கர்மாவும் விலகும்படியான, உயர் பலனைக் கொடுக்கும் படியான, சாஸ்திரங்களை அனுஷ்டிக்கும் உத்தமமான பூமி இது. அதிலும் பாரத தேசம் ரொம்ப விசேஷம் என்று சாஸ்திரமே கொண்டாடுகிறது.

இப்படிப்பட்ட பூமிக்கு வந்துதான் தேவர்கள் யக்ஞம் பண்ண வேண்டும். அவர்களும் வந்து நாராயணனைக் குறித்து யக்ஞம் பண்ணினார்கள்.

அந்த தேவர்களுக்குள்ளே துவஷ்டா என்கிற ஒருவன். அவனுக்குப் புரோடாசத்தின் பேரிலே ரொம்பவும் ஆசை.

புரோடாசம்...? அப்படியென்றால்...?

அப்படியென்றால் என்னவென்று வேதமே சொல்கிறது. அதைத் தயாரிக்கும் முறையை விளக்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யக்ஞம் பண்ணக்கூடியவருடைய தர்ம பத்தினி, ரொம்ப சுத்தமாக, மடியாக இருந்து, உலக்கையைக் கையில் எடுத்து, உரலுக்கும் உலக்கைக்கும் பூஜை பண்ணி விட்டு, மந்திரம் சொல்லிக் கொண்டே நெல்லைக் குத்த வேண்டும். அதிலே கிடைக்கிற அரிசியை மாவாக அரைத்து, அதை அடையாகத் தட்ட வேண்டும். அதற்குப் பெயர்தான் புரோடாசம். அப்படித் தட்டி அதன் மேலே நெய்யைத் தடவி வைத்தார்களானால் ரொம்ப வாசனையாக இருக்கும். அதிலே 'நமக்கொண்ணு கொடுத்தால் நன்றாயிருக்குமே' என்று எல்லாருக்குமே தோன்றும்!

ரொம்ப பக்குவமாக அதைத் தயார் பண்ணி ஹோம சமயத்திலே கொண்டு வர வேண்டும். கோவில்களில் கூட நாம் பார்க்கிறோம். பகவானுக்கு அமுது செய்விக்கிறவர் அதை நன்றாக மூடி யார் கண்ணிலும் படாமல் எடுத்து வந்து செய்விப்பார். அவரே கூட அதைப் பார்த்து, 'இவ்வளவு முந்திரிப் பருப்பா? இத்தனை நெய்யா...?' என்றெல்லாம் நினைத்து விடக் கூடாது என்கிற முன் ஜாக்கிரதை... 'நன்றாக இருக்கும் போலிருக்கே' என்று நாம் மனசில் கூட நினைத்து விடக் கூடாது - அப்படி நினைத்தால் அபசாரமாகி விடும்.

அந்த மாதிரிதான் யக்ஞத்திலும் புரோடாசத்தை கவனமாக எச்சரிக்கையாகத் தயாரித்துக் கொண்டு வருவார்கள்.

தேவர்கள் நடத்தும் யக்ஞத்திலே புரோடாசத்துக்குப் பங்கம் வந்தது! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரூபத்திலே வந்து, துவஷ்டாவே புரோடாசத்தைக் கொண்டு போய் விட்டான்! யக்ஞமே நஷ்டமாகி விட்டது இதனாலே. முப்பத்து முக்கோடி தேவர்களும் துவஷ்டாவை அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு வந்தார்கள்.

In Public domain :Digitization Muthulakshmi Research Academy

அப்போது அவன் என்ன பண்ணினான்...? அஸ்வினி தேவதைகளிடம் போய்ச் சரணடைந்தான். இந்த அஸ்வினி தேவதைகள் மற்ற தேவதைகளுக்கு வைத்தியர்கள். எப்போதும் இரு அஸ்வினி தேவதைகளும் ஒன்றாகவே இருப்பார்கள். வால்மீகி கூட ராமாயணத்திலே ராம - லக்ஷ்மணர்களைப் பற்றிச் சொல்லும் போது, "அஸ்வினி தேவதைகளைப் போல் காட்சி அளிக்கிறார்கள்" என்கிறார்.

இப்படிப்பட்ட அஸ்வினி தேவதைகளைப் போய்ச் சரணடைந்தான் துவஷ்டா. அவர்கள் பார்த்தார்கள். இவன் தப்பான காரியத்தைப் பண்ணியிருக்கிறான். கொல்லத் தகுந்த குற்றம். இருந்தாலும் 'சரணாகதி' என்று நம்மை வந்தடைந்துள்ளானே... அதனால் அவனைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்று அத்தனை தேவதா நிக்ரஹத்துக்கும் அவனை ஆளாக்காமல் அஸ்வினி தேவதைகள் காப்பாற்றி விட்டார்கள்.

அதனால்தான், கொல்லத் தகுந்த குற்றம் பண்ணினாலும் சரணாகதி பண்ணியவர்களைக் காட்டிக் கொடுப்பதில்லை என்று சாஸ்திரம் உண்டாகியிருக்கிறது. சரணாகதி பண்ணுகிறவன் எப்பேர்ப்பட்ட குற்றங்கள் பண்ணியிருக்கட்டுமே... அவனை ரக்ஷித்தே தீர வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. இதை மெய்ப்பிக்கவே பகவான் ராமாவதாரம் பண்ணினான் என்று சொன்னால் அது மிகையாகுமோ...?

இப்படி வேத தர்மத்தை அனுஷ்டிக்கிற அவதாரமாக ராமாவதாரம் இருக்கிறது. துஷ்ட: என்கிற திருநாமம் பரமாத்மாவுக்கு உண்டு. பரிபூரண துஷ்டி (மனநிறைவு) அனுபவிக்கிறவன் அவன். அந்த வேத தர்மத்தை அவன் அனுஷ்டிப்பதனாலே கிடைக்கிறது. பரிபூரண திருப்தி.

'அபயப்ரதான ஸாரம்' என்பதாக ஒன்றை சுவாமி தேசிகன் எழுதியிருக்கிறார். அதிலே சரணாகதி என்றால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ன என்று பூரணமாய் நாம் தெரிந்து கொள்ளலாம். அதிலே அவர் எழுதுகிறார்:

'ராமாயணத்திலே சரணாகதி என்பது அஞ்சுறு ஆணியாகக் கோக்கப் பெற்றது.

ராமாயணம் என்பது பெரிய ரதம். ரதம் நிற்க வேணுமானால் சக்கரம் அவசியம்; சக்கரத்தில் கடையாணி ரொம்பவும் முக்கியம். தவிர, ரதத்தில் பல மரச் சட்டங்கள் ஒன்றோடொன்று கோக்கப்பட்டிருக்கும். கடை ஆணியைக் கொண்டு அவை கோத்து பொருத்தப்பட்டிருக்கும். ஆணியை எடுத்து விட்டால் ரதம் கீழே விழுந்து விடும். அதைப் போல ராமாயணத்திற்குக் கடையாணியாக அதைக் கோத்து நிறுத்துவது சரணாகதி!

பூர்வகாலத்தில், ஒரு சபையிலே பல வித்வான்கள் கூடியிருந்தனர். தர்க்க வித்வான், வியாகரண வித்வான், மீமாம்ஸ சாஸ்திர வித்வான் என்று இப்படிப் பல வகையினர். அவர்களிடையே புதுசாக ஒருத்தர் வந்து உட்கார்ந்தார். மற்றவர்களுக்கு அவரைத் தெரியவில்லை.

"எந்த சாஸ்திர நிபுணர் நீங்கள்...?" என்று மெள்ளக் கேட்டார்கள்.

"சரணாகதி சாஸ்திரம்தான்" என்றார் அவர்.

தர்க்க, வியாகரணம் படித்தவர்களெல்லாம் வியப்போடு பார்த்தார்கள்... 'இதுவரைக்கும் கேட்டதில்லையே... அது என்ன சாஸ்திரம்...? கேள்விப்பட்டதில்லையே...?" என்றார்கள்.

"அந்த சரணாகதி சாஸ்திரம் ராமாயணத்திலே சொல்லப்பட்டிருக்கிறது" என்றார் அவர்.

இப்படிப்பட்ட ராமாயணமும் மகாபாரதமும் தெரியாத புராண ஞானம் இல்லாத ஒருத்தருக்கு மற்ற சாஸ்திரங்கள் தெரிந்திருப்பதெல்லாம் வீண்தான்!

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சரணாகதி சாஸ்திரத்தை உணர்த்தும் ராமாயணம்தான் முதலில் தெரிந்திருக்க வேண்டும்.

ராமாயணத்தின் பால காண்டத்தில் பார்த்தால் பகவானிடத்தில் தேவதைகள் பண்ணின சரணாகதி. அதே பால காண்டத்திலே தசரதர் பரசுராமரிடத்திலே பண்ணிய சரணாகதி. அயோத்யா காண்டத்திலோ ராமரிடத்தில் லக்ஷ்மணர் பண்ணிய சரணாகதி. பரதன் சக்ரவர்த்தித் திருமகனிடம் பண்ணிய சரணாகதி. ஆரண்ய காண்டத்தில் மகரிஷிகளெல்லாம் பகவானிடத்தில் பண்ணிய சரணாகதி. உயர்ந்த கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் பகவானிடத் திலே பண்ணின சரணாகதி. சுந்தர காண்டத்தில் திரிஜடையானவள் சீதா பிராட்டியிடம் பண்ணிய சரணா கதி. யுத்த காண்டத்திலே விபீஷணன் பகவானிடத்தில் பண்ணிய சரணாகதி. பகவான் சமுத்திர ராஜனிடம் பண்ணிய சரணாகதி. உத்தர ராமாயணத்தில் எல்லா தேவதைகளும் பகவானிடத்திலே பண்ணிய சரணாகதி... இப்படி, சரணாகதியானது அஞ்சுறு ஆணியாக ராமாயணத்தில் கோக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் பலனிருந்தது. பகவான் பூலோகத்தில் வந்து அவதாரம் பண்ணினதாலே பலன் இருந்தது.

ஆனால், அதே சரணாகதியை தசரதன் பரசுராம னிடத்திலே பண்ணியபோது பலனிருக்கவில்லை.

இந்த பரசுராமர் இருக்கிறாரே... ஏறிட்டுப் பார்க்க முடியாத வீரியம் அவருக்கு. கோபத்துடன் இருக்கிறார். சுவாமி தேசிகன் தமது தசாவதார ஸ்தோத்திரத்திலே எல்லா அவதாரங்களுக்கும் ஒரு விசேஷமான அடை மொழி கொடுக்கிறார்: ரோஷ ராம: என்கிறார் பரசுராமரை! அத்தனை ரோசம் - கோபம் உடையவர் அவர்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரசுராமன் வந்தவுடனேயே, 'என் குழந்தைகள் சின்னவர்கள். இப்போதுதான் கல்யாணம் பண்ணி அழைத்துக் கொண்டு போகிறேன்... அவர்களை விட்டு விடுங்கள். என்னை எது வேண்டுமானாலும் செய்யுங்கள்...' என்று கெஞ்சுகிறான் தசரதன். ஆனால் பரசுராமர் கோபத்துடன்தான் நிற்கிறார். இந்த சரணாகதி பலிக்க வில்லையே... ஏன் பலிக்கவில்லை? முறை தவறி பிரார்த்தித்தோமானால் பலிக்காது!

யாரிடத்திலே சரணாகதி பண்ணுகிறோமோ அவரிடத்திலே இரண்டு விஷயங்கள் இருக்க வேண்டும். ஒன்று சக்தி, இன்னொன்று காருண்யம். இவை இரண்டும் இல்லாவிட்டால் பயனில்லை. காருண்யம் இருந்து சக்தியில்லா விட்டாலும் பலனில்லை.

முதலாவதுக்கான உதாரணமாக பரசுராமரைச் சொன்னேன். கருணை இருந்தும் சக்தி இல்லாததால் சரணாகதி தோற்ற கதையை அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

33

மகாபாரத ஆரம்பத்தில் இந்தக் கதை இருக்கிறது. பரீக்ஷித்தை தக்ஷகன் என்கிற பாம்பு கடித்துவிட, அவன் இறந்து போகிறான். அதனால் பரீக்ஷித் மகன் ஜனமேஜயன் சர்ப்ப யாகம் என ஒன்றைப் பண்ணினான்.

அந்த யாகத்துக்குப் பயந்து கொண்டு தக்ஷகன், இந்திரனிடத்திலே போய் சரணாகதி பண்ணினான். இந்திரன் அபயம் அளித்துச் சொன்னான்: "நான் உன்னை ரக்ஷிக்கிறேன்; இங்கேயே இரு..." என்று.

ஜனமேஜயனின் ஹோமம் நடக்கிறது. எங்கெங்கோ இருந்த பாம்புகள் எல்லாம் அக்னி குண்டத்திலே வந்து விழுந்தன. யாகம் நடத்தியவரிடம் ஜனமேஜயன் கேட்டான், "என் அப்பாவைக் கடித்த பாம்பு மட்டும் இன்னும் வரவில்லையே...?"

தேடிப் பார்த்தால், இந்திர லோகத்திலே இருந்தது அந்தப் பாம்பு! இந்திரனுடைய சிம்மாசனத்தின் காலைச் சுற்றி வளைத்துக் கொண்டு சுருண்டு கிடந்தது. உடனே எல்லாரும் இந்திரனை அழைக்க ஆரம்பித்தார்கள். 'இந்த்ராய தக்ஷகாயஸ்வாஹா' என்று ஹோமம் பண்ணினார்கள். இந்திரன் தக்ஷகனோடு வந்து இதிலே விழவேண்டும்...' என்பது வேண்டுகோள்!

இந்திர லோகத்திலிருந்து சிம்மாசனம் கிளம்பி விட்டது. இந்திரனும் அக்னியில் விழுவதற்காக வந்து கொண்டிருக்கிறான். அந்த சமயத்திலே இந்திரன் அவனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



விட்டு ஓடியே போய் விடுகிறான்...! பிற்காலத்திலே அந்த தக்ஷகன் ரக்ஷிக்கப்பட்டான்.

ஆனால் பாருங்கள், இந்திரன் தக்ஷகனை ரக்ஷிக்கிறேன் என்று சொன்ன போதும் அவனால் அதைச் செய்ய முடியவில்லை! அவனிடத்திலே காருண்யம் இருந்தது; சக்தி இல்லையே! அதனாலேதான் ரக்ஷிக்க முடியவில்லை.

பரசுராமரிடத்திலே சக்தி இருந்தும் காருண்யம் இருக்கவில்லை என்பதைப் பார்த்தோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காருண்யம்-சக்தி ஆகிய இரண்டையும் உடைய பகவானிடத்திலே தான் நாம் சரணாகதி பண்ணணும்.

பரமார்த்த ஸ்துதி என ஒன்றை சுவாமி தேசிகன் பண்ணியிருக்கிறார் - திருப்புட்குழி (காஞ்சீபுரம் அருகே) என்கிற க்ஷேத்ரத்தில் இருக்கும் எம்பெருமான் பேரிலான பத்து சுலோகங்கள். அதை நித்திய பாராயணம் பண்ணணும் என்பது தேசிகரின் திருவுள்ளம்.

அந்த பரமார்த்த ஸ்துதியில் அவர் அழகாகச் சொல்கிறார்.

நாம் எத்தனையோ யக்ஞம் பண்ணுகிறோம். ஆனால், பகவான் ஒரு யக்ஞம் பண்ணுகிறான்... அது அவனைத் தவிர வேறொருத்தரால் பண்ண முடியாத யக்ஞம்! அது தான் சரணாகத ரக்ஷணம் என்னும் யக்ஞம்.

யக்ஞம் பண்ணனும் என்றால் தர்மபத்தினி பக்கத்திலே இருக்க வேண்டாமா...? அந்த ஸ்ரீயோடு கூட சேர்ந்தே விளங்கி சரணாகத ரக்ஷணம் என்கிற யக்ஞத்தை நடத்துகிறான் பரமாத்மா. அந்த சரணாகத ரக்ஷண யக்ஞத்திலே ரித்விக்குகள் யார் என்று கேட்டால், எம்பெருமானிடத்திலே இருக்கும்படியான அவனுடைய கல்யாண குணங்கள். அவற்றுள் தயைதான் முக்கியமான ரித்விக். மற்றவை துணையானவை.

எந்த யக்ஞமும் தக்ஷிணையில் முடிய வேண்டும். தக்ஷிணை இல்லாவிட்டால் அதற்குப் பூர்த்தி கிடையாது. பகவான் பண்ணுகிற சரணாகத ரக்ஷணம் என்கிற யக்ஞத்தில் யார் யார் தக்ஷிணை பெறக் கூடியவர்கள்?

யார் யாரெல்லாம் அவன் சரணாகத ரக்ஷகன் என்பதை உணர்ந்து வருகிறார்களோ, அத்தனை பேருக்கும் தக்ஷிணை உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவானிடத்திலே கை கூப்புவதற்கு அதிகாரி, அதிகாரி அல்லாதவன் என்றெல்லாம் வேறுபாடு உண்டோ! யார் வேண்டுமானாலும் தொழலாம்; சரணாகதி பண்ணலாம். சுத்தி பண்ணிக் கொண்டு வரவேண்டும்; சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் தேடிப் போக வேண்டியதில்லை. இருக்கிற இடத்திலே சரணாகதி பண்ணலாம்.

உயர்ந்த ரீதியிலே பகவானை உணர்ந்து சரணாகத ரக்ஷணம் பண்ணிவிட்டால், மோக்ஷ தக்ஷிணையை - சாச்வதமான நித்யானந்தத்தைக் கொடுக்கிறான் அவன். சரணாகதி பண்ணுபவர்கள், பரப்ருமமத்துக்குத் துல்லியமான, சமானமான யோக்யாதிகளை அடைந்து மோக்ஷத்தை அடைகிறார்கள்.

'அவனை'த் தவிர வேறு யாரும் அப்படி சரணாகத ரக்ஷணம் பண்ண முடியாததனாலே அவனுடைய திருவடியை நாம் பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார் சுவாமி தேசிகன்.

அயோத்யா காண்டத்தில், சீதா பிராட்டியினிடத்திலே லஷ்மணன் சரணாகதி பண்ணினான். அந்த சரணாகதிக்குப் பயனாய், பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்கிற வாய்ப்பு லக்ஷ்மணனுக்குக் கிடைத்தது. கூடவே வனவாசம் அழைத்துப் போனான் பகவான். அந்த லக்ஷ்மண சரணாகதி பூரண பலனைக் கொடுத்தது.

வசிஷ்டாதிகளை முன்னிட்டுக் கொண்டு எம் பெருமான் திருவடிகளிலே சரணாகதி பண்ணினான் பரதன். பரமாத்மா தன் பாதுகைகளை அவன் சிரஸில் வைத்து அனுக்ரஹித்தான். அவன் பண்ணிய சரணாகதியின் பூரண பலனை அயோத்தியிலே இருக்கிற புல் பூண்டுகூட அனுபவித்து உயர்கதி பெற்றதாம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதுகைகளை ஆச்சர்யமாக நந்தி கிராமத்தில் பிரதிஷ்டை பண்ணி, பாதுகா ஆராதனம் செய்தான் - பதினான்கு ஆண்டுக்காலம்! யாருக்காவது கிடைக்குமா இப்படி ஒரு பாக்கியம்! முக்தி ஐஸ்வர்யத்தைக் காட்டிலும் உயர்ந்த ஐஸ்வர்யம் அவனுக்குக் கிடைத்ததே! பரத னுடைய சிரஸுக்கு அத்தனை அழகாகப் பொருந்தியது பாதுகை! சிரஸ் அதற்கு ஒரு பீடம்போல அமைந்திருந்த தாம்.

ஆரண்ய காண்டத்தில், மகரிக்ஷிகள் அத்தனை பேரும் எம்பெருமான் திருவடியில் சரணாகதி பண்ணியபோது, தண்டகாரண்யத்தையே ஒரு யாகம் செய்வதற்கு அனுகூலமான இடமாக ஆக்கித் தந்தான் பரமாத்மா.

சுக்ரீவ சரணாகதிக்குப் பூரண பலனைக் கொடுத்து, அவன் சொன்ன காரியத்தை பகவான் பண்ணினான்.

சுந்தர காண்டத்திலே திரிசடை சீதா பிராட்டியிடம் சரணாகதி பண்ணினாள். சீதா பிராட்டி அந்த சரணாகதிக்குப் பலனாய் ஆஞ்சநேயனிடமிருந்து அத்தனை ராக்ஷஸ ஸ்த்ரீகளையும் ரக்ஷித்து விட்டாள்.

சீதா பிராட்டியை இத்தனை நாட்களாக விரட்டிக் கொண்டிருந்தார்கள் அந்த ராட்சஸ ஸ்த்ரீகள். "அத்தனை பேரையும் முஷ்டியினாலே, காலினாலே உதைத்துத் தள்ளிவிடுகிறேன் - ஆக்ஞை கொடுங்கள்" என்றான் ஆஞ்சநேயன்.

அதற்கு சீதாபிராட்டி சொல்கிறாள்: "அப்பா! இத்தனை நாளாக இவர்கள் என்னை ஏசியதும் பேசியதும் ராவணனிடத்திலே உள்ள பயத்தினாலே... அவன் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டுச் செய்தார்கள். உலகத்திலே, உன் திருஷ்டியினால் (பார்வையில்) இவர்கள் தப்பு பண்ணியவர்களாகவே இருக்கட்டும். என்னுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஷ்டியில் இவர்கள் நல்லவர்கள் என்றே நினைக்கிறேன். தப்பு செய்தவர்களானாலும் நல்லதையே பண்ணக் கூடியவர்களானாலும், காருண்யத்தால் அவர்களை ஆட்கொள்வதே நல்லது. ஏனென்றால், உலகத்தில் தப்பே பண்ணாதவர்கள் கிடையாது..."

ஆஞ்சநேயனின் முகம் வெளுத்துப் போய் விட்டதாம்! ராமனைத் தன் ஹ்ருதயத்திலே வைத்திருந் தவன் அல்லவா ஆஞ்சநேயன்? 'இப்போது சீதை சொன்ன வார்த்தையிலே ராமனும் அல்லவா அடிபட்டுப் போய்விட்டான்!' என்று அவனுக்கு அதிர்ச்சி. ராமனும் தப்பு செய்தவன் என்றல்லவா ஆகிவிட்டது?

அதைப் பார்த்து சீதாபிராட்டி சொல்கிறாள்: "ஹே, ஆஞ்சநேயா! உன் முக விகாரத்திலேயிருந்து உன் எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். ராமன் தப்பு பண்ணவில்லையா? அவனும் தப்பு பண்ணியவன்தான்..."

"என்ன தப்பு?" என்று கேட்டானாம் ஆஞ்சநேயன்.

"அவன் வந்து என்னை மீட்காவிட்டால் அவன் பௌருஷம் நிலைக்குமா என்று கேட்கும்படி உன்னிடம் நான் சொல்லியனுப்பினேன். அப்புறமே அவன் என்னை மீட்க வந்திருக்கிறான். பத்தினி இங்கே இருக்கிறாள் என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியாத விஷயமா என்ன? உடனே ஓடி வந்து என்னைக் காப்பாற்ற வேண்டாமா? அபலையான ஒரு ஸ்த்ரீ, ஒரு காமாதுரனுடைய முன்னிலையிலே தன்னுடைய பதிவ்ரத்யத்தை எத்தனை நாள் ரக்ஷித்துக் கொள்ள முடியும்? எவ்வளவு நாள் என்னை இந்த இடத்திலே விட்டு வைத்தது அவன் பண்ணின குற்றமில்லையா?"

ஆஞ்சநேயன் பார்த்தான்... "ஆமாம். அது ரொம்ப பெரிய குற்றம். உடனே வந்து மீட்டிருக்க வேண்டாமா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இது இத்தனை நாள் எனக்குத் தெரியாது போயிடுத்தே..." என்று ராமனின் தவறை ஒப்புக் கொண்டு விட்டான்.

அதற்குப் பிறகும் ஆஞ்சநேயனுக்கு இன்னொரு சந்தேகம்! "அம்மா நீங்கள் என்ன தப்பு செய்தீர்கள்?" என்று கேட்டான்.

"நானும் தப்பு பண்ணியவள்தான்" என்றாள் சீதை. "தன் கணவன் எப்படி இருந்தாலும் அவனைக் குறித்து மற்றவரிடத்திலே விமர்சித்துப் பேசக் கூடியவள் உத்தம பத்தினியாகமாட்டாள். இப்போது என் பர்த்தா ராமபிரான் என்னைப் பத்து மாதம் இங்கே விட்டு வைத்தார் என்று உன்னிடம் சொன்னேனே... அதுதான் பெரிய தப்பு!"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆஞ்சநேயன் அதையும் ஒப்புக் கொண்டான். "அடியேன் என்ன தப்பு செய்தேன்?" என்று கேட்டான் அடுத்தபடியாக!

"நீயும் தப்பு பண்ணியவன்தான். இந்த ராக்ஷஸிகளை யெல்லாம் அடிக்கிறேன், உதைக்கிறேன்'' என்று சொன்னாயே... அதுதான் பெரிய தப்பு! அந்த மந்தரையையே (கூனி) பகவான் ரக்ஷித்தானே... நாம் அதை நினைக்க வேண்டாமா?" என்றாள் சீதா பிராட்டி!

விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் எழுதிய பராசர பட்டர், மஹாலக்ஷ்மியின் திருக்கல்யாண குணங்களை வர்ணிக்கக்கூடிய ஸ்தோத்திரம் இயற்றி யிருக்கிறார். குணரத்ன கோசம் என்று அதற்குப் பெயர். அதில் சீதா பிராட்டியுடைய கோஷ்டி. ராமபிரானுடைய கோஷ்டி என்று இரண்டாகப் பிரித்து, 'சீதையினுடைய கோஷ்டியே உயர்ந்து நிற்கிறது' என்று தீர்ப்புச் சொல்கிறார்.

பிராட்டியின் கோஷ்டி ஏன் உயர்ந்து நிற்கிறதாம்...? அதற்கான விளக்கத்தை அடுத்த அத்தியாயத்தில் தருகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34

சீதாபிராட்டியின் சரணாகத ரக்ஷணம் ராம னுடையதைக் காட்டிலும் உயர்ந்து நின்றது எப்படி....?

விபீஷணன், ராமனுடைய திருவடியைப் பிடித்துக் கொண்டபோது அவனை ரக்ஷித்து அருளினான் பரமாத்மா. சீதாபிராட்டியோ ஒரு படி மேலே போனாள்.

இந்திர புத்திரனான ஜெயந்தன் என்கிற காகாசுரன் பிராட்டியினிடத்திலே அபசாரமாய் நடந்து கொண்டான். அவனைத் தண்டிப்பதற்காக பகவான் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணினான். காக்கை உருவத்தில் வந்த அசுரன் அஸ்திரத்துக்குப் பயந்து ஓடுகிறது...!

இந்திரனாலும் கைவிடப்பட்டு, திரிமூர்த்திகளாலும் கைவிடப்பட்டு ஊர் ஊராகப் போய் வீடு வீடாக அலைகிறது காக்கை! ஆனாலும் ராம பாணத்திலிருந்து அதனால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

இப்படி இந்தக் காகம் வீடு வீடாகப் போய் சரணாகதி பண்ணியதற்கு ஒரு கதையை உபமானம் சொல்லுவார்கள்: ஒரு யானையை வைத்துக் கொண்டு ஜீவிதம் நடத்திக் கொண்டிருந்தான் ஒரு பாகன். ஒரு நாள் அந்த யானைக்கு மதம் பிடித்து, அடர்ந்த காட்டுக்குள் ஓடிப்போய்விட்டது. யானைப் பாகன் வந்து பார்த்தால் யானையைக் காணோம்...! எங்கெங்கோ தேடியும் அது கிடைக்கவில்லை. கடைசியில் ரொம்ப சிந்தாகிரஹனாய் விழுந்து கிடந்தான் அவன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு எழுந்து வீட்டுக்குப்போய், உருண்டு கிடந்த பானைகளையெல்லாம் எடுத்து, ஒவ்வொரு பானையாக யானையைத் தேடினானாம்!

பெரிய பெரிய இடங்களெல்லாம் தேடிக் கிடைக்காத யானை, பானைக்குள்ளே கைவிட்டால் கிடைத்துவிடுமா! அதைப் போலதான் காகாசுரனும் பலம்படைத்தவர்களெல்லாம் கைவிட்ட பின்னர் ஒவ்வொரு வீடாய்ப் போய் - சாமானியர்கள் வீடாய்ப் போய் அபயம் கேட்டானாம்!

எந்த வீட்டிலும் அசுரனுக்கு உதவி கிட்டவில்லை. கடைசியில் ராமனிடத்திலேதான் வந்து சேர்ந்தான். 'சரணாகதி' என்று அவன் திருவடியிலே வந்து இறக்கையைப் படியச் செய்தான். விழுந்தவனின் தலை, ராமனின் பாதங்களை நோக்காமல் எதிர்த்திசை நோக்கித் திரும்பியிருந்தது.

சீதாபிராட்டி பார்த்தாள்... 'குழந்தைக்கு சேவிக்கத் தெரியலையே' என்று காகாசுரனின் தலையை ராமனின் திருவடி நோக்கித் திருப்பி வைத்தாள்!

எத்தகைய கொலைக் குற்றம் புரிந்திருக்கிறான் அவன்! அப்படிப்பட்டவனை என்ன வேண்டுமானாலும் பண்ணலாம் அல்லவா! ஆனால் பகவான் மகாலக்ஷ்மியினுடைய காருண்யத்தைப் பார்த்துத் தணிந்து போனான். காகாசுரனுடைய ஒரு கண்ணை மட்டும் போக்குவதோடு நிக்ரஹத்தை நிறுத்திக் கொண்டான்.

இதனால்தான் இன்றைக்கும் காக்கைகளுக்கு ஒரு கண் பார்வை இல்லாமலிருக்கிறது. தலையைத் திருப்பித் திருப்பி, சாய்த்துத்தான் அதனால் பார்க்க முடியும்.

காகாசுரனின் தலையைத் திருப்பி வைத்து அவனுக்கு அனுக்ரஹம் பெற்றுத் தந்ததை காகாக்ஷி நியாயம் என்று சொல்வார்கள்! பிழைத்துப் போன காக்கைக்கு ரொம்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தோஷம். அன்று முதல் அது சமஸ்க்ருதத்திலே பேச ஆரம்பித்து விட்டது! என்ன பேசுகிறது அது...? நாம் கொல்லைப் பக்கத்திலே துணி துவைக்கும் போது நம் கிரஹத்திலே வந்து சுவரின் மேல் உட்கார்ந்து கொள்கிறது. "கா...க:" "கா...க:" என்று கரைகிறது. 'கா...?' என்றால் 'எவள்.' 'க:?' என்றால் எவன். 'அந்த ராமனையும் சீதையையும் போல சரணாகத ரக்ஷணம் பண்ணக் கூடியவர்கள் எவள்?... (கா), எவன்...? (க:)' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறது!

உண்மையிலே அவர்களைப் போல சரணாகத ரக்ஷணம் பண்ண வேறு யாரும் இல்லையாதலால் நாமும் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்து விடுகிறோம். உடனே காக்கையும் பறந்து போய்விடுகிறது...! அடுத்த வீட்டுக்குப் போய் உட்கார்ந்து அதே கேள்வியைக் கேட்கிறது.

இன்றைக்கும் அந்தக் காக்கை எம்பெருமானையும் பிராட்டியையும் நினைத்து நினைத்து 'கா க:' என்று சொல்லித் திரிகிறது என்றால் அதற்கு யார் காரணம்...?

இயலாமல் வந்து திருவடியிலே விழுந்த நேரத்தில், அவன் தலையைத் திருப்பி வைத்த சீதா பிராட்டியின் காருண்யம் காரணம்!

அதே காருண்யம்தான் அத்தனை கொடிய ராக்ஷஸ ஸ்த்ரீகளையும் ஆஞ்சநேயரிடத்திலிருந்து காப்பாற்றியது. திரிசடை ஒருத்தி பண்ணிய சரணாகதியினுள்ளேயே அத்தனை பேரையும் அடக்கி, சரணாகத ரக்ஷணம் பண்ணி விட்டாளே தாயார்! எனவே, அந்த மஹாலக்ஷ்மியின் காருண்யமே மிக உயர்ந்தது என்று அபயப் பிரதான காரத்தில் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

ராமாயணம் வேத சமானம் என்று சொன்னால், அதில் வருகிற விபீஷண சாரணாகதிக்கு உபநிஷத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தானம் இருக்கிறது. வேதாந்தம் அது! உபநிஷத் இல்லாமல் வேதம் இல்லை அல்லவா...!

சரணாகதி வித்யையே எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்ட வித்யை என்பதை விளக்குகிறது வீபீஷண சரணாகதி.

ஒருத்தர் பக்தி யோகம் பண்ணுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதன் முடிவிலேயே, இந்த ஜன்மத்திலேயே அவருக்கு மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இன்னொரு ஜன்மாவுக்கு அது தொடரலாம்...! பல ஜன்ம பரம்பரைகளுக்குக் கூட பிறவியை சகிக்க வேண்டியிருக்கும். ஆனால் சரணாகதி பண்ணினால் பரமாத்மா மோக்ஷத்தை உடனே கொடுத்து விடுகிறான்.

இப்படிச் சொன்னால் சந்தேகம் வரும் - நியாயமான சந்தேகம் - ஏற்கெனவே நாம் செய்த பாவ மூட்டைகள்... இனிமேல் வரும் பாவங்கள் எல்லாம் என்ன ஆகும்... சரணாகதியினாலே அவற்றின் துர்ப்பலன் எல்லாம் போய்விடுமா...?

பக்தி யோகமே இந்தப் பாவ மூட்டைகளை அழித்து விடும். அப்படியிருக்கும்போது சரணாகதி யோகத்தால் இவற்றை அழிக்க முடியும் என்று சொல்லத் தேவையில்லை... சரணாகதியிலே இன்னொரு ஏற்றம் என்னவென்றால் அது பாவ மூட்டைகளையும் அழித்து மோக்ஷத்தையும் வாங்கிக் கொடுத்து விடும்.

ஆசார்யர்கள் சரணாகதியை நான்கு விதமாகப் பேசினார்கள்.

உக்தி நிஷ்டா என்பது ஒரு வகை. ஆசார்யராய் இருக்கும்படியான ஒருவர், எம்பெருமான் எதிரிலே நம்மை நிறுத்தி, நம்மைக் குறித்து அவனிடத்திலே எடுத்துச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லி, நம்மையும் சொல்ல வைத்து, இந்த ஆத்மாவை அவன் திருவடியிலே சேர்ப்பிக்கும்படியான சரணாகதி உக்தி நிஷ்டை.

தனக்கே சக்தி இருந்தால், தானே பகவானை சரணாகதி பண்ணலாம். இது சுவநிஷ்டை. தனக்காக ஆசார்யனையும் பண்ணச் சொல்லி வேண்டலாம்... அதற்கு ஆசார்யநிஷ்டை என்று பெயர். பாகவதோத்தமர்களை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானிடத்திலே சரணாகதி பண்ணலாம். அதற்கு பாகவத நிஷ்டை என்று பெயர்.

இப்படி சரணாகதியிலே பல நிலைகள்... அத்தனை நிலைகளையும் ராமாயணத்திலே எடுத்துக்காட்டியிருக்கிறது! அதனால்தான் கொல்லத் தகுந்த குற்றமே பண்ணியவனாயிருப்பினும் அவன் சரணாகதி பண்ணி விட்டானானால் ஒருத்தனைக் காட்டிக் கொடுப்பதில்லை. அத்தகையவனையும் ரக்ஷித்தே தீர வேண்டும் என்பதற்காகவே பகவான் ராமாவதாரம் பண்ணினான்.

மனத்திலே துஷ்டி (மன நிறைவு) இருந்தால் ஒருத்தருக்குப் புஷ்டி தானாக வந்துவிடும். ஆனால், மனத்தில் வியாகூலம் இருப்பின் எவ்வளவுதான் நன்றாகச் சாப்பிட்டாலும் புஷ்டி ஏற்படுமா?! ஒருநாளும் ஏற்படாது.

ராமாவதாரத்திலே பரமாத்மா எப்போதுமே புஷ்டியாகவே இருந்தானாம்!

ஆஞ்சநேயன் ராமனைப் பார்த்த சமயம் அவன் "ஹா சீதே! ஹா சீதே!" என்று அரற்றியபடியிருந்தானாம். அந்த நேரத்திலே ஆஞ்சநேயனுக்கு ராமனைக் குறித்து ஒரு தப்பபிப்ராயம் ஏற்பட்டதாம்.

'இவன் என்ன இப்படி அரற்றுகிறானே! ஸ்த்ரீ லோலனாக இருப்பான் போலிருக்கிறதே! எப்போது பார்த்தாலும் 'சீதே! சிதே!' என்று சொல்லிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கொண்டிருக்கிறானே... என தப்பாக எடை போட்டு விட்டானாம்.

அதே ஆஞ்சநேயன் அசோகவனத்திலே சீதையைப் பார்க்கிறான். ராமனையும் சீதையையும் தராசிலே நிறுத்தால் அழகிலே சமமாக இருப்பார்கள் என்பதை உணர்கிறான்.

பங்குனி உத்திரத் திருநாளில் ரங்கநாதரும் ரங்கநாயகி தாயாரும் ஒரே இருக்கையில் சேர்ந்து எழுந்தருளியிருக்க, எம்பெருமான் பாஷ்யக்காரர், அந்தத் திருக்கோலத்தை ஆச்சர்யத்துடன் பாடுகிறார். ஆஞ்சநேயர் ஆச்சர்யப் பட்டது மாதிரி அவரும் ஆச்சர்யப்படுகிறார். பகவானுக்கு சமமான ரூபம், குணம், சீலம் எல்லாம் நிரம்பியவளாக தாயார் தெரிகிறாளாம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆஞ்சநேயனும் அப்படித்தான் ஆச்சர்யப் பட்டான். அவனுக்குக் கூடுதலாக இன்னொரு ஆச்சர்யம் - சீதா பிராட்டியைப் பிரிந்தும் ராமன் இப்படி புஷ்டியாக இருக்கிறானே என்ற ஆச்சரியம்.

இதிலிருந்து தெரிகிறதல்லவா, ஸ்ரீ ராமபிரான் எப்போதுமே புஷ்டியாக இருந்தான் என்று!

ராமபிரானுக்கு இந்த அவதாரத்திலே ரொம்ப விசேஷம் நேத்திரத்தினுடைய அழகு. மஹான்களை யெல்லாம் ஈர்த்திருக்கிறது அந்த நேத்ரம். ராமாயணத்திலே அவன் நேத்திரத்திற்குத் தோற்றவர்கள் மூன்று பேர் - ஆஞ்சநேயன், தசரதன், சபரி.

விச்வாமித்ரர் ராமனை அனுப்பச் சொல்லிக் கேட்கிறார் தசரதனிடம்... தசரதன் கதறி அழுகிறான்! 'நீங்கள் திருவடியால் ஆக்ஞாபிப்பதை சிரஸினால் செய்யக் காத்திருக்கிறேன்...' என்று விச்வாமித்ரரிடம் சொன்னவன் கலங்கிப் போய் அழுகிறான்! மஹரிஷியைப் பார்த்துச் சொல்கிறான்:

"இது நியாயமா? நீங்கள் என் குழந்தையைக் கேட்கிறீர்களே. இது நியாயமில்லை. நான் சேவிக்கும் போது ஒரு கை நிறைய அக்ஷதையை எடுத்து, என் தலையில் போட்டு தீர்காயுஷ்மான் பவ என்று ஆசீர்வாதம் பண்ணீனீரே... இப்போது மறை முகமாக என் பிராணனை அல்லவா கேட்கிறீர்கள்! என் தலையில் போட்ட அக்ஷதைக்கு என்ன அர்த்தம்... நான் ராமனை அனுப்ப மாட்டேன்..." என்று புலம்புகிறான்.

"சின்னக் குழந்தை அவன். அஸ்தமனமானால் தூங்கிப் போய்விடுவான்! நீர் அவனைக் கூப்பிடுவதோ ராக்ஷஸர்களை எதிர்ப்பதற்கு... ராத்திரி வேளையிலே கண் விழித்துச் சண்டை போடுகிற அளவுக்கு இவனுக்கு வயசில்லையே..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராமன் பிறந்த பிற்பாடு தசரதனுக்கு வேறு வேலையே கிடையாதாம். சிம்மாஸனத்தில் அமர்ந்தபடி சுமந்திரனை அழைத்து, ராமனைக் கூட்டி வரச் சொல்லுவானாம்.

'அப்பா கூப்பிட்டீர்களா?' என்று ராமன் வருவான்.

'போ போ, என்பானாம் தசரதன். பவனத்தை விட்டு ராமன் வெளியேறும் நேரம் பார்த்து 'வா' என்பானாம் மீண்டும். திரும்பவும் 'போ...,' 'வா...' இப்படியே...!

குலசேகராழ்வாருடைய அனுபவம் இது! அந்த ராமாவதாரத்திலே ஈடுபட்டு தசரதன், ராமனின் முன்னழகையும் பின்னழகையும் மாறி மாறிச் சேவித்தான். அந்த நேத்திர அழகிலே ஈடுபட்டுத்தான் அப்படிச் சேவித்தான்.

சபரியும் இந்த நேத்ர விசேஷத்தைப் பாராட்டுகிறாள்:

"தங்கள் திவ்யமான பார்வை என்மீது பட்டது. உத்தமமான உலகத்துக்குப் போய்க் கொண்டே யிருக்கிறேன்..." என்றாள். அப்படியெனில் அந்த கடாக்ஷம் எப்பேர்ப்பட்டதாயிருக்கும்!

ஆஞ்நேயருடைய அனுபவத்தைப் பாருங்கள்... சீதை அவனிடம் கேட்டாளாம். 'ராமன் எப்படி இருக்கிறான்? அவனுடைய புஜங்கள் எப்படியிருக்கின்றன...?'

ஆஞ்சநேயர் உடனே ஆரம்பித்து ராமனின் கண்களைத்தான் வர்ணிக்கிறார்! - கண்கள்தான் அவனை ஆகர்ஷித்தன என்பதால்.

'மரத்துக்கு மரம் தத்தித் திரியும் ஒரு குரங்கினைப் போல் திரியக்கூடிய என் உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டதே அந்த நேத்ரம்! யோகிகளின் உள்ளத்தை அது எவ்வாறு கொள்ளை கொள்ளும் என்று சொல்லவும் வேண்டுமோ...!' என்று எண்ணுகிறான்.

சுபமான பார்வை பகவானின் பார்வை!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கண் இரண்டுங்கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்

என்று பாடுகிறாள் ஆண்டாள்.

நம்மாழ்வார் சொல்கிறார்: 'ஒரு யமனுடைய விசேஷமான தன்மையை உலகத்திலே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உன்னிடத்திலே இரண்டு யமன்கள் வைத்துக் கொண்டிருக்கிறாயே...!' என்கிறார்.

இரண்டு யமன்கள்...?

"ஆம்! உன் திருவடி பற்றக்கூடியவர்களின் ஆவி உண்ணும் இணைக் கூற்றங்கொலோ...!' என்கிறார்.

திருநேத்திரங்களைக் கடல் என்கிறார்; நதி என்கிறார். நேத்திர நதியிலே எழக்கூடிய சுழிகள் எத்தனை பாகவ தோத்தமர்கள் வந்தாலும் ஏற்கக் கூடிய சக்திவாய்ந்தவை!

சூர்ய ரச்மி பட்டதும் அன்றலர்ந்த தாமரை எப்படி சோபாயமானமாக இருக்குமோ அப்படி காணப்படுகிறாராம் ஸ்ரீ ராமர். அவர் முகம் தாமரை; நேத்திரங்கள் தாமரை; நாபி தாமரை; திருவடி தாமரை! தாமரைக் காடு பூத்தது போல இருக்கிறான். அந்த பத்ம வனத்திலே வாசம் பண்ணுகிறாள் மஹாலக்ஷ்மி! எம்பெருமானின் திருமுடியிலிருந்து திருவடிவரையில் எல்லாம் பத்ம மயம். மஹாலக்ஷ்மி வாஸம் பண்ணுவது அவன் ஹ்ருதய பத்மத்தில்!

இப்படி ஹ்ருதய பத்மத்தில் ஸ்ரீயைத் தாங்கி, பத்மவனமாகவே விளங்கும் பகவானிடம் சரணாகதி பண்ணி அவன் தாமரை நேத்திரங்களால் கடாக்ஷிக்கப்படு கிறவர்கள் எல்லாம் உயர்ந்த நிலையை அடைந்திருக் கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35

ராம: என்றால், எல்லோரையும் ரமிக்கப் பண்ணுகிறவன் என்று பொருள். யோகிகளின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகிறவன் ஸ்ரீராமன்!



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தை ராமன் பிறந்து தொட்டிலில் படுத்திருக்கும் போது, வசிஷ்டர் கிட்டே போனார் - குழந்தையைப் பார்ப்பதற்கு... அந்தக் குழந்தையைப் பார்த்தபோது வசிஷ்டருடைய ஹ்ருதயத்தையே அது கொள்ளை கொண்டுவிட்டது!

'இந்த மாதிரி குழந்தை ஒன்று நமக்கு இல்லையே...' என்று தோன்றிவிட்டதாம் முனிவருக்கு!

தோன்றிய கணத்திலேயே அந்த எண்ணத்தின் தவறும் அவருக்குப் புரிந்ததாம். 'நமக்கே இப்படிஒரு எண்ணம் வரலாமா...? எவ்வளவு தப்பான எண்ணம்!'

உடனே தப்பு தன்னுடையதில்லை என்று உணர்ந்து விட்டார் அவர். 'இவன் இவ்வளவு அழகாய் இருக்கிறானே! அதனாலல்லவா நமக்கு அப்படியொரு எண்ணம் உண்டாயிற்று...' என்று பழியை அவன் மேலேயே போட்டு விட்டார்!

அகலிகை வெண்பா என்றொரு கிரந்தம் இருக்கிறது. அதில் என்ன சொல்லியிருக்கிறது பாருங்கள்:

'நல்லார் உள்ளத்தும், நல்லார் அல்லாதார் உளத்தும் பொல்லாங்கு புகுவது இயல்பே... நல்லார், புகுந்தவுடன் விட்டிருவர்; அல்லாதார் மிகுந்துரைய விட்டிருவர் வேட்டு...'

நல்லோருக்குக் கூட தீய எண்ணம் வருமாம்! ஆனால் அவர்கள் அதை உடனே விட்டு விடுவார்கள். தீயவர்களோ அந்த எண்ணத்தை மிகுந்துரைய விட்டு விடுவர்!

வசிஷ்டருக்கும் பொருந்தாத எண்ணம் ஒன்று தோன்றியது. ஆனால் உடனே அதைக் கைவிட்டார். ராமனுடைய சௌந்தர்யமே தன்னை அவ்வாறு பேச வைத்தது என்று உணர்ந்து கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அலகிலா விளையாட்டுடையவன் பரமாத்மா! நம்மையெல்லாம் ஒரு பந்தாக வைத்துக் கொண்டு அவன் விளையாடுகிறான்! வசிஷ்டரோடும் விளையாடி யிருக்கிறான்!

குழந்தையைப் பார்த்த வசிஷ்டர் ராம: என்கிற பரம மங்களமான பெயரை அதற்குச் சூட்டினார். எல்லா பலன்களையும் தரவல்லது அந்த நாமம்.

காச்யாம் மரணாந் முக்தி: (காசியில் மரணமுற்றால் முக்தி நிலை அடையலாம்.) என்பார்கள். எதனால் முக்தி...? காசியில் உரையும்படியான விச்வேச்வரன், அங்கு மரிப்பவர்களின் செவியிலே ராம நாமாவைச் சொல்வதனாலே...!

'பரமமான, உயர்ந்த ப்ரும்ம ரூபமான ராம நாமாவை பஜிக்கிறேன் பஜிக்கிறேன்' என்று நான்கு தடவை ஆதி சங்கர பகவத்பாதாள் சொல்கிறார். இதனாலேயே அந்த நாமத்தின் ஏற்றம் நமக்குத் தெரிகிறது. நம்முடைய பிறப்பின் வித்தை அது பொசுக்கிவிடும். எல்லா சொத்துக்களையும் சம்பாதித்துக் கொடுக்கும், யம தூதர்களை விரட்டி யடிக்கும். எப்போது விரட்டியடிக்கும்...?

'ராம ராமேதி' என்று கர்ஜனம் செய்யும்போது... அந்தச் சமயத்தில் யமதூதர்கள் கிட்டே வர முடியுமா!

யமன் யம தூதர்களைக் கூப்பிட்டு ரகசியமாகச் சொன்னானாம். "இந்த ராமநாமத்தைச் சொல்லக்கூடிய விஷ்ணுபக்தர்களிடத்திலே போகாதீர்கள். ஏனென்றால், நாமெல்லாம் அதைச் சொல்லாதவர்களுக்குத்தான் அதிகாரிகளேயொழிய அதைச் சொல்லக் கூடியவர் களுக்குக் கிங்கரர்கள்!"

இந்த விஷயத்தை யமன் ஏன் ரகசியமாய்க் காதிலே சொல்ல வேணும்? இதை உரக்கச் சொல்வது கூட அபசாரம் என்பதால்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நிகழ்ச்சியைப் பற்றி விஷ்ணுசித்தர் வியாக்யானம் பண்ணியிருக்கிறார். அவர் எழுதுகிறார்: 'ஒரு ராஜகுமாரத்தி - இளவரசி... "நான் இளவரசியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்..." என்று யாராவது உரக்கச் சொல்ல முடியுமா...? அந்த மாதிரிதான், விஷ்ணு பக்தாளிடம் போகாதே என்று சொல்வது கூட - உரக்கச் சொல்வது கூட அபசாரமாகும்...'

இதுதான் பகவான் நாமாவின் உயர்த்தி, 'ராம' என்ற இரண்டு எழுத்துக்கள் எல்லா நலனையும் உண்டாக்கக் கூடியது. எல்லோரையும் ஓய்வுரச் செய்யக்கூடியவன் பரமாத்மா. எல்லோரையும் அடக்கி ஆளக்கூடியவன். அவன் ஒருத்தன் இருந்துவிட்டால் எல்லோருமே அடங்கி விடுவார்கள். அதனால்தான் சுவாமி தேசிகன் அந்த பகவானை 'ஜெய ஜெய மஹா வீர!' என்று கொண்டாடினார்.

இன்னொரு விசேஷத் திருநாமமும் ராமனுக்கு உண்டு.

தர்ம:

கிருஷ்ணம் தர்மம் சனாதனம்.

தர்மம் எது என்று பார்த்தோமானால், அதற்குப் பல பொருள் சொன்னார்கள். ஆனால் 'தர்மம்' என்கிற சமஸ்க்ருத சொல்லின் பொருளை அப்படியே அடக்கிய இன்னொரு சொல் அகப்படவில்லை. எந்த மொழியிலும் அகப்படவில்லை!

ஏனென்று கேட்டால், தர்மம் என்கிற சொல்லுக்கு 'பகவான்' என்று பொருள். தர்மம் என்கிற சொல்லுக்கு வேதம் என்று பொருள். தர்மம் என்கிற சொல்லுக்கு வேதோச்சாரணம் என்றும் பொருள். அவரவர் நிலைக்கு ஏற்ப சொல் பிரயோகமாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தணர்களின் தர்மம் எது என்று கேட்கிறோம். அப்படியென்றால் என்ன...? 'பிராமணர்களுடைய தெய்வம் எது?' என்று கேட்பதாகவா அர்த்தம்...? கிடையாது! பிராமண தர்மம் என்று ஆறு விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. வேதத்தைக் கசடற கற்க வேண்டும் என்பது ஒன்று. இது அவ்வளவு சுலபமான காரியமா...? கிட்டே நெருங்கி உட்கார்ந்து ஆசார்யர் சொல்லிக் கொடுக்கும்போது கஷ்டப்பட்டு கிரஹித்துக் கொள்ள வேண்டும். எத்தனையோ கடினமான விஷயங்கள் வேதத்திலே உண்டு.

ஒருத்தர் வித்யாரண்ய சுவாமியிடம் போய், 'ருத்ர தாண்டவத்தைக் காட்ட முடியுமா?' என்று கேட்கிறார். அதற்கு அவர் சொல்கிறார்: 'ருத்ர தாண்டவத்தைக் காட்டுவதென்ன? பார்ப்பது என்ன...? நீர் அத்யயனம் பண்ணியவர்தானே? வேதத்திலே கனம் சொன்னாலே அந்த ஒலிகளிலேயே ருத்ர தாண்டவத்தைப் பார்க்கலாமே...' என்றார் சுவாமிகள்.

'வேத மந்திரங்களிலே ருத்ர தாண்டவத்தைப் பார்ப்பதோடு நந்திகேசுவரரின் மிருதங்க வாத்ய ஒலியையும் கேட்கலாம்' என்றார் வித்யாரண்யர்.

அந்த வேதத்தில் இல்லாதது என்பதே கிடையாது.

நீர் நிலைகளில் ஜலமே இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்திரனை ஸ்துதிக்க வேண்டும். அவன்தான் மழைக்கு அதிகாரி. வருணனை ஏவுவான். மழையைப் பொழிவிக்கச் செய்வான்.

அதற்காக ஓதப்படும் மந்திரத்தின் ஒலியைக் கேட்டால், மழைக்காலத்தில் நிரம்பிய நீர் நிலைகளில் தவளைகள் ஓசை எழுப்புவது போலவே இருக்கும்! மந்திரத்தின் த்வனியைக் கொண்டே, 'ஓஹோ! இவர்களுக்கு ஜலம் வேண்டும் போலிருக்கிறது... நீர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலைகள் மொத்தத்தையும் நிறைத்து விடுவோம்...' என்று தேவதைகள் எண்ணமிடுவார்களாம்!

இப்படி ஒலியின் பங்கு முக்கியமாய் இருப்பதால் உச்சாரணமும் மிகவும் முக்கியம்.

உச்சாரணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு சரித்திரம் வேதத்திலேயே வருகிறது.

நிருமேதர் என்று ஒருத்தர். பருச்சேபர் என்று இன்னொருத்தர். இரண்டு பேரும் குருகுலவாசம் செய்து ஏக காலத்தில் வேதம் பயின்றார்கள்.

சமித்திலே அக்னி வளர்த்து, அக்னியை உபாஸிக்கும்படியான வித்யை, மந்த்ரம் கற்றார்கள். பதினைந்து ஆண்டுகள் அதைக் கற்றார்கள் 15, 17, 21 என்று கூட்டம் கூட்டமாக மந்த்ரங்கள் இருக்கும். எல்லாவற்றையும் கற்றார்கள். ஆசார்யரும் ஓர வஞ்சனையில்லாமல், இரண்டு பேருக்கும் சமமாகக் கற்றுக் கொடுத்தார்.

குரு தக்ஷிணையைச் சமர்ப்பித்து விட்டு இருவருமே புறப்படும் காலம் வந்தது. காட்டின் வழியே நடந்து போனார்கள். காட்டைக் கடந்தால் இவர் இவர் ஊருக்கும் அவர் அவர் ஊருக்கும் பிரிந்து போக வேண்டும். பிரிய வேண்டிய கட்டம்! பதினைந்து வருடங்கள் ஒரு குருகுலத்திலே இருந்தவர்களுக்குப் பிரிவு ரொம்ப வருத்தத்தைத் தந்தது. 'இருந்தாலும் நாம் இரண்டு பேரும் பரீட்சை பண்ணிப் பார்ப்போம்...' என்று தீர்மானம் செய்தார்கள்.

இந்தக் கால பரீட்சைக்கும் அந்தக் கால பரீட்சைக்கும் வித்தியாசமுண்டு! இந்தக் காலத்தில், வேதத்தைச் சரியாகச் சொல்கிறானா? உச்சாரணம், உச்சரிப்பு சரியாக இருக்கிறதா என்று பார்ப்பார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தக் காலத்திலோ, வித்யை பரீக்ஷிப்பது என்றால், தேவதையையே எதிரில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்!

ந்ருமேதரும் பருச்சேபரும் நடந்து வந்த காட்டில் மரங்கள் முறிந்து கீழே விழுந்து விட்டன. ஒரு கட்டை, ஜலத்திலே நனைந்து கிடந்தது. 'இந்தக் கட்டையில் நீரும், நானும் கற்ற மந்திரத்தைப் பரீட்சிப்போம்' என்று முடிவு செய்து கொண்டார்கள். "இதிலே அக்னியை உண்டு பண்ணி விடுவோம்..."

"பண்ணலாமா...?"

"ஆஹா, பண்ணலாம்!"

இரண்டு பேரும் ஒன்றாகக் கைகூப்பி மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்புறம் யோசனை வந்தது.

"இப்படி இரண்டு பேரும் ஒன்றாகச் சொன்னால், யார் சொன்னதற்குப் பலன் என்று கண்டுபிடிக்க முடியாது... எனவே நீர் முன்னே சொல்லும்... நான் அப்புறமாக தனித்துச் சொல்கிறேன்..." என்று முடிவாயிற்று.

தனித்துச் சொல்வதில் ஒரு விசேஷமுண்டு! எங்கள் ஊர் முக்கூரில் ஒரு சீமந்தம் பண்ணி வைத்துக் கொண்டிருந்தார் என் தாத்தா. அப்போது அஹோபில மடத்து நாற்பத்து நாலாவது பீடாதிபதியானவர், பூர்வாசிரமவாசியாய் அங்கு இருந்தார்.

அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் வேத வித்துக்கள் வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவராக மந்த்ரமே தெரியாத ஒருத்தர்! மற்றவர்கள் கூட்டமாக வேதம் சொன்னபோது இவர் மட்டும் 'ஜிகுபுகு' ஜிகுபுகு' என்று சொல்லிக் கொண்டிருந்தார்!

கடைசியில் 'ஹரி: ஓம்' என்று முடித்த பிறகும் 'ஜிகுபுகு ஜிகுபுகு...' என்று சொல்லிக்கொண்டேயிருந்தார்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபையிலே உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டார்கள்.

பீடாதிபதி சுவாமி மட்டும் சிரிக்கவில்லை. மற்றவர்களைப் பார்த்துச் சொன்னார்: "இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை! பதினைந்து வருஷம் அத்யயனம் பண்ணியவர்கள் எந்த இடத்தில் என்ன மந்திரம் சொல்வதென்று உணர்ந்து சொல்வதில் ஆச்சரியமில்லை... இப்படி ஜிகுபுகு சொல்வதுதான் கஷ்டம்! ஒரு இடத்திலே உட்கார்ந்து இரண்டு மணி நேரம் சொல்லியிருக்கிறாரே!" ஆகையினாலே, மற்றவர்களுக்கெல்லாம் என்ன சம்பாவனையோ அதைவிட இரண்டு மடங்காக சம்பாவனை வாங்கிக் கொடுத்து விட்டார்!

கொடுத்து விட்டு, அவரைத் தனியே அழைத்துப் போய்ச் சொன்னர்: 'இப்படி ஒவ்வொரு இடத்துக்கும் நான் வந்து சம்பாவனை வாங்கித்தர முடியுமா? அதனால் ஜாக்கிரதையாய் இரும். உரிய மந்திரங்களை நெட்டுருவு பண்ணி வையும்..."

பிற்பாடு, அவர் பீடாதிபதியானபோது, அவரை சேவிக்க இந்த ஜிகுபுகுக்காரர் போயிருந்தார். "உதக சாந்தி வந்து விட்டதோ யில்லையோ! இப்போது நான் சன்னியாஸாசிரமத்திலே இருப்பதனாலே முன் போல் வந்து காப்பாற்ற முடியாதே!" என்று வேடிக்கையாகச் சொன்னார்!

இதனால் என்ன தெரிகிறது? பல பேர் உரக்கச் சொல்லும்போது ஒருத்தர் தனியாகச் சொல்லும் மந்திரம் காதில் விழாது! அதனால்தான் காட்டில் இரு நண்பர்களும் தனித்தனியே மந்திர சக்தியைச் சோதிக்க முடிவு செய்தார்கள்.

முதலில் ந்ருமேதர் கைகூப்பி மந்த்ரத்தை ஓதினார். கட்டையிலிருந்து வெறும் புகைதான் வந்தது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பருச்சேபர் ஓங்கி, கச்சிதமாக மந்த்ரத்தை உச்சாரணம் பண்ணி அக்னியை உண்டுபண்ணிவிட்டார்.

'ரிஷி' என்று பருச்சேபரை அப்போது அழைத்தார் ந்ருமேதர்! ரிஷி என்கிற வார்த்தையே அப்போதுதான் உண்டானது!

மந்திரத்தை வாயால் சொன்னால் போதாது. அதன் உள்ளீடான தேவதையை மனத்தால் நினைக்க வேண்டும். மந்திரத்தை உபதேசித்த ஆசார்யனை முதலில் ஆராதிக்க வேண்டும் - இவ்வாறு, மந்திரத்தினிடத்திலும் அதை உபதேசித்த ஆசார்யனிடத்திலும், தேவதையிடத்திலும் சமானமான பக்தி யாருக்கு இருக்கிறதோ... அவருக்குத்தான் மந்திரம் சித்திக்கும். அப்பேர்ப்பட்ட சித்தி பெற்றவர்கள் மந்த்ரம் சொல்லி ஆசீர்வாதம் பண்ணிவிட்டால் அந்த ஆசீர்வாதத்துக்கு மறுப்பு உண்டோ!

இவ்வாறு வேதோச்சாரணம் என்பதிலேயே பெரிய தபஸ் இருக்கிறது! இந்த வேதம் ஓதும் காரியத்தை அத்தனை தர்மம் என்று சொல்வது.

தர்மம் என்றால் என்ன என்று ஒரு கேள்வி ஆரம்பத்தில் வந்தது. இவ்வாறு, ஆற்ற வேண்டிய நியமங்களை, கடமைகளை அர்ப்பணத்துடன் ஆற்றுவது தர்மம் என்பது ஒரு பொருள்.

எல்லாவற்றுக்கும் மேலான தர்மம் என்ன என்று கேட்டால்... பரமாத்மாதான்!

'தர்மத்துக்கே கை, கால் முளைத்து பூமியில் சஞ்சாரம் பண்ணினால், அதுதான் ராமன்' என்று விவரித்தார்கள். அப்படிப்பட்ட சக்ரவர்த்தி திருமகனுடைய பரிபூரண அனுக்ரஹம் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

36

தர்ம சப்தத்தினாலே சொல்லப்படக்கூடியவன் பரமாத்மா. அவன் நடத்திக் காட்டினதெல்லாம் தர்மம் தான். மனிதனாய்ப் பிறந்த நாம் பின்பற்ற வேண்டிய கடமை என்ன என்பதை பரமாத்மா ராமாவதாரத்திலே காட்டியருளினான்.

ஸ்ரீமத் பாகவதத்தில், சுகப்ரும்ம மஹரிஷி இதை விளக்கிச் சொல்லியிருக்கிறார். பரீக்ஷித்தைப் பார்த்து அவர் இதைப் பேசியிருக்கிறார்.

மனிதனாக ராமன் பிறந்தான் என்று கதை கேட்கும்போது, ராக்ஷஸ வதைக்காகத்தான் அப்படி அவதரித்தான். ராவணனை வதைக்கவே அந்த அவதாரம் என்று எண்ணிக்கொள்கிறோம்.

அது மாத்திரமே காரணம் இல்லை. ராக்ஷஸ வதை என்பது ஒரு வியாஜம். முக்கிய குறிக்கோள் என்ன வென்றால்,

மனிதர்களை சிக்ஷிப்பதற்காக! மனிதருடைய கடமை என்ன...? ஒரு தந்தையாய் இருக்கக்கூடியவர் எப்படி இருக்க வேண்டும்? தாயாராய் இருக்கக்கூடியவர் எப்படி இருக்க வேண்டும்? புத்ரனாய் இருக்கக்கூடியவனின் கடமை என்ன? அதிலே ஜேஷ்டபுத்திரனின் கடமை என்ன...? இளையவர்களாக இருக்கக்கூடியவர்களின் கடமை என்ன...? பந்து மித்திரர்களிடத்திலே நாம் எப்படி இருக்க வேண்டும்? விரோதிகளிடத்திலே எப்படிப் பழக வேண்டும்? இந்த பூமியில் நாம் எப்படி வாழ வேண்டும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம தர்மம் என்றால் என்னது?... இப்படி எல்லாவற்றையும் காட்டி, நாம் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தோமா என்று யோசிக்க வைக்கிறான்.

திருமலையிலே, பெரிய திருமலை நம்பிகள் என்ற ஆசார்யர் எழுந்தருளியிருந்தார். ராமானுஜருடைய சொந்த மாமா அவர். பஞ்சாசார்ய பதாச்ரயர் என்று ராமானுஜருக்குப் பெயர். ஐந்து ஆசார்யர்களை அணுகி ஒவ்வொருத்தரிடம் ஒவ்வொரு வித்தையை அப்யசித்தார்.

அந்தக் காலத்தில் வித்வான்கள் மிகவும் சிரமப் பட்டு அப்யாஸம் செய்தார்கள். இந்தக் காலத்தில் அவ்வளவு சிரமம் இல்லை. ஏனென்றால் எங்கும் கல்விக்கூடங்கள் நிறைந்திருக்கின்றன. படிக்க வாய்ப்பு உள்ளது. முன் காலத்தில் அப்படி இல்லையே...!

அஹோபில மடத்தில் இஞ்சிமேட்டு ஸ்ரீ அழகிய சிங்கர். காசி வரை நடந்தே சென்று தர்க்கம் பயின்று வந்தார்! எத்தனை சிரமப்பட்டிருக்கிறார் பாருங்கள்! அந்த சிரமம் பிறர் படக்கூடாது என்றுதான் மதுராந்தகத்தில் பாடசாலையை நிறுவப் பண்ணி தர்க்கம் சொல்லிக் கொடுக்க வைத்தார்.

ராமானுஜருக்குத் திரும்பி வருவோம்... மாமாவான பெரிய திருமலை நம்பியிடத்திலே ராமாயணம் கேட்கணும் என்று ஆசைப்பட்டாரல்லவா? திருமலை ஏறிப் போய் அவரைப் பிரார்த்தித்தார்.

பெரிய திருமலை நம்பிகள் உடனே பிடிகொடுக்க வில்லை. 'இப்போ இல்லை; அப்புறமா வா...' என்று சொல்லி அனுப்பி விட்டார்! மீண்டும் அணுகியபோதும் அதே பதில். இப்படி 18 முறை அவரை அலைக்கழித்தார் நம்பிகள். கடைசியாக 'சரி இப்போது சொல்கிறேன்' என்று ஒப்புக் கொண்டார்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராமானுஜரின் பொறுமையைப் பாருங்கள்! ஓரிருமுறை கேட்டு மறுத்தாலே, 'சரி ஊர் உலகத்தில் இவருக்கு மட்டும்தானா ராமாயணம் தெரியும்?' என்று அலுத்துக் கொண்டு வேறு ஆசார்யரைத் தேடத் தோன்றும். ஆனால் ராமானுஜர் அப்படிச் செய்யவில்லை. அந்த ஆசார்யாரிடத்திலேதான் கேட்கணும் என்று காத்திருந்தார்.

பெரியவர்களும் பார்த்துத்தான் உபதேசம் பண்ணுவார்கள். 'சிந்தாமல் கொள்ளக்கூடிய கலமா? அதற்குத் தரிக்கும் சக்தி இருக்கிறதா?' என்று பார்த்துத்தான் உபதேசம் பண்ணுவார்கள். குரங்கு கையில் பூமாலை கொடுப்பது போல் காரியம் செய்ய மாட்டார்கள்.

நல்ல தாகம் இருக்கலாம்... அதற்காக மண்டை ஓட்டிலே தீர்த்தம் கொடுத்தால் குடிக்கப் பிடிக்குமா? இல்லையே! பசுவின் பாலைக் கறந்து நாய்த் தோலிலே வைத்தால் பருகப் பிடிக்குமா...! அப்படித்தான் கல்வியும், ஆசார்யர்கள் பாத்திரம் அறிந்துதான் புகட்டுவார்கள். நாற்சந்தியில் அவல் பொறியை அவிழ்த்துக் கொட்டியது போல் வித்யையை வீணடிக்க மாட்டார்கள்.

சாஸ்திரக்ஞர்கள் பேசும்போது, 'உத்தம சிஷ்யனின் குணம் என்ன...' என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

தைல புத்தி உடையவன் உத்தம சிஷ்யன் என்று சொல்வார்கள்.

ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தை வைத்துக்கொண்டு மேலே எண்ணெயை விட்டோமானால், தீர்த்தத்தின் மேலே அந்த எண்ணெய் அப்படியே பரவும். அந்த மாதிரி, கேட்ட விஷயத்தை நன்றாகப் புரிந்து கொண்டு, இதரர்களுக்கும் அதைச் சொல்லித் தெளிவிப்பான் அவன். அதைத்தான் தைல (எண்ணெய்) புத்தி என்பது.

இன்னொரு வகை உண்டு. கிரத புத்தி. நெய்யை வழித்து ஒரு பாத்திரத்தில் ஜலத்தில் போட்டோமானால்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த நெய் அப்படியே மிதக்கும்! அந்த மாதிரி ஆசார்யர் இடத்திலே கேட்ட விஷயத்தைத் தான் மட்டும் அனுபவிப்பவர் இந்த கிரதபுத்திக்காரர். யாராவது கேட்டால் ஒன்றும் சொல்லத் தெரியாது. உள்ளுக்குள்ளே ஏகப்பட்ட விஷயங்கள் ஓடும்! ஆனால் இதரர்களுக்குச் சொல்லித் தெளிவைப் பிறப்பிக்கும் படியான சக்தி இராது.

இன்னொரு புத்தி கம்பள புத்தி! கீழே துப்பட்டி, ஜமக்காளமெல்லாம் போட்டிருக்கிறது... காலட்சேப மெல்லாம் முடிந்த பிறகு ஒருத்தர் அதை எடுத்து மடித்து வைப்பார் அல்லவா...? அவர் வெறுமனே மடிக்காமல், தும்பு தூசி போகிறதுக்காக ஒரு உதறு உதறி மடிப்பார். கம்பள புத்திக்காரர் அப்படித்தான் - ஆசார்யரிடம் வரும்போது ஒன்றும் தெரியாமல் வருவார். திரும்பிப் போகும் போதும் உதறிய துப்பட்டி போல், ஒன்றும் ஒட்டிக் கொள்ளாமல் போய் விடுவார்!

ஒரு விஷயமும் புத்தியில் ஏறாமல் இருப்பவரும் உண்டு - களிமண் புத்திக்காரர்!

இந்த நால்வகையினருள் தைல புத்திக்காரர்களைக் கண்டால் ஆசார்யர்களுக்கு ரொம்பப் ப்ரியம். கன்றுக் குட்டியினிடத்திலே பசுவானது எப்படி வாத்ஸல்யத்தோடு அன்பைப் பொழிகிறதோ அந்த மாதிரி கங்கா பிரவாகமாகப் பொழிவார்கள்.

பதினெட்டு முறை ராமானுஜரை சோதித்த ஆசார்யர் அவர் பொறுமையைக் கண்டு அப்படித்தான் பொழிந்தார்.

இவ்வளவு பொறுமை இருந்தால்தான் ராமாயணம் புரியும்! திடீரென்று கேட்டுக் கொள்கிற விஷயமில்லை அது.

பதினெட்டு முறையும் பொறுமை காத்த ராமானுஜருக்கு பதினெட்டு வித அர்த்தங்களை ராமாயணத்துக்குச் சொன்னார் பெரிய திருமலை நம்பிகள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படிப்பட்ட ராமாயணத்தில் தன்னைத் தெளிவாக பரமாத்மா காட்டிக் கொடுத்திருக்கிறான். பரப்ரும்மமான தன்னை ஆச்ரயிக்கும்படி சொல்கிறான். 'தான் வெறும் மனிதனல்ல... மனித வேஷத்தில் வந்திருப்பவன்' என்று உணர்த்தினான்.

அவன் மனித வேஷம் போட்டிருந்ததால் அதற்கேற்ப நடிக்க வேண்டியதாய்ப் போயிற்று! தான் பரமாத்மா என்பது அவனுக்குத் தெரியாமல் போய் விடுமா? ஒரு நாடகத்தில் ஒரு புருஷன், ஸ்த்ரீ வேஷம் போட்டுக் கொள்கிறான் - ஸ்த்ரீயைப் போன்ற நடை, உடை, பாவனை அவனுக்கு... அதனால், தான் புருஷன் என்பது தெரியாமல் போய் விடுமா?! அந்த மாதிரி பரமாத்மாவும் உயர்ந்த ரீதியில் தான் பரமாத்மா என்பது தெரிந்தே மனித ரூபம் தரித்தான்.

'சரி, இந்தப் பரமாத்மாவை அடைவதற்கு என்ன வழி?' என்று கேட்டால், அதற்கும் அவன் செயலிலேயே பதில் கிடைக்கிறது.

பரமாத்மா எடுத்துக் கொண்ட காரியம் என்ன...? துஷ்ட: சந்துஷ்டியை - மகிழ்ச்சியைத் தந்த காரியம் - ஹிதம் (மனத்துக்கு இதம்) ஏற்படுத்திய காரியம் - அந்தக் காரியம்...? சரணாகத ரக்ஷணம் என்னும் காரியம்!

ராமானுஜ நூற்றந்தாதி என்று ஒரு நூல். உயர்ந்த பிரபன்ன காயத்ரி என்று அதற்குப் பெயர். திருவரங்கத்த முதனார் என்கிற ஆசார்யர், ராமானுஜர் வாழ்ந்த காலத்திலேயே இதை எழுதி, அவர் எதிரிலேயே வாசித்துக் காண்பித்தார். அவ்வளவு உயர்ந்தது!

ப்ரபன்னர்கள் நித்தியம் இதை ஒரு தடவை சொல்ல வேண்டும் என்று பெரியவர்கள் விதித்திருக்கிறார்கள். அந்த நூலிலே, 'படிகொண்ட சீர்த்தி ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்' என்று குறிப்பிட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்திப் பிரவாகம் ராமாயணம்! எங்கு தொட்டாலும் பக்தி இருக்கிறது; எங்கு தொட்டாலும் சரணாகதி இருக்கிறது.

அதனால்தான் பகவானே பக்தி, சரணாகதியின் மேன்மைகளைப் பேசினான். பவித்ரம் இதம் உத்தமம் என்றான் பகவத் கீதையில் பரமாத்மா!

'என்னுடைய திருவடியில் கைங்கர்யம் பண்ணணும் என்கிற எண்ணம் யாருக்கு இருக்கிறதோ... அவர்கள் என்னை அடையலாம். என்னை அடைய இரண்டு வழிகள் உண்டு.

'முதல் வழி: பக்தி மார்க்கம் – இது ரொம்ப உயர்ந்தது. உத்தமமானது, பவித்ரமானது. அப்படிப்பட்ட பக்தி யோகத்தால் நான் அடையத் தகுந்தவன்...

'அப்படியில்லையென்றால், 'பிரபத்யாவா' – சரணாகதியினாலே அடையத் தகுந்தவன் நான். இவை தவிர மற்றதனால் என்னை அடைய முடியாது!' என்று பகவானே பேசியிருக்கிறான்.

ஆகையினாலே, நம்மைப் போல நோற்ற நோன்பில்லாதவர்கள், சாமான்யர்களாய் இருக்கக்கூடியவர்களுக்காகவே பரமாத்மா சொன்னான்:

"என் திருவடியைப் பற்று... பற்றினால், பக்தி யோகம் கொடுக்கக்கூடிய சந்தோஷத்தை உனக்கு நான் கொடுப்பேன்..."

பக்தி, சரணாகதி தவிர, ஆராய்ந்து பார்த்தால் இன்னொன்றும் இருக்கிறது ராமாயணத்தில்.

அதுதான் புருஷகாரம். புருஷகாரம் என்றால்...? சிபாரிசு! மஹாலக்ஷ்மி நமக்காக பகவானிடத்திலே பரிந்து பேசுகிறாள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

37

மஹாலக்ஷ்மி, பகவானிடத்திலே நமக்காக சிபாரிசு செய்வதனாலே, அவள் சரணார விந்தத்தைப் பற்றி, அதன் மூலம் நாம் மஹா விஷ்ணுவைப் பற்ற வேண்டும். லக்ஷ்மி இல்லாமல் நாராயணன் இல்லை. இவர்களை ரொம்ப சூட்சுமமான 'இரட்டை' என்று சொல்லுகின்றன உயர்நூல்கள். ஆதியிலிருந்தே அப்படித்தான் இருந்து வருகிறது. லக்ஷ்மி நாராயண தத்துவம். ஆதலால், ஒன்றை இட்டே ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒன்றின் பெருமை ஒன்றின் இடத்திலே உள்ளது. லக்ஷ்மியின் பெருமை நாராயணனிடத்திலும் நாராயணனின் பெருமை லக்ஷ்மியினிடத்திலும் உள்ளது.

- இரண்டும் சேர்ந்திருக்கும்படியானதைத் தான் நாம் வரிக்க வேண்டும். ஸ்ரீ சூக்தம் இருக்கிறது. - லக்ஷ்மியைக் குறித்த சூக்தம். ஆனால் அதில் உள்ள பிரார்த்தனை யாரிடத்திலே செய்யப்படுகிறது என்று பார்க்க வேண்டும்...

'ஹே ஜாதவேதா, மஹாவிஷ்ணு! உன்னுடைய தர்மபத்னியான மஹாலக்ஷ்மியை எப்போதும் என் னிடத்தில் இருக்கும்படியாக நீ பண்ணு...' ஸ்ரீ சூக்தம்தான் இது! பிரார்த்தனை மகாவிஷ்ணுவினிடத்தில் இருக்கிறது. அவளை நம்முடன் இருக்கப் பண்ண வேண்டுமானால் அவனுடைய அனுமதி வேண்டுமில்லையா...? அதனால் தான் ஜாதவேதா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நன்றாக கவனிக்க வேண்டும். இவனுடைய பெருமையை அங்கே சொல்ல வேண்டும். அங்கே இருக்கிற பெருமையை இவனிடத்திலே சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் பெருமை கிடைக்கும் என்கிறார்கள்...

– இது ஏதோ அங்கே உள்ளதை இங்கே சொல்லி, இங்கே உள்ளதை அங்கே சொல்லி கலகம் விளைவிக்கிற விஷயமில்லை. ரொம்ப உத்தமமான நிலை.

இந்தப் பெருமையை அங்கேயும் அந்தப் பெருமையை இங்கேயும் எடுத்துச் சொன்னவர் யாரென்றால், ஆஞ்சநேயர். ஆசார்ய ஸ்தானத்தை வகிக்கிறார் இந்த ஆஞ்சநேயர்! ஏனென்றால், அந்த ஆஞ்சநேயரிடத்தில்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூத்யம் என்கிற தூது போகும் கலையைக் கற்றுக் கொண்டானாம் ராமன். அவ்வளவு உயர்ந்த முறையிலே, தூது போதல் என்பதை நடத்திக் காட்டினார் ஆஞ்சநேயர்!

ராமன் ஏன் ஆஞ்சநேயரிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு கேள்வி... அடுத்த அவதாரத்தில் - கிருஷ்ணாவதாரத்தில் - தூது போக வேண்டியிருந்த தனாலே... அதைக் கற்றனாம் பகவான்

ஆஞ்சநேயரின் தூது பூரண பலனைக் கொடுத்தது. ஆனால் கிருஷ்ணனின் தூது பூரண பலனைக் கொடுக்கவில்லை! பகவான் காரியம் கூடத் தப்பிப் போகலாம் - ஆனால் ஆசார்யர்கள் பண்ணக் கூடிய காரியம் ஒரு நாளும் கெடாது... என்பதை இந்த இரண்டு இதிகாசங்களும் காட்டிக் கொடுக்கின்றன.

இவ்வாறு ஆஞ்சநேயரின் ஆசார்யஸ்தானத்திலே இருப்பதை சங்கல்ப சூர்யோதயம் என்கிற நூலில் சுவாமி தேசிகள் அதி ஆச்சர்யமாக விளக்கிக் காட்டுகிறார்.

அப்படிப்பட்ட ஏற்றமுடைய ஆஞ்சநேயன், ராமனுடைய ஏற்றங்களையெல்லாம் சீதையிடம் எடுத்துச் சொன்னான்:

"ராமபிரானுக்குத் தூக்கமே வராது. எப்போதாவது ஒரு சமயம், அவனையுமறியாமல் அப்படி கண்ணை இழுக்கும்... உடனே விழித்துக்கொள்வான். என்ன சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான்...? 'சீதா சீதா' என்று அழைத்தபடியே எழுந்திருப்பான். அம்மா, எப்போதும் உங்களுடைய நினைவாகவே இருக்கிறான். அதைத் தவிர வேறொன்றுமில்லை..." என்று ராமனுடைய பெருமைகளை அங்கே போய்ச் சொன்னான்.

சீதையினுடைய பெருமை மொத்தமும் இங்கே வந்து சொன்னான். அதனால் அவனுக்கு என்ன பலன்...? இப்படி உத்தமமான முறையில் இரண்டு பேர் மனத்தையும் சேர்த்து வைத்தானே... அந்த ஆஞ்சநேயனுக்குப் பெரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெகுமானம் கிடைத்தது. அப்படியே எம்பெருமான் ராமன் கட்டி அணைத்துக்கொண்டு ஆனந்த பாஷ்பத்தினாலே ஆஞ்சநேயனை மஞ்சனமாட்டி விட்டான். உயர்ந்த ரீதியிலே அவனை அப்படியே குளிப்பாட்டி விட்டான். வேறு யாருக்கு இதைப் போன்ற இன்பம் கிடைக்கும்...?

கடைசியில் எல்லோரும் கிளம்பிப் போகும்போது, 'வைகுண்டத்துக்கு வருகிறாயா...?' என்று ராமன் ஆஞ்சநேயனிடம் கேட்டானாம்.

'அங்கே ராமாயண பிரவசனம் உண்டா?' என்று கேட்டாராம் ஆஞ்சநேயர்!

'அங்கே 'சுவாமியாக பகவான் உட்கார்ந்திருப்பான் - மஹாவிஷ்ணு - அதைத்தான் சேவிக்க வேண்டும்' என்றார்கள்.

அந்த எம்பெருமான் ராமனைத் தவிர மற்றொன்றை நினையாத, அந்த வடிவழகைத் தவிர மற்றொன்றைப் பார்க்காத உத்தமன் ஆஞ்சநேயன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த இஷ்ட தெய்வ ஆராதனையின் மேன்மை குறித்து வேதமே சொல்கிறது.

ரொம்ப ரொம்ப பூர்வ பரம்பரையிலேயிருந்து வரக்கூடிய விக்ரஹ ஆராதனை ஒரு கிரஹத்திலே நடக்கிறது. பூஜை பண்ணுகிறார் ஒருத்தர். ஆனால் அங்கே ஏகமாய் தாரித்ரியம்! சொல்லத்தரமன்று அந்த ஏழைமை. ஒவ்வொரு நாளும் நடப்பதே ரொம்ப சிரமமாக இருக்கிறது.

ஒரு நாள் அந்த கிரஹத்துக்கு ஒருத்தர் வந்தார். "இந்த விக்ரஹம் உங்களுக்கு எதற்கு... இதை எடுத்து வீதியிலே போட்டுவிடும். இதைப் பூஜை பண்ணுவதால்தான் உங்களுக்கு தாரித்ரியம் வடியாமல் இருக்கிறது. நான் ஒரு விக்கிரகம் கொடுக்கிறேன். அதை வைத்துக் கொண்டு பூஜை பண்ணுங்கள்..." என்று பழைய விக்ரகங்களை தூர எடுத்து வைக்கச் சொல்லிவிட்டார். ஒரு புது விக்ரஹத்தையும் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்!

புதிதாக வந்த மூர்த்தியை வைத்துக்கொண்டு பூஜை பண்ண ஆரம்பித்தார் அந்த கிரஹஸ்தர். இன்னும் தாரித்ரியம் அதிகமாய்ப் போய்விட்டதாம்!

'ஏன் அப்படி ஆயிற்று...?' என்று கதை கேட்கிற நமக்கு ஒரு சந்தேகம் உதிக்கிறது.

புதிதாக வந்திருக்கும் தெய்வம் ஒரு நல்ல பயனைக் கொடுக்கக் கூடாதோ...? அது கொடுக்க மாட்டேன் என்கிறது! ஏன் கொடுக்கவில்லை...?

"தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா என்று தலைமுறை தலமுறையாக வந்த மூர்த்திக்கே இந்த கிரகத்தில் கதியில்லை; தூக்கித் தெருவிலே போட்டுவிட்டான்! நாளைக்கு நம்மையும் தூக்கிப்போடும்படி யாராவது சொன்னால், போட்டுத் தானே விடுவான்! ஆகையினால் இவனுக்கு ஸ்திரமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு பிரக்ஞை இல்லை - தன்னுடைய பாப விமோசனத்துக்காக சிரமப்படுகிறோம் என்கிற ஞானமில்லை. அதனால் தான் நம்முடைய சக்தியை இவன் அளவிடுகிறான். தெய்வத்துக்கு சக்தி இல்லை என்று அவன் நினைக்கலாமா...' - புதிய தெய்வம் இப்படி எண்ணமிட்டே முடிவுக்கு வந்ததாம்!

ஹ்ருதயத்திலே ராமனைத் தவிர வேறு யாரையும் நினையாத ஆஞ்சநேயனுக்கு, ஏற்றமுடைய சிறந்த மஹாலக்ஷ்மியின் அனுக்கிரஹம் ஏற்பட்டது. அதே மாதிரி ராமனுடைய அனுக்கிரஹமும் ஏற்பட்டது.

ஆனால், ராமனையும் சீதையையும் பிரித்தவளான சூர்ப்பனகை, மூக்கறுபட்டு காதறுபட்டு பங்கப்பட்டுப் போனாள். ராவணனோ, ராமனை விட்டு சீதையைப் பற்றினான்; கிளையோடு மாண்டான்!

இரண்டு பேரையும் (ராமன் - சீதை) சேர்த்து வைத்து வணங்கினான் விபீஷணன். ராஜ்யத்தோடும் சகல போக்யத்தோடும் விளங்கினான்.

ஆகையால், ஒரு நாளும் இந்தத் தம்பதிகளை நாம் பிரிக்கக்கூடாது.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர் சொல்லுவார்:

நமக்கு ஆசார்யன், அவருக்கு ஆசார்யன், அவருக்கு ஆசார்யன் என்று இப்படி ஆசார்ய பரம்பரையை நாம் வகுத்துக்கொண்டே போனோமானால் லக்ஷ்மியோடு கூடிய நாராயணனின் திருவடிகளில் போய் அது முடியும். அவனைத்தான் நாம் பற்ற வேண்டும் என்கிற தர்மத்தை வால்மீகி ராமாயணம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இரட்டை என்றாலே ரொம்பவும் சிறப்பு வாய்ந்தது. மந்த்ரத்திலே கூட இரட்டை மந்த்ரம் என்று ஒன்று உண்டு. த்வய மந்த்ரம் என்று பெயர். வைகுண்டத்திலேயே அதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவான் உபதேசம் பண்ணினார் - மஹாலக்ஷ்மிக்கே உபதேசம் பண்ணினார். மஹாலக்ஷ்மி அதை விஷ்வக் சேனருக்கு உபதேசம் பண்ணினார்.

விஷ்வக்சேனர்தான் பூலோகத்தில் நம்மாழ்வாராய்ப் பிறந்தார். அவர் திருவாய்மொழியிலே இந்த திவ்ய மந்த்ரத்தைப் பூரணமாய் விவரித்தார்.

ராமாயணம் மொத்தமும் த்வய விவரணம்தான். இது சீதையினுடைய சரித்திரம் - உயர்ந்த சரித்திரம் என்று வால்மீகி கொண்டாடியிருக்கிறார். அதிலே பகவானுக்குக் கூட கொஞ்சம் வருத்தம் என்று வேடிக்கையாய்ச் சொல்வார்கள்.

'மரமே கண்டாயா? மட்டையே கண்டாயா? ஹா சீதே! ஹே சீதே! என்று தேடி அலைந்தோமே - நாமல்லவா அலைந்தோம். இதை சீதை சரித்திரம் என்று வால்மீகி எழுதிவிட்டுப் போய்விட்டாரே! எதனால் இருக்கும்...?' என்று யோசனை பண்ணினானாம் பகவான்.

நாமும் யோசிப்போம் - அடுத்த அத்தியாயம் வரைக்கும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

38

போன அத்தியாயத்திலே ராமனை யோசனையிலே விட்டு விட்டு வந்தோம்! இப்படிக்கூட யோசித்தானாம் ஸ்ரீராமன்: 'சீதை பத்து மாதம் சிறையில் இருந்தாளே... அதனால்தான் வால்மீகி இதை (ராமாயணத்தை) அவள் சரித்திரம் என்று கொண்டாடினானோ...? சிறையிருந்ததால் ஏற்பட்ட ஏற்றமோ இது...? சிறையிருந்ததால் ஏற்பட்ட ஏற்றம்தான் என்பது சத்தியமானால், அடுத்த அவதாரத்தில் நாம் சிறையிலேயே பிறக்க வேண்டியதுதான்...'

இதையொட்டியே பகவான், கிருஷ்ணாவதாரத்திலே சிறைச்சாலையிலேயே பிறந்தான். அந்த அவதாரத்தின் பெருமையெல்லாம் யாருக்கு...? அவனுக்குத்தான்!

ராமாயணத்தில், சிறையிருந்தவளுடைய ஏற்றம் சொல்லப்படுகிறது. மஹாபாரதத்தில் தூது போனவனின் ஏற்றம் சொல்லப்படுகிறது. அந்த அவதாரத்தில் (பாரதம்) பரமாத்மா ஈடில்லாத தூதுவனாய் விளங்கினான். இப்படி இரண்டு அவதாரங்களில் பகவான் நமக்கு தர்மத்தைக் காட்டியிருக்கிறான். ஆகையினால் புருஷகாரம் என்று சொன்னேனே... சிபாரிசு அதை மனத்தில்கொண்டு, நாமும் மஹாலக்ஷ்மியினுடைய முன்னிலையில் பகவானிடத்திலே சரணாகதி பண்ணணும்.

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்பவை சதுர்வித புருஷார்த்தங்கள் - அதாவது மனிதர்கள் ஏற்றம் அடைவதற்குப் பெற வேண்டிய நான்கு விதமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருஷார்த்தங்கள். இவற்றைத்தான் ராமாயணத்திலே அவதரித்தே விளக்கினான் பகவான்.

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்கிற நான்கையும், ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்கனர்களான நான்கு சகோதரர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

தர்மம் - பகவான் ராமன் - அர்த்தமாய் இருக்கக்கூடியவன் இளையபெருமாள் லக்ஷ்மணன். காமமாய் இருக்கக்கூடியவன் சத்ருக்னன்; மோக்ஷமாய் இருக்கக்கூடியவன் பரதன். இப்படி நான்குவித புருஷார்த்தங்களை நான்கு பேர் காட்டிக் கொடுத்தார்கள்.

இவற்றுள் மூத்த சகோதரனான 'தர்மத்துக்கு'க் கெடுதல் ஏற்பட்டால், அர்த்தமும் இல்லை. காமமும் இல்லை மோக்ஷமும் இல்லை...! அர்த்த, காம, மோக்ஷம் சித்திக்க வேண்டுமென்றால் தர்மம் நல்ல முறையிலே இருக்க வேண்டும். தர்மம் கெட்டது எனில் மற்ற எதுவுமே பயன் தராது.

இதில் அர்த்தம் - அதாவது பொருள் - இருக்கிறதே... அது தர்மத்தை அண்டியே இருக்க வேண்டும். காமம் இருக்கிறதே... ஆசை அல்லது... இச்சை... இது மோக்ஷத்தையொட்டியே இருக்க வேண்டும். ராமா யணத்தில் அப்படித்தான் இருக்கிறது என்பது கவனித்துப் பார்த்தால் புரியும்.

அர்த்தமான இளைய பெருமாள் லக்ஷ்மணன் எப்போதுமே ராமனை - தர்மத்தைவிட்டுப் பிரியாமலே இருந்தான். தர்ம வழியில்தான் பொருள் ஈட்டப்பட வேண்டும். தர்ம வழியில்தான் அது செலவழிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது இது.

பரதனோடு கூடவே எப்போதும் இருந்தான் சத்ருக்னன் - காமம் அல்லது இச்சை மோக்ஷத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யொட்டியே இருக்க வேணும் என்பதைக் காட்டும் விதமாக...

சத்ருக்னன் குற்றமற்றவன். ராமபக்தி என்கிற குற்றத்தைச் செய்யாதவன்!



'ராம பக்தி என்பது குற்றமா...? அதெப்படி...?' என்று எல்லோருக்குமே சந்தேகம் வரும். ராம பக்தியோடு நின்றால் அது குற்றம். ராமனுடைய சரணாரவிந்தத்திலே பக்தியுடையவர்களின் திருவடியில் பக்தி கொண்டவன் அவன். இது பாகவத பக்தி எனப்படும் - பரதனுக்கு ராமன் அல்லால் தெய்வம் இல்லை. அப்படிப்பட்ட பரதனை சத்ருக்னன் ஆச்ரயித்தான். ஆகையினால் இந்த பக்தி உயர்ந்தது.

பாகவதோத்தமர்களிடத்திலே அன்புடன் இருப்பது என்பது ரொம்ப கஷ்டம். சத்ருக்னாழ்வார் காட்டிய அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரம நெறியைத்தான் மதுரகவியாழ்வாரும் பின்னாளில் காட்டி அருளினார்.

நம்மாழ்வாருடைய திருவடியைப் பற்றினார் மதுரகவி ஆழ்வார். துவாபர யுகத்திலே இருந்தவர் இந்த மதுரகவி ஆழ்வார். அப்போது பகவான் கிருஷ்ணன் துவாரகையில் இருந்தான். ஆனால் இவர் போய் ஒருநாள்கூட கிருஷ்ணனைச் சேவிக்கவில்லை. கலியுகத்திலே நம்மாழ்வார் அவதரித்தபோதோ அந்த நம்மாழ்வாரின் திருவடியை இவர் போய் பற்றினார்! அவரைத் தவிர வேறொரு தெய்வம் தனக்கு இல்லை என்று சொல்லி விட்டார்.

மதுரகவி ஆழ்வார் காட்டிய நெறி, சத்ருக்கனாழ்வார் காட்டிய அதே நெறிதான்.

அயோத்தி பக்கத்திலே சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்தார் மதுரகவி ஆழ்வார். அப்போது தென் திக்கிலிருந்து ஒரு ஜோதி தெரிந்தது. அதைப் பார்த்துக் கொண்டே மதுரகவி ஆழ்வார் தென் திக்கை நோக்கி வந்தார். அது திருக்குருகூர் என்கிற இடத்திலே கொண்டு சேர்த்தது. அங்கே புளியமரப் பொந்தில் ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். அதி தேஜஸ்வியாகக் கண்ணை மூடிக் கொண்டு தியானத்திலிருந்தார். அங்கே போய்ச் சேர்ந்த மதுரகவி ஆழ்வார், அவரிடம் பேசினால் காதிலே விழுமோ, விழாதோ என்று சந்தேகப்பட்டு, ஒரு கல்லை எடுத்துக் கீழே போட்டார். அது 'டக்'கென்று கீழே விழுந்ததும் அந்த தேஜஸ்வி கண்ணைத் திறந்து பார்த்தார். உடனே ஒரு கேள்வியைக் கேட்டார் ஆழ்வார்.

"செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்...?"

இதற்குப் பதிலாக என்ன சொன்னார் தெரியுமா...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!" என்றார் அந்தப் பெரியவர்!

இதில் ஓர் அர்த்தம் பொதிந்து கிடக்கிறது.

'செத்தது' என்றால் சரீரம். 'சிறியது' என்றால் ஆத்மா. அதாவது 'சரீரத்தினுள்ளே இருக்கிற ஆத்மா எதைத் தின்று எங்கே கிடக்கும்...?' என்று கேள்வி.

இதற்குச் சொல்லப்பட்ட பதிலுக்கு என்ன அர்த்தம் என்று கேட்டோமானால், 'ஆசார்ய அனுக்கிரஹம் ஏற்படாத வரையில், ஆத்மாவானது தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டு - அதாவது மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து அல்லலுறும்...' (அத்தைத் தின்று அங்கே கிடக்கும்) என்று அர்த்தம்.

சில விஷயங்களில் எல்லா ஆசார்யர்களும் ஒன்றே போல் பேசுவதை நாம் கவனிக்க வேண்டும். ஆதிசங்கரரும் இதையேதான் சொல்கிறார்: 'எவனொருவன் வாழ்ந்து கொண்டிருக்கிறபோதே தன் சரீரத்தைப் பிணமாகக் கருதுகிறானோ, அவன்தான் மோக்ஷத்துக்கு அதிகாரி. சரீரத்துக்குப் பண்ணக்கூடிய அலங்காரமெல்லாம் பிணத்துக்குப் பண்ணக்கூடிய அலங்காரம்தான். இந்த சரீரம் அழியக் கூடியது; அதனால்தான் இதற்குப் பண்ணக்கூடிய அலங்காரமும் அழியும். ஆத்மாவுக்குப் பண்ணக்கூடிய அலங்காரத்துக்கு பிரும்மாலங்காரம் என்று பெயர். அது அழியவே அழியாது.

புளியமரப் பொந்திலிருந்த மகான் இந்தப் பேருண்மையை சூசகமாய்ச் சொன்னதும் மதுரகவி யாழ்வார் அவரையே தமக்கு தெய்வம் என்று கொண்டு விட்டார். 'இன்றைய தினம் அன்பனானேன்' என்று பதினோரு பாசுரங்களில் அவ்வனுபவத்தைப் பாடினார். நாலாயிர திவ்யப்ரபந்தங்களை ஒரு தட்டிலும் அந்தப் பதினோரு பாசுரங்களை மட்டும் இன்னொரு தட்டிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடை போட்டோமானால்... இந்தப் பதினொன்றே பளுவுடையதாக இருக்கும்! ஏனெனில் அது பகவத் பிரபாவம்; இது பாகவத (குரு) பிரபாவம்.

பாகவத பிரபாவத்தைத்தான் சத்ருக்னன் காட்டினான். அவன் காட்டிய பரமநெறிதான் மதுரகவி யாழ்வாருக்கு மூலமாக அமைந்தது.

சதுர்வித புருஷார்த்தங்கள் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) ராமாயணத்தில் நான்கு திவ்ய புருஷர்கள் மூலமாகத் தெரிகிறது என்று சொன்னேன். பகவானே நான்கு வித புருஷார்த்தங்களுக்கும் உறைவிடமானவன். பகவான், ஆதிசேஷன், சுதர்ஸனம் (சக்ரம்), பாஞ்சஜன்யம் (சங்கு) என நான்கும் இந்த நான்குவித அர்த்தம் காட்டுபவை.

ராமாயணத்திலே தர்மத்தை பகவான் உணர்த்திய தாகச் சொன்னேன். மூன்று வித தர்மங்கள் உண்டு என்கின்றனர் பெரியோர்.

சேஷத்வம், பாரதந்த்ரியம், பாரதந்த்ரிய காஷ்ட என்று மூன்று விதமாக இந்த தர்மங்களைச் சொல்வர்.

சேஷத்வம் என்றால் 'கட்டிப் பொன்போல...' என்று பொருள்.

இளையபெருமாள் லக்ஷ்மணன் செய்த கைங்கர்யம் சேஷத்வம் போன்றது - அப்படியே கடினம்! இரவு பகல் கண்விழித்து, கூட இருந்தபடியே கைங்கர்யம் செய்வ தென்பது ரொம்ப கஷ்டமான காரியம். அதை லக்ஷ்மணன் செய்தான். எல்லோராலேயும் செய்யக்கூடியது அன்று அது!

'இமைத்திலன் நயனம் என்றான்...' என்று லக்ஷ்மணன் குறித்துச் சொல்லப்படுகிறது. எம்பெருமானும் சீதா பிராட்டியும் வனவாசத்தின் போது கண் துயில்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்போது வெளியிலே நின்று இமைக்காமல் காவல் காத்தானே... ராத்திரி பகல் வித்தியாசமில்லாமல் நின்று கண்ணை இரப்பை காப்பதுபோல் காத்தானே! கூடவே இருந்தானே...!

இந்த வனவாசத்தின்போதுதான் தசரதன் மாண்ட செய்தி பரதன் மூலமாக ராமனுக்கு எட்டுகிறது. அப்போது அச்செய்தியை ராமபிரான் லக்ஷ்மணனுக்கு எப்படி எடுத்துச் சொன்னான் என்பதைப் பார்க்கணும். அந்த வார்த்தைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

"ஹே லக்ஷ்மணா! நீ உன் தந்தையை இழந்தாயடா!" என்றான்.

அடியேனுக்கு ஒரு கோணலான புத்தி! ராமன் பேரிலேயும் தோஷம் சொல்ல வேண்டும் என்கிற ஆசை! அதனாலே இந்த இடத்தில் கோணலாக வியாக்யானம் பண்ணிக் காட்டுகிறேன்.

'லக்ஷ்மணா! உன் தந்தையை நீ இழந்தாயடா!' என்று ராமன் சொன்னதிலிருந்து என்ன தெரிகிறது...? அப்பா தன்னைக் காட்டுக்குப் போகச் சொன்னது குறித்து ராமனுக்கு ரொம்ப வருத்தம். வெறுப்பே வந்து விட்டது. அதனால் தசரதனைத் தந்தையாக ராமன் பாவிக்க வில்லை. 'லக்ஷ்மணா! உங்க அப்பா போய்விட்டார்' என்று சொன்ன வார்த்தை...'

-இப்படி அடியேனுடைய புத்தி நினைக்கிறது!

ஆனால், ஆசார்யர்களும் மகான்களும் தங்கள் வியாக்யானத்தில் எம்பெருமானுடைய புஷ்பம் போன்ற திருவுள்ளத்தை நமக்குக் காட்டுகிறார்கள்.

என்ன வியாக்யானம் அது...? எதை உத்தேசித்து ஸ்ரீராமன் அப்படிப் பேசினான்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39

"லக்ஷ்மணா! உன் தந்தையை இழந்தாயடா!" என்று ராமன் ஏன் 'பிரித்துப்' பேசுகிறான்...?

ஆசார்யர்களும் மஹான்களும் இந்தப் பேச்சுக்குத் தரும் விளக்கத்தைப் பாருங்கள்:

ராமன் சொல்கிறானாம் - "லக்ஷ்மணா, உன்னையும் அப்பா சிருஷ்டி பண்ணினார். நானும் அவருக்குப் பிறந்தேன். என்னோடு கூட வனவாசம் வந்திருக்கும் நீ எல்லா கைங்கர்யங்களையும் பண்ணிக் கொடுக்கிறாய், எப்படிப் பண்ணிக் கொடுக்கிறாய்...? ஒரு தந்தை தன் தனயனுக்கு என்னென்ன வேண்டும் என்று பார்த்துப் பார்த்து செய்வாரோ... அதைப் போல் செய்கிறாய். அதனால், நீ இருப்பதால், தந்தை இல்லாத குறையே எனக்குத் தெரியாது. இப்போது அப்பா மறைவினாலே உனக்குத்தானடா தந்தை இல்லாமல் போனார்..." என்று சொல்கிறானாம்.

எத்தனை உயர்ந்த வாக்கியம் அது! சகோதர வாத்ஸல்யமும் அதில் தெரிகிறது, தந்தையினிடத்தில் பகவான் கொண்ட அன்பும் தெரிகிறது.

"ஊரை விட்டு காட்டுக்குப் போனேன் என்கிற செய்தியைக் கேட்கத் தாங்காமலே பிராணனை விட்டாயே... நீ உயிர் நீத்தது தெரிந்த பின்னரும் நான் உயிரோடு இருக்கிறேனே! நீ என்னிடத்தில் வைத்த அன்பு எங்கே? நான் உன்னிடம் காட்டும் அன்பு எங்கே...!' என்று ராமபிரான் வருத்தப்படுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'புத்ரன் தன்னைவிட்டுப் போனான் என்றால், பதினாலு ஆண்டுகாலம் சென்று திரும்பி வந்துவிடப் போகிறான். ஆனால் கொஞ்சம் கூடப் பிரிவாற்றாமை தாங்காமல் பிராணனை விடக்கூடிய தந்தை எத்தனை புத்ரர்களுக்கு உண்டு! எனக்குக் கிடைத்தது மாதிரி தந்தை யாருக்குக் கிடைப்பார்!' என்று பேசுகிறான்.

அந்த ஒப்பற்ற தந்தைக்கும் நிகரானவன் லக்ஷ்மணன் என்று லக்ஷ்மணன் செய்த காரியத்தைக் கொண்டாடு கிறான்.

ராமனைப் பிரியாமல், கூடவே இருந்து விட்டதால் அபக்யாதியே ஏற்படலை லக்ஷ்மணனுக்கு. பரதன் அப்படி இல்லை. கொஞ்ச காலம் ராமனைப் பிரிந்து கேகய நாட்டுக்குப் போனான். அவன் மாமா யுதாஜித் என்பவர் வந்து, அவனை அழைத்துப் போனார். கொஞ்சம் பிரிந்த பரதனுக்குத் தீராப் பழி ஏற்பட்டு விட்டது. அந்த சிரமத்தை அனுபவித்தான் பரதன்.

இந்த விஷயத்தை நாம் கிரஹிக்கணும் - லக்ஷ்மணன் பிரியாமல் இருந்ததால் அபகீர்த்தி இல்லை; பரதன் சிறிது காலமே பிரிந்திருந்தாலும் தீராத பழி! அதனால் இளையபெருமாள் (லக்ஷ்மணன்) செய்த காரியம் இருக்கிறதே - மிக உயர்ந்தது; எல்லோராலும் செய்ய முடியாதது. - சேஷத்துவம்.

அடுத்தது பாரதந்த்ரியம். அது இன்னமும் கஷ்டம்! இட்ட வழக்காய் இருத்தல் என்பது பாரதந்த்ரியம். அசித் - அசையாத பொருளாய், அசேதன - அறிவற்ற பொருள் போல இருக்க வேண்டும்!

ஒரு புஷ்ப மாலை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம் - அதை அடியேன் எடுத்து இப்படி வைக்கிறேன். "நான் இங்கே இருக்க மாட்டேன். அங்கே போகிறேன்..." என்று அந்த புஷ்ப மாலை சொல்லுமா...? வைத்த இடத்திலேயே அல்லவா இருக்கும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்தமாநிதி என்று ஒரு பெருமாளுக்குப் பெயர். திருக்குருகூரில் - ஆழ்வார்திருநகரியில் எழுந்தருளியிருக்கும் பெருமாள். ஏன் மாநிதி அவன்...? அவன் வைக்கப்பட்ட இடம் அது. அந்த இடத்தை விட்டுப் போவானோ அவன்? எப்போது போனாலும் அவனைச் சேவிக்கலாம். அந்த நிதியைப் பார்க்கலாம். 'என்றைக்கு வேண்டுமானாலும் வா என்னைப் பார்க்க' என்கிறான்.

'இட்ட வழக்காய் இருத்தல்' என்பதை சம்புராமாயணத்தில் போஜராஜா ரொம்ப அழகாய்ச் சொல்கிறார். ராமபிரான் பரதனுக்கு எடுத்துச் சொல்வதைச் சொல்கிறார் - "இங்கே உன்னாலும் என்னாலும் காப்பாற்றப்பட வேண்டியது தந்தையினுடைய வார்த்தை" என்று சொல்கிறார்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரதன் என்ன சொல்கிறான்...? 'ஊருக்குத் திரும்பி விடுங்கள்' என்கிறான். 'அப்பாவின் ஆக்ஞை. அதை மீறி வரமாட்டேன்' என்கிறான் ராமன்.

"அப்பா சொன்னது இருக்கட்டும். நீதான் வந்து ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்... வந்து விடு!" என்று பரதன் அழைக்கிறான்.

அப்போது பரமாத்மா சொல்கிறான், பரதனுடைய வார்த்தையை விட தசரதனுடைய வார்த்தை முக்கியம் என்று.

"எனக்கு மட்டுமல்ல பரதா! உனக்கும் அந்த வார்த்தை - தந்தை சொன்ன வார்த்தை முக்கியம். என்னை அப்பா பதினான்கு வருடம் காட்டுக்குப் போகச் சொன்னார். உன்னைப் பதினான்கு வருடம் பரிபாலனம் பண்ணச் சொன்னார். அவர் இருந்து, 'ராமா, நீ போக வேண்டாம்; திரும்பி வந்துவிடு' என்றால் வரலாம். ஆனால் இப்போதைய நிலையில், பதினான்கு ஆண்டுகளுக்கு நீயும் எனக்கு ராஜ்யத்தைக் கொடுக்க முடியாது. நானும் அதை ஏற்க முடியாது." - இப்படி விசேஷமாக தர்மத்தை பரதனுக்கு எடுத்துச் சொன்னான் ராமன். இருக்கும் நிலையிலிருந்து மாறக் கூடாது என்கிற தர்மம்.

ராமாயணத்தில் தர்மத்தைக் குறித்து வரும் இந்த சர்க்கத்துக்கு ராமகீதா என்றே பெயர். எப்படி பகவத்கீதை சொல்லப்பட்டதோ, அந்த மாதிரி, "அப்பா பரதா! நீ கூப்பிட்டாய் என்று நான் வந்தால் அது தர்மமாகுமா? ராஜ்யத்தில் காமம் கொண்டு வந்தேனானால் நியாயமாகுமா? சிந்தனை பண்ணிப்பார்..." என்கிறார் பகவான்.

இந்த ராம கீதாவைத்தான் நாம் மறக்காமல் ஹ்ருதயத்தில் எழுதிக் கொள்ள வேண்டும். அதிலே அழகாகச் சொல்கிறார்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சமுத்திரத்தில் அலை அடித்துக் கொண்டே யிருக்கிறது. அந்த அலையில் ஒரு மரக்கட்டை, இந்த திக்கிலிருந்து அடித்துக் கொண்டு வரப்படுகிறது. இன்னொரு மரக்கட்டை மற்றொரு திக்கிலிருந்து வருகிறது. அந்த இரண்டும் அலைகளால் ஒன்று சேர்க்கப்பட்டு சமுத்திர ஜலத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு நாள் பெரிய அலை ஒன்று வருகிறது... அது வீசினதுமே இந்தக் கட்டை அப்படிப் போய்விடுகிறது; அந்தக் கட்டை இன்னொருபுறம் போய்விடுகிறது! இது போன இடம் தெரியலை; அது போன இடமும் தெரியவில்லை. அந்த மாதிரிதான் மனைவியோ, மக்களோ, புத்ரர்களோ... வீடோ, பொருளோ...

'அப்படியானால் கணவன் - மனைவி என்கிற உறவுக்கு என்ன அர்த்தம்?' என்று கேள்வி வரும். இந்த சம்ஸாரம் என்கிற ஜலதியில் புண்யம், பாவம் என்கிற அலைகள் ஓயாமல் இருந்து கொண்டேயிருக்கும். அதிலே இரண்டு ஆத்மாக்கள், கணவன் - மனைவி என்கிற உறவிலே அந்த வினைப் பயனை அனுபவிப்பதற்காக, அந்த கர்மாவை அனுபவிப்பதற்காக சேர்த்து வைக்கப்படுகிறது. ஒருநாள், காலம் என்கிற அலை, ம்ருத்யு - வந்து இரண்டையும் பிரிக்கிறது. யாருக்கு யார் மனைவி? யார் பர்த்தா?! யார் தந்தை? யார் பிள்ளை?... உத்தமமான அவனல்லவோ சர்வலோகப் பிதா. அவனல்லவோ சர்வ லோக பர்த்தா! கர்மாதீனமாக ஏற்பட்டிருக்கிற இந்த விஷயத்தை நாம் சாஸ்வதமாக நினைக்கலாமா...? எனவே சஞ்சலப்படாதே. தர்மத்துக்கு நாம் தலைவணங்குவோம். நீ சொல்கிறபடி நான் வந்து விட்டால் தர்மத்தையெல்லாம் குலைத்தவனாகி விடுவேன்" என்றான் பரமாத்மா.

ஜாபாலி என்றொரு மஹரிஷி. அவர் கோணலாக, அதர்மமாகப் பேசினார். என்ன பேசினார் என்றால், பூர்வ காலத்திலிருந்த ஒரு மதம் குறித்து. அதற்கு லோகாயதிக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதம் என்று பெயர் - சார்வாக மதம் என்றும் சொல்வார்கள்.

பேச்சு ரொம்ப நன்றாக இருக்கும் அந்த மதத்தில். அதன்படி பிரத்யக்ஷம் ஒன்றுதான் பிரமாணம்; கண்ணுக்குத் தெரியாததெல்லாம் பிரமாணம் கிடையாது.

வேதாந்த மதமோ இதற்கு நேர் எதிர். அதன்படி பிரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என்கிற மூன்றும் பிரமாணம். சப்தம் என்பது வேதம்.

ஆனால் சார்வாக மதத்தில் பிரத்யக்ஷம் ஒன்றே பிரமாணம். கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என்கிற ரீதியில் பேசினார்கள்.

'உயிர் இருக்கிற வரைக்கும் சௌக்கியமாய், சந்தோஷமாய் இருங்கள்' என்றார்கள். இதை யாராவது வேண்டாமென்பார்களா என்ன...?! சௌக்கியத்தைத் தானே எல்லோரும் விரும்புவார்கள்!

'சௌக்யமாய் இருக்க வேண்டுமானால் நன்றாகச் சாப்பிட வேண்டும். உபவாஸம் வேண்டாம். ஏன் அந்த சிரமமெல்லாம் பட வேண்டும்? யக்ஞம், யாகாதி கர்மங்கள் வேண்டாம். நன்றாக உடம்பை 'கொழுக் மொழுக்' கென்று தேற்றிக் கொள்ளுங்கள்...' என்றார்கள்.

'உடம்பைக் கொழுக் மொழுக்கென்று தேற்றிக் கொள்ள வேணுமானால் நன்றாகச் சாப்பிட வேண்டும். நிறைய நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். நெய் வாங்கவோ பொருள் வேண்டுமே...' என்று விசாரம் வந்தது.

'கவலை வேண்டாம்! கடன் வாங்கு!' என்றார்கள்! 'கடனை வாங்கியாவது நெய்யைக் குடியுங்கள். தீர்த்தத்தைப் பருகுகிற மாதிரி நெய்யைப் பருகுங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்குத் தேவையான கடனை வாங்குங்கள்...' - இப்படியொரு வழிகாட்டல்!

எதை 'கூடாது' என்று சாஸ்திரம் சொல்கிறதோ, அதையே பண்ணச் சொல்கிறார்கள் இவர்கள். கடனே வாங்கக் கூடாது. கடன் வாங்குவது பரம பாவத்துக்கு வழிகோலும். அடுத்த ஜன்மத்திலே விபரீதமான கஷ்டங்களெல்லாம் ஏற்படும் என்கிறது சாஸ்திரம்.

இவர்களோ கடனை வாங்கு; நெய்யைக் குடி என்கிறார்கள்! ஏன்...? எப்படியானாலும் சரீரம் பஸ்மமாகத் தானே போகிறது என்கிற எண்ணம்! சரீரத்துக்குள்ளே, சரீரத்தைக் காட்டிலும் உத்தமமான ஆத்ம வஸ்து இருப்பதையே அவர்கள் கவனிக்கவில்லை. ஏனெனில் பரோக்ஷம்! - கண்ணுக்குத் தெரியாததைக் கவனிக்காமல் இருக்கச் செய்கிறது. கண்ணுக்குத் தெரியாததைத்தான் கவனிக்கவில்லை... வேதம் சொல்கிறதே அதையாவது கவனிக்கக்கூடாதா.... அதையும் ஏற்கவில்லை

ஆதி சங்கர பகவத்பாதாள் சார்வாகனைப் பார்த்துக் கேட்டார் - இவ்வளவு தூரம் பேசுகிறாயே... சொர்க்கம்... நரகம் என்பதை உங்கள் மதம் ஏற்கவில்லையா?

அதிர்ச்சி தரும் பதில்தான் கிடைத்தது!



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

40

"சொர்க்கம், நரகம் எல்லாம் நன்றாக உண்டு" என்று ஆரம்பித்து அவன் பதில் சொன்னான். "ஆனால் அதெல்லாம் வேறு உலகம் கிடையாது. எல்லாம் இங்கேதான். நல்ல உணவு வேளா வேளைக்குக் கிடைக்கிறது. நன்றாக உடுத்தி, ஆனந்தமாக இருக்கிறார்கள். – அதுதான் சொர்க்கம். உணவுக்குத் திண்டாடிக் கொண்டு, ஏழ்மையை அனுபவித்துத் திண்டாடும் ஸ்திதியில் இருந்தால், அதுவே நரகம். நரகமோ சொர்க்கமோ – இங்கேதானேயொழிய, தனியாக சொர்க்கலோகம் என்றோ நரக லோகம் என்றோ கிடையாது" என்றான்.

"சரி, உன் மதத்தில் மோக்ஷம் என்பது உண்டா...?" – இது அடுத்த கேள்வி.

"ஆஹா! உண்டு."

"எது மோக்ஷம்?"

"செத்துப் போவதுதான் மோக்ஷம்!" என்று ஒரு போடு போட்டான்! ஆத்மாவையே அவன் ஒப்புக் கொள்ளவில்லை!

– இது வேதத்துக்குப் புறம்பான, அதர்மமான விஷயம் அல்லவா!

'இந்த உலகமே தர்மத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. வேதமனைத்தும் தர்மசாரம்! எனவே இப்படி வேதத்துக்குப் புறம்பாக எண்ணுவதே தப்பு' என்பதைத்தான் ராமாயணம் காட்டுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரீரத்திலிருந்து வேறுபட்டுத் தனியானது ஆத்ம வஸ்து என்று வேத வேதாந்தங்கள் எடுத்துப் பேசுகின்றன.

'தத் த்வம் அஸி - ஜீவனாக இருக்கும்படியான நீ, அந்தப் பரப்ரும்மமாய் இருக்கிறாய்' - இது ஆதி சங்கர பகவத் பாதாள் அளித்த விளக்கம்.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகிய சிங்கர். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்ற மூன்று பிரிவுகளையும் சிலாகித்து ஆச்சர்யமாய்ச் சொல்லி யிருக்கிறார்.

இரண்டாயிருக்கும்படியான தன்மையைச் சொல்லுவது த்வைதம். ஜீவன் வேறு; பரமாத்மா வேறு என்கிறது.

இரண்டு என்கிற நிலை இல்லாமல் ஒன்றாகவே இருப்பதென்பது அத்வைதம். 'ப்ரப்ரும்மமே நான்' என்று உணரும் நிலை.

க்ஷீரத்திலிருந்து (பாலிலிருந்து) வெண்ணெய் வருகிறது. அதை உருட்டி, திரும்பவும் பாலிலேயே போடுகிறோம். ஆனால் அது பாலில் கலக்குமா...? கலக்கவே கலக்காது! இது வேறு அது வேறு என்று ஸ்பஷ்டமாகத் தெரியவில்லையா? அதோடு இது கலக்காது.

ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படும்போதும் இதே போல்தான் ஆகிறது. பாலுக்குள் வெண்ணெய் மாதிரி உடலுக்குள் சிக்கியிருந்த ஆத்மா விடுதலையாகி தனி உருக் கொள்கிறது. உடலே அதைத் தாங்கியிருந்தாலும் உடல் பற்றிய சிந்தனை போய்விடுகிறது. ஆத்மாவை தியானம் செய்யும் போது, அந்த ஆத்மாதான் பரமாத்மா என்கிற நிலை ஏற்படுகிறது. சுவயம்பிரகாசமாய் பிரகாசிக்கக்கூடிய நிலை அது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதிரே பாம்பு நெளிவது போல வளைவு வளைவாகத் தெரிகிறது... ஐயோ! என்று அலறினான் ஒருவன். ஆனால் அது ஆடாது, அசங்காது இருப்பதைக் கண்டு பாம்பு இல்லை என்று முடிவு செய்தான். பின்னே என்னவாயிருக்கும்...?

'யாரோ குடத்தில் ஜலம் எடுத்துப் போக, அந்தக் குடத்தில் ஓட்டை இருந்திருக்கிறது. ஓட்டை வழியே சிந்திய நீர் குடமேந்தியவரின் நடைக்கு ஏற்ப வளைவு வளைவாக சிந்தியிருக்கிறது போலும், என்று எண்ணம் வருகிறது.

'ஆனால் சூர்ய ரச்மி பட்டு இந்த ஜலம் உலர்ந்து போகவில்லை... சரிதான்! பூமி அந்த இடத்தில் பிளவுபட்டிருக்கிறது போலும்... அதனால்தான் இப்படித் தெரிகிறது!' என்று மீண்டும் வேறு மாதிரி எண்ணம் வருகிறது.

இப்படி நினைத்துக் கொண்டே இருக்கும்போது அந்தப் பக்கமாய் வந்த ஒருவர் அந்தப் 'பாம்பு' வடிவத்தை மிதித்தபடி வந்தார்.

அவரிடம் கேட்கப் போக, உண்மை வெளிப் பட்டது - பாம்பும் அல்ல; நீர்க்கோடும் அல்ல; பூமியில் பிளவும் அல்ல... வைக்கோலால் திரிக்கப்பட்ட ஒரு கயிறு அது!

வைக்கோல் திரி என்று தெரிந்தும் நாம் முதலில் எண்ணியதெல்லாம் போய் விடுகிறதல்லவா...? அந்த மாதிரிதான் உண்மைப் பொருளைப் பார்த்த பிறகு மற்றதெல்லாம் மறைந்து போகும் - இது அத்வைத நோக்கு.

விசிஷ்டாத்வைதம்...?புறப்பொருள் எல்லாமே அவன் சரீரமாய்த்தான் இருக்கிறது என்பது விசிஷ்டாத்வைதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக, எந்த தத்துவார்த்த நிலையை எடுத்துக் கொண்டாலும் ஆத்மா என்ற ஒன்று இருப்பதை அது மறுக்கவில்லை; ஏற்கவே செய்கிறது.

ஒன்று பேதமாகச் சொல்கிறது; இன்னொன்று அபேதமாகச் சொல்கிறது; மூன்றாவதோ எல்லாவற்றுக் குள்ளும் இருக்கிற அந்தராத்மாவைச் சொல்கிறது.

பேத, அபேத ச்ருதிகள் தனித்தனியாய் இருப்பது நம் மனத்தைக் குழப்புகிறது. ஆனால் ஆசார்யார்களுக்கு உண்மை புலப்பட்டது. அதனால் மூன்று ரீதியான தத்துவங்கள் தோன்றி நின்றன. மூன்றுமே சரீரத்திலிருந்து வேறுபட்டது ஆத்ம வஸ்து என்பதை ஏற்கின்றன.

'அகம்' என்றால் ஆத்மா. 'நான்' என்றால் எனது ஆத்மா; சரீரம் அல்ல... இந்த எண்ணம் நமக்கு வரவேண்டும். தெளிவாகத் தெரியவேண்டும்.

பேச்சு வழக்கில் நாம் என்ன சொல்கிறோம்...?

"எனக்கு அது ரொம்பப் பிடிக்கும்..." சரீரமே ஆத்மாவாய் இருந்தால் 'நான் அது ரொம்பப் பிடிக்கும்;' 'நான் தலைவலிக்கிறது'; 'நான் கை குடைகிறது;' 'நான் மூக்கு ரொம்ப வலிக்கிறது'... என்றெல்லாம்தானே சொல்ல வேண்டும்!

அப்படிச் சொல்வதில்லையே நாம்! 'எனக்குத் தலை வலிக்கிறது, 'எனக்குக் கை குடைகிறது' என்று சரீரத்துக்குள் இருக்கும் நிலையைச் சுட்டியே சொல்கிறோம். இப்படி சரீரத்தில் அபிமானம் வைத்து நாம் பேசும்போதே என்ன தெரிகிறது? சரீரத்திலிருந்து வேறுபட்டதான ஆத்மா ஒன்று இருக்கிறது என்று தெரிகிறதல்லவா!

'நாம்' என்பது சரீரமல்ல; ஆத்மா. நாராயணனையே அடைய வேண்டும். அவன் திருவடியையே அடைய வேண்டும். அவன் கைங்கர்யத்துக்காக – நித்ய கைங்கர்யத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துக்காக அவன் திருவடியே சேர வேண்டும் என்பதை உத்தேசித்துத்தான் - இத்தனையும் சொல்லப்படுகிறது.

அப்படியிருக்க, அந்தத் தத்துவம் வேதாந்தங்களை விட்டு விட்டு, நன்றாகச் சாப்பிடு, நெய்யைக் குத்திக்கொள், கடனை வாங்கு என்றெல்லாம் சொன்னால் எவ்வளவு தப்பான வார்த்தை!

இந்த மாதிரி அதர்மமான விஷயத்துக்கு ராமாயணத்திலே இடமில்லை.

தர்மத்தைப் பேசினான் பரமாத்மா. பரதனுடைய கடமையை உணர்த்தினான்.

பாரதந்த்ரியம் - 'நீ அப்படிப் போய் இரு' என்று சொன்னால் எதிர்க் கேள்வி கேட்காமல் செய்ய வேண்டும்.

பகவான் சொன்னான். அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு பரதனும் நடந்தான். அதுதான் பாரதந்த்ரியம். சொன்னபடி நடக்கும் தர்மம்.

'பாரதந்த்ரிய காஷ்டா' என்று ஒரு தர்மம். அந்த பகவத் பக்தனான பரதனுடைய திருவடியிலே அசஞ்சலமான பக்தி கொண்டு நின்றானே சத்ருக்னன்... அந்த நிலை 'பாரதந்த்ரிய காஷ்டா.'

ராமாயணத்திலே எங்கேயாவது ஒரு சுலோகமாவது சத்ருக்னனுக்கு உண்டா என்று கேட்டால் எங்கேயும் கிடையாது. பரதனுடனேயே போனான்; பரதனுடனேயே வந்தான். அங்கங்கே அரை சுலோகம் அல்லது முக்கால் சுலோகம்தான் சத்ருக்னனுக்கு!

இதிலேயிருந்து ஒரு தர்ம சூக்ஷ்மத்தை நாம் கிரஹித்துக் கொள்ள வேண்டும். கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம், சரணாகதி - இந்த நான்கையும் கீதையிலே பகவான் ரொம்ப அழகாக விவரிக்கிறான்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இதிலே பாருங்கள். என்ன விவரித்தானோ அதை ராமாயணத்திலேயும் காட்டியவன் அவன்.

ராமாவதாரத்திலே லக்ஷ்மணன் மூலமாக கர்ம யோகத்தைக் காட்டினான். பரதன் மூலமாக பக்தி யோகத்தைக் காட்டினான். இதைத்தான் சுவாமிதேசிகன் பக்திக்கே பரம உதாரணமாக பாதுகா சஹஸ்ரத்தில் சொல்கிறார். பக்திக்கு முதல் உதாரணம் பரதன் என்கிறார்.

ஞான யோகத்தைக் காட்டியவவன் சத்ருக்னன். சரணாகதிக்கு விளக்கமானவன் விபீஷணன்.

ஞான யோகம் பண்ணுகிறவர்கள் உலகிலே அதிகப் பிரசித்தமாக ஆகக்கூடாது. அப்படி ஒருத்தர் இருக்கிறார் என்பதே வெளியே தெரியக் கூடாது. எல்லாவற்றிலும் பிரசித்தமாக இருக்கக்கூடியவர்களை ஞானயோகி என்று சொல்ல முடியாது. ஞான யோகம் பண்ணக் கூடியவனானதாலேதான் சத்ருக்னன் பிரசித்தமாகவில்லை.

ஞான யோகிகள் முக்கியமாக லவணஜயம் பெற வேண்டும் - அதாவது உப்பை ஜெயிக்க வேண்டும்! - உப்பில்லாமல் சாப்பிட வேண்டும் அவர்கள். அதனால்தான் லவணாசுரன் என்கிற அசுரனை ஜெயிக்க பரதன் கிளம்பிய போது, அவனை நிறுத்திவிட்டு சத்ருக்னனை அனுப்பினான் பரமாத்மா. சத்ருக்னனும் போய் லவணஜெயம் கொண்டான். - இப்படி தர்ம சூக்ஷ்மமாக ராமாயணத்தில் எவ்வளவோ அடங்கி யிருக்கிறது.

'பாரதந்த்ரிய காஷ்டா' என்ற தர்மம் - சத்ருக்னன் அனுஷ்டித்த தர்மம். ரொம்பவும் கஷ்டமானது. பரதனுடைய நிழல்போலிருந்து கைங்கர்யம் செய்தான் சத்ருக்னன். பரதன் கேகய நாட்டுக்குப் போக நாள் பார்த்துச் சொன்னார்களாம் - அவனுடன் சத்ருக்னனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போனான். அவனும் சக்ரவர்த்தித் திருமகன்தானே... ஆனால் அவனுக்கென நாளெதுவும் பார்க்கப்படவில்லை!

சத்ருக்னன்...! சத்ரு யாரென்றால், நம் இந்த்ரியங்கள் தான் சத்ரு. அந்த சத்ருவை அடக்கியவன் அவன். பரதன் பின் போவதையே பரம புருஷார்த்தமாக நினைத்த மகான் அவன். ஆகையினால் சத்ருக்னாழ்வார் என்றே அவனுக்குப் பெயர்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41

அர்த்த பஞ்சகம் - இது ராமாயணம் உணர்த்தும் இன்னொரு தர்மம். வேத, சாஸ்திர புராணங்கள் எல்லாமே அதன் மேல்தான் நிற்கின்றன.

நாம் அடைய வேண்டிய பரப்ரும்மத்தினுடைய ரூபம், வடிவழகு என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும். அதன் ஸ்வரூப, ரூப, குண விசேஷங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த பரப்ரும்மத்தை அடைய வேண்டிய ஆத்ம ஸ்வரூபத்தையும் - அதாவது நாம் யார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவனை அடைய வேண்டிய வழி எது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அடைந்த பிறகு ஏற்படக்கூடிய பலன் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவனை அடையவிடாமல் தடுக்கும் தடை எது என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஐந்து விஷயங்களின் (அர்த்த பஞ்சகம்) மேல்தான் வேதமே நிற்கிறது.

இந்த உலகம் இருக்கிறதே... ப்ரக்ருதி - இது பகவானைத் தெரிய விடாமல் கண்ணை மறைக்கிறது.

கோயிலில் திரை போடுவதற்குக் காரணம் என்ன?... அவனுக்கும் நமக்கும் நடுவிலே இந்த ப்ரக்ருதி தடையாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கிறது - திரையாக இருக்கிறது என்பதைக் காட்டத் தான்.

அதனால்தான் 'தெரதீயகராதா' என்று அந்த ஏழுமலையான் சன்னதியிலே நின்று பாடினார் தியாக ப்ரும்மம். அந்தத் திருவேங்கடமுடையான் உருவத்தை மறைத்த திரையைச் சொல்லலை அவர்... அவனுக்கும் நமக்கும் இடையிலே இருக்கிற ப்ரக்ருதியாகிய திரையைச் சொல்கிறார். 'அந்தத் திரையைத் திறக்கக் கூடாதா? உன்னை நான் என்னுள்ளே பார்க்கும் காலம் வருமா' என்று கேட்டார்.

ஆகவே, நாம் எம்பெருமானைப் பார்ப்பதற்குப் பெரிய தடையாக இருக்கிறது இந்த ப்ரக்ருதி சம்பந்தம்.

அவனை அடைவதற்கான உபாயம் பக்தி, சரணாகதி. அவனை அடைந்த பிற்பாடு அவன் திருவடியிலேயே நித்ய கைங்கர்யம் பண்ணும் தன்மை உண்டாகும்.

சூரியன் இருக்கிறான்... ஒளிக்கற்றையை உடையவனாகவும் இருக்கிறான். ஒளியே அவனாகவும் இருக்கிறான். அந்த மாதிரி இங்கே ஆத்மா, அறிவை உடையதாகவும் இருக்கிறது. அறிவாகவும் இருக்கிறது. அதற்கு இருக்கும்படியான ஞானம் மிகவும் உயர்ந்தது. அந்த ஞானம் பரவி மோக்ஷத்தை அடைந்துவிட்டால், எல்லாவற்றையும் இருக்கிற இடத்தில் இருந்தபடியே ஆத்மா உணர ஆரம்பிக்கும்.

ஆகவே ஆத்ம ஸ்வரூபத்தை உணர வேண்டும். அதைத்தான் ராமாயணம் நமக்கு நன்கு விளக்கிக் காட்டுகிறது. (அர்த்த பஞ்சகம்)

ஆகிஞ்சன்யம் என்பதும் ஒரு தர்மம். எவ்வளவு தான் நாம் செய்தாலும் அது பகவானுடைய காருண்யத்துக்கு எதிரில் செல்லாது. ஒரு எலுமிச்சம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழத்தைக் கொடுத்து விட்டு ராஜ பதவி கேட்கிற மாதிரிதான் அது! மேலும், பகவானிடத்திலே போய், 'நான் அதைக் கொடுத்தேனே... நீ இதைத் தரக்கூடாதா?' என்று கேட்கலாமா? 'அன்றைய தினம் நூறு தேங்காய் உடைச்சேனே' என்று ஞாபகப் படுத்தலாமா...!

நாம் எதைத்தான் செய்தாலும் அவன் காருண்யத் திடத்திலே விலை செல்லாது. அதை நாம் உணர வேண்டும்.

தொண்டரடிப் பொடியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் - இவர்கள் எல்லோரும் சொல்லக் கூடிய விஷயத்தை நாம் பார்த்தோமானால், அந்தப் பாசுரங்களைப் படித்தோ மானால், பகவானுக்கெதிரிலே நாம் எதையும் விசேஷமாகச் சொல்ல முடியாது என்பதுதான் தெரிகிறது.

பெரியாழ்வார் சொல்கிறார் பாருங்கள். 'நின்னருளே புரிந்திருந்தேன்...' உன் தயைக்கே நான் பாத்திரம்... உன் கிருபைக்கே நான் பாத்திரம்... இப்படிச் சொல்ல வேண்டுமே யொழிய, 'நான் அதைச் செய்தேன், இதைச் செய்தேன்...' என்றெல்லாம் பகவானிடத்திலே பேரம் பண்ணக் கூடாது.

ஆகிஞ்சன்யம் என்பதையும் ராமாயணம் விளக்கிக் காட்டுகிறது. சரித்திரத்தில் அது காணக் கிடைக்கிறது. விபீஷணன் அதை எடுத்துச் சொல்கிறான். பரதன் அதை எடுத்துச் சொல்கிறான். இவர்கள் இருவருமே தங்களிடம் எதுவுமே கைமுதல் இல்லை என்று பகவானுடைய சரணாரவிந்தத்தை ஆச்ரயித்தவர்கள். அது ஆகிஞ்சன்யம் எனப்படுவது.

அகிஞ்சன ஈசலாபம் என்பது மற்றும் ஒரு தர்மம். பரமாத்மாவை அடைதல் ஒரு தர்மம் என்று சொன்னேன். அது அவ்வளவு சுலபத்தில் கிடைக்காது. இடையிலே ஒருத்தர் இருக்க வேண்டும். அவர்தான் ஆசார்யர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசார்யரின் துணையால்தான் அவன் நமக்குக் கிடைப்பான்: நாம் அவனைச் சென்றடையலாம்.

ஆஞ்சநேயனுக்கு இங்கே ஆசார்ய ஸ்தானம் இருக்கிறது என்று சுவாமி தேசிகன் விவரிக்கிறார்.

ராமன் தன் திருக்கையில் அணிந்திருக்கும்படியான கணையாழி மோதிரத்தை, ஆஞ்சநேயன்தான் எடுத்துப் போய் சீதா பிராட்டியின் கையிலே வைக்கிறான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீதையை அங்கே ஜீவனாக நம் மனத்திலே உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும், பகவத் அனுக்ரஹம் அந்த ஜீவனுக்குப் பூரணமாய் இருக்கிறது.

மோதிரத்தை ஆஞ்சநேயன் அங்கு கொண்டுபோய்க் கொடுத்தவுடன் சீதாபிராட்டி என்கிற ஜீவனை எம்பெருமான் திருவடியிலே சேர்க்கும் பொறுப்பும் அவனுடையதாகிறது.

ஜீவனானது எப்போதும் பரமாத்மா திருவவடியிலே தலைவணங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டத்தான் சீதாதேவி தன் சிரோபூஷணத்தை (தலை ஆபரணம்) ஆஞ்சநேயனிடம் கொடுத்தனுப்பினாள்.

ராமனின் கைவிரல் மோதிரம் பரமாத்மாவின் அபய ஹஸ்தத்தைக் குறிக்கிறது.

சீதையின் சூடாமணி, தலைவணங்கிய நிலையைக் குறிக்கிறது.

இரண்டையும் நடத்தி வைத்தவன் ஆஞ்சநேயன்.

ராமாயணத்திலே மூன்று இடங்களில் சீதா கல்யாணம் நடக்கிறது!

- இப்படிச் சொன்னால் ஆச்சர்யம் ஏற்படுகிற தல்லவா?

பால காண்டத்தில் நடந்த கல்யாணத்தை வால்மீகி விவரித்தார்.

அயோத்தியா காண்டம் முடிகிற பகுதியில், இன்னொரு சீதா கல்யாணம்! எங்கேயென்றால்... அனுசூயையிடம் சீதா பிராட்டி தன்னுடைய வாக்கினாலேயே வர்ணிக்கிறாள். தன் கல்யாணம் நடந்த விதத்தைச் சொல்கிறாள். அங்கே இரண்டாவது தடவையாக சீதா கல்யாணத்தைக் கேட்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த இரண்டு கல்யாணமும் யாருக்கு வேண்டுமானாலும் நடக்கும். ஒருத்தருக்குக் கல்யாணம் நடப்பதும். ஒருத்தர் தம் கல்யாணத்தை மற்றவரிடம் விவரிப்பதும் அதிசயமில்லை.

ஆனால் சுந்தர காண்டத்திலே நடந்த கல்யாணம் இருக்கிறதே, அது ஒருசிலருக்குத்தான் நடக்கும். அதுதான் ஆத்ம விவாகம். 'இந்த ஆத்மா அவனுடையது' என்று சமர்ப்பிக்கிற நிலை. அதை ஓர் ஆசார்யர் பக்கத்திலே இருந்துதான் நடத்த வேண்டும். அதைக் காட்டத்தான் ஆஞ்சநேயன், சுந்தர காண்டத்திலே சீதாத்மாவை எம்பெருமானின் திருவடியிலே சேர்த்து வைத்தான்.

கிருதக்ருத்யத்வம் என்கிற ஓர் உயர்ந்த விஷயமும் ராமாயணத்திலே சொல்லப்படுகிறது. 'கிருதக்ருத்யாள்' யாரென்றால் தனக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்து முடித்தவர்கள். விபீஷண பட்டாபிஷேகம் முடிந்த பிறகு, 'கிருதக்ருத்யஸ்ததோ ராம:' என்று பகவான் அழைக்கப் படுகிறார்.

ராமபிரான் கிருதக்ருத்யன் ஆனான். நான் சொன்ன உயர்ந்த தர்மத்தை நடத்திக் காட்டியவனானான்.

இன்னுமொரு தர்மம் - இப்படியிப்படி இரு..., இப்படியிப்படி இராதே என்று எடுத்துச் சொல்கிறது. அதாவது, 'வாலி-சுக்ரீவன் போல் இராதே; ராம-லக்ஷ்மணரைப்போல் இரு!' என்கிறது!

வாலி-சுக்ரீவ யுத்தம் நடக்கிறது. அதைப் பார்த்துவிட்டு லக்ஷ்மணன் சகிக்க முடியாமல் தமையனிடம் வந்து கேட்கிறான்: "இப்படி அண்ணன் - தம்பி சண்டை போடறாளே...? இது நன்றாகவா இருக்கு...?"

அதற்கு ராமன் சொல்கிறான் பாருங்கள்: "ஹே லக்ஷ்மணா! என்ன நினைத்துக் கொண்டு பேசுகிறாய் நீ...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்கள் சண்டை போடுவதைப் பார்த்து என்னிடம் வந்து கேட்கிறாயா? இந்தக் குரங்கின் நிலை - விலங்கின் நிலை உனக்குப் பெரிதாகத் தெரிகிறதே... இதைப் போல் மனிதர்களும் உண்டு என்பது உனக்குத் தெரியாதா...?"

- சொன்னவன் ஒரு படி மேலே போய்ப் பேசுகிறான்: "நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்...? எல்லாத் தம்பியும் பரதனைப் போல் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா...? அப்படிக் கிடையாது!" என்கிறான்.

உண்மையில் லக்ஷ்மணனிடம் பேசும்போது என்ன சொல்ல வேண்டும் பரமாத்மா...?

'எல்லோரும் உன்னைப் போல் என்று நினைத்தாயா...?' என்றல்லவா கேட்க வேண்டும்.

'உன்னைப் போல் ஒரு தம்பி உண்டோ?' என்று லக்ஷ்மணனை பரமாத்மா ஏன் ஸ்தோத்திரம் பண்ணவில்லை? எங்கேயோ இருக்கிற பரதனைப் பற்றி ஏன் லக்ஷ்மணனிடத்திலே சொல்கிறான்?

லக்ஷ்மணனும், பரதனுடைய பெருமையை ராமன் பேசும்போது ஆனந்தமாய்க் கேட்கிறான். கொஞ்சம் கூட பொறாமையின்றிக் கேட்கிறான்.

'கூடவே இருந்து இவ்வளவு கைங்கர்யம் பண்ணி யிருக்கிறோம். நம்மைச் சொல்லாமல், எங்கோ இருக்கிற பரதனைச் சொல்கிறானே...!' என்றொரு எண்ணம் லக்ஷ்மணனுக்கு வரவில்லை.

அந்த பரதனுடைய நிலை என்ன? அந்தக் குழந்தை எத்தனை சிரமப்படுகிறான்? பழிச் சொல்லுக்கு ஆளான பரதன், அர்த்த ராத்திரியில் சரயுவில் போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வருவானாம்!

ஏனென்றால் பகலில் மற்றவர்கள் ஸ்நானம் செய்யும் நேரத்தில் போனால், 'அண்ணாவைக் காட்டுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனுப்பினவனுக்கு இந்த மகாபாவிக்கு - 'ஸ்நானம் ஒரு கேடா?' என்று யாராவது பேசி விடுவார்களோ என்கிற பயமாம்!

அப்படிப்பட்ட பரதனை நினைத்து நினைத்து பரமாத்மா பஞ்சவடியிலே உருகினான். அவனையே உதாரணமாகச் சொன்னான்.

அந்தக் காலத்தில் ஒரு வழக்கம். அண்ணன் தம்பிகள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு மத்யஸ்தத் துக்கு வந்தால் மத்யஸ்தம் செய்பவர்கள் என்ன சண்டை என்று கேட்க மாட்டார்களாம். ராமாயணத்திலிருந்து ஒரு சுலோகத்தைச் சொல்வார்களாம். சொன்னவுடனேயே, சண்டை போட்ட இரண்டு சகோதரர்களும் கட்டிக்கொண்டு ஒற்றுமையாய்ப் போய்விடுவார்களாம்!

ராமாயணம் அந்த அளவுக்கு நம்மை சிக்ஷிக்கிறது. இப்படி இப்படி இரு... என்று மட்டுமல்லாமல் இப்படியெல்லாம் இராதே என்றும் கற்றுத் தருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

42

சீதா பிராட்டி ராமனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள்:

"என்னைக் காட்டுக்கு அழைத்துக்கொண்டு போக மாட்டேன் என்கிறீர்களே... காட்டிலே சிங்கம் இருக்கும், புலி இருக்கும். வேண்டாம் என்கிறீர்களே? சிங்கத்திட மிருந்தும் புலியிடமிருந்தும் என்னைக் காப்பாற்ற முடியாத அல்ப வீரியரா நீங்கள்...? சரி. போகட்டும்! அதனால் நானொன்றும் உங்களைத் தவறாக எண்ண மாட்டேன். என் தந்தைதான் உங்களைத் தப்பாகப் புரிந்து கொள்வார்..."



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாமனார் எதிரில் கௌரவமாக, பிரகாசமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் மாப்பிள்ளைக்கும் இருக்காதா! மாப்பிள்ளை உயர்வாய் இருக்க வேணும் என்கிற எதிர்பார்ப்பு மாமனாருக்கும் இருக்கும் அல்லவா?

அதை மனத்தில் கொண்டு சீதா பிராட்டி பேசிவிட்டாள்.

உடனே பரமாத்மா அவளிடம் சண்டை போட வேண்டாமோ...? ஆனால் போடவில்லை... ராமாயணம் கற்றுத் தருகிற தர்மம் என்னவென்றால், புருஷன் மனைவிக்குள்ளே சண்டை வந்து விட்டதென்றால், ஒருத்தர் குரல் கொஞ்சம் உயர்ந்து விட்டதென்றால், மற்றவர் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டும். அவரும் கூச்சல் போட்டால் சண்டை அதிகமாகிவிடும்! ஆகவே ராமன் எதுவும் பேசவில்லை. சீதா பிராட்டியை அழைத்துக்கொண்டு போகத் தயாராகி விட்டான்.

குடும்பத்தில் சண்டை கூடாது என்கிற தினசரி வாழ்க்கை தர்மத்தையும் இப்படி ராமாணம் எடுத்துச் சொல்கிறது.

நிவாஸம் என்பதும் ஒரு தர்மம். ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்தோமானால் அந்த க்ஷேத்திர விசேஷத்தைப் பெரியவர்கள் கொண்டாடுகிறார்கள். அந்த ரங்கநாதரை தினமும் சேவிக்கலாம் இல்லையா? நித்தியம் கோவிலுக்குப் போக முடியவில்லையென்றாலும் வீதியிலே அவன் வரும்போது சேவிக்கலாமே!

கோவில் இருக்கும்படியான தெருவில் நாம் இருப்பது கூட விசேஷம். பெரியோர்களை அண்டி நாம் இருக்க வேண்டும். நல்ல விஷயங்கள் காதில் விழுந்து கொண்டேயிருக்கும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ராமபிரான் எப்போதும் பெரியோர்களை நாடிச் செல்வான். மகான்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிச் செல்வானாம். இது உத்தமமான ஒரு விஷயம்.

நிவாஸம் என்பதை உறுதிப்படுத்த இப்படி ராமனைப் பற்றி நான்கு சுலோகங்கள் சொல்கிறான் பரதன்.

அந்த சித்ரகூட பர்வதத்தில் லக்ஷ்மியோடு நாராயணன் இருக்கிறான். ஆதிசேஷனாகிய லக்ஷ்மணன் இருக்கிறான். வைகுண்டத்தில் பரமாத்மா இருப்பதைப் போல் இருக்கிறது! வைகுண்டத்துக்குத் துல்லியமானது சித்ரகூடம்.

பரதன் சொல்கிறான்: " ராமனைக் கிட்டே நெருங்கிச் சேவிக்கிற வரையில் எனக்கு சாந்தி ஏற்படாது. ராமனுடைய திருமுக மண்டலத்தை நெருங்கிச் சேவிக்கிற வரை எனக்குத் திருப்தி ஏற்படாது. ராமனை அபிஷேகம் செய்கிறவரை எனக்குத் திருப்தி உண்டாகாது. அந்த அபிஷேக தீர்த்தத்தை சிரஸிலே புரோக்ஷிக்கிற வரையில் சாந்தி ஏற்படாது..."

மோக்ஷ நிலையில் நான்கு சொல்லப்படுகிறது. சாலோக்யம்: உரிய இடத்தை அடைவது. ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தை அடைந்து அங்கே இருந்தால் சாலோக்யம். சாமீப்யம்: அப்படியென்றால் அருகாமை. கோவிலுக் குள்ளேயே கைங்கர்யம் செய்வது என்று கொள்ளலாம். பகவானுக்கு சமீபத்தில் வந்து விட்டாலும் அவரை சேவிக்கிற நிலை இன்னும் வரவில்லை. அவரைச் சுற்றிச் சுற்றி வர முடிகிறது. சாரூப்யம் - இது பகவானுக்கே கைங்கர்யம் செய்தல். அர்ச்சகர் இருக்கிறார். அவருடைய காரியம் இது. ஆனால் அவர் உருகி, பகவானை சேவிக்க ஆரம்பித்தால் கோவிலுக்கு வருகிறவர்களுக்கு யார் சேவை பண்ணி வைப்பார்கள்! ஆதலால் அவர் ரங்க நாதரை மறக்க வேண்டியவராகிறார். நெருங்கி இருந்தாலும் பார்க்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியவில்லை. அடுத்தது சாயுஜ்யம் - அவனைப் பூரணமாக அனுபவித்தல் என்பது அந்த சாயுஜ்ய பதவி.

சாயுஜ்யம் என்றால் பகவானை பக்தன் அனுபவித்தல், பக்தனை பகவான் அனுபவித்தல் என்பது இரண்டுமே அளவிலும் அனுபவித்தலிலும் சமமாயிருக்கும் என்று பெரியவர்கள் பணித்துள்ளார்கள்.

இது நன்றாகப் புரிய வேண்டுமானால் ஓர் உவமை சொல்லலாம். லௌகிக உதாரணம்!

ஒருத்தர் அரைப்படி புளியோதரை சாப்பிடுகிறார்; இன்னொருத்தர் ஒரு படி சாப்பிடுகிறார். புளியோதரை என்கிற ருசியிலே இரண்டு பேர் சாப்பிட்டதும் சமமாக இருந்தாலும் அளவில் வித்தியாசம் இருக்கிறது.

ஒருத்தர் அரைப்படி புளியோதரையும் இன்னொருத்தர் அரைப்படி சர்க்கரைப் பொங்கலும் சாப்பிடுகிறார்கள்... இரண்டுமே அரைப்படி என்று அளவிலே சமானமாய் இருந்தாலும் ருசியிலே வித்தியாசம் இருக்கின்றது.

இருவர் தலா அரைப்படி சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டால்...? அளவு, ருசி இரண்டுமே சமமாகிறது அல்லவா? இதுதான் சாயுஜ்யம்! பக்தனும் பகவானும் சமமான அனுபவம் பெறுதல்.

நிவாஸம், சாமீப்யம், சாலோக்யம், சாயுஜ்யம் என்கிற நான்கு நிலைகளும் பரதனுக்கு ஏற்பட்டன. வனவாசத்தில் ராமன் இருந்த இடத்துக்கு (நிவாஸம்) ஓடோடி வந்தானாம் பரதன். அயோத்தி இருந்த திக்கைத் திரும்பிக்கூடப் பாராமல் வந்தானாம்.

'மீண்டும் அயோத்திக்கே திரும்பினானே?' என்று கேட்டால், அது பாரதந்த்ரியம் - பகவானுடைய

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

ஆக்ஞைப்படி நடந்தான். தன்னுடைய விருப்பத்தினால் அவன் திரும்பவில்லை அயோத்திக்கு.

இவ்வாறு ராமாயணத்திலே எங்கு தொட்டாலும் சாஸ்திரப் பேச்சேயொழிய வேதத்துக்குப் புறம்பான விஷயம் எங்கேயும் கிடையாது.

வியஸனம் (மனத்துன்பம்) என்றுகூட ஒரு தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது.

எல்லோரும் வியஸனப்பட்டே ஆக வேண்டும் என்பது நியதி. வியஸனத்தைக் கொடுத்துத்தான் நம்மைத் திருத்துகிறான் பரமாத்மா.

துக்கம் வரும்போது, 'நமக்கு வராமல் வேறு யாருக்கு வரும்? பகவான் அந்த துக்கத்தை அனுபவிக்க நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்' என அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். சுகம் வரும்போது துள்ளிக் குதிக்கவும் கூடாது; துக்கம் வரும்போது துன்புற்று அழவும் கூடாது; துக்கத்தையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். சுகத்தையும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளலாம் சரி. சுகத்தை...? சுகத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் - சுகம், துக்கம் இரண்டையும் சமமாக பாவிக்க வேண்டும் என்று பொருள். ராமபிரான் அப்படித்தான் அனுபவித்தான். காட்டுக்குப் போ என்ற போதும் சரி, இருந்து அரசாட்சி செய் என்றபோதும் சரி, ஒரேமாதிரிதான் இருந்தான்.

ராமன் சீதையைப் பிரிந்து 'ஹா சீதே!' என்று அரற்றினானே, அதெல்லாமும் மகான்களுக்கும் வியஸனம் உண்டு என்பதையே காட்டுகிறது. அப்பேர்ப்பட்ட ராமபிரானுக்கே வியஸனம் வந்ததென்றால் நாம் எந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலைக்கு...!? நமக்கு வராமல் வேறு யாருக்கு வியஸனம் வரும்?

பகவானின் வியஸனத்துக்கு இன்னொரு கதைகூட சொல்வதுண்டு. பூரி நகரத்திலே மட்டும் பகவான் ஜகன்னாத பெருமாள், சிலாரூபமாக இல்லாமல் ஒரு கட்டை வடிவத்திலே இருக்கிறார். இதற்கு ஒரு கதை:

பகவானுக்கு முதலில் பூமாதாவோடுதான் கல்யாணம் ஆயிற்று. பரமசிவன் பார்வதியோடு வந்து தம்பதியை விருந்துக்கு அழைத்தாராம்.

கல்யாணமானவுடன் விருந்துக்கு அழைக்கும் பழக்கம் அப்போது ஆரம்பித்ததுதான்!

பூமாதேவியைப் பார்த்து, "போகலாமா?" என்கிறார் பகவான். அவள் சொல்கிறாள்: "நீங்கள் போகும் இடத்துக்கெல்லாம் என்னால் கூடவே வர முடியாது! அசலா (அசையாதவள்) என்று பெயர் அல்லவா எனக்கு! உங்களோடு நான் வந்தால் இந்த சராசரங்கள் அத்தனையும் என்னாவது! நீங்கள் போய் வாருங்கள். என்னால் வர முடியாது!"

பரமாத்மா எல்லா இடங்களுக்கும் தனியாகவே போய் வருகிறான். அவனுக்கு அது ரொம்பவும் வெட்கத்தை அளித்ததாம். போகும் இடத்திலெல்லாம் 'பத்னி எங்கே?' என்று கேட்டால் பதில் சொல்ல முடியவில்லை.

அதனால் சமுத்திர ராஜனின் மகளான லக்ஷ்மியை இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டான் பரமாத்மா.

என்ன ஆயிற்று...? மஹாலக்ஷ்மி ஓர் இடத்தில் தங்காமல் ஓடிக்கொண்டேயிருந்தாள். பகவானால் அவளோடு சேர்ந்து ஓடமுடியவில்லை. மூச்சு வாங்கியதாம்.

In Public domain, Digitization: Muthulakshmi Research Academy

'போதும் கல்யாணம்' என்று தீர்மானத்துக்கு வந்து, பிள்ளையினிடத்திலே சில நாள் போய் இருக்கலாம் என்று கிளம்பினானாம். பிள்ளை என்றால் மன்மதன்.

மன்மதனிடத்திலே போகும்போது எதிரே ஒருத்தர் வந்தாராம். 'இப்போதுதான் மன்மதன் பரமசிவனிடத்திலே அபசாரப்பட்டு, அவனுடைய நெற்றிக்கண்ணுக்கு ஆளாகி பஸ்மமாகிப் போனான்!' என்று செய்தி சொன்னாராம்.

பகவானுக்குப் புத்ர சோகம் தாள முடியாமல் போய்விட்டதாம். மாமனார் கிரஹத்தில் போய் ஆறுதல் தேடலாம் என்று பார்த்தாராம். மாமனார் கிரஹத்துக்குப் பத்தினியை அழைத்துக் கொண்டு போனால் கௌரவம்... ஆனால் இவன் நிலை வேறாக இருந்தது. இருந்தாலும் பரவாயில்லை என்று புறப்பட்டுப் போனானாம்.

சமுத்திர ராஜனிடம் போனால், பெரிய அலை ஒன்று அடித்து பகவானைத் தூக்கித் தள்ளி விட்டதாம். 'உள்ளே நுழையும் முன்பே இந்த மரியாதை! இன்னும் உள்ளே போனால் என்ன நடக்கும்' என்று வருத்தப்பட்டுப் பின்வாங்கினான் பகவான்.

சற்று படுத்து ஓய்வெடுக்கலாம் என்று முடிவு பண்ணி, ஆதிசேஷனைப் படுக்கையாக்கி சயனித்தான். படுத்தால்... ஆதிசேஷன் 'புஸ்!புஸ்!' என்று விஷத்தைக் கக்குகிறான்.

பார்த்தான் பகவான். 'சரி நமக்கு இனி உதவுவார் ஒருத்தரும் இல்லை. காசிக்குப் போக வேண்டியதுதான்' என்று புறப்பட்டான். கருடாழ்வாரின் மேல் ஏறிப் போய்க்கொண்டிருந்தபோதே, பூரி என்கிற ஊரின் மேல் பறக்கையில் கீழே பூமியில் ஒரு பாம்பு ஊர்வது தெரிந்ததாம். அதைப் பார்த்த கருடன், "நாராயணா! கீழே என் ஆகாரம் போகிறது... அதைச் சாப்பிட நான் போகிறேன்... உன்னை இங்கே இறக்கி விடுகிறேன். நீ நடந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போய்க் கொண்டேயிரு. நான் சாப்பிட்டு முடித்துவிட்டு வருகிறேன்...” என்று பகவானை அப்படியே கைவிட்டு விட்டுப் போய்விட்டான்!



பகவானும் கருடாழ்வாரின் அந்த வார்த்தையைக் கேட்டு, 'நம் நிலை இப்படி ஆகி விட்டதே!' என்று தலையில் கை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டானாம்.

அப்படியே தன் வீட்டுக் கஷ்டத்தை நினைத்து நினைத்து பகவான் கட்டையாகவே போய்விட்டானாம்!

இதுதான் பூரியிலே அவன் அப்படிக் காட்சி யளிப்பதன் பின்னணிக் கதை.

இப்படியொரு கதை உருவானதே, வியஸனம் என்பது யாரையும் விட்டு வைக்காது என்பதை நமக்கு உணர்த்தி சமாதானம் செய்யத்தான். பகவத் சரித்திரங்களும் இதிகாசங்களும் 'வியஸனம் வந்தால் சிரமப்படாதே' என்று

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

சொல்கின்றன. இந்த தர்மத்தையும் ராமாயணம் சொல்கிறது. அதற்கும் மேலே, அறுபத்து நான்கு வகைக் கலைகளையும் அது சொல்கிறது!

இவை அனைத்தையும் பெரிய திருமலை நம்பிகள் திருமலை க்ஷேத்திரத்தில் ராமானுஜருக்கு உபதேசம் பண்ணினார். விச்வமூர்த்தியாகிய - விச்வ சப்தத்தை உணர்த்துகிற - ரகுநந்தன் காட்டியவைதான் ராமாயணத்திலே சொல்லப்பட்ட தர்மங்கள்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

43

பூதேவியும் தேவதைகளும் சென்று எம்பெருமானிடத்திலே முறையிட்டார்கள். 'இந்த உலகத்திலே பாரம் அதிகமாகப் போய் விட்டது. பரமாத்மாதான் ரக்ஷிக்க வேணும்.'

பளு என்றால், நிறைய மரங்கள் வளர்ந்து விட்டதால் பளுவா? இல்லை மலைகளினால் பளுவா? இல்லை மனித சமூகத்தினாலேயா...?

இவையெல்லாம் பளுவேயில்லை பூமிக்கு. தினமும் பாவம் பண்ணியபடி பூமிமேலே சஞ்சாரம் பண்ணுகிறோமே, அதுதான் பளு!

இந்த பளுவைத்தான் போய் பகவானிடத்திலே எடுத்துச் சொன்னார்கள் தேவர்கள்.

அவன் தன் உடம்பிலிருந்து இரண்டு ரோமங்கள் - ஒன்று வெள்ளை, ஒன்று கறுப்பு - எடுத்துக்காட்டி, "இவை இரண்டும் உங்கள் துயர் துடைக்கும்" என்று அனுக்கிரஹம் செய்தான்.

அவற்றுள் சுவேதம் (வெண்மை) பலராம அவதாரம். கிருஷ்ணம் (கருமை) கிருஷ்ணாவதாரம்! 'இந்த இரண்டு ரூபமாய் நான் வந்து உங்கள் துயர் துடைக்கிறேன்' என்பதைத்தான் பரமாத்மா அப்படி உணர்த்தினான்.

விச்வஸ்ய பதி என்று கிருஷ்ணனைக் கொண்டாடுகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவான் நாராயணன்தான் வாசுதேவனாய் வந்து பிறந்தான். இந்த பலராம, கிருஷ்ண சப்தங்கள் இரண்டுமே விச்வ சப்தத்தினால் அறியப்படுகின்றன. இந்த விஷயத்தில் உபநிஷத் சொல்வது போலவே விஷ்ணு சஹஸ்ரநாமமும் சொல்கிறது. அதனால்தான் பெரியோர் களுக்கு சஹஸ்ரநாமத்திலே ஒரு ஈடுபாடு.

யார் பிரும்மம் என்று விசாரித்தால், தேவகி புத்ர: என்று சொல்கிறது உபநிஷத். அவன் புண்டரீகாட்சன். சர்வத்தையும் தாங்கக்கூடிய எம்பெருமான் அவன்.

வேத - வைதிகமான முறை கிருஷ்ணாவதாரத்திலே சிறப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு யக்ஞமும் பண்ண வேண்டியதில்லை. இவன் (கிருஷ்ணன்) பிறந்தவாறும் வளர்ந்தவாறும் எண்ணினாலே போதும் - அதுவே யக்ஞப் ப்ரகரணம்.

யக்ஞத்துக்கு சில நியமங்கள் உண்டு. அரணியைக் கடைந்து அக்னி உண்டு பண்ண வேண்டும். அந்த நாளில் நியமமாய் வாழ்ந்தவர்கள் மந்த்ரத்தைச் சொல்லி கையைக் காண்பித்தாலே அக்னி உண்டாகிவிடும்.

அவ்வாறு உண்டாக்கிய அக்னியை ஒரு நதியைக் கடந்து கொண்டுவர வேண்டும். நதிக்கு வலப்புறத்திலே ஒரு யக்ஞவாடிகை அமைக்க வேண்டும். அந்த யக்ஞ வாடிகையிலே அக்னியை பிரதிஷ்டை பண்ண வேண்டும். அங்கே பல யாகங்கள் பண்ணி, வேறு இரண்டு யக்ஞ வாடிகைகளுக்கு அதே அக்னியைக் கொண்டு போக வேண்டும். அந்த மூன்று அக்னியிலும் நடுவிலே ஜொலிப்பவன் பரமாத்மா.

இப்படி விசேஷமாக யக்ஞம் பண்ணி அதை சேவித்தவர்களுக்கெல்லாம் பகவான் அனுக்கிரஹம் விசேஷமாக ஏற்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஆகையினாலே, கிருஷ்ணாவதாரமும் யக்ஞமும் ஒன்றுதான்!' என்று சுவாமி தேசிகன் சொல்கிறார். - இதை நாம் மனசிலே நினைத்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

தேவகி - வசுதேவர் என்கிற அரணிக் கட்டையிலிருந்து கிருஷ்ணன் என்கிற அக்னி உண்டானான். 'அக்னி' என்கிற சப்தத்தினால் மறைத்துச் சொல்லப்படக் கூடியவன் பரமாத்மா.

அந்த 'அக்னி'யை வசுதேவர் சிரஸிலே எழுந்தருளப் பண்ணினார். ஆற்றைக் கடந்து வந்தார். முழங்கால் அளவுக்கு வடிந்து வருடிக்கொடுத்தாள் யமுனா நதி. ஆதிசேஷன் ஆயிரம் சிரஸுகளால் குடைபிடித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறுகரை அடைந்து, நந்தகோபனுடைய திருமாளிகையிலே காருகபத்ய அக்னிகுண்டமாகிய நந்தகோபன் மாளிகையிலே, கிருஷ்ணனாகிய அக்னியைப் பிரதிஷ்டை செய்கிறார்.

கிருஷ்ணனுடைய பால லீலைகள் மொத்தமும் அந்த யாகத்திலே மந்திரமாகின்றன. பால லீலை முழுவதும் மந்திரார்த்தம்தான்! மந்திரமாக இருந்தால் புரிவதில்லை. லீலையாக இருந்தால் எல்லோருக்கும் புரிகிறது.

பத்து அச்வமேத யாகங்கள் பண்ணுகிறார் ஒருவர். நூறு என்றே வைத்துக் கொள்வோம்... உயர்ந்த பிறவியை அடைகிறார். மறுபடியும் பூலோகத்தில் பிறக்கிறார். ஆனால் கிருஷ்ணனின் திருவடியை ஆச்ரயித்தவர்களுக்கு மறுபடியும் பூலோகத்தில் பிறப்பு உண்டோ...?

ஆகையினாலே, எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டதாய் விளங்கக்கூடியது பகவத் சரித்திரமானதனாலே, வேதோக்தமாய் விளங்கக்கூடியதை பகவான் தானே நடத்திக் காட்டினதனாலே... யக்ஞமே அங்கே இருப்பதனாலே... தேவகி நந்தன: என்று சொன்னாலே இந்த யக்ஞ ப்ரகரணமெல்லாம் நமக்கு நினைவு வரவேண்டும்.

அப்படி நினைவுக்கு வருமானால் கூடவே வருத்தமும் வரும். அந்த யக்ஞமெல்லாம் நம்மால் பண்ண முடியவில்லையே என்கிற வருத்தம்.

உடனே பரமாத்மா நம்மை சமாதானப் படுத்துகிறான். 'நீ வருத்தப்படாதே! உன்னைச் சகல பாவங்களிலிருந்தும் நான் விடுவித்து விடுவேன்' என்கிறான். அந்த அமிர்தமான வாக்கிலே நமக்குப் பூரணமான விச்வாஸம் இருந்து அவன் திருவடியைப் பற்ற வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவரை சொன்னது கர்ம காண்டம். அதற்கடுத்தது ஞான காண்டம் என்று ஒன்று உண்டு. வேதத்தில் பூர்வ பாகம் முழுவதும் கர்ம காண்டம்: பின் பாகம் மொத்தமும் பரப்ரும்மத்தை, அவனுடைய பெருமைகளைச் சொல்வது.

எம்பெருமானின் பெருமையை நேராகப் பேசும் உபநிஷத்தில் ஒரு வாக்கியம் இருக்கிறது. அது என்னவென்றால், 'அன்னவானாகவும் இவன் இருப்பான்; அன்னாதனாகவும் இருப்பான்' என்று நம்மை அனுக்கிரஹம் செய்யும் வாக்கியம்.

அன்னவான் - அன்னத்தை உடையவன். நிறைய நிலங்கள் இருக்கிறது. அதில் விளைந்து வரும் தான்யம் மூட்டை மூட்டையாய் அவன் வீட்டை நிரப்புகிறது. உடனே வேதம் என்ன சொல்கிறது...? 'அன்னத்தைச் சாப்பிடக் கொடுத்து வைத்தவனாகவும் இரு...' என்கிறது.

'அன்னத்தைப் பெற்றால் மட்டும் போதாது. அதை அனுபவிக்கவும் செய்ய வேண்டும்...' என்கிறது வேதம்.

உடனே நமக்குச் சந்தேகம் வரும் - 'இதைப்போய் வேதம் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? வீட்டிலே பிரசாதம் தயார் பண்ணினால் உடனே சாப்பிட வேண்டுமென்று தோன்றுகிறதே. சொல்லிக் கொடுக்காமல் வரும் வித்தை இது ஒன்றுதானே...?'

நித்யம் சாப்பிடுவதற்குக் கூட நியமம் சொல்கிறது வேதம்: சன்யாஸி நித்யம் எட்டு கவளம் சாப்பிட வேண்டும்: வானப்பிரஸ்தாசரமத்திலே இருப்போர் 16 கவளம் சாப்பிடலாம்; கிரஹஸ்தாச்ரமர்கள் 32 கவளம் உட்கொள்ளலாம். இதெல்லாம் ஒரு வேளைக்கு என்று நினைக்கக் கூடாது; இரண்டு வேளைக்கும் சேர்த்துத்தான் சொல்லப்பட்டது இந்த அளவு.

'இப்படி நியமம் சொல்கிற வேதமே சாப்பிடக் கொடுத்து வைத்தவனாகவும் இரு' என்று ஏன் சொல்ல வேண்டும்...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவனுக்குச் சொந்த நிலத்தில் நிறைய தானியம் விளைந்து வந்தாலும், மருத்துவர் கையைப் பிடித்துப் பார்த்துச் சொல்கிறார்: 'சாப்பாட்டை அறவே குறைத்து விடு! அதுவும் இரவில் அடியோடு உணவு கூடாது...' இப்படிப்பட்டவன் மூட்டை மூட்டையாய் அரிசி வந்து இறங்குவதைப் பார்ப்பதோடு திருப்தியாயிருக்க வேண்டியதுதான்! அதனால்தான் 'நன்றாகச் சாப்பிடக் கூடிய நிலை கடைசி வரை வாய்க்கட்டும்' என்று வேதம் சொல்கிறது. இந்த உபநிஷத் வாக்கியம் கிருஷ்ணாவ தாரத்திலே நன்றாகப் பொருந்தியிருக்கிறது.

எப்படி....?

அன்னம் என்று உபநிஷத் எதைச் சொல்கிறது என்றால், பரப்ரும்மத்தைச் சொல்கிறது. பரமாத்மாதான் அன்னம். - அந்த அன்னத்தைப் பெற்றவனாகவும் இரு; அன்னத்தை அனுபவிக்க வல்லவனாகவும் இரு என்பது உட்பொருள்.

தேவகி - வசுதேவர் என்கிற தம்பதி அன்னத்தைப் பெற்றார்கள் - அந்த கிருஷ்ணனைப் பெற்றார்கள். ஆனால் அவனை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே! எல்லா பாக்கியமும் தெய்வ நங்கை யசோதை அல்லவா அடைந்தாள்! நந்தகோபனும் யசோதையும் அன்னா தர்கள்; தேவகி - வசுதேவன் அன்னவான்கள்.

'கிருஷ்ணன் அங்கு தோன்றி இங்கு வந்தான்' என்பதை உபநிஷத் எத்தனை அழகாகச் சொல்கிறது பாருங்கள்!

பகவானை அணுஅணுவாக அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதை இழந்துவிட்டோமானால் பெரிய வருத்தம். அந்த எம்பெருமானை ஒரு கணம் நினைக்காமல் போனாலும் பெரிய விசாரம். - எதையோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இழந்த மாதிரி. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு, 'ஒரு க்ஷணம் ஒரு யுகமாக இருக்கிறதே' என்று கோபிகாஸ்த்ரீகள் விசேஷமாக அனுபவித்திருக்கிறார்கள்.

தேவகி நந்தனனாகத் தோன்றியவன் சர்வ லோகத்துக்கும் காரண பூதன்; சர்வ லோகத்துக்கும் நாதன்; அவன் சரித்திரத்தை நினைத்தோமேயானால் பாவம் நம்மை விட்டுப் போய்விடும். ஆகையினால்தான் பரமாத்மா அந்த அவதாரத்தையும் அந்த லீலைகளையும் சேர்த்தே சொன்னான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எங்கே அவ்வாறு சொல்லியிருக்கிறான் என்று கேட்டால், பகவத் கீதையிலே நான்காவது அத்தியாயத்திலே.

"ஹே, அர்ஜுனா! இந்தக் கர்ம யோகம் இப்போது உனக்குச் சொன்னேனே... அதை இப்போதுதான் முதன் முதலாகச் சொன்னேன் என்று நினைக்காதே. இதற்கு முன்னாடி அந்த சூரியனுக்கு இதைச் சொல்லியிருக்கிறேன். சூரியன் மனுவுக்குச் சொன்னான். மனு, அதை இக்ஷ்வாகுவுக்குச் சொன்னான். இப்படி, ஒருவர் பின் ஒருவராகச் சொல்லப்பட்டு, தரிக்கப்பட்டு, கால வெள்ளோட்டத்திலே அது நஷ்டத்தை அடைந்தது...

"உயர்ந்த விஷயத்தைச் சொல்பவர்கள் இல்லாததாலும், உயர்ந்த விஷயங்களெல்லாம் மறைக்கப்பட்டு, சாமான்ய விஷயங்கள் உலகத்திலே நடையாட ஆரம்பித்தன. உயர்ந்த விஷயங்களை சிஷ்யனுக்கோ அல்லது புத்ரனுக்கோதான் சொல்லலாம் - வேறு யாருக்கும் சொல்லக்கூடாது என்கிறது சாஸ்திரம்.

"அதனால் உன்னை நான் இப்போது பரிபூரண சிஷ்யனாகவும் தோழனாகவும் ஏற்று இந்த உயர்ந்த விஷயத்தைச் சொன்னேன். இதை ரொம்ப பத்திரமாக நீ வைத்துக் கொள்ள வேண்டும்..' என்றான் பரமாத்மா.

அர்ஜுனன் சிரித்தான்.

"எதற்குச் சிரிக்கிறாய்?" என்றார் பகவான்.

"உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன் - நீ புளுகிலே வல்லவன் என்று - இப்போதுதான் அதைப் பிரத்யக்ஷமாய்ப் பார்க்கிறேன்..."

பகவான் பார்த்தான் - "நான் பொய் சொல்கிறேனா? எதையடா பொய் என்கிறாய்?" என்று கேட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடனே அர்ஜுனன் சற்று பின்வாங்கி, "அதைச் சொல்கிற தைரியம் எனக்கு இல்லை. பொய் என்று சொல்ல முடியாது - நீ சொல்வது எனக்குப் புரியவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்..." என்றான்.

பகவான் திரும்பவும் கேட்டான்: "எது புரியவில்லை...?"

"இப்போது எனக்கு நீ சாரதியாய் இங்கே அமர்ந்திருக்கிறாய். இந்த இருபத்தெட்டாவது கலியுகத்திலே என்னுடன் நீயும் பிறந்திருக்கிறாய்... இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முன்பு அந்த சூரியனுக்கும் நீயே சொன்னதாகச் சொல்கிறாயே அது எப்படிப் பொருந்தும்? அப்போதும் நீ இருந்தாயா...?"

- இந்த இடத்திலே அர்ஜுனன் இப்படிக் கேட்டதாலே பரமாத்மா தன் சுவபாவத்தைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. கர்ம யோகம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவன் திசை மாறி விளக்கம் சொன்னான்:

"அர்ஜுனா! எனக்கும் எத்தனையோ ஜன்மாக்கள் கடந்தன. உனக்கும் எத்தனையோ ஜன்மாக்கள் கடந்தன. ஆனால் ஒன்றை நீ கவனிக்க வேண்டும் - உன்னுடைய முந்தைய ஜன்மாக்கள் என்னென்ன என்பதை நீ சொல்ல முடியுமா...? ஆனால், என்னைக் கேள். என் ஜன்ம பரம்பரை அத்தனையையும் சொல்வேன். ஆகையினாலே உன்னை வைத்து என்னை அளக்கிறாயே... அது எப்படி சரியாகும்? உன்னைக் கொண்டு என்னை எடை போடாதே!" என்றான்.

இதனால் என்ன தெரிகிறது...? அவதார காலங்களிலும் பகவான் பரிபூரண ஞானியாக வந்து அவதரிக்கிறான். எப்போதும் பிரகாசிக்கும்படியான ஞானம் அவனுடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனுடைய பிறப்புக்குக் காரணம் கர்ம வினை அல்ல, ஆத்ம மாயை! ஆத்ம மாயை என்றால் 'விருப்பம்' - அவனுடை.ய இச்சை என்று பொருள். எப்போது வந்து பிறக்க வேண்டும் என்று நினைக்கிறானோ அப்போ தெல்லாம் வந்து பிறக்கிறான். - தர்மம் குறையும் போதெல்லாம் வந்து பிறக்கிறான்.

'ஒரு ஹிரண்ய கசிபு, ஒரு ராவணன் இருக்கும்போது பகவான் அவதாரம் பண்ணினானே... இப்போது தற்குறிகளாக நிறையப் பேர் இருக்கிறார்களே... ஏன் அவன் அவதாரம் பண்ணக் கூடாது...?' என்று கேள்வி கேட்கலாம்.

பதில் இருக்கிறது...



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

44

ஆயிரமாயிரம் ஹிரண்ய கசிபுகளும் ராவணன்களும் இருந்தும் பகவான் ஏன் இன்று அவதாரம் பண்ணவில்லை...?

ஏனென்றால், ஒரு பிரஹலாதன் கூட இன்று இல்லை! அவன் அவதாரம் பண்ணி வந்தானானால் ஒரு பிரஹலாதனாவது கிடைப்பானா?!

இதன் தேரிய பொருள் என்னவென்றால், பகவான் அவதாரத்துக்கு சாது ரக்ஷணம்தான் முக்கிய குறிக்கோள்; துஷ்ட வினாசனம் என்பது அடுத்தபட்சம்தான். நெல் பயிரிட்டால் அங்கே புல் முளைக்குமா...? தானாகவே அழிந்து போகுமல்லவா? அது போல் சாது பரித்ராணம் தான் முக்கியம் பகவானுக்கு. அதை நிகழ்த்தும்போது துஷ்ட நிக்ரஹம் தானாக நடைபெறுகிறது.

சாதுக்கள் ரக்ஷணத்தையும் வைகுண்டத்திலிருந்த படியே அவனால் பண்ண முடியாதா என்ன? தாராளமாய் முடியும். ஆனால் அவர்கள் (சாதுக்கள்) அவனை அழைக்கிறார்கள். பரமாத்மாவும் இறங்கி வருகிறான்.

இதைத்தான் கிருஷ்ணாவதாரம் காட்டுகிறது. அதிலே அவன் பிறப்பு, லீலைகள் இரண்டுமே திவ்யம் என்று கொண்டாடுகிறான். 'அதை உள்ளபடி உணரக்கூடியவன் ஒருவன் இருந்தால், அவன் மறுபடி பிறக்க மாட்டான்; என்னையே வந்து அடைவான்' என்று பரமாத்மா தமது அவதார ரஹஸ்யத்தை வெளிப்படுத்துகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த அவதார ரகசிய சாரமானது ரொம்பவும் முக்கியம். அது இருந்தால் மோக்ஷத்தை வாங்கிக் கொடுக்கும். ஆகையினாலே,

- பகவான் அவதாரமானது இந்திர ஜாலமல்ல;
- பகவானுடைய அவதாரத்திலே அவன் ஞானத்துக்குக் குறைவில்லை.
- அவன் அவதாரம் புண்ணிய/பாவத்தினால் ஏற்படும் மானுட அவதாரம் போலில்லை.
- சாது பரிபாலனம் பண்ணுவதற்காக ஏற்பட்டது.
- துஷ்ட நிக்ரஹத்துக்காக ஏற்பட்டது.
- தர்மம் வாட்டமுறும்போது, அதர்மம் தழைக்கும் போது, அவன் வந்து அவதரிக்கிறான்.

– இந்த ஆறு விஷயங்களையும் நாம் மறவாமல் இருக்க வேண்டும். இதை நினைத்தாலே பாவமெல்லாம் போய்விடும்.

அதனால்தான் பகவான், அர்ஜுனனிடத்திலே தன் அவதார மகிமையைத் தானே சொன்னான்.

'புத்திமான்களுள் முதலிடத்திலே வைக்கப்படக் கூடியவர்கள் பகவானுடைய பிறப்பின் ரகசியத்தை நன்கு உணர்கிறார்கள்' என்று வேதமும் சொல்கிறது.

அவர்கள் என்ன உணர்கிறார்கள்?

பிறப்பற்றவன் பலபடியாகப் பிறக்கிறான் என்று உணர்கிறார்கள்.

இப்படிச் சொன்னால் முரண்பாடாக இல்லையா? 'பிறப்பற்றவன்' என்றால் நம்மைப் போல் பிறப்பற்றவன் என்று அர்த்தம் – ஆனால் அவனே தன்னுடைய சங்கல்பத்தினால் பல படியாக வந்து பிறக்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் பிறந்தால் அது அவனுக்குப் பெருமை; நாம் பிறந்தால் நமக்குச் சிறுமை, இழுக்கு!

பிறவியே அற்றவன் பிறக்கிறான் என்றால் பெருமைதானே.

'எங்கள் பிறப்பை அறுக்க, எங்கள் அஞ்ஞானத்தைப் போக்க, பிறவியே இல்லாத நீ அவதரித்தாயே!' என்று பேசினார் நம்மாழ்வார்.

பகவானுடைய இந்த அவதார சரித்திரம், லீலைகள் எல்லாமே பாவத்தைப் போக்கடிக்கக் கூடியவை.

கிருஷ்ணாவதாரத்தில் பல இடங்களில் நவநீத சௌர்யம் (வெண்ணெய் திருடுதல்) என்கிற பெரிய விருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்ணெய்யிலே பகவானுக்கு விருப்பம் அதிகம் - வெண்தயிர் தோய்ந்த செவ்வாயன் அவன்!

வெண்ணெய்யை அவன் விழுங்கிவிட்டு வெறுங் கலத்தை நடுக்கூடத்திலே வைத்துத் தட்டுவானாம். அதன் ஓசை ஓம்! ஓம்! என்று பிரணவம் போல் ஒலிக்கிறதாம் - பெரியாழ்வார் பாடுகிறார்!

நம் கிரஹத்திலே குழந்தை அப்படி அடித்தால் வெறும் ஒலிதான் கேட்கும்; ஆனால் தெய்வக் குழந்தை பிரணவத்தைக் கேட்டு ஆனந்தப்படுகிறது.

இப்படிப்பட்ட குழந்தையைப் பார்க்க பூதனை வருகிறாள். அவித்யையின் உருவமாக, மாயையின் ஸ்வரூபமாக வருகிறாள். குழந்தைக்கு ஸ்தன்யபானம் பண்ணி வைக்க வருகிறாள். அது தொட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறது.

எப்படிப்பட்ட தொட்டில்...? மாணிக்கம் கட்டி, வைரம் இடைகட்டி, ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில் - அதனருகே பூதனை வந்து யசோதை வடிவத்தில் நிற்கிறாள். அதைப் பார்த்து விட்டது குழந்தை... துளிக்கூட அவளைப் பார்த்து பயப்படவில்லை. கண்ணை மூடித் தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்கிறது.

நிஜ யசோதை வெளியே புறப்பட்டுப் போய் விட்டாள். குழந்தை தூங்குகிறதே என்று. இது (குழந்தை) வேகமாக அழ ஆரம்பிக்கிறது. அழுகை ஓசையிலே சாம வேதம் கேட்கிறது! தெய்வக் குழந்தையல்லவா... நடந்தால் வேதம்; நின்றால் வேதம்; சிரித்தால் வேதம்; அது அழுதாலும் வேதம்தான்.

எல்லா மஹரிஷிகளும் அக்னிஹோத்திரத்துடன் நந்தகோபன் வீட்டு மாட்டுக் கொட்டகையில் வந்து நிற்கிறார்களாம், அந்த அழுகை ஒலி கேட்டு! அப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிசயமாக சாம வேதத்தில் அழுகிறது அந்தக் குழந்தை! கையைக் காலை உதைத்துக் கொண்டு அழுகிறது.

பூதனை ஏமாந்து போகிறாள். அது தன்னை நிஜமாக தாயென்று எண்ணிக் கொண்டதாக நம்பி வருகிறாள். பாலோடு சேர்த்து அவள் பிராணனையும் இழுத்துக் கொண்டு விடுகிறது குழந்தை.

- இங்கே உட்கார்ந்து இந்தக் கதையைச் சொல்வதாலும் கேட்பதாலும் என்ன லாபம்...

இதை யார் சொல்கிறார்களோ, யார் யார் கேட்கிறார்களோ, அவர்களெல்லாம் மறுபடியும் தாயிடம் பால் பருக மாட்டார்கள். - அதாவது இனி அவர்களுக்குப் பிறப்பு இல்லை!

அப்படி பரமாத்மா பூதனையை சம்ஹாரம் பண்ணினான். நம் பிறப்பை அறுக்கக் கூடியவன் அவன் என்பதை எந்தவொரு லீலையும் காட்டி நிற்கிறது.

இதன் பிற்பாடு பரமாத்மா பல இடங்களில் வெண்ணெய்யைத் திருடுகிறான்.

உலகத்திலே ஒரு திருட்டு - ஒருத்தர் ஒரு கிரஹத்திலிருந்து வெள்ளி சொம்பைத் திருடுகிறார். அதை இன்னொருத்தர் அவரிடமிருந்து திருடி விடுகிறார்! ஆனால் திருட்டுத்தனம் என்பதே திருடுமா...? பகவானின் அவதார விசேஷத்தில் அது நடக்கிறது... அவன் வெண்ணெய் திருடுகிறான் - அந்தத் திருட்டுத் தன்மை நம் பாவம் மொத்தத்தையும் திருடிக் கொள்கிறது!

அவன் காராகிரஹத்திலே (சிறை) பிறந்தான் என்றால், நமது சிறைவாசம் விடுபடுகிறது. அவன் அந்த ராத்திரியில் பிறந்தான் என்றால் நம் அஞ்ஞான இருள் நீங்கி விடுகிறது! இப்படி கிருஷ்ண சரித்திரத்தை நினைக்க நினைக்க நமக்கு எதிர்த்தட்டான பலன்கள் கிடைக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமது சர்வ பாவங்களையும் போக்கடித்து விடுகிறான் எம்பெருமான்.

ஒரு பெரிய பானை. அதிலே பெரிய மத்தைப் போட்டுக் கடைகிறாள் யசோதை. 'டர்!டர்!' என்று ஒலி - புலி உருமுகிற மாதிரி சப்தம் வருகிறது! வைகுண்ட லோகத்தில் போய் எதிரொலிக்கிறதாம் அது!

எங்கோ போய்க் கொண்டிருந்த குழந்தை கிருஷ்ணன், அவள் கடைகிறதைப் பார்க்கிறான். மத்து, பானைக்குள்ளே போவதும் வருவதுமாக 'குங் குங் குங்' என்று ஓசை! வேதத்தில் கனம் சொல்கிறபோது எழுகிற மாதிரியான ஓசை கேட்கிறது.

ஓடி வந்து அம்மாவின் முதுகிலே கை வைத்தது குழந்தை.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பானை நடுவிலே 'குங் குங்'ன்னு ஓசை வருகிறதே, அது என்ன அம்மா?" என்று கேட்டது.

நடுங்கிப் போய் விட்டாள் யசோதை! ஏனென்றால் மொத்தத்தையும் துவம்சம் பண்ணிவிடும் குழந்தை! வெண்ணெய்யை வைத்திருந்து மெதுவாகக் கொடுக்க வேண்டும் என்பது அவளுக்கு ஆசை. குழந்தையை வெளியே துரத்த வேண்டும் என்பதற்காக. "அதுக்குள்ளே பூதம் இருக்கு... உன்னைப் பிடிச்சுக்கும். வெளியிலே ஓடிப் போய்விடு!" என்று மிரட்டினாள்.

குழந்தையோ, வெளியிலே ஓடாமல், பானை பக்கத்திலே போய் அதைப் பிடித்துக் கொண்டு நிற்கிறது. உலகத்தையே விழுங்கக் கூடிய 'பூதம்' இந்த பூதத்துக்குப் போய் பயப்படுமா?

"அம்மா! என்கிட்டே பொய் சொல்லலாமா? இதுக்குள்ளே நிஜமாகவே பூதம் இருக்கா...?"

"சத்யமாகச் சொல்றேன்டா! பூதமிருக்கு... அது உன்னைப் பிடிச்சுக்கும்..."

"ஏன்மா! பூதம் உன்னைப் பிடிச்சுக்காதா?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை யசோதைக்கு... சமாளித்துக் கொண்டு பேசுகிறாள்: "நீ சின்னக் குழந்தையல்லவா? உன்னைப் பிடித்துக் கொள்ளும்; நான் பெரியவள் என்பதால் என்னைப் பிடிச்சாலும் தாங்கிக் கொள்வேன்..."

பிற்காலத்தில் உலகுக்கே கீதையைச் சொல்லவிருந்த குழந்தை, இந்த நேரத்திலே அம்மாவுக்கு ஒரு குட்டி கீதை சொல்கிறது:

"அம்மா! நீ சொல்வது நன்றாயிருக்கா? என்னை வெளியே போகச் சொல்றியே. நான் போன பிற்பாடு அந்த பூதம் உன்னைப் பிடித்துக் கொண்டால்... உலகத்திலே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளவர்களெல்லாம், என்னை என்ன சொல்லுவார்கள்? 'அம்மாவை பூதத்திடம் காட்டிக் கொடுத்த அல்பமான பிள்ளை!' என்று அல்லவா என்னைச் சொல்லுவார்கள்! அம்மாவை ரக்ஷிக்க முடியாதவன் இருந்து என்ன பயன்?"

உடனே அவள் கண்களிலே தாரை தாரையாக நீர்! என்ன பேசுவதென்று தெரியவில்லை யசோதைக்கு. தழுதழுத்து... "குழந்தாய்! என்னை என்னடா செய்யச் சொல்கிறாய்...?" என்று கேட்கிறாள்.

"முதலிலேயே என் யோசனையைக் கேட்டிருக்கலா மில்லையா... சொல்லியிருப்பேனே! யோசனை சொல்வதற்காகப் பிறந்தவன்தானே நான்..."

"இப்போதுதான் சொல்லேன் உன் யோசனையை!"



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அம்மா! உன் இரண்டு கைகளையும் பூரணமாக பானைக்குள் விடு. அதற்குள் பூதம் இருக்கு என்றாயே, அதை எடுத்து என் கையிலே கொடு... அதை நான் விழுங்கி விடுகிறேன்..." - தாயாரிடம் சொல்லி, சிரித்தபடி பானையை எட்டி உதைத்து விட்டது குழந்தை! வெண்ணெய்யை எடுத்து விழுங்கி விட்டு மோரை அலட்சியப்படுத்திவிட்டு குடுகுடுவென்று ஓடுகிறது!

எல்லோரும் குழந்தையைத் துரத்திக் கொண்டு ஓடுகிறார்கள். ஒரு கோபிகாஸ்த்ரீ கிரஹத்திலே நுழைந்தது அது. இந்தக் கருங்குழந்தை நுழைந்ததும் அந்த இடம் மேலும் இருட்டாகி விட்டது.

கறுப்புப் பானையிலே கறுப்பு மடக்கு போட்டு வெண்ணெய்யை மூடி வைத்திருக்கிறார்கள். பானையைத் திறந்து வெண்ணெய்யை எடுத்து வாயிலே போட்டுக் கொள்கிறது. அந்த நேரத்திலே அந்த கோபிகாஸ்த்ரீ வந்து விட்டாள். நடுங்கிப் போய் விட்டது குழந்தை. இரண்டு பானைகளுக்கு நடுவிலே போய் உட்கார்ந்து கொண்டது!

உட்கார்ந்தால்... தலையில் இருக்கிற ஆபரணம் 'கிணி கிணி' என்று ஆடி, ஒலி ஒழுப்புகிறது. கழுத்து ஆபரணம் 'கண கண' வென்கிறது! இடையிலே உள்ள ஆபரணம் கலகலவென்கிறது... திருவடி ஆபரணமோ 'ஜில்ஜில்' என்று ஒலிக்கிறது. ஒடுக்கி உட்கார உட்கார, ஒலி அதிகமாகிறது!

குழந்தை அந்த ஆபரணங்களைப் பார்த்துக் கேட்கிறது: "நான் உங்களைத் தாங்குகிறேனே... இப்படி நீங்கள் ஒலிக்கலாமா? அவள் கண்டு பிடித்தால் என் அம்மாவிடம் போய்ச் சொல்வாளே... அப்புறம் அவர் என் முதுகில் ஒலிக்கச் செய்து விடுவாரே!" - எல்லா ஆபரணங்களையும் பார்த்துக் கைகூப்பிக் கேட்கிறதாம் குழந்தை!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசித் விஷயங்களை, ஆபரணங்களையெல்லாம் வந்தனம் பண்ணுகிறானே பகவான்... நாம் அவனை வந்தனம் செய்ய வேண்டாமா! ரிக் வேதம் சிரஸிலே ஒலிக்கிறது; விசேஷ சக்தியுடன் இருக்கும்படியான யஜுர் வேதம் கண்டத்தில்; அதர்வண வேதம் இடையிலே ஒலிக்கிறது... சாமம் திருவடியில் ஒலிக்கிறது.

ஒலிக்காமல் இருங்கள் என்று பகவான் கைகூப்புகிற அழகே அழகு!

இன்னொரு கிரஹத்திலே போய் உறியைத் தொடுகிறது குழந்தை. தொட்ட கணத்திலே கணகண வென்று மணி அடிக்க ஆரம்பித்து விடுகிறது!

"ஏ மணியே! நீ இப்படி அடித்து என்னைக் காட்டிக் கொடுக்கிறாயே...?" என்கிறது குழந்தை.

"அடியேன், அடியேன்!" என்று நயமாய் பதில் சொல்கிறது மணி.

குழந்தை பானையை எடுத்து வைத்துக்கொண்டு வாயிலே வெண்ணெய்யைப் போட்டுக் கொள்ளும் கணத்தில் மணி திரும்பவும் அடிக்க ஆரம்பித்தது.

"அடிக்க மாட்டேன் என்று சொன்னதால் தானே வாயில் போட்டுக் கொண்டேன்... இப்படி நீ அடிக்கறியே, இது பாவ்யமா!" - குழந்தை கேட்டது. மணியோ, மணியான வார்த்தையால் பதில் சொன்னது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

45

மணி சொன்ன மணியான வார்த்தை இதுதான் - நாம் எப்போதும் ஹ்ருதயத்திலே வைத்துக் கொள்ள வேண்டிய வார்த்தை:

"ஹே பிரபு! ஜகன்னாதா! சர்வலோக சரண்யா! தங்களுக்கு நிவேதனம் ஆகிக் கொண்டிருக்கும் போது நான் பக்கத்தில் இருந்து அடிக்காமல் போனால் எனக்கு ஏது பிரயோஜனம்!?"

- பகவான் வெண்ணெய்யை வாயில் போட்டுக் கொண்டதைத்தான் 'நிவேதனம்' என்றது அந்த மணி!

"நான் ஸ்வரூப லாபம் பெற வேண்டாமா? நீங்கள் உண்ணும் நேரம் தேவதைகள் வரவேண்டும்; ராக்ஷஸர்கள் ஓட வேண்டும்; அந்த பிரணவம் த்வனிக்க வேண்டும்... அதனாலேதான் அடித்தேன்." மணி அடிப்பது கூட பெரியோரிடத்திலே பழகி அடிக்க வேண்டும் என்பது இதன் மூலம் தெரிகிறது. ஒவ்வொருவிதமாக அடிப்பதற்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கிறது.

தூரத்தில் இருப்பவர்கள் கூட, மணி அடிக்கும் விதத்தைக் கொண்டே பகவானுக்கு என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

மணி சொன்ன பதிலுக்கு மறு பேச்சு இல்லை பரமாத்மாவிடம்! குடுகுடுவென்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். ஊர்க் கடைசியிலே ஒரு வீடு... அந்த வீட்டுக்குள் போய்ப் புகுந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதிர்பாராத சமயத்திலே வந்து நிற்பதுதான் பகவானுடைய குணவிசேஷம்! வருவான் என்று நினைக்கும் நேரத்தில் வரமாட்டான்; வர மாட்டான் என இருக்கும்போது வந்து சேருவான்.

அப்படி எதிர்பாராமல் பகவான் நுழைந்த வீடு ததிபாண்டன் என்கிறவனுடைய வீடு. அந்த வீட்டுக்குள்ளே நுழைந்து ஒவ்வொரு பானையாகத் திறந்து பார்க்கிறது குழந்தை. எல்லாப் பானைகளிலும் தயிர் நிரம்பிக் காணப்படுகிறது. கோபிகாஸ்த்ரீகள் குழந்தையைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். கடைசியிலே பார்த்தால், ஒரு பானை காலியாக இருக்கிறது!

இந்தக் குழந்தை, அந்தக் காலி பானைமேலே ஏறி, உள்ளே தொப்பென்று குதித்து உட்கார்ந்து கொண்டது.

இதைப் பார்த்துக் கொண்டே இருந்தான் ததிபாண்டன்...

'ஓஹோ! இன்னைக்கு இந்தக் கண்ணனை விடக்கூடாது!' என்று மனத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டான். பானை மேலே மூடி போட்ட மாதிரி ஏறி உட்கார்ந்து விட்டான்!

யசோதையும் கோபிகாஸ்த்ரீகளும் அருகே வந்தார்கள். யசோதை கேட்டாள்:

"ததிபாண்டா! என் குழந்தை கிருஷ்ணன் இங்கே வந்தானா...?"

அப்பட்டமான பொய்யை அழகாகச் சொல்கிறான் ததிபாண்டன்:

"உன் குழந்தை கிருஷ்ணனா? இந்தப் பக்கமே வரவில்லையே...! அவனை நான் பார்த்தே ஆறு மாதமாகிறதே!"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொய் சொன்ன ததிபாண்டனுக்கு மோக்ஷம் கிடைத்தது! உண்மையைப் பேசிய தசரதனுக்கு நரகப்பிராயமான சுவர்க்கம்தான் கிடைத்தது!

தசரதனைக் காட்டிலும் ததிபாண்டன் உயர்ந்தவன் என்பதைக் காட்டுகிறார்கள் வியாக்யானக்காரர்கள்:

'விகர்மா' என்றால் பொய் சொல்வது. ஆனால் சில நேரத்திலே, பொய் சொல்வதே கர்மாவாக ஆகிவிடுகிறது! இந்திந்த இடத்திலே பொய் சொல்லலாம் என்று சாஸ்திரமே விதித்திருக்கிறது

உதாரணமாய், விவாக காலத்திலே பொய் சொல்லலாம் என்று இருக்கிறது. விவாக காலம் என்றால் நிச்சயத்தார்த்தத்திலேயிருந்தே பொய் சொல்லலாம் என்று அனுமதி கிடையாது! அந்தக் கல்யாணம் நடக்கவிருக்கிற கட்டத்திலே அது நின்று போய் விடுமோ என்கிற அபாயம் இருந்தால் சொல்லலாம்.

ஒருத்தன் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு பசுவை வெட்டித்தள்ள ஓடுகிறான். அந்தப் பசு 'அம்மா' என்றபடி ஆசிரமத்திலே நுழைந்து விட்டது. அங்கேயிருந்த மஹரிக்ஷியைப் பார்த்து, கத்தி ஏந்தியவன் கேட்கிறான்:

"பசு வந்ததா இந்தப் ப்க்கம்?"

அவர் ரொம்ப கெட்டிக்காரர். பொய் சொல் லாமலேயே தப்பிக்கிறார்:

'கண் பார்க்கும் ஆனால் பேசாது; வாய் பேசும், ஆனால் பார்க்காது' என்று பதில் சொல்கிறார்.

கொலை செய்ய வந்தவன், 'ஏதோ பைத்தியம் உளறுகிறது' என்று புறப்பட்டுப் போய் விட்டான்.

இப்படி சாமர்த்தியமாய் பேசுவது ஒருவகை என்றால் ததிபாண்டனோ பொய்யே பேசினான். அவனுக்கு எப்படி மோக்ஷம் கிடைத்தது...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாமான்ய தர்மம், விசேஷ .தர்மம் என்று இரண்டு வகை சொல்வார்கள். விசேஷ தர்மம் பண்ண வேண்டிய காலம் பக்கத்திலே வந்து விட்டால் சாமான்ய தர்மத்தை விட்டுவிட்டு அந்த விசேஷ தர்மத்தைத்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

வீதி புறப்பாடு நடக்கிறது. பகவான் நாலு மணிக்குப் புறப்படுகிறான். வேத கோஷ்டி, எழுந்தருளப் பண்ணக்கூடியவர்கள், பரிசாரகர்கள். அர்ச்சகர்கள் என்று எல்லோரும் அவனை எழுந்தருளப் பண்ணி வந்து கொண்டிருக்கிறார்கள்.

கோயிலுக்குப் போய்ச் சேர எட்டரை மணி ஆகும். ஒரு வீதியிலே பகவான் வந்து கொண்டிருக்கும்போது ஆறேகால் மணி ஆயிற்று...

என்ன சமயம் அது? சந்தியாவந்தனத்துக்கான சமயமல்லவா? உடனே, சுவாமியை, 'இங்கேயே நின்னுகொண்டிரு... நாங்கள் சந்தி பண்ணிவிட்டு வந்து திரும்பவும் எழுந்தருளப் பண்ணுகிறோம்...' என்று சொல்லலாமா? நடுத்தெருவிலே அவனை நிறுத்தி வைத்து விட்டு வரலாமா?.

இதற்கு ஒரு வழியிருக்கிறது. பகவானைக் கொண்டு போய் கோவிலில் எழுந்தருளப் பண்ணியபிறகு, காலாதீத பிராயச்சித்தார்த்தமாக, இன்னொரு அர்க்கியத்தைக் கூடுதலாக விட்டு சந்தியாவந்தனத்தை முடிக்கலாம்.

இப்படியொரு விதிவிலக்கு இருக்கிறதனாலே நித்யம் இதையே பண்ணக்கூடாது! என்றைக்கு முடியாமல் போகிறதோ அன்றைக்கு மட்டும் பண்ணலாம்.

பகவானை எழுந்தருளப் பண்ணுகிற விசேஷ தர்மத்திலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தியாவந்தனம் என்பது சாமானிய தர்மமாகப் போய்விடுகிறது.

அந்த மாதிரிதான் விசேஷ தர்மத்தை பானைக்குள் இருக்கும் பகவானைக் காத்தலாகிய தர்மத்தைக் காப்பதற்காக, ததிபாண்டன் உண்மை பேசுதல் என்கிற சாமானிய தர்மத்தைக் கைவிட்டான். 'கிருஷ்ணனைப் பார்க்கவேயில்லையே!' என்றான். அவனுக்கு மோக்ஷம் கிடைத்தது.

தசரதன் இருக்கிறானே... அவன் என்ன செய்தான்...? விசேஷ தர்மமாகிய ராமனைக் காட்டுக்கு அனுப்பி, 'கைகேயிக்குக் கொடுத்த வாக்கு' என்கிற சாமான்ய தர்மத்தைக் காத்தான். அவனுக்கு வெறும் சொர்க்கம்தான் கிடைத்தது. ததிபாண்டனுக்கோ மோக்ஷமே கிடைத்தது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ததிபாண்டன் சொன்ன பொய்யைக் கேட்டு எல்லோரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள். என்ன ஆச்சரியம் பாருங்கள்! அவர்கள் போன பிற்பாடு, பானைக்குள் இருக்கும் குழந்தை ததிபாண்டனை ஒரு குத்து குத்துகிறது. "எத்தனை நாழி இப்படி உட்கார்ந்திருப்பாய்? எனக்கு மூச்சு வாங்குகிறது...!" என்கிறது குழந்தை!

அதற்கு அவன் சொல்கிறான்:

"ஹே கிருஷ்ணா! உனக்கு இந்தப் பானையிலே யிருந்து மோக்ஷம் வேண்டுமானால் எனக்கு நீ மோக்ஷம் தர வேண்டும்..."

"உனக்கு மோக்ஷமா?"

"ஆமாம். இந்தப் பிறவியாகிற பானையிலேருந்து எனக்கு மோக்ஷம் வேண்டும்..."

இதைக் கேட்டு குழந்தை சொல்கிறது:

"உனக்கு மட்டும் என்னடா மோக்ஷம், அந்தப் பானைக்கும் சேர்த்துக் கொடுப்பேனாக்கும் மோக்ஷம்!"

பானைக்கும் சேர்த்துக் கொடுப்பாயா...?"

"ஆமாம்!" என்று எழுந்தான் பகவான். சொன்னவுடனே, சொன்ன வண்ணம் செய்யும் பெருமான் அவன். புஷ்பக விமானம் விரைந்து வருகிறது... ததி பாண்டனோடு கூட அந்தப் பானையும் ஏறிக்கொண்டது விமானத்திலே! பானையும் வைகுண்டத்துக்குப் போனது. இப்போதும் நாம் வைகுண்டத்துக்குப் போனால் அந்தப் பானையைப் பார்க்கலாம்!

ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்கு அர்ச்சனை பண்ணும் பிள்ளைப் பெருமாள் அய்யங்காருக்கு இந்தப் பானை மோக்ஷமடைந்த சரித்திரம் நடையாடுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்ச்சனைத் தட்டைக் கீழே வைத்து விட்டு, "ரங்கநாதா! எனக்கு மோக்ஷம் கொடேன்..." என்று கேட்கிறார்!

அந்த ரங்கநாதனும் அவரோடு பேசுகிறான். "பிள்ளைப் பெருமாள் அய்யங்காரே... உனக்கு என்ன இன்றைய தினம் மோக்ஷத்திலே அதிக ருசி...?



"இன்றைக்கே போகவேண்டும் போலிருக்கிறதே சுவாமி..." என்கிறார் அவர்.

"அப்படியானால், நீர் என்ன கர்மயோகம் பண்ணியிருக்கிறீரா?" என்று பகவான் கேட்கிறார்.

"தெரியாது..."

"ஞான யோகம் பண்ணியிருக்கிறீரோ?"

"அறவே ஞான சூன்யம் நான்..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பக்தி யோகம் பண்ணியிருக்கிறீரா?"

"அந்தப் பக்கமே போனதில்லை..."

"சரணாகதி பண்ணியிருக்கிறீரா...?"

"தெரியாதே!"

"இதெல்லாம் எப்படியாவது போகட்டும்... என் பக்தனுக்கு ஒரு நாளாவது அன்னமிட்டிருக்கிறீரா..?"

"இல்லையே!"

"என் பக்தன் தங்க இடம் கொடுத்திருக்கிறீரா?"

"இல்லையே..."

"என் கதை சொல்கிற இடத்திலே போய்க் கேட்டதுண்டா...?"

"இல்லை!"

"எதற்கெடுத்தாலும் இல்லையே இல்லையே என்கிறீரே...?" என்று ரங்கநாதருக்குக் கோபம் வந்ததாம். படுத்துக் கொண்டிருந்த பெருமாள் எழுந்து உட்கார்ந்தார்.

அப்படி ரங்கநாதர் உட்கார்ந்த கோலத்தில் சேவித்தவர் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் மட்டும்தான். நாமெல்லாம் சயனத் திருக்கோலம்தானே பார்த்திருக்கிறோம்!

"என்ன அக்கிரமம்! மோக்ஷத்தை நீர் இவ்வளவு சுலபமாக விரும்புகிறீரே! மோக்ஷம் என்றால் ஏதோ கிள்ளுக்கீரை என நினைத்தீரோ? எதையாவது கேட்டால் 'இல்லையே,' 'தெரியாது' என்கிறீர். எதற்காவது 'ஆமாம்,' 'பண்ணியுள்ளேன்' என்று பதில் சொன்னால்தானே மோக்ஷம் தரலாம்... ஒன்றுமே பண்ணாத உமக்கு மோக்ஷத்தை எப்படிக் கொடுப்பது?"

இதைக் கேட்ட பிள்ளைப் பெருமாள் அய்யங்காருக்குக் கோபம் வந்துவிட்டது! இடுப்பில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வஸ்திரத்தை இழுத்துக் கட்டிக் கொண்டார். ரங்கநாதரிடம் அச்சமயம் அவர் கேட்ட கேள்வி இருக்கிறதே...?

அந்தக் கேள்வியைக் கேட்டு மீண்டும் படுத்த ரங்கநாதன் படுத்தவன்தான்! இன்று வரைக்கும் அவன் எழுந்திருக்கவேயில்லை!

அப்படியென்ன கேட்டாராம் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்...? ஒரு அத்தியாயம் பொறுங்கள், சொல்கிறேன்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

46

ரங்கநாதரைப் பார்த்து அப்படி என்ன கேட்டார் என்று நினைக்கிறீர்கள்...?

"என்னைப் பார்த்து இதைப் பண்ணினியா? அதைப் பண்ணினியா... என்று கேட்கிறாயே... அன்றைய தினம் ததிபாண்டன் வீட்டுப் பானைக்கு எப்படி மோக்ஷம் கொடுத்தாய்? அந்தப் பானை என்ன கர்மயோகம் பண்ணியதா? ஞான யோகமோ, பக்தி யோகமோ பண்ணியதா? அதற்கு உன்னை வந்திக்க மனமுண்டா இல்லை வணங்கத்தான் கைகள் உண்டா...? அந்த கடத்துக்கு மோக்ஷம் கொடுத்தாயே, அந்த விலை நான் பெற மாட்டேனா!" என்று கேட்டார்.

அந்தக் கேள்விதான் ரங்கநாதனை அப்படி அசத்தியது!

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் பக்தர்கள் பகவானை அப்படிப் போட்டுப் பிணைக்கிறார்கள்! ஒரு தர்ம சூக்ஷ்மத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி ததிபாண்டன் கதை. திரௌபதியைக் காத்த கதை என்று வரிசையாக அவன் சரித்திரத்தை மொத்தமும் அவன் எதிரிலே சொல்ல வேண்டும்.

'ஓஹோ! நம் சரித்திரம் மொத்தம் தெரிந்து வைத்திருக்கிறான் இவன்!' என்று பெருமாளே எண்ணும்படி சொல்ல வேண்டும்.

நம் உலகிலே யாராவது எகிறிக் குதித்தால், 'எனக்கு நீ யாருன்னு தெரியாதா? உங்கப்பா யாரு, உங்க தாத்தா

யாரு? எல்லாம் எனக்குத் தெரியுமாக்கும்!' என நாம் பேசுவதில்லையா? அப்படிப் பேசினால் எதிராளியும் நமக்குப் பணிந்து வருகிறார் இல்லையா...

அதே போல்தான் பகவான் எதிரில் நாம் அவ்வளவு சரித்திரத்தையும் ஒப்பிக்க கற்றுக் கொள்ளணும். அவன் லீலா ரசத்தை யார் யார் விரும்பி சிரவணம் பண்ணுகிறார்களோ அவர்களுடைய பயத்தைப் போக்கடித்து விடுகிறான்.

சங்கம், சக்கரம் முதலான பல ஆயுதங்களை ஏந்தியிருக்கிறான் எம்பெருமான். இவற்றுள் சங்கத்தின் பெருமையைச் சொல்லி முடியாது. 'சொல்லாழி வெண் சங்கே!' என்று சங்கத்தை அழைத்துத்தான் ஆண்டாள் பகவான் பெருமைகளைப் பாடினாள்.

சங்கத்தை அதர பல்லவத்தில் பொருத்தி 'பம் பம்'மென்று முழங்குகிறான். அதிலிருந்து எழும் த்வனி, பீஷ்ம துரோணாச்சார்யர்களுக்குப் பிரணவமாகக் கேட்கிறதாம்!

சக்கரமாகிய சுதர்ஸனத்தைப் பிரயோகம் செய்தால் அது என்ன சாதிக்குமோ அதையே இந்தச் சங்கம் ஒலியினாலே சாதிக்கிறது.

சக்கரத்தாழ்வாரும் உயர்ந்தவர்தான். விஷ்ணு மார்க்கத்தைக் காட்டக் கூடியதனாலே அவருக்குச் சுதர்ஸனாழ்வார் என்றே பெயர்.

சங்கம், சக்கரம் தவிர கத்தி, கதை என்று பல ஆயுதங்களும் தரித்துக் காட்சி அளிக்கிறான் பகவான். நரசிம்ம அவதாரத்தின் போதோ நகத்தையே ஆயுதமாகக் கொண்டு விட்டான்.

சங்கம், சக்கரம், வில், கட்கம் என எதுவானாலும் கையால் பற்றியிருக்க வேண்டும். நகம் இருக்கிறதே... அதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மட்டும் கையிலே பிடித்துக் கொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லை. அவன் உதறினாலும் அது கீழே விழாது. கூடவே இருக்கும்!

நவீனத்திலே நமக்கு எப்படி வியாமோகம் அதிகமோ அதே போல் பகவானுக்கும் ஈடுபாடு அதிகமாய் இருக்கிறது! நாராயணன் சக்கரத்தையே நவீனமாய் மாற்றி விட்டான். கைநகம் அதைத் தாங்குகிறது.

இந்தப் பெருமை மிகு கோலத்தோடு தோன்றுகிற நரசிம்மன் விஸ்வ சப்தத்தினாலே சொல்லப்படுகிறான்.

திவ்யாலங்காரங்களோடு காட்சி அளிக்கிற பகவான் தேவகி நந்தனன். அவனேதான் சங்கு - சக்ராயுதங்களோடு திருமலையிலே வாசம் செய்கிறான்.

ரங்கநாதரைத் திருவடியிலிருந்து திருமுடிவரை வர்ணிக்கும் திருப்பாணாழ்வார்

'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான்...'

என்கிறார்.

மந்திபாய் வட வேங்கடம் - குரங்குகள் பாய்ந்து குதித்துத் தெரியும் கிரி பர்வதங்கள். அவற்றுள் ஒன்றிற்கு ரிக்ஷபாசலம் என்று பெயர். அந்தப் பெயர் வரக்காரணமே ஒரு பிரத்யேகமான வைபவம்.

ரிஷபாசுரன் என்பவன் ரொம்ப துஷ்டன். மூன்று நேத்திரங்களுடைய நரசிம்ம சாளக்கிராமத்தை ஆராதிக் கிறான் அவன். அவனுடைய நிஷ்டையைச் சொல்லி முடியாது! அவ்வளவு சிரமப்பட்டு எம்பெருமானை தியானம் பண்ணுகிறான்.

அவனெதிரே பகவான் பிரத்யக்ஷமாகிறான். 'உனக் கென்ன வேண்டும்?' என்று கேட்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"உன்னோடு சண்டை போடணும்!" என்கிறான் ரிஷபாசுரன்!

"அப்படியா? போடேன்..."

குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப் படுகிற மாதிரி பகவான் கையால் குட்டுப்பட ஆசைப்பட்டான்!

பகவானும் அவன் தட்டுவதையெல்லாம் தாங்கிக் கொண்டு கடைசியில் அவனை அடித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராணன் போகிற சமயம் - அப்போது அவன் சொல்கிறான்:

"பிராணன் போகிற சமயத்தில் எந்த மூர்த்தியைப் பார்த்தால் மோக்ஷமோ அந்த நரசிம்ஹ மூர்த்தியைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கட்டாயம் மோக்ஷம்தான் வரப்போகிறது. நான் உன்னிடம் சண்டை போடணும் என்று கோரிய வரம் தவறுதான். உணர்கிறேன். எனக்கொரு வரம் அருளவேண்டும். இந்த இடத்திலே உன்னுடன் போராடி உயர்ந்த கதியை அடைந்ததாலே என் பெயர் இந்த மலைக்கு இருக்கட்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

பகவானும் 'ததாஸ்து!' என்று சொல்ல, அந்த மலைக்கு ரிஷபாத்ரி என்று பெயர் வந்தது.

ரிஷபாசுரன் நரசிம்ஹ உபாசனை பண்ணிய இடம் அது. அது மட்டுமல்ல... அங்கே நின்று கொண்டிருக்கிறானே திருவேங்கடமுடையான் - அவனும் நரசிம்மோபாசனை பண்ணிய இடம் அது!

இஞ்சிமேட்டு அழகிய சிங்கர் ஒரு விஷயத்தை ரொம்ப சமத்காரமாய்ச் சொல்வார்.

'ராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் நடக்கவிருந்த நேரத்தில் தடை ஏற்பட்டது. மனைவியோடு போய் ரங்கநாதனை சேவித்து விட்டு வந்தவன் அவன். ஆனாலும் தடை!

ஆனால், குதிரை மேல் ஏறி மலைகளிலும் வனங்களிலும் திரிந்து கொண்டிருந்தானே... அவன் நரசிம்ஹனை ஆராதித்தான்! அப்படி ஆராதித்த ஸ்ரீநிவாஸ பெருமாள் நித்யஸ்ரீயோடு விளங்குகிறான். மார்பில் ஸ்ரீயைத் தாங்கி நிற்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனுடைய திருக்கல்யாணத்தில் கூட முதல் நிவேதனம் அந்த நரசிம்ஹனுக்குத்தான் நடக்கிறது. வேங்கடாசல மகாத்மியத்தில் வரும் அந்தக் கதையைக் கேளுங்கள்:

மணவறையிலே ஸ்ரீநிவாஸன் கல்யாணத்துக்கு எழுந்தருளும்போது சுகப்ரும்மாதிகளெல்லாம் சாப்பிடக் காத்திருக்கிறார்கள்.

ஏகமாக பதார்த்தங்கள். அக்னி பகவானே வந்து தளிகை பண்ணுகிறான்.

அக்னி பகவான் தளிகை செய்தால் எப்படி இருக்கும்...?!

அன்னத்திலே ஏதாவது லோபம் இருந்தால் அதை உஷ்ணப்படுத்தி லோபத்தைப் போக்கிடலாம். அக்னியோட மகிமை அது. கெட்ட அன்னம் கூட நல்லதாகப் போய்விடுகிறது.

அந்த அக்னியே வந்து சமையல் பண்ணினால் எப்படி இருக்கும்!

தளிகை முடிந்தது. நிவேதனம் பண்ண வேண்டும் இல்லையா...? 'யாருக்கு நிவேதனம் பண்ண வேண்டும்?' என்று நான்முகன் மணவறையில் அமர்ந்திருக்கும் ஸ்ரீநிவாஸனை கேட்கிறார். ஸ்ரீநிவாஸன் அதற்கு, 'அஹோபிலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ஹனுக்கு யதாவிதியாய் நிவேதனம் பண்ணுங்கள்' என்றார்.

யதாவிதி என்றால் - முறை - கிரமம். நரசிம்ஹ ஆராதனம் என்பது ரொம்ப கடினம். அதனால்தான் அஹோபிலத்து லக்ஷ்மி நரசிம்ஹனே முதல் சன்னியாஸி யாக வந்து, உயர்ந்த திருநாராயணபுரத்திலே அவதரித்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேசவாச்சார்யார் என்பவருக்கு திருத்தண்டமும் காஷாயமும் கொடுத்து உபதேசம் செய்வித்தான்.

சன்னியாஸிகளால்தான் அவ்வளவு நியமமாக ஆராதனம் பண்ண முடியும் என்று காட்டத்தான் அப்படி நடைபெற்றது. அப்படியானால் கிரஹஸ்தாசிரமத்துக்காரர்களுக்கு அது எவ்வளவு சிரமம் என்று எண்ணிப் பாருங்கள்!

அஹோபிலத்திலே அந்த ஸ்ரீநிவாஸ பெருமாளே நரசிம்ஹனைக் கைகூப்பி சேவிக்கிற அழகை இன்றைக்கும் பார்க்கலாம்.

கல்யாண காலத்தில் சிறந்த மூர்த்தியாக தியானம் பண்ணக்கூடியவன் அந்த நரசிம்ஹன். ஒரு கோயிலில் ராமன், கண்ணன், நரசிம்ஹன் என்று வெவ்வேறு மூர்த்திகள் இருந்தால் முதல் நிவேதனம் நரசிம்ஹனுக்குத் தான் நடக்கும்.

அப்படியேதான் ஸ்ரீநிவாஸ கல்யாணத்தின் போதும் நடந்தது.

சஹஸ்ரநாமத்திலே 'ஸ்ரீ ஸ்ரீ' என்று பதினான்கு முறை வரக்கூடிய ஒரு கட்டம் வருகிறது. அதைப் பூர்த்தியாக விவரித்தாலே வேங்கடாசல மகாத்மியம் விவரித்த மாதிரி ஸ்ரீநிவாஸ கல்யாணம் வரை முழுவதையும் அந்த சப்தத்தினாலே சம்பாதிக்க முடியும்!

எப்படி நடக்கிறது அவன் கல்யாணம்...?

இந்த ஸ்ரீநிவாஸ அவதாரத்திலே, பரமாத்மா அவனையே நினைத்து ஏங்கக்கூடிய பத்மாவதியின் கிரஹத்துக்குப் போகிறான். ஆகாச ராஜனின் புதல்வி பத்மாவதி.

அந்த ஆகாச ராஜன் கிரஹத்துக்கு பகவான் எந்த வேஷத்தில் போகிறான் தெரியுமோ...?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறத்தி வேஷத்தில் போகிறான்! வேஷம் போடுவதிலே வல்லவன் அவன்! குறத்தியாய் வேஷம் போட்ட பரமாத்மா வந்த அழகே அழகு! வெறுமனே பார்க்கும் போதே அவன் சுந்தரன்தான்... இப்படி வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்தால் உலகமே மயங்கி நிற்கிறது!

ஆகாச ராஜனும் அவன் தர்மபத்னியும் பார்த்து விட்டு உள்ளே அழைத்துக் கொண்டு போகிறார்கள்.

"நீ எந்த ஊர் குறத்தி...?" என்று கேட்கிறாள் பத்மாவதி.

முத்து மலை, குடகு மலை என்று ஒரு மலை விடாமல் விவரிக்கிறான் பகவான்.

"யார் யாருக்குக் குறி சொல்லியிருக்கிறாய்...?"

"நான் சாமான்ய குறத்தியல்ல... இந்திரனுக்கும் இந்திராணிக்கும் இசைந்த குறி சொன்னேன்.

இந்திரனும் இந்திராணியும் மெச்சிக் கொண்டார் என்னை...

பார்வதிக்கும் பரமனுக்கும் பார்த்துக் குறி சொன்னேன்

பார்வதியும் பரமனுமே மெச்சிக் கொண்டார் என்னை..."

என்று பாடிக் காட்டி திருமூர்த்திக்கே குறி சொன்ன கதையை விவரிக்கிறான்.

"உங்கள் நாட்டிலே க்ஷேம லாபங்கள் எப்படி...?" என்கிறாள் பத்மாவதி.

நாட்டிலே நிலவும் சுபிட்சத்தைச் சொல்கிறாள் குறத்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"யாருக்கும் பகைமை என்பதே கிடையாது. புலியும் பசுவும் ஒரே நீரோடையில் நீர் குடிக்கும். வாழை மரம் கிழக்குப் பக்கமாகக் குலை தள்ளும், பலா மேற்குப் பக்கமாக உற்பவிக்கும்." - இதெல்லாம் லோகத்தின் க்ஷேமத்தைக் காட்டக் கூடிய அறிகுறிகள்.

இதையெல்லாம் கேட்ட பிறகு, பத்மாவதியை குறத்தியின் பக்கத்தில் உட்கார வைத்துக் கையைப் பார்க்கச் சொல்கிறார்கள்.

சொன்னால்... அப்போதைக்கப்போதே கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் பகவான் அந்தக் கையை!

"பிடித்த கையும் பிடிக்கப் போகிற கையும் ஒன்றுதான்..." என்கிறான்.

பத்மாவதி தன் மனதுக்குகந்தவனைக் கைப் பிடிப்பாள் என்று சூசகமாகச் சொல்கிறான்.

அவன் அவ்வாறு பத்மாவதிக்குச் சொன்ன குறி சப்தத்தைக் கேட்கிற அத்தனை பேர் கிரஹத்திலும் கல்யாணத்துக்குத் தடையிருந்தால் நீங்கிப் போகுமாம்.

இவ்வளவு நாட்களாக எத்தனையோ வேத, வேதாந்த, சத் விஷயங்களைப் பற்றிப் பேசினோம். ஆனால் அத்தனையைக் காட்டிலும் பகவானுடைய குறத்துக்கு இருக்கிற பலனைப் பாருங்கள்!

எளிமையை மதிக்கவும் வந்திக்கவும் கற்றுத் தருகிறான் அவன்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

47

திருமலையிலே நடந்த அந்தத் திருக்கல்யாணத்துக்கு தேவதைகளெல்லாம் வந்து நின்றிருக்கிறார்கள். மகான்கள் குழுமியிருக்கிறார்கள். அதியாச்சர்யமாக திருக்கல்யாணம் நடக்கிறது.

தேவர்களையெல்லாம் கீழே இறங்கி வர வைத்தவன்தான் நம்மையும் அந்த வடவேங்கட மலைமேல் ஏறி வர வைக்கிறான். சாமானியர்களான நம்மை எப்படி தேவர்களுக்குச் சமமாய் உயர்த்தி விடுகிறான் பாருங்கள்! எல்லோருக்கும் ஒரே சமமாக அனுக்கிரஹம் பண்ணுகிறான். அந்தத் திருவேங்கட மகிமை என்ன சாதாரணமானதா?

ஆசார்யர்கள் மூன்று விஷயங்களை மிகவும் உயர்த்திச் சொல்லுவார்கள்:

(1) திருவேங்கட யாத்திரை,

(2) அக்ரூரர் கோகுலம் செல்கை

(3) வைகுண்டம் செல்லும் மார்க்கம்

அந்த மார்க்கத்தை நினைத்துப் பார்த்தல் இந்த மூன்றும் சமமான அனுபவங்கள் என்பார்கள்.

'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்று கோதை அவனைப் பாடினாள். திருமலைக்குப் போகிற அனுபவம் அந்த கோவிந்த நாமத்திலேயே இருக்கிறதாம்! எவ்வளவு எளிமையாக்கித் தருகிறான்! கொஞ்சம் அவன் திருநாமத்தைச் சொன்னாலும் உத்தமமான பலனை அவனது தயையினாலே அள்ளித் தருகிறான்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமி தேசிகன் சொல்கிறார், வீணையான என்னை மீட்டி தயாசதகத்தைப் பேச வைத்தான் வேங்கடவன்' என்று, அதே வேங்கடவன்தான் இப்போது ஸ்ரீநிவாஸ கல்யாணத்தை நான் விவரிக்கும்படி செய்திருக்கிறான். அவன் சொல்ல வைக்க, நான் சொல்கிறேன்.

'சஹஸ்ரநாமத்திலே ஸ்ரீநிவாஸ கல்யாணமா...?' என்று கேட்பீர்கள். அந்தப் பெருமாளே தினமும் சஹஸ்ரநாம அர்ச்சனையைக் கேட்பவன்தானே!

விச்வம் என்கிற ஒரு நாமத்துக்குப் பத்து அவதாரங்களைப் பொருளாகச் சொன்னேன். 'கோவிந்தா' என்ற நாமமும் அதே பத்து அவதாரங்களைக் குறிக்கிறது. கோவிந்த சப்தத்தை ஆராய்ந்தால் பத்து அவதாரங்களும் இருக்கிறது. கோ என்றால் வேதத்திற்குப் பெயர். அதை மீட்டுக் கொடுத்த மதஸ்யாவதாரத்தைச் சொல்கிறது.

கோ என்றால் பர்வதம் - பர்வதத்தைத் தூக்கிய கூர்மாவதாரத்தை நினைவுபடுத்துகிறது.

கோ என்றால் பூமி - பூமியை உத்தாரணம் செய்த வராக அவதாரத்தைக் குறிக்கிறது.

சமஸ்த தேவதைகளும் நரசிம்ஹனை 'கோவிந்தா' என்று ஸ்தோத்திரம் செய்தார்கள். அதனால் நரசிம்ஹனுக்கும் கோவிந்தன் என்று பெயர்.

பூமியில் மூன்றடி மண் கேட்டான் அல்லவா? அதனால் வாமனனையும் கோவிந்த சப்தம் குறிக்கும். பூமி முழுவதும் சஞ்சாரம் பண்ணிய பரசுராமனும் கோவிந்தனே.

'கோ' என்றால் ஆயுதம் என்றொரு பொருள். விச்வாமித்ரர் ஐந்நூறு விதமான அஸ்திர சாஸ்திரங்களை ராமனுக்கு அர்ப்பணம் செய்தார். அவரிடமிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஸ்திரங்களைப் பெற்ற ராமனுக்கு கோவிந்தன் என்றும் பெயர்.

சமுத்திர ஜலத்தை சரித்து பூமியைக் கலப்பையால் இழுத்தவனானதாலே அந்த பலராமனுக்கு கோவிந்தன் என்றொரு பெயர்.

கோ – பசு. பசுவை ரக்ஷித்த கிருஷ்ணனுக்கு கோவிந்த நாமம் பொருந்தும்.

இப்படி பத்து அவதாரங்களுக்கும் பொருளாகிறவன் திருமலையிலே இருப்பதாலே – முன்பு பரக்கப் பேசப் பட்ட பெருமைகளெல்லாம் – சஹஸ்ரநாம விளக்க மெல்லாம் இந்த ஸ்ரீநிவாஸனுக்கும் பொருந்துவதே.

பேராயிரம் கொண்டதோர் பீடுடையவனான திருவேங்கட முடையான் திருக்கல்யாண உத்ஸவம் – தாரை வார்க்கப்படுகிற நேரத்தில் பத்மாவதி ஸ்ரீநி வாஸனைப் பாராமல் வெட்கத்துடன் தலைகுனிந்து இருக்கிறாளாம்.

'இந்தப் பெண் இவ்வளவு வினயமாக இருக்கிறாளே!' என்று வந்தவர்களெல்லாம் வியப்பு அடைகிறார்கள். ஒரு பெண்ணுக்கு அழகு வினயம்தானே என்று கொண்டாடு கிறார்கள்.

ஆனால் பத்மாவதியின் அனுபவமே அனுபவம். அது உலகில் வேறு யாருக்காவது கிடைக்கக்கூடியதா? அவள் கழுத்திலே ஒரு மாலை அணிந்து கொண்டிருக்கிறாள். ரத்தின மாலை. அதிலே மத்தியிலே ஒரு பெரிய மணி. அந்த மணியிலே எதிரேயிருக்கிற ஸ்ரீநிவாஸனுடைய திருமுக மண்டலம் தெரிகிறது! அப்புறம் அவள் ஏன் தலையைத் தூக்க வேண்டும்! அந்த மணியிலே தெரிகிற பிம்பத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்மாவதிக்கு உலகத்தவரிடத்திலும் நல்ல பெயர்; அவள் அனுபவத்துக்கும் குறையில்லை! ஸ்ரீநிவாஸனைப் பார்த்து ரசிக்கிறாள்!

ஆந்திர தேசத்திலே நடக்கிற விவாகம் அல்லவா... அதனால் அந்த தேச வழக்கப்படி ஒரு விஷயம்:

ஆந்திர தேசத்திலே மாங்கல்ய தாரணத்தோடு 'ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே' என்று முகூர்த்தம் முடிந்து விடாது. ஜீரகத்தையும் வெல்லத்தையும் சேர்த்து அறைப்பார்கள். அதை பெண் - மாப்பிள்ளை கையில் கொடுத்து ஒருவருக்கொருவர் உச்சந் தலையில் வைக்கச் சொல்லுவார்கள். இடையிலே திரைபிடித்திருப்பார்கள். அதுதான் முகூர்த்தம்! அந்த நேரத்திலே மகா சங்கல்பங்களெல்லாம் சொல்லுவார்கள்.

சீரகம் ஒரு ருசி; வெல்லம் இன்னொரு ருசி. இரண்டும் கலந்து இழைகின்றன. அதைப் போலவே இரண்டு பேரும் கலந்து இழைய வேண்டும் என்பது ஐதீகம்.

அதுமட்டுமல்ல... கல்யாண தினத்திலே உட்காரு வதும் எழுந்திருப்பதும் சேவிப்பதுமாக இருப்பதால் சிலருக்கு தலை சுற்றல் போன்ற உபாதைகளெல்லாம் வரும். வைத்திய சாஸ்திரப்படி சீரகத்தையும் வெல்லத்தையும் அறைத்து உச்சந்தலையில் வைத்தால் உஷ்ண சமனம் ஏற்படுகிறது.

இன்றைக்கும் பெருமாளுக்கு வேங்கடத்திலே, பத்ராசலத்திலே கல்யாண உத்ஸவம் நடத்தும்போதும் இந்த சீரக - வெல்ல சடங்கு நடக்கிறது.

இன்னொரு வழக்கம் - சோபனாக்ஷதை சேர்ப்பது. ஒருத்தருக்கொருத்தர் தலையிலே அக்ஷதை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளை வெளேரென்ற முத்துக்களை எடுத்து பத்மாவதி சிரஸிலே சேர்க்கிறான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமான். அது கீழே விழும்போது அப்படியே தங்கக் கட்டியைப் போல் விழுகிறதாம்.

ஏன்...? பத்மாவதி பொன்னிறத் திருமேனியுடையவளானதாலே முத்துக்கள் அவள் நிறத்தைப் பெற்று அப்படி ஒளிர்கிறதாம்.

ஸ்ரீநிவாஸன் சிரஸிலேயிருந்து விழுகிற முத்துக்கள் நீலமணிகளாகக் காட்சி அளிக்கிறதாம். அவன் நீலமேக ச்யாமள வண்ணனல்லவா...? அதனாலே.

நாடக அரங்கத்திலே வண்ண விளக்குகளைப் போட்டு மாற்றி மாற்றி சிவப்பு, பச்சை, நீலம் என்று காட்சி சித்திரிக்கிறார்களே அதைப்போல, விளக்குகளுக்கு அவசியமே இல்லாமல் ஒரு வர்ண ஜாலம் நடக்கிறது அங்கே. நீலம், பொன்னிறம், வெண்மை என்று மாறி மாறி விழுகிறபோது, பார்க்கிறவர்களெல்லாம் 'இன்னும் கொஞ்சம் நேரம் பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டோமா?' என்று ஆசைப்படுகிற அளவுக்கு இருக்கிறதாம் அந்தக் காட்சி.

சரி, இந்தக் காட்சியைப் பார்க்க முடியாவிட்டாலும் இதை வர்ணிக்கக் கேட்க முடிகிறதல்லவா நமக்கு... அதனால் நமக்குப் பலன் என்ன...?

அந்த ஸ்ரீநிவாஸனுடைய திருக்கரத்தை நாமும் பிடித்து, பத்மாவதிக்குச் சமானமாக அவன் திருவடியிலே கைங்கர்யம் பண்ணும்படியான பாக்கியம் அருள்வான்.

இந்த உலகத்திலே இதனால் நமக்குப் பலன் என்ன... வாழ்க்கையிலே நடக்க வேண்டிய சமஸ்த மங்கள காரியங்களையும் அது நடத்தி வைக்கும். வயதான காலத்திலே, நமக்கு அந்த ஸ்ரீநிவாஸனுடனேயே கல்யாணத்தை நடத்தி வைக்கும். அதாவது மோக்ஷ பதவியை அளிக்கும்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy